2864

T.N.C.A. Debates

Official Report

NO 3

Vol IX

28th June 1985

D 1
V211,31 N85
N85.10.3
1:6394

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
136394
சென்னை-600 008.

TD
V2ll,31 N85
N85.10.3

# உள்ளடக்கம்

**28-6-1985**


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. வினாக்கள்-விடைகள்— | | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | .. | 477—499 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் | .. | 500—525 |
| 2. அறிவிப்பு— | | |
| எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன் வடிவு, 1985 (மே.செ.) | .. | 525 |
| 3. கவன ஈர்ப்புகள்— | | |
| (அ) வேடசந்துர் வட்டம், வெல்லம்பட்டிப் பகுதியில் இரும்புத்தாது படிவ அமைப்பு காணப்பெறுவது .. | .. | 525—527 |
| (ஆ) காமராஜர் மாவட்டத்திற்கென நீதி மன்றம் கட்டப் பெறாமல் உள்ள நிலை | | 527—528 |
| 4. அரசினர் தனித் தீர்மானம்— | | |
| பணி ஓய்வு பெறுகின்ற பேரவைச் செயலர் திரு. இ. மு. அழகர்சாமிக்கு பாராட்டு | .. | 528—544 |
| 5. வரவு-செலவுத் திட்டம், 1985-86, வாக்கெடுப்பு (தொடர்ச்சி) கோரிக்கை எண்.23—கூட்டுறவு | | 544—642 |
| மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் .. | .. | 544, 618-641 |
| திருமதி தா. இராசாம்பாள் .. | .. | 545—550 |
| திரு. எம். இராசரத்தினம் .. | .. | 550—556 |
| திரு. மா. மீனாட்சிசுந்தரம் | .. | 556—560 |
| திரு. எம். சண்முகையா பாண்டியன் | .. | 560—563 |
| திரு. கோ. வீரய்யன் .. | .. | 563—571 |
| டாக்டர் கே. பி. இராமலிங்கம் | .. | 571—581 |

| | | |
|---|---|---|
| திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் | .. | 581—587 |
| திரு. எச். ஜி. ஆறுமுகம் | .. | 587—591 |
| திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா | .. | 591—594 |
| திரு. பொ. உத்திராபதி | .. | 594—601 |
| திரு. எஸ். என். இராமசாமி | .. | 601—604 |
| திரு. என். எஸ். வி. சித்தன் | .. | 604—618 |
| 6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் | .. | 643 |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**1985 ஜூன் 28, வெள்ளிக்கிழமை ஆனி 14, குரோதன**
**திருவள்ளுவர் ஆண்டு—2016**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"கனவிலும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு."

செய்யும் செயல் வேறாகவும், சொல்லும் சொல் வேறாகவும் உள்ளவரின் நட்பு, ஒருவனுக்குக் கனவிலும் துன்பம் தருவதாகும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 414, 415, 416 மற்றும் 417 மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்ிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

### ஓர் ஆசிரியர்-ஈராசிரியர் பள்ளிகள்.

418.—(*வினா எண். 676)— திரு. க. நரசிம்மபல்லவன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஓர் ஆசிரியர்-ஈராசிரியர் பள்ளிகள் எத்தனை உள்ளன?

(ஆ) அவைகளில் கூடுதல் ஆசிரியர்கள் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, (அ) ஓராசிரியர் பள்ளிகள் 2,615 (30-9-1983-ல் உள்ளபடி) ஈராசிரியர் பள்ளிகள் 9,115 (16-10-1982-ல் உள்ளபடி).

(ஆ) ஆண்டுதோறும் அரசால் வழங்கப்படும் மொத்த ஆசிரியப் பணியிடங்களில் இருந்து மாணவர்களின் எண்ணிக்கையையும், பள்ளிகளில் தேவையையும் அனுசரித்து கூடுதல் பணியிடங்கள் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

### உப்பிலியாபுரம் தொகுதியில் கலைக் கல்லூரி.

419.—(*வினா எண். 1078)—திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், உப்பிலியாபுரம் தொகுதியில் ஏதேனும் ஓர் இடத்தில் அரசினர் கலைக் கல்லூரி தொடங்க அரசிடம் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இல்லை.

### மேல்நிலைப் பள்ளிகளில் நூலகவியல் பட்டதாரிகள் நியமனம்.

420.—(*வினா எண். 1385)—திரு. எஸ். ரெத்தினராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் எத்தனை மேல்நிலைப் பள்ளிகளில் நூலகவியல் பட்டதாரிகள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; தலைவர் அவர்களே, மேல்நிலைப்பள்ளி நூலகங்களுக்கு நூலகவியல் பட்டதாரிகள் பணியிடங் ள் எதுவும் அரசால் வழங்கப்படவில்லை. அதனால் மேல்நிலைப்பள்ளிகளில் நூலகவியல் பட்டதாரிகள் நியமனம் செய்யப்படுவதற்கு வாய்ப்பில்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹைஸ்கூல், ஹையர் செக்கண்டரி ஸ்கூல் போன்ற பல பள்ளிகளில் லைப்ரரி ஏற்படுத்தி அதனைக் கவனிக்க நூலகர் ஒருவரை நியமனம் செய்யும் நிலைமை குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளி ள் போன்றவற்றில் இருக்கின்ற லைப்ரரிகளைப் பொறுத்தவரையில் நூலகப் பட்டதாரியின் பணியிடத்தை உருவாக்கக்கூடிய அளவுக்கு அவை அவ்வளவு பெரிய நூலகங்களாக இல்லை. எனவே அவற்றைக் கவனிப்பதற்கு பகுதி நேர நூலகர்கள் பணியிடங்களை அரசு வழங்கியுள்ளது. அவர்களுக்கு 10 மாதங்களுக்கு 50 ரூபாய் மாதந்தோறும் வழங்கப்படுகின்றது. அதையே ஒரு ஆசிரியர் செய்வாரேயானால் அவருக்குக் கூடுதலாக மாதத்திற்கு 25 ரூபாய் வீதம் 10 மாதங்கள் தனி ஊதியம் அளிக்கப்படுகிறது.



2864

### பூதலூரில் நூல் நிலையம்

421.—(*வினா எண். 1617)—திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பூதலூரில் நூல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; தலைவர் அவர்களே, இல்லை.

திரு. துரை கோவிந்தராசன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் பூதலூரில் நூல் நிலையம் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். திருவையாறு தொகுதி தஞ்சை மாவட்டத்தினுடைய மிக முக்கியமான இடமாக இருப்பதன் காரணத்தாலும் அந்தப் பகுதி மக்கள் அதிகமாகக் கற்றறிவில்லாதவர்களாகவும் இருப்பதன் காரணத்தாலும் பல பெரியவர்கள் படித்துப் பயன் பெறத் தக்க அளவுக்கு இந்த ஆண்டிலேயாவது அதனை எடுத்துக் கொள்கின்ற முயற்சியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. செ, அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, பொது நூலகச் சட்டப்படி 5,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள இடங்களில்தான் நூலகங்களை திறக்க இயலும் 1971—ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தஞ்சாவூர் மாவட்டத்தில் 5000 மக்கள் தொகை கொண்ட இடங்களிலேயே இன்னும் நூலகங்கள் திறக்கப்படாமல் இருக்கின்றன. இந்தப் பட்டியலில் உள்ள 9 இடங்களைப் பொறுத்தவரையில் பூதலூர் இடம் பெறவில்லை. எனவே 1981 ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் இந்த நிலைமைகளில் ஏதேனும் மாறுதல்கள் இருக்குமேயானால் அதைப் பயன்படுத்தி பூதலூரில் திறக்க அரசு பரிசீலிக்கும்.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே தரப்பட்டிருக்கின்ற கணக்குகள் ஏறத்தாழ 7, 8 ஆண்டுகளுக்கு முன்னாலே தரப்பட்ட கணக்குகள் என்பதாலும் மேலும் பூதலூர் என்பது திருச்சிக்குப் பக்கத்திலே 10 கிலோ மீட்டர் தூரத்தில் இருப்பதன் காரணத்தாலும் திருச்சி பாய்லர். தொழிற்சாலையிலே பணியாற்றக் கூடிய பலபேர் அங்கே குடியிருக்கின்ற நிலைமையில் 10 ஆயிரம் ஜனத்தொகை உள்ள ஊராக அது இப்போது அமைந்திருக்கின்றது என்பதாலும் இதை எல்லாம் மனதில் கொண்டு மறுபடியும் புதிய சென்ஸஸ் பார்த்து உடனடியாக வழங்குவதற்கு அரசு முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, புதிய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி அந்த

பூதலூரில் இருக்கிற மக்கள் தொகை நூலகம் திறக்கக்கூடிய அளவுக்கு வருகிறதா எனப்பார்த்து, அதற்கேற்ப இந்தப் பிரச்சனையை அரசு அணுகும்.

திரு பொ. உத்திரபாதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 ஆயிரம் மக்கள் தொகைக்கு மேல் உள்ள இடங்களில் நூலகம் இல்லாதவை 9 என்று இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த இடங்கள் என்னென்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதோடு, 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் அந்த நூலகத்தை திறப்பதற்கான முயற்சிகளுக்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்த 9 இடங்கள் என்னென்ன என்ற விவரம் எனக்கு இங்கே தரப்படவில்லை. பூதலூரைப் பற்றிக் கேட்டிருப்பதால், அதைப் பற்றி மட்டும் சொல்லியிருக்கிறார்கள். புதிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, அதாவது 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி பூதலூரில் உள்ள மக்கள் தொகை 6,799 ஆகும். ஆகவே அதனுடைய வாய்ப்புகள் குறித்து பொது நூலக இயக்குநர் பிரச்சனையை பரிசீலிக்க கேட்டுக் கொள்ளப்படுவார். மற்ற இடங்களில் அந்த மக்கள் தொகைக்கு ஏற்ப அரசு பார்த்து நிச்சயமாக செய்யலாம்.

கோபி செட்டிபாளையம் நீதி மன்றக் கட்டிடம்.

422.—(*வினா எண் 1352)— திரு கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், கோபிசெட்டிபாளையத்தில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வரும் சார்பு நீதி மன்றத்திற்கு புதியதாகக் கட்டிடம் கட்ட அரசுக்கு பரிந்துரை ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

பெண் குற்றவாளிகளுக்குக்கென தனி நீதி மன்றங்கள்.

423.—(*வினா எண் 1782)— திரு. எச். ஜி. ஆறுமுகம் மற்றும் திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பெண் குற்றவாளிகளை விசாரிக்க பெண் நீதிபதிகள் நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்; தலைவர் அவர்களே,

(அ) தற்போதைக்கு இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதைக்கு இல்லை என்று சொன்னார்கள். எப்போதைக்கும் இல்லை என்று சொல்லவில்லை. அதற்காக நன்றி. ஆனால் இந்தப் பெண் குற்றவாளிகளை விசாரிப்பதற்கு தனி நீதி மன்றங்களை அமைக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கேள்விக்கு என்றைக்கே அவைக்கு தெரிவிக்கப்பட்டதைப் போல பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கு பேமிலி கோர்ட்ஸ் என்று மாவட்டம் தோறும் அமைக்க அரசு முடிவு எடுத்திருக்கிறது. அது நடைமுறைக்கு வருகையில் பெண் நீதிபதிகளை நியமிப்பது குறித்து அரசு உயர்நீதிமன்றத்தோடு கலந்து நடவடிக்கை எடுக்கும்.

நீதிமன்றங்களுக்கு கோடை விடுமுறை.

282 (*வினா எண் 870)— மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நீதி மன்றங்களில் வழக்குகள் பைசலாவதை விரிவுபடுத்த சிவில் நீதிமன்றங்களுக்குள்ள கோடை விடுமுறையை (Summer Holidays) ரத்து செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கிடமில்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்:) பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதி மன்றத்திற்கும், மாநிலத்தில் இருக்கின்ற பிற நீதி மன்றங்களுக்கும் இருக்கின்ற கோடை விடுமுறையை ரத்து செய்கிற செயற் குறிப்பு இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். வாரத்தில் 5 நாட்களுக்குவேலை நாட்கள் என்றுமாநில அரசாங்கம் எடுத்த முடிவை மிக விரைவாக சென்னை உயர்நீதி மன்றம் எடுத்துக் கொண்டு,

வருகிற ஜூலை 1 ஆம் தேதியிலிருந்து அமுலுக்கு கொண்டு வந்து விட்டார்கள். 365 நாட்களில் 200 நாட்களுக்கு அவர்கள் விடுமுறையில் இருந்தால் வழக்குகளின் தேக்கம் அதிகமாகி, தேங்கிக் கிடக்கின்ற வழக்குகளை பைசல் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. அந்த நிலையில் மக்களுக்கு பதில் சொல்கிற மிகப் பெரிய பொறுப்பை அரசாங்கம் எடுக்க வேண்டி வருகிறது. அந்தச் சூழ்நிலையை தடுக்க, நடக்கவிருக்கிற இந்திய துணை கண்ட சட்ட அமைச்சர்கள் மாநாட்டில் உயர்நிதி மன்றத்தின் கோடை விடுமுறையை ரத்து செய்ய, நம் மாநில அரசு தீவிரமான முயற்சியை எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கோடை விடுமுறையை ரத்துசெய்கிற அதிகாரம் மைய அரசினுடைய பட்டியலில் இருக்கிறது. நடக்க இருக்கிற, பாரதப் பிரதமர் அவர்கள் கூட்ட இருக்கிற சட்ட அமைச்சர்கள் மாநாட்டில் இது குறித்து மாநில அரசின் சார்பில், இந்த அரசு தன்னுடைய கருத்தை கண்டிப்பாக வலியுறுத்தும்.

ஆனால் நீதிபதிகளைப் பொறுத்தவரைக்கும், 1954—லே நடந்த நீதிபதிகள் மாநாட்டிலும், அதற்குப் பிறகும் எடுக்கப்பட்ட முடிவின்படி, பெரும்பாலும் நீதிபதிகள் மூளையை அதிகமாக உபயோகித்து வேலைசெய்வதாக, கோர்ட்டில் 5 1/2 மணி நேர அளவில் இருந்து வழக்குகளைக் கேட்பதோடு, அவர்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கிற அறையிலோ, அல்லது வீட்டிலோ தீர்ப்புகளை படித்து எழுதுவதைப் போன்ற பணிகளையெல்லாம் செய்கின்ற காரணத்தால், பிரெய்ன்-ஸ்ரெயின் அதிகமாக இருக்கிறகாரணத்தால் அந்த விடுமுறை இன்றியமையாத ஒன்று சொல்லியிருக்கிறார்கள். அந்த விடுமுறையை ரத்து செய்கிறபோதும், பெண்டென்சி ஆப் கேசஸ் என்ற வகையில் தீர்ப்புகளை எழுதமுடியாத நிலைமை ஏற்பட்டுவிடும் என்ற கருத்தை நீதிபதிகளின் சார்பில் கூறியிருக்கிறார்கள்.

இதை அந்த மாநாட்டில் பேசி தக்கதொரு முடிவை எடுக்க மாநில அரசின் சார்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

(முற்பகல் 9–10)

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** (பேரவைத் துணைத் தலைவர்). தலைவர் அவர்களே, சிவில் நீதிமன்றங்களுக்கு கோடை விடுமுறையை ரத்து செய்து விட்டால், மூளை வேலை செய்யும் பணியென்பதால், தங்களுக்கு பணிச்சுமை அதிகமாக இருக்கிறதென்று நீதிபதிகள் அவர்கள் மாநாட்டு மூலம் தீர்மானம் போட்டு கூறுகிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். கிரிமினல் நீதிமன்றங்களில் பணியாற்றுகின்ற நீதிபதிகள் கோடை விடுமுறை ஏதும் இல்லாமல் வேலை செய்கிறார்கள். ஆனால் மூளை பாதிக்கப்படுவதில்லை என்ற கருத்தை நிச்சயமாக நம்முடைய சட்ட அமைச்சர்கள் மாநாட்டில் வலியுறுத்தி உண்மையில் இது கேள்வி,



நேரம் என்றாலும் நான் சொல்கிறேன், அவர்களுடைய அதிகாரத்தில் தலையிட நமக்கு உரிமை இல்லை; இருந்தாலும் கூட நாம் தெருவிற்கு போகிறபோது வழக்குகள் பைசல் ஆகாமல் இருப்பதற்கு ஏச்சுக்களையும், பேச்சுக்களையும் வாங்கிக்கொள்வது சட்டமன்ற உறுப்பினர்களும், அமைச்சரும் அரசும் தான். இதைக் கருத்தில் கொண்டு கிரிமினல் நீதிமன்றங்களுக்கு பொருந்துகின்ற அதே கோடை விடுமுறை இல்லாத நிலையை சிவில் நீதிமன்றங்களுக்கு கட்டாயமாகக் கொண்டு வரவேண்டுமென்று, இந்தக் காரணத்தை நீதிபதிகளின் கருத்திற்கு எதிராக மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் மாநாட்டில் வலியுறுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையின் போதே நான் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன். அரசினுடைய கொள்கையைப் பெற்றுத்தவரையிலும் கோடை விடுமுறையை கண்டிப்பாக நீக்க வேண்டும் சிவில் நீதி மன்றங்களுக்கு என்பது தான். இதை ஏற்கெனவே அரசு வலியுறுத்தி இருக்கிறது. தொடர்ந்து இதை வலியுறுத்தும்.

**திரு. செ. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கும் போது நீதிபதிகளுக்கு கோடை காலத்தில் வேலை செய்வதால் பணிச்சுமைக் காரணமாக முளை பாதிக்கப்படும் என்று தெரிவித்தார்கள். ஆனால் பொதுவாகவே எல்லா மனிதர்களுக்கும் மூளை என்பது ஒன்று தான் மூலப் பொருள் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். இருந்தாலும் கோடை காலத்தில் விடுமுறை அளிப்பதென்பது வெள்ளைக்காரன் காலத்தில் வைத்திருந்த முறையாகும். அதனை நம்முடைய காலத்தில் மாற்றுவதற்கு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, அது மத்திய அரசின் அதிகாரத்தில் இருந்தாலும், எல்லாவற்றையும் மத்திய பட்டியலில் விட்டுக் கொண்டே போனால் கடைசியாக நானும் நீங்களும் தான் இருப்போம் என்பதைத் தெரிவித்து, அதனை மாநில அரசின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவருவதற்கு அரசு உதவுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, நான் முன்னர் கூறியதைத் தவறாகப் பொருள் கொள்ளக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். நீதிப்திகளுக்கு மூளை பாதிப்பு ஏற்பட்டு விடும் மென்பதல்ல; நீதிபதிகள் பணிச் சுமை அவர்களுக்கு அதிக பிரெய்ன் ஸ்ட்ரெயின் தரக் கூடியதாகும். கோடை விடுமுறை மட்டுமல்ல, அவர்களுக்கு கிறிஸ்துமஸ் ஹாலிடேஸ், மைக்கேல்மஸ் ஹாளிடேஸ் விடப்படுகிறது. மூன்று மாதங்களுக்கு ஒருமுறை விடப்படுகிற விடுமுறையின் நோக்கம் அவர்கள் கூறுவது வழக்குகள் எல்லாம் முடிந்த பிறகு, முடிந்த வழக்குகளுக்கு தீர்ப்பு வழங்க போதிய நேரம் தேவைப்படுகிறது. அது பிரெயின்

ஸ்'ரெயின் உள்ள பணியாக சிவில் நீதிமன்றங்களுக்கு இருப்பதால், அந்த விடுமுறை தவிர்க்க முடியாத தேவை, அது ஓய்விற்காக அல்ல, தீர்ப்புகளை வழங்குவதற்கு தேவையான நேரம் என்று நீதிபதிகள் சொல்கிறார்கள் என்று தான் சொன்னேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த நீதி மன்றங்களில் வழக்குகள் தேங்கி கிடப்பதற்கு பிரதானமான ஒரு காரணம் டிஸ்ட்ரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ், டாலுக் ஹெட் குவார்ட்டர்ஸ் என்ற முறையிலே சென்ட்ரலைஸ் செய்திருக்கிற தால் நிலைமை ஏற்படுகிறது என்பதை தவிர்க்க, மேலும் நீதி மன்றங்களை அதிகமாக ஏற்படுத்துவதற்கு பஞ்சாயத்து யூனியன் களை அடிப்படையாக வைத்து டிஸ்ட்ரிக்ட் முன்சிப்-சம்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளை ஏற்படுத்தி விரைவிலே வழக்கு களை முடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, டாலுக் எஸ் ஏ யூனிட் என்ற முறையில் கொண்டு வந்தாலும் குறிப்பிட்ட அளவிற்கு கணிசமான வெற்றியை நாம் இதிலே பெற முடியும். அகில இந்திய ரீதியிலே எடுத்துக் கொண்டால் கூட தமிழகத்தில்தான் அதிகமாக டாலுக் ஏஸ் ஹெட் குவார்ட்டர்ஸ் என்ற முறையிலே நீதிமன்றங்கள் இருக்கின்றன. அதிலும் கூட இன்னும் முடியாமல் இருக்கின்றன. அவற்றை முடிக்க வரும் ஓரிரு ஆண்டுகளில் எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பஞ்சாயத்து யூனியன் வரை யில் நீதிமன்றம் வந்தால் பப்ளிக் முழுவதும் லிட்டிகேட் பப்ளிக் ஆகிவிடுவோம்.

திரு. பு.கோ. நாராயணன் : தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்திலே அதிகமாக தேங்கிக் கிடக்கும் வழக்குகளை சீக்கிரம் பைசல் செய்வதற்கு உயர்நீதிமன்றங்களின் வழக்குகளை மாவட்ட நீதிமன்றங்களுக்கு மாற்றினால், அந்தச் சுமை குறையும். மாநில சர்க்காரின் வரம்பிற்கு உட்பட்டது. அதைச் செய்ய.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையெல்லாம் செய்ய முடியாது. உட்காருங்கள்.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகள் நிறைய தேங்கிக் கிடக்கிறது. அதே போல் சிவில் கோர்ட்டிலும்,



மாவட்ட நீதிமன்றங்களிலும் அதிகமான வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. அதிலும் குறிப்பாக இந்தச் சாராய சம்பந்தமாக வழக்குகள் அதிகமான அளவில் இருக்கின்றன. எனவே இந்த வழக்குகளுக்குப் பதிலாக அவர்களுக்கு தண்டனை கொடுத்தால் அரசுக்கு வருவாய் வரும். அதோடு, வழக்குகளில் எண்ணிக் கையும் குறையும். ஆகவே இதைச் செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, எல்லா வழக்குகளுக்கும் தண்டனை மட்டும் கொடுத்து, அதை முடித்துவிட முடியாது. ஆனாலும் கூட, மாண்புமிகு உறுப் பினர் சொன்ன சில குறிப்பிட்ட வழக்குகளுக்கு தண்டனை அளித்து, வழக்குகளினுடைய தேக்கத்தைக் குறைப்பதற்கான செயற்குறிப்பு அரசினுடைய பரிசிலனையில் உள்ளது.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடை விடுமுறை நாட்களில் நீதிபதிகள் எத்தனை வழக்குகளுக்கு தீர்ப்புகளை வழங்கியிருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா? குறைவாக இருந்தால் அதைப் போக்குவதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, கோடை விடுமுறை நாட்களில் அவர்கள் நீதிமன்றம் வந்து தீர்ப்புகளை வழங்குவதில்லை. அந்த நீதிபதிகள், தாங்கள் பணி நாட்களில் நடத்துகிற வழககுகளுக்கு தீர்ப்புகளை எழுத விடுமுறையைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஒட்டு மொத்த மான எத்தனை வழக்குகளுக்கு தீர்ப்பு அளித்திருக்கிறார்கள் என்ற குறிப்பில்லை. அவர்களால் நிறைவு செய்யப்படுகிற அந்த வழக்கின் எண்ணிக்கையைப் பொறுத்துத்தான் அது அமையும்.

திரு. கோ. விரய்யன் : தலைவர் அவர்களே, வழக்குகள் தேங்கி இருப்பதற்கு கோர்ட்டுகளுக்கு விடுமுறை வழங்குவது காரணம் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அது ஒரு காரண மாக இருந்தாலும், போதிய நீதிபதிகள் இல்லாததும், வழக்குகள் தேங்குவதற்கு ஒரு காரணமாக இருக்கிறது என்று சொல்லப்படு கிறது. எனவே போதிய நீதிபதிகளை நியமிப்பதற்கு அரசு உரிய நடவடிக்கையை எடுத்து, வழக்குகளை பைசல் செய்வதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே அரசு தக்க நடவடிக்கை இதுகுறித்து எடுத்திருக்கிறது.

[1985 ஜூன் 28

கழகங்களில் எத்தனை தொழிலாளிகள் நிரந்தரப்படுத்தப் பட்டனர் ? போக்குவரத்துக் கழகங்கள் வாரியாக ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,

| வ.எண். (1) | போக்குவரத்துக் கழகங்களின் பெயர். (2) | நிரந்தரமாக்கப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. (3) |
|---|---|---|
| 1. | பல்லவன் போக்குவரத்துக் கழகம் | 2,891 |
| 2. | திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் | 900 |
| 3. | தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் | 1,294 |
| 4. | பட்டுக்கோட்டை அழகிரிபோக்குவரத்துக் கழகம் | 110 |
| 5. | அண்ணா போக்குவரத்துக் கழகம் | 1,983 |
| 6. | ஜீவா போக்குவரத்துக் கழகம் | 202 |
| 7. | சேரன் போக்குவரத்துக் கழகம் | 1,913 |
| 8. | பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம் | 78 |
| 9. | சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம் | 1,195 |
| 10. | மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம் | 914 |
| 11. | கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் | 543 |
| 12. | நேசமணி போக்குவரத்துக் கழகம் | 96 |
| | | 12,119 |

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேசமணி போக்குவரத்துக் கழகத்தில் 480 நாட்கள் வேலை செய்த பிறகும் பல தொழிலாளர்கள் இப்படி நிரந்தரம் ஆக்கப்படாமல் வைக்கப்பட்டு இருப்பதாக சொல்லப்படுகிறது. இந்தத் தொழிலாளர்களை தினக்கூலிகள் என்ற முறையில் வைத்து அவர்களுக்கு தினக்கூலியை தவிர வேறு எந்த பென்னி பிட்டும் கொடுக்காமல் இருக்கிறார்கள். இதை கணக்கில் எடுத்து, அவர்களை நிரந்தரம் ஆக்கி, அவர்களுக்கு சம்பளம் தவிர மற்ற பெனிபிட்டுகளையும் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 480 நாட்களுக்கு மேல் வேலை செய்து நிரந்தரம் செய்யாமல் இருக்கிறார்கள் என்று சொன்னால் அவருடைய பணி அல்லது அவருடைய திறமை அல்லது அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை இப்படிப்பட்ட காரணங்கள் இருக்கும். இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்குமானால் அது சட்டத்திற்கு உட்பட்டதுதான். இவைகள் அல்லாமல் 480 நாட்கள் ஆகியும் அவர்களை நிரந்தரம் செய்யாமல் இருந்தால் அதை அரசு கவனித்து நடவடிக்கை எடுக்கும்.



1985 ஜூன் 28]

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பல கழகங்களில் பல தொழிலாளர்களுக்கு அப்பாயிண்ட்மெண்டு ஆர்டர் கொடுக்காமல் காண்ட்ராக்ட் முறையில் வேலைக்கு வைத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அந்த தொழிலாளர்களை இந்த சட்டத்தின் வரம்பிற்குள் கொண்டு வந்து நிரந்தரம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டு முழுவதும் இருக்கிற பணிகளை அப்படி வைத்து இருப்பதாக எனக்கு தகவல் இல்லை. ஏதோ ஒரு 10 நாள், மாதம் வேலையாக இருந்தால் மட்டும் அப்படிப் பட்ட குறுகிய கால பணிகளுக்கு வைத்து இருந்து இருக்கலாம். ஆனால் அந்த மாதிரியான நிலைமை இல்லை என்று எனக்கு சொல்லியிருக்கிறார்கள். அப்படி இருக்குமானால் அரசு நட வடிக்கை எடுக்கும்.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பஸ் கம்பெனிகளில் 5 வருடம், 10 வருடம் பணியாற்றியும் அந்த தொழிலாளர்களை நிரந்தரம் ஆக்காமல் தினக் கூலிகளாக வைத்து வேலை வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள் இது அரசுக்குத் தெரியுமா? அப்படி தொழிலாளர் நலச் சட்டங் களை அமல் செய்யாமல் தொழிலாளர்களை பழி வாங்குகின்ற தனியார் பஸ் கம்பெனிகளின் உரிமைகளை ரத்து செய்கின்ற முறையில் தகுந்த சட்டத்திருத்தம் கொண்டுவர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே தொழிலாளர் நலத் துறை சார்பாக இதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்தத் துறை சார்பாக அவர்கள் இன்னும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வாய்ப்பு இருக்கிறது. எனவே, அந்தத் துறைக்கு அவர்கள் கேள்விபோட்டால், அல்லது எழுதிக் கொடுத்தால் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.

திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிரந்தரமாக்கப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையைப் பற்றி சொன்னார்கள். இன்னும் எத்தனை தொழிலாளர்கள் நிரந்தரம் ஆக்கப்படாமல் இருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா என்று கேட்க ஆசைப் படுகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிரந்தரமாக்கப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையை இங்கே சொல்லியிருக்கிறேன். யார் யார் 480 நாட்களுக்கு மேல் வேலை செய்யாமல் இருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் நிரந்தரமாக்கப்படவில்லை.

திரு. செ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தற்காலிகமாக வைத்து வேலை வாங்குகின்ற முறை தனியார் கடைப்பிடிக்கின்ற முறைகள். நம்முடைய அரசும் அந்த முறையையே கடைப்பிடித்தால் தனியார்கள் இந்த முறையை மிகவும் கடுமையாக கடைப்பிடிப்பார்கள். ஆகவே அந்த முறையை விலக்கி ஒருவர் வேலைக்கு சேருகின்ற பொழுதே ஒழுங்கு முறைக்கு உட்பட்டு இருந்தால் அவர்களை நிரந்தரம் ஆக்குகின்ற முறையை அரசு பின்பற்றுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கமாக இருந்தாலும் தனியார் துறையாக இருந்தால் சட்டத்திற்கு உட்பட்டுதான் நடந்து கொள்ள வேண்டும். 480 நாட்கள் என்பது சட்டத்தில் இருக்கிறது. அதற்கு ஏற்றபடிதான் போக்குவரத்துக் கழகங்கள் நடந்து கொண்டு வருகின்றன.

காட்பாடி மேம்பாலம்.

426—(*வினா எண் 1267)— திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்பாடியில் உள்ள ரயில்வே மேம்பாலம் வலுவிழந்த நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதனை புதுப்பிக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) பழைய பாலத்தை மாற்றுப்பாலமாக வைத்துக் கொண்டு, இப்பாலத்திலிருந்து 12 கிலோ மீட்டர் தூரத்தில் புதியதாக ஒரு மேம்பாலம் கட்டுவதற்காகவும் பணிச்செலவு தொகை பங்கீட்டிற்காகவும் இரயில்வேத் துறையுடன் அரசு தொடர்பு கொண்டுள்ளது.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பாலம் கடந்த 10, 12 ஆண்டுகளாக போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருக்கின்றது என்று சொல்லி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த மாவட்டத்திற்கு வருகை தந்தபோது, அவர்களே நேரடியாக பார்த்து, அந்தப் பாலத்தை புதுப்பித்துக் கொடுக்க மத்திய அரசை வற்புறுத்தியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதன்மீது அரசு எடுத்திருக்கிற நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இதற்கு ஏறத்தாழ 126 இலட்சம் ஆகுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. அதிலே 46 இலட்ச ரூபாயை நம்முடைய அரசு கட்டவேண்டு



மென்று சொல்லியிருக்கிறார்கள். அதைக் கட்டுவதற்குத் தயார் என்று சொல்லியிருக்கிறோம். அதோடு, 96,000 ரூபாய் அங்கே அந்தப் பணியைத்துவக்குவதற்கு, அதைப்பற்றி ஆய்வு செய்வதற்கு இப்போது அரசாங்கம் கட்டியிருக்கிறது. முதலில் போடப்பட்ட வரைப்படங்களில் மாறுதல் செய்யவேண்டுமென்பதால், கொஞ்சம் காலதாமதம் ஆகியிருக்கிறது என்று ரயில்வே துறையினர் சொல்லியிருக்கிறார்கள். அதை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கான குடும்ப பயணச்சீட்டுகள்.

427—(*வினா எண் 1656)— திரு. க. சோலைராசு : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்துத்துறை ஊழியர்களின் ''குடும்ப பாஸ்' பயணத்தூரத்தை நீட்டிக்க அரசிற்கு உத்தேசம் உண்டா?

(ஆ) போக்குவரத்துத்துறை ஊழியர்களது குடும்பத்தார்க்கு வழங்கப்பெறும் சலுகைகள் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) கீழ்கண்ட முக்கிய சலுகைகள் பொதுவாக அனைத்து போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் ஊழியர்களின் குடும்பத்தாருக்கு வழங்கப்படுகின்றன:—

(1) வருடத்திற்கு ஒரு முறை தமிழகம் முழுவதும் குடும்பத்துடன் உல்லாச சுற்றுப்பயணம் சென்றுவர இலவச பாஸ்.

(2) இரண்டு குழந்தைகளுக்கு பள்ளி/கல்லூரிக்கு சென்றுவர இலவச பயணச்சலுகை.

(3) இறந்த ஊழியர்களின் குடும்பத்துக்கு ரு. 20,000/- (நடப்பு ஆண்டிலிருந்து) அளித்தல் மற்றும் அன்னாரின் வாரிசு ஒருவருக்கு தகுதிகளின் அடிப்படையில் வேலைவாய்ப்பு அளித்தல்.

(4) போக்குவரத்து கழகங்களால் நடத்தப்படும் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் பொறியியல் கல்லூரியில் தொழிலாளர்களின் குழந்தைகளைச் சேர்ப்பதற்கு முன்னுரிமை அளித்தல், மேலும் நடப்பு ஆண்டிலிருந்து மேல் நிலைப்படிப்பு மற்றும் பி.இ., எம்.பி.பி.எஸ்., போன்ற வகுப்புகளில் சேர நுழைவுத் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு தனியாக சிறப்புப் பயிற்சி அளித்தல்.'

(5) இலவச மருத்துவ வசதி.

(6) உடல் ஊனமுற்ற பிள்ளைகளுக்கு மூன்று சக்கரவண்டி இலவசமாக வழங்குதல்.

(7) மேற்குறிப்பிட்ட முக்கிய சலுகைகளைத் தவிர தொழிலாளர்களின் குடும்பத்தின் சமூகம் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகை செய்யும் பொருட்டு இன்னும் சில சலுகைகளும் வாய்ப்புகளும் போக்குவரத்துக் கழகங்களால் அளிக்கப்படுகிறது.

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இப்போது பயணக் கட்டணம் கூடுவதால், ஓட்டுநர்களுக்கு, நடத்துனர்களுக்கு பேட்டா கூடுதலாக கொடுக்கும் திட்டம் இருக்கிறதா? அதேபோன்று, இரவில் தொலைதூரம் போகும் ஓட்டுனர்களுக்கு இரண்டு ஓட்டுனர்களை நியமிக்கக்கூடிய உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, பேட்டாவைப் பொறுத்தவரையில் அது தானாக உயரும். அது குறித்து தொழிற்சங்கங்களுடன் பேசப்பட்டு, இப்போது முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. அது 1 ஆம் தேதி அமுலாக இருக்கிறது. தொலைதூர பேருந்துகளுக்கு இரண்டு ஓட்டனர்களைப் போடவேண்டும் என்று கேட்டார்கள். தூரப்பேருந்துகள் குறிப்பிட்ட தூரம் சென்றவுடன், வேறொரு ஓட்டனர் மாற்றும் வசதியை அரசாங்கம் செய்து வைத்திருக்கிறது.

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப பயணத்தை மேலும் நீட்டிப்பதற்கு உத்தேசம் இல்லையென்றாலும்கூட, தீரன், சோழன் போக்குவரத்துக் கழகங்களில் 2750 கிலோ மீட்டர் ஒரு குடும்பத்திற்கு போகலாம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது: ஆனால், பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திலே ஒரு குடும்பத்தில் 12 முறை எங்கு வேண்டுமானாலும் போய்வரலாம் என்றிருக்கிறது. அந்த அளவுக்கு உயர்த்தவில்லை என்றாலும்கூட, ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமென்பதற்காக, இந்த 12 முறை போய்வரும் சலுகை தீரன் போக்குவரத்து ஊழியர்களுக்கு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இந்த 2750 கிலோ மீட்டர் என்தது எல்லா இடங்களுக்கும் ஒரே மாதிரியாக வைக்கலாம் என்று அரசு கருதிக் கொண்டிருக்கிறது. அடுத்த பேச்சுவார்த்தையில் அதுகுறித்து முடிவு எடுக்கப்படும்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தபோது, போக்குவரத்து ஊழியர்களில் எவரேனும் இறந்துவிட்டால், அவரது வாரிசுக்கு வேலை கொடுக்கப்படும் என்று குறிப்பிட்டார்கள். மற்றத் துறைகளைவிட இந்தத் துறையில்தான் இறந்து போகின்ற சூழ்நிலை அதிகம் இருக்கிறது. ஆகவே, இதைக் கருத்தில் கொண்டு

போக்குவரத்துத் துறையில் வேலை கொடுப்பது மட்டுமின்றி, மற்றத் துறைகளிலும் வேலை கொடுக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கும் முயற்சியை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ளுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அது ஒரு நல்ல யோசனை. ஏற்கெனவே அதுபற்றி யோசித்து மற்றப் துறைகள் அவர்களுடைய துறைகளிலே அந்தப் பிரச்சினை இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அதன் தனித்தன்மையைக் கருதி சம்பந்தப்பட்ட துறையில் கொடுக்கப்பட்டு மீதியிருக்கிறவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் முடிவுக்கு வரவில்லை.

(முற்பகல் 9-30)

திரு. கு. சுப்பராயன் : தலைவர் அவர்களே, அரசுத் துறையிலே உள்ள போக்குவரத்துக் கழகங்களிலே பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு சில சலுகைகளை அரசு அறிவித்து இருக்கிறது. அதைப்போலவே தனியார் பஸ் துறையிலே பணியாற்றுகிறவர்கள் அந்த முதலாளிகளால் கடுமையாகச் சுரண்டப்படுகிற காரணத்தினால் அந்தத் தொழிலாளர்களுக்கும் அந்தச் சலுகைகளை அளிக்கக்கூடிய முறையிலே கட்டாய முறையை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியதைப்போல தொழிலாளர் துறை சார்பாகத்தான் அதைச் செய்யவேண்டும். நாம் நேரடியாகச் செய்வது கடினம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுடைய உணர்வுகளை நாம் அவர்களுக்குத் தெரிவிக்கலாம்.

திருமதி. இரா. சரோஜா: தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழக எஞ்சினியரிங் கல்லூரியில் எவ்வளவு பேர்கள் படிக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, 120 குழந்தைகள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். 38 பேர்கள் போக்குவரத்துக் கழகங்களிலே பணியாற்றுகிற தொழிலாளர்களுடைய குழந்தைகள்.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலுரை ஆற்றுகிற நேரத்திலே தொலை தூர வண்டிகள் போகிறபோது இடையிலே ஓட்டுநர்கள் மாற்றப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். தஞ்சாவூரிலிருந்து இரவு பத்து மணிக்குப் புறப்படுகிற திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப்பேருந்து நெய்வேலி போகிறபோது அங்கே ஓட்டுநர் மாற்றப்பட்டுக் கொண்டிருந்த நிலை இருந்தது. ஆனால் இப்போது நெய்வேலியிலே மாற்றப்படுகிற நிலை இல்லாததால் காலை 6 மணிக்குச்

சென்னைக்கு வந்துசேருகிற வரையில் ஒரே ஓட்டுநர் ஓட்டுவதால் இடையிலே காலை 2, 3 மணி அளவுக்கு தூக்கம் வருகிற காரணத்தினாலே என்னைப் போன்றவர்கள் அந்த வண்டியிலே வருகிறபோது சென்னைக்குப் போய்ச் சேருமா என்ற அச்சம் ஏற்படுகிற நிலை இருக்கிறது. ஆகவே இந்த முறையை மாற்றி முன்பு இருந்த முறையைக் கொண்டுவருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் நிலையைக்கருதி ஓட்டுநர் மாற்றாத நிலைமை இப்போது மாற்றப் படும்.

திரு. ஆர். ரெங்கசாமி : தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து பட்டுக்கோட்டை அழகிரி போக்கு வரத்துக் கழகத்திற்குச் சில பேர்கள் மாற்றப்பட்டார்கள் அவர்களுடைய குழந்தைகளுக்கு பாஸ்கள் வழங்கப்பட்டிருந்தன. இப்போது அந்த பாஸ் வழங்குவதை நிறுத்திவிட்டார்கள், ஆகவே மீண்டும் அதைக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, 2, 3 தினங்களுக்கு முன்பு நடந்த தொழிலாளர்கள் கூட்டத்திலே அதை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டுமென்று பல்லவன் போக்கு வரத்துக் கழகத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது நடைமுறைக்கு வந்து இருக்கும் என்று நினைக்கிறேன்.

திரு. எல்ல. இராசமாணிக்கம்: பல்லவன் போக்குவரத்துக் கழகப் பணிமனை தாம்பரத்திலே இருக்கிறது, அங்கே உள்ள அந்தத் தொழிலாளர்களுக்கு ஒரு கேன்டீன் அமைக்க வேண்டுமென்ற முறையீடுகள் அரசுக்கு அனுப்பப்பட்டும் இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆகவே அந்த நிலைமையை மாற்றி, இன்றைய தினத்திலிருந்து அந்தத் தொழிலாளர்களுடைய விருப்பத்தை நிறைவேற்ற அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, தற்போது அந்தக் குறிப்பு என்னிடத்தில் இல்லை. நிலைமையைப் பார்த்து அந்த நிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

**சென்னை ஜார்ஜ டவுன் பகுதியில் உள்ள இரும்பு மற்றும் காய்கறிச் சந்தை.**

428—(*வினா எண் 416) — திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா விற்கு விடையளிப்பாரா —

சென்னை நகரில் ஜார்ஜ் டவுன் பகுதியில் உள்ள இரும்பு விற்பனை கடைகளை மணலிக்கு அருகே மாற்றும் செயற்குறிப்பு எந்நிலையில் உள்ளது?





மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே சாத்தான்காடு கிராமத்தில் அமையவிருக்கும் இரும்பு (எஃகு மற்றும் இரும்புச் சாமான்கள் விற்கும் மொத்த அங்காடிக்குத் தேவையான 203 ஏக்கர் நிலத்தில் 45 ஏக்கர் சென்னை பெரு நகர் வளர்ச்சிக் குழுமத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மீதியுள்ள நிலங்களை விரைவில் எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆரம்ப கட்ட வேலையாக மண் பரிசோதனை, நில அளவை போன்ற வேலைகள் ஒதுக்கப்பட் டுள்ளது. இத்திட்டத்திற்காக வரைபடம் இறுதியாக்கப்பட் டுள்ளது. குடிநீர் வழங்குதல், சாலை அமைத்தல் போன்ற வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளன.

திரு. சா. துரைசாமி : தலைவர் அவர்களே, இந்த இரும்பு எஃகு சாமான்களுக்கு அமைக்கப்படுவதைப் போல சென்னை மாநகரிலே சிந்தாதிரிப்பேட்டை, பார்டர் தோட்டம், கே. கே. நகர் இன்னும் மற்றும் பல பகுதிகளிலே பழம்பொருள் வியாபாரி கள் லாரி, பஸ் ஆகியவற்றின் உதிரிப் பாகங்களை வாங்குகிற, விற்கிற உரிமையாளர்களாக இருக்கிறவர்கள் இருக்கிறார்கள், அவர்கள் இருக்கிற இடம் சென்னை மாநகரின் மேந்திரமான மையமான பகுதியிலே இருக்கிறார்கள். அதனால் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. அதைத் தவிர்க்கும் பொருட்டும் அந்தப் பொருட்களை எலலாம் ஒரே இடத்திலே வாங்குகிற முறையிலே மற்றப் பெரிய நகரங்களில் இருப்பதைப்போன்ற ஆட்டோ நகர் போன்ற பகுதியையும் சேர்த்து அமைக்கக்கூடிய முறையிலே சென்னை மாநகரிலே ஒரு ஆட்டோ நகரை அமைக்க அரசு பரி சீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன் னது நல்ல யோசனை தான். சாத்தாங்காடு பகுதியில் ஏற் கனவே துவங்கப்பட்ட திட்டத்தில் மீதி நிலம் இருந்தால், நிச்சய மாக அந்த நிலத்திலே அப்படிப்பட்ட திட்டங்கள் வருவதற்கான முயற்சியை இந்த அரசு எடுக்கும். அப்படி இல்லையெனில், வேறு ஏதாவது எந்தப் பக்கம் நிலம் இருக்கிறதோ, அதை அனு சரித்து நிச்சயமாக இந்தத் திட்டத்தை அரசு பரிசீலனை செய்யும்.

429.—(*வினா எண். 452)— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் கொத்தவால் சாவடி காய்கறி மொத்த விற்பனை சந்தையை நகருக்கு வெளியே மாற்றும் திட்டம் எந் நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, கோயம்பேடு மொத்த அங்காடிக்குத் தேவையான 230 ஏக்கரில் 26 ஏக்கர் அரசு நிலங்களையும் சேர்த்து 176 ஏக்கர் நிலம்

இதுவரை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் கையகப்படுத்தியுள்ளது. நிலம் மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. மழை நீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மண் பரிசோதனை மற்றும் நிலத்தடி நீர் பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது. நிதி உலகவங்கி மற்றும் தேசிய விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளிடம் நிதி கோரப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி கிடைத்தால் இத்திட்டம் 1988-ம் ஆண்டு முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண்கள் 430 மற்றும் 431 மாண்புமிகு அமைச்சர் அவர்களின் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் ஒத்திவைக்கப்படுகின்றன.

### ஏ. வி. எம். கால்வாயை அகலப்படுத்துதல்

*432.—(*வினா எண். 689)*— **திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகாவில் கடலோரப் பகுதியில் நீரோடி முதல் இரயுமன் துறை வரையுள்ள ஏ. வி. எம். கால்வாயை அகலப்படுத்தியும், ஆழப்படுத்தியும் பராமரிக்கும் பணி துவக்கப்பட்டுள்ளதா?

(ஆ) பணி எப்போது துவங்கப்பட்டது?

(இ) வேலை எப்போது முடியும்?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே, (அ), (ஆ) மற்றும் (இ) : ஏ. வி. எம். கால்வாயில் உள்ள தூர் அகற்றும் வேலை, ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ், நெடுஞ்சாலை ஊரக வளர்ச்சி துறையினால் துவக்கப்பட உள்ளது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஏ. வி. எம். கால்வாய் என்பது, ஏறத்தாழ ஈத்தாமொழி-யிலிருந்து, திருவனந்தபுரம் வரை செல்வதற்கு ஒரு 'போட் சர்வீஸ்' நடத்துவதற்குக் கூட வாய்ப்புகள் இருக்கும் கால்வாயாக அமைந்திருக்கிறது. அந்த முறையில், இன்று போட் சர்வீஸ்களை, இப்படிப்பட்ட கால்வாய்களிலே ஆரம்பிக்க வேண்டும் என்று மத்திய அரசு ஒரு திட்டம் வகுத்திருக்கிறது. அதற்கிணங்க, அதைப் பயன்படுத்தக்கூடிய முறையிலே விரைவிலே அந்தக் கால்வாயைச் சுத்தப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே ஏ.வி.எம். கால்வாயைப் பொறுத்தவரையிலும், இது ஒரு பாசனக்





கால்வாய் கிடையாது. அங்கே இருக்கின்ற தண்ணீர் ஆகும். ஆகவே, தான், அந்தக் கால்வாயை, உள்நாட்டு நீர் வழிப போக்குவரத்து ஏற்பாடாகத் தான் பயன்படுத்தக்கூடிய உத்தேசம் இந்த அரசுக்கு இருக்கிறது. அதன் காரணமாகத் தான் நெடுஞ்சாலை ஊரக வளர்ச்சித் துறையின் வாயிலாக, 51 இலட்சம் ருபாய் செலவில் நிலம் அற்றோர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன என்பதைச் சொல்லி இருக்கிறேன். ஆந்த முறையிலே, அந்தப் பணிகள் முடிவுறுமானால், தேவையான அளவுக்கு, உள்நாட்டு நீர் வழிப் போக்குவரத்துக்குரிய கால்வாயாக அது மாற்றக் கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகக் கருதுகிறேன்

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஏ. வி. எம். கால்வாயை, கடல் பகுதியிலே வருகிறவர்கள் மக்கள் குளிப்பதற்குக் கூட பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அந்தக் கால்வாயைச் சுத்தப்படுத்தாத நிலையில் இருப்பதால், மாவட்ட ஆட்சித் தலைவரால் சென்ற வருடம் அந்தக் கால்வாயைச் சுத்தப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் அந்தப் பணி முழுமையாக முடிவுறாமல் இருக்கிறது. விரைவில் சுத்தப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னது போல, இந்த ஏ.வி.எம். கால்வாய் என்பது, பொதுப் பணித் துறையின் பொறுப்பிலே அல்லது பராமரிப்பிலே இல்லாத ஒரு கால்வாய் ஆகும். அது போக்குவரத்துத் துறையிலே மேற்கொள்ளப்பட்ட ஒரு கால்வாய் ஆகும். என்றாலும் கூட, நெடுஞ்சாலை ஊரக வளர்ச்சித் துறையின் வாயிலாக, எனக்கு கிடைத்திருக்கிற தகவலின் அடிப்படையில் சொல்கிறேன்— அந்தக் கால்வாய் அகலப்படுத்தும், ஆழப்படுத்தும் பணிக்கு 51 இலட்சம் செலவில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, விரைவில் பணிகள் மேற்கொள்ளப்பட இருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. இதைத் தான் நான் சொல்கிறேன்.

**திரு. எப். எம். இராசரத்தினம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏ. வி. எம். கால்வாயைப் பொறுத்தவரையில், ஏறத்தாழ 300 ஆண்டுக் காலத்திற்கு முன்னால், சரித்திரக் காலத்தில், மகாராஜாக்கள், அதாவது அரசர்கள் திருவனந்தபுரத்திலிருந்து, சுசீந்தரத்திலே இருக்கிற வரலாற்றுச் சிறப்பு மிக்க தாணுமாலயப் பெருமாள் சன்னிதானத்திற்கு வந்து, தரிசனத்திற்கு அது வழியாகவந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். திருவனந்தபுரத்திலிருந்து சுசீந்திரம் வரை இந்த ஏ. வி. ம். கால்வாய் போக்குவரத்துக் கால்வாயாக இருந்திருக்கிறது. படகு மூலமாக அவர்கள் வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். இப்

போது அது ஏறத்தாழ என்னுடைய தொகுதியைச் சேர்ந்த மண்டைக்காடு வரை அந்தக் கால்வாய் இருக்கிறது. மண்டைக் காட்டிலே இருந்து, சுசீந்திரம் வரை பல்வேறுபட்ட பகுதிகளில பலர் நில ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள்.

இந்தக் கால்வாய் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, இந்த நிலைமைகளை அப்புறப்படுத்தி, முன்பிருந்ததைப் போல, ஏ. வி. எம். கால்வாய் பாதுகாக்கப்படுவதற்கும், மற்றும் கடற் கரையோரங்களில் இருப்பவர்கள் இதைக் குளிப்பதற்கும் பயன் படுத்திக் கொண்டு வருகிறார்கள் என்பதையும் மனத்திற்கொண்டு அந்த ஆக்ரமிப்புகளை அப்புறப்படுத்தி, ஏ. வி. எம். கால்வாய் முன்பு இருந்ததைப்போல் நல்ல முறையில் பயன்படும் அளவிற்கு முயற்சி செய்யப்படுமா என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத்தலைவர் அவர் களே, நான் முன்பே சொன்னதைப் போல இந்தக் கால்வாயை போக்குவரத்திற்காகப் பயன்படுத்துகின்ற அளவிற்கு மாற்றி யமைக்க வேண்டும் என்ற நடவடிக்கையிலேதான் நெடுஞ்சாலை ஊரக வளர்ச்சித்துறை ஈடுபட்டு இருப்பதாக அறிந்திருக்கிறேன். ஆனாலும், 300 ஆண்டுகளுக்கு முன்பு திருவனந்தபுரத்தில் உள்ள பத்மநாபசுவாமி கோயிலிலிருந்து தன்னுடைய இறைவணக் கத்தைத் துவக்கி சுசீந்திரம் தாணுமாலயன் கோயில் வரை சென்று இறைவனை வணங்கக்கூடிய அந்தப் பணியில் ஈடுபட்ட மன்னர்களை மறுபடியும் உலா வர வைக்க முடியாதே தவிர, பொதுவாக பொதுமக்களுக்குப் பயனுக்குக் கொண்டு வருகின்ற அளவிற்கு ஏற்கனவே இன்னும் ஒரு துறை நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிந்தவன் என்ற முறையில் தான் சொல்லியிருக்கிறேன்.

தாமிரபரணிப் பாசனப் பகுதியில் வடிகால் வசதி (433 *வினா எண். 792)— திரு. எஸ். என். இராமசாமி; மாண்பு மிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தாமிரபரணி பாசனம் குருக்காட்டூர், ராஜபதி, அங்கமங்க லம் ஆகிய கிராமங்களிலுள்ள தாமிரபரணி பாசன நஞ்சை நிலங் களை வெள்ள அழிவிலிருந்து காப்பாற்ற ஆழங்கால் வடிகால் திட்டத்தை அரசு நிறைவேற்றுமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர் களே இத்தகைய திட்டம் எதுவும் இல்லை.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இத் திட்டம் இல்லை



என்று சொல்கிறார்கள். ஆனால் ஆழங்கால் வடிகால் திட்டம் பற்றி 12 ஆண்டுகளுக்கு முன்னால் அரசால் ஆய்வு செய்யப்பட்டு அந்தத் திட்டத்தின மதிப்பீடுகள் அரசாங்கத்திற்கு அனுப்பப் பட்டதாகச் சொல்லப்படுகிறதே, அதைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அத்தகைய விவரம் எதுவும் தற்போது என் னிடத்தில் இல்லை. அந்தப் பகுதியில் அமைந்துள்ள சுசீந்தலக் குட்டன் வலங்கை வாய்க்கால் என்ற ஒரு வாய்க்கால்தான் பொதுப்பணித்துறையில் பராமரிப்பில் உள்ளது. அதைத் தவிர வேறு எந்தவிதமான வாய்க்காலும் பொதுப் பணித்துறையின் பராமரிப்பில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர வர்களால் சுட்டிக்காட்டப்பட்ட திட்டம் ஏதும் அரசின் பரிசீல னையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, 1973ஆம் ஆண்டிலே அங்கே மழை நேரத்தில் அந்தப் பகுதி விவசாயிகளுக்கு அழிவு ஏற்பட்டது. ஆகவேதான் இந்த ஆழங்கால் வடிகால் திட்டத்தை குருக்காட்டூர் பகுதியிலே அமைக்க வேண்டுமென்று நான் பலமுறை கோரிக்கை வைத்துள் ளேன். அந்த விவசாயிகளைப் பாதுகாக்கின்ற முறையில் ஆழங் கால் வடிகால் திட்டத்தை அமைச்சரவர்கள் இந்த ஆண்டில் எடுத்துத் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர்களே. குருக்காட்டூர், ராஜபதி, அங்கமங்கலம் ஆகிய கிராமங்கள் எல்லாம் தாமிரபரணியில் இருக்கக்கூடிய ஸ்ரீவை குண்டம் அணைக்கட்டுத் திட்டத்தின் கீழ் அமைந்துள்ளன. இந் தக் கிராமங்களிலே இருக்கக்கூடிய நஞ்சை நிலங்களுக்குரிய ஆழங்கால் வடிகால் திட்டம் எதுவும் இதுவரையில் இந்தத் துறையால் பராமரிக்கப்படவும் இல்லை. மேற்கொள்ளப்படவும் இல்லை. இந்தப் பகுதியிலுள்ள வடிகால் நீர் வழங்கும் கால் வாய்களாவும், இந்தக் கால்வாய்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றின் குறுக்கே கல் அணைகளும், மண் அணைகளும் உள் ளன. ஆகவே, இந்த வடிகால்களை ஆழப்படுத்துவதால் வடி கால்களின் செயல்திறனை மேம்படுத்துகின்ற வாய்ப்பு இல்லாத தன் காரணமாக இந்தப் பணிகளை மேற்கொள்ள முடியாத நிலையிலே இந்தத் துறை இருக்கிறது. வாய்க்கால்களின் பரா மரிப்பு விவசாயிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகிறார்கள் என்றுதான் எனக்கு இங்கே தகவல் தந்திருக்கிறார் கள். ஆகவேதான் நான் இந்தப் பதிலை வழங்கக்கூடிய நிலையிலே இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; உடுக்குறியிட்ட வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

மணிமுத்தாறு பெரிய கால்வாய்.

1—

வினா 33—திரு. டி. ஆர். வேங்கடரமணன் மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மறைந்த திரு.கோசல்ராம் அவர்களின் பெயரை மணிமுத்தாறு பெரிய கால்வாய்க்கு அப்போது இருந்த மணிமுத்தாறு பஞ்சாயத்து தீர்மானத்தின்படி சூட்ட அரசு முன்வருமா ?

விடை—

இல்லை.

2—

முதலை முட்டிவாரி நீர்த்தேக்கம்.

வினா 52—திரு. எந. சிவஞானம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், முதலை முட்டிவாரித் திட்டம் எப்போது அமுல் நடத்தப்படும் ?

ஆ) இந்த திட்டத்தின்கீழ் மதிப்பீடு எவ்வளவு ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : தஞ்சை மாவட்டத்தில் பல்லம் புதூருக்கு அருகில் முதலை முட்டிவாரிக்கு குறுக்கே நடப்பு ஆண்டு விலை விவரப்படி ரூ. 410.50 லட்ச மதிப்பீட்டில் ஒரு நீர்த்தேக்கம் கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

3—

கன்னியாகுமரி மாவட்டத்தின் ஊரக வேலை வாய்ப்பு திட்டப் பணிகள்

வினா 69—திரு ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் 1978 முதல் 1984 வரை ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டப் பணிகளுக்கு செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) இத்திட்டத்திற்குப் பயன்படுத்த முடியாமல் திரும்பச் செலுத்தப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) அதற்குரிய காரணங்கள் என்ன ?



136394 சென்னை-600 009.

விடை—

(அ) தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் 1—10—1980 முதல் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் மேற்கொள்ள வகை செய்யப்பட்டது. ஆனால் 1980—81க்கான நிதி ஒதுக்கீடு அவ்வாண்டின் இறுதியில் செய்யப்பட்டதால் கன்னியாகுமரி மாவட்டத்தில் 1981-82லிருந்து தான் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. எனவே 1981—82லிருந்து 1984—85 வரை கன்னியாகுமரி மாவட்டத்தின் ஊராட்சி ஒன்றியங்களில் இத் திட்டத்தின்கீழ் செலவு செய்யப்பட்ட தொகைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வரிசை எண்ணும் ஊராட்சி ஒன்றியத்தின் பெயரும். | 1981—82 | 1982—83 |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. அகஸ்தீஸ்வரம் | 8,15,200 | 10,33,127 |
| 2. தோவாளை | 7,29,507 | 11.38,011 |
| 3. இராஜாக்கமங்கலம் | 4,28,321 | 15,59,328 |
| 4. குருந்தங்கோடு | 10,49,905 | 13.42,735 |
| 5. தக்கலை | 6,31,728 | 23,29,490 |
| 6. திருவட்டார் | 11,97,681 | 17,68,153 |
| 7. கிள்ளியூர் | 7,32,394 | 18,31,902 |
| 8. முஞ்சிறை | 11,34,454 | 15,31,000 |
| 9. மேல்புறம் | 9,00,572 | 17,50,000 |
| மொத்தம் | 76,19,762 | 1,42,83,746 |

| வரிசை எண்ணும் ஊராட்சி ஒன்றியத்தின் பெயரும். | 1983—84 | 1984—85 |
|---|---|---|
| | (4) | (5) |
| | ரூ. | ரூ. |
| 1. அகஸ்தீஸ்வரம் | 24,37,968 | 16,02,114 |
| 2. தோவாளை | 20,50,000 | 15,46,258 |
| 3. இராஜாக்கமங்கலம் | 16,36,000 | 15,50,000 |
| 4. குருந்தங்கோடு | 19,63,612 | 829,910 |
| 5. தக்கலை | 24,49,349 | 15,69,478 |
| 6. திருவட்டார் | 20,45,946 | 11,61,716 |
| 7. கிள்ளியூர் | 17,88,000 | 12,30,085 |
| 8. முஞ்சிறை | 23,63,962 | 8,62,424 |
| 9. மேல்புறள் | 20,92,438 | 9,22,978 |
| மொத்தம் | 1,88,27,275 | 1,12,96,063 |

(ஆ) மற்றும் (இ) : இத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை எதுவும் செலவிடப்படாமல் திருப்பிச் செலுத்தப்பட வில்லை.

4—

**ஸ்ரீகண்டபுரம் அரசு உயர்நிலைப்பள்ளி கட்டிடம் கட்டும் திட்டம்.**

**வினா 78—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை வட்டம் ஸ்ரீகண்டபுரம் அரசு உயர் நிலைப் பள்ளிக் கட்டிடம் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், புதிய கட்டிடம் கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

(ஆ) ஆம்,

(ஆ) நடப்பு ஆண்டில் (1985—86) அரசினர் உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளில் கட்டிடம் கட்ட மற்றும் மராமத்து பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ: 1 கோடி தொகையில் இப் பள்ளிக்கு மராமத்து பணி மேற்கொள்ள பள்ளிக் கல்வி இயக்கு நரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டுள்ளது.

5—

**பிள்ளையார்நத்தம் கிராமத்தில் புதிய கண்மாய்**

**வினா 119—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா —

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி வெங்கடேஸ்வரம் கிராமம் பிள்ளையார் நத்தம் கிராமம் அருகே புதிய கண்மாய் அமைக்கும் திட்டம் எந்த அளவில் உள்ளது ?

(ஆ) இதனால் எத்தனை ஏக்கர் பாசன வசதி பெறும் ?

(இ) இதன் மதிப்பீடு எவ்வளவு ?

(ஈ) வேலை எப்போது முடியும் ?

விடை —

(அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) : திருவில்லிபுத்தூர் தொகுதி வெங்கடேஸ்வரம் கிராமத்திற்கு அருகில் ஒரு புதிய கண்மாய் அமைக்கும் திட்டத்திற்கு மதிப்பீடு ரூ. 3,00 இலட்சத்திற்கு 14—11—77ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. திருத்திய





மதிப்பீடு தொகை ரூ.4.60 இலட்சத்திற்கு 15—12—1978—ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இரண்டாவது திருத்திய மதிப்பீடு தொகை ரூ. 6.675 இலட்சத்திற்கு 17—10—1981ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இவ்வாணையின்படி துறை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்போது கீழ் பாசன ஆயக்கட்டுதாரர்கள் பணிக்கு எதிராக வழக்கு ஒன்று தொடுத்துள்ளார்கள். அவ் வழக்கில் இடைக்காலத் தடையும் இன்னும் தொடர்ந்து வரு கிறது. இவ்வழக்கு முடியும் வரை பணியினை தொடங்க முடி யாது என தலைமைப் பொறியாளர் (சிறு பாசனம்) தெரி வித்துள்ளார்.

6—

**அர்ச்சுனாபுரத்தில் அர்ஜுனா நதிக்கரை தடுப்புச் சுவர்.**

**வினா 121—திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[அ] திருவில்லிபுத்தூர் தொகுதி, அர்ச்சனாபுரம் கிராமத் திற்குள் அர்ஜுனா நதியில் தண்ணீர் ஊருக்குள் புகுந்து விடாமல் தடுப்புச் சுவர் கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில்) எப்பொழுது கட்டப்படும் ?

(இ) இதற்கான மதிப்பீடு எவ்வளவு ?

விடை—(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விக்கு இடமில்லை.

7—

**திருவில்லிப்புத்தூர் தொகுதியில் குடிநீர் வழங்கும் திட்டங்கள்**

**வினா 123—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு வேளாண் மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா ?

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி,மம்சாபுரம், வ. புதுப்பட்டி சுந்தரபாண்டியம் எஸ். கொடிக்குளம் ஆகிய பேரூராட்சிகளுக்கு குடிநீர் திட்டத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை—(அ) ஆம்.

(ஆ) குடிநீர்த் திட்டம் தொடர்பாக மம்சாபுாம் பேரூ ராட்சிக்கு ரூ. 1.22 லட்சம் மதிப்பீட்டில் கள ஆய்வுப் பணிகள் மேற்கொவ்ளப்பெற்று வருகின்றன. வ. புதுப்பட்டி பேரூ

ராட்சிக்கு ரூ. 1,17 லட்சத்திற்கு ஆய்வு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பெற்று ஆரம்ப கட்ட கள ஆய்வுப் பணிகள் முடிக்கப்பெற்றுள்ளன. சுந்தரபாண்டியம் மற்றும் எஸ். கொடிக்குளம் பேரூராட்சிகளுக்கான கள ஆய்வுப்பணிகள் யாவும் முடிக்கப்பெற்று திட்ட அறிக்கைகள் தயாரிக்கப் பெற்று வருகின்றன.

8—

### திருத்துறைப்பூண்டி பேரூராட்சியை நகராட்சியாக்கும் செயற்குறிப்பு.

**வினா 137**—திரு, பொ. உத்திராபதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி பேரூராட்சியை நகராட்சி ஆக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—ஆம்,

9—

### தொழிலாளர் ஆலோசனைக் குழு கூட்டங்கள்

**வினா 162**—திரு. கு. சுப்பராயன், திரு பொ. உத்திராபதி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர் ஆலோசனைக்குழு (முத்தரப்பு அமைப்பு) கூட்டம் எவ்வளவு நாட்களுக்கொரு முறை நடக்கிறது ?

(ஆ) அது பற்றிய விவரம் என்ன ?

விடை—

(அ) தொழிலாளர் ஆலோசனைக் குழு (முத்தரப்பு அமைப்பு) கூட்டம், மூன்று மாதங்களுக்கொருமுறை நடைபெறும்.

(ஆ) தொழிலாளர் ஆலோசனைக் குழுவின் (முத்தரப்பு அமைப்பு) தலைவர் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் ஆவர். தொழிலதிபர்கள் பிரதிநிதிகள் ஏழு பேரும், தொழிலாளர் அமைப்பின் பிரதிநிதிகள் ஏழு பேரும், அரசு அதிகாரிகள் ஐந்து பேரும் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் நான்கு பேரும் இக்குழுவில் உறுப்பினர்கள் ஆவார்கள். தொழிலாளர் துறை அரசு ஆணையர் மற்றும் செயலாளர் இக்குழுவின் உறுப்பினர் ஆவர். தொழிலாளர் நல ஆணையர் இக்குழுவின் உறுப்பினர் மற்றும் செயலர் ஆவர். மாநில அளவில் ஒரு உயர்மட்ட



ஆலோசனை அமைப்பாக இக்குழு கருதப்பட்டு தொழிலாளர் சம்பந்தப்பட்ட தலையாய பிரச்சினைகள் இதில் விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்படும். இக்குழு கடைசியாக கடந்த ஜூன் 1984-ல் கூடியது.

10—

### குள்ளவிடையானூர் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம்

**வினா 176**—திரு. செ. செம்மலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், குள்ளமுடையானூர் உயர் நிலைப் பள்ளியில் இட நெருக்கடியின் காரணமாக கூடுதல் கட்டிடம் ஒன்று கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆமெனில் அதன் விவரம் யாது ?

விடை—(அ) மற்றும் (ஆ) இப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுவது குறித்து கோரிக்கை எதுவும் பெறப்படவில்லை என்றும், கோரிக்கை பெற்றபின் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

11—

### தமிழ்நாட்டில் தேக்கு மரத் திருட்டு

**வினா 257**—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கடந்த பத்தாண்டுகளாக தேக்குமரத் திருட்டு வழக்கு ஆண்டு வாரியாகப் பதிவானது எத்தனை ?

(ஆ) அவற்றில் தண்டனை பெற்றது எத்தனை ?

விடை—(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் கடந்த பத்து ஆண்டுகளாக தேக்கு மரத் திருட்டு வழக்குகள் ஆண்டுவாரியான பதிவான வழக்குகள் விவரமாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

[1985 ஜூன் 28

| வருஷம். | | | பதிவான தேக்கு மர வழக்குகள். | தண்டனை வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| 1974—75 | .. | .. | 362 | 297 |
| 1975—76 | .. | .. | 408 | 285 |
| 1976—77 | .. | .. | 358 | 260 |
| 1977—78 | .. | .. | 291 | 228 |
| 1978—79 | .. | .. | 246 | 199 |
| 1979—80 | .. | .. | 236 | 106 |
| 1980—81 | .. | .. | 182 | 66 |
| 1981—82 | .. | .. | 193 | 53 |
| 1982—83 | .. | .. | 196 | 37 |
| 1983—84 | .. | .. | 202 | 30 |
| மொத்தம் | .. | | 2,674 | 1,561 |

12—

சந்தன மரங்கள் கடத்தல்

வினா 258—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு செய்தி—அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கடந்த பத்தாண்டுகளாக ஆண்டு வாரியாக சந்தன மரக் கடத்தல் வழக்கு பதிவானது எத்தனை?

(ஆ) அவற்றில் தண்டனை பெற்ற வழக்கு எத்தனை?

விடை—

(அ) மற்றும் (ஆ):

| ஆண்டு. | | | பதிவு செய்யப்பட்ட சந்தன மர வனக்குற்றங்களின் எண்ணிக்கை. | தண்டிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | | | (2) | (3) |
| 1974—75 | .. | .. | 160 | 118 |
| 1975—76 | .. | .. | 347 | 165 |
| 1976—77 | .. | .. | 226 | 128 |
| 1977—78 | .. | .. | 254 | 163 |
| 1978—79 | .. | .. | 407 | 193 |
| 1979—80 | .. | .. | 512 | 173 |
| 1980—81 | .. | .. | 551 | 81 |
| 1981—82 | .. | .. | 465 | 60 |
| 1982—83 | .. | .. | 318 | 42 |
| 1983—84 | .. | .. | 375 | 29 |
| மொத்தம் | .. | | 3,615 | 1,152 |

சில வழக்குகள் இன்னும் நிலுவையில் இருக்கின்றன.



1985 ஜூன் 28]

13—

**வேளாங்கண்ணி, நாகூர் பகுதிகளை யாத்திரிகர் தலமாக அறிவித்தல்**

வினா 259—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாங்கண்ணி, நாகூர் ஆகிய பகுதிகள் யாத்திரிகர்கள் வந்து போவதால் அந்தப் பகுதியை யாத்திரிகர் தலமாக அரசு அறிவித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள வேளாங்கண்ணி, நாகூர் ஆகிய பகுதிகளை யாத்திரிகர்கள் தலமாக அரசு அறிவிக்கவில்லை. தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் யாத்திரிகர் தலமாகவோ அல்லது சுற்றுலாத் தலமாகவோ அறிவிப்பதில்லை. எனினும் சுற்றுலாப் பயணிகளையோ யாத்திரிகர்களையோ அதிகமாக கவர்ந்து வரும் இடங்களை தேர்ந்தெடுத்து நிதி நிலைக்கேற்ப இத்துறை சில அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து வருகின்றது.

14—

**புத்தூர் வாய்க்காலில் குறுக்கே பாலம்.**

வினா 310—திரு. செ. தங்கராசு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மங்களூர் தொகுதி விருத்தாசலம் ஒன்றியம், டி.வி. புத்தூர், புத்தூர் வாய்க்காலில் பாலம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

15—

**சாத்துக் கூடல் உச்சிமேடு இணைப்பு பாலம்**

வினா 311—திரு. செ. தங்கராசு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மங்களூர் தொகுதி விருத்தாசலம் ஒன்றியத்திற்கு உட்பட்ட சாத்துக்கூடலையும், உச்சிமேட்டையும் இணைக்கும் பாலம் கட்டுவதற்கு அரசிடம் செயற் குறிப்புள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

(அ) இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

16—

தொழுதூர் அரசினர் உயர்நிலைப்பள்ளி

வினா 312—திரு. செ. தங்கராசு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மங்களூர் தொகுதி தொழுதூர் அரசினர் உயர் நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழா. து.

17—

திருப்பூர் நகராட்சிக்கு வாகனங்கள் வாங்கல்

வினா 335—திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சி நிர்வாகத்திடமிருந்து லாரிகள் மற்றும் டிராக்டர் வாங்குவதற்கான அனுமதி கோரும் கடிதம் மாநில அரசிற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றி அரசின் நிலை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திருப்பூர் நகராட்சிக்கு இரு லாரிகளும் இரு டிராக்டர் மற்றும் டிரெய்லர்களும் வாங்கிக்கொள்ள அரசு அனுமதி வழங்கியுள்ளது.

18—

கீழ்மணக்குடி-மேல்மணக்குடி இணைப்புப் பாலம்

வினா 354—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் கீழ்மணக்குடி—மேல்மணக்குடி இணைப்புப் பாலம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத் திட்டம் எப்போது நிறைவேற்றப் படும்?



விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

19—

குழித்துறை ஆற்றின் குறுக்கே பாலம்

வினா 365—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை ஆற்றின் குறுக்கே கணபதியான் கடவில் பாலம் அமைக்கும் செயற்குறிப்பு எந்த அளவில் உள்ளது?

விடை—

வினாவில் குறிப்பிடும் பணிக்கு ரூபாய் 80 இலட்சம் மதிப் பீட்டில் பிரேரணைகள் தயாரிக்கப்பட்டு ஏழாவது திட்டத்திற் கான மத்திய சாலை நிதி வேலைபட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. அதன் பேரில், மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

20—

சிதம்பரம்-திருச்சி சாலை

வினா 394—திரு. சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரத்திலிருந்து திருச்சி செல்லும் காட்டுமன்னார் கோயில் சாலையை மாநில நெடுஞ் சாலையாக மாற்றும் அரசு செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

விடை—

திருச்சி—சிதம்பரம் சாலையை மாநிலச் சாலையாக தரம் மாற்றப் பிரேரணைகள் நெடுஞ்சாலைத்துறைத் தலைமைப் பொறியாளரால் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அச் செயற் குறிப்பு அரசுக்கு கிடைக்கப் பெற்றதும் அது பரிசீலிக்கப்படும்.

21—

ஏரவாங்குடி உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம்

வினா 400—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் ஒன்றியம் ஏரவாங்குடி கிராமத்தில் உள்ள உயர்நிலைப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசிடம் செயற்குறிப்புள்ளதா?

[1985 ஜூன் 28

விடை—

நடப்பு ஆண்டில் (1985-86) அரசு உயர்நிலைப் பள்ளி/மேல்நிலைப் பள்ளி கட்டிடம் கட்ட மற்றும் மராமத்துப் பணிகளுக்காக அரசு ஒதுக்கியுள்ள ரூபாய் 1 கோடி தொகையில் இப்பள்ளிக்கு கூடுதலாக இரு வகுப்பறைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

22—

கோவை மாநகராட்சிப் பகுதியில் மின்சார மயானம்

வினா 431—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகராட்சி மூலம் கோவை அருகில் உள்ள ஆவாரம் பாளையத்தில் மின்சார ''மயானம்'' அமைக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லையில் கிருஷ்ணராயபுரம் கிராமத்தில் ஒரு மின்சார மயானம் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான கட்டிடம் மாநகராட்சியால் ரூபாய் 2,60,000 மதிப்பீட்டில் கட்டவும், மின் எரி உலை சாதனத்தை கோவையில் உள்ள அனைத்து ரோட்டரி சங்கத்தினரின் செலவில் நிறுவவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

23—

தஞ்சை மாவட்டத்தில் பஞ்சாயத்துக்களுக்கு மானியம்.

வினா 479—திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்திலுள்ள பஞ்சாயத்துக்களுக்கு அரசு மானியத்தொகை இவ்வாண்டு அளிக்கப்பட்டுவிட்டதா?

(ஆ) இப்பஞ்சாயத்துக்களில் நிதி பற்றாக்குறையால் மாவட்டம் முழுதும் சாலைகள் பழுதடைந்த நிலையில் உள்ளது பற்றி அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(இ) அரசு அளிக்கவேண்டிய மானியத் தொகையை பஞ்சாயத்துக்களுக்கு உடனடியாக அளிக்கப்படுமா?

விடை—

(அ) ஆம்.



1985 ஜூன் 28]

(ஆ) பஞ்சாயத்துக்களின் நிதிநிலை பற்றாக்குறை காரணமாக சாலைகள் பழுது அடைந்துள்ளது என்பது பற்றி குறிப்பாக கோரிக்கைகள் எதுவும் வரப்படவில்லை.

(இ) அரசு மான்யங்கள் ஒன்றியக் கணக்கில் ஈடு செய்யப்பட்டதும் ஆணையர்களால் ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளுக்கு பிரித்து அளிக்கப்படும்.

24—

மதுரை மாவட்டத்தில் குளங்கள் சீரமைப்பு

வினா 534—திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் குளங்கள் சீரமைப்பு திட்டத்தின் மூலம் எத்தனை குளங்கள் சீரமைக்கப்பட்டுள்ளன?

(ஆ) அதற்கு செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

விடை—

(அ) குளங்கள் சீரமைக்கும் திட்டமானது மதுரை மாவட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

25—

சிறுமலையை சுற்றுலா மையமாக்கல்

வினா 536—திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் சிறுமலையை சுற்றுலா தலமாக்க அரசிடம் ஏதும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

26—

மதுரை மாவட்டத்தில் முதியோர் உதவித் தொகை பெறுவோர்

வினா 537—திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் முதியோர் உதவித் தொகை எவ்வளவு பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது ?

விடை—

முதியோர் உதவித் தொகை திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டத்தில் பயனடைவோரின் எண்ணிக்கை கீழ்வருமாறு :—

| வகை. | ஏற்கனவேயுள்ள ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை. | அரசாணை பல வகை எண். 2060, சமூக நலம், நாள் 22–8–84-ன் படி கூடுதலாக பயனடைந்தோரின் எண்ணிக்கை. | பயனடைவோரின் மொத்த எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| அ. முதியோர் உதவித் தொகை (சாதாரணம்). | 12,130 | 5,231 | 17,361 |
| ஆ. ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை. | 1,002 | 656 | 1,658 |
| இ. ஆதரவற்ற விதவைகள் உதவித் தொகை. | 6,238 | 5,049 | 11,287 |
| ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்கள் உதவித் தொகை. | 1,500 | 1,106 | 2,606 |
| மொத்தம் .. | 20,870 | 12,042 | 32,912 |

27—

### திண்டுக்கல் பேருந்து நிலையம்

வினா 545—திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திண்டுக்கல் நகரில் பழைய பேருந்து நிலையத்தை மாற்றி அமைக்க ஏதாவது திட்டம் உள்ளதா ?



(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : திண்டுக்கல் நகராட்சிக்குச் சொந்தமான பழைய பேருந்து நிலையம் உள்ள இடத்தில், மாநில ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ. 35 இலட்சம் செலவில் 91 கடைகள் கட்டப்பட உள்ளது.

28—

### புதுக்கோட்டை ராணியார் மேல்நிலைப்பள்ளிக்கு கூடுதல் கட்டிடம்

வினா 556—திரு. த. புஷ்பராஜ : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையில் உள்ள ராணியார் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிட வசதி செய்து கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

நடப்பு ஆண்டில் (1985-86) அரசு உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளி கட்டடம் கட்ட மற்றும் மராமத்துப் பணிகளுக்காக அரசு ஒதுக்கியுள்ள ரூ. 1 கோடி தொகையில் இப் பள்ளிக்கு இரு வகுப்பறைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

29—

### திருமயத்தை சுற்றுலா மையமாக்கல்

வினா 563—திரு. த. புஷ்பராஜ : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், திருமயத்தை சுற்றுலா மையமாக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

தற்சமயம் இல்லை.

30—

### திருமயத்தில் புதிய பெண்கள் உயர்நிலைப் பள்ளி

வினா 565—திரு. த. புஷ்பராஜ : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தாலூகா, திருமயத்தில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி தொடங்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

[1985 ஜூன் 28

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், திருமயத்தில் நடப்பு கல்வியாண்டில் ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளி துவங்குவதற்கான அரசினர் கருத்துரு ஏதும் பெறப்படவில்லை என்று பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

31—

பொன்னமராவதியில் பேருந்து பணிமனை

வினா 571—திரு. த. புஷ்பராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதியில் அரசு பேருந்து பணிமனை தொடங்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

ஆம். பொன்னமராவதியில் மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம் பேருந்து பணிமனை கையகப்படுத்தப்பட வேண்டியுள்ளது. நிலம் கட்டுவதற்கு நிலம் கையகப்படுத்தப் பட்டபின் பணிமனை கட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் படும்.

32—

புதுக்கோட்டை நகரை அழகுபடுத்தல்.

வினா 582—திரு. ஜே. முகம்மது கனி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் புதுக்கோட்டை நகரத்தை அழகுபடுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



1985 ஜூன் 28]

33—

இராமநாதபுரம் மாவட்டத்தில் சிறுசேமிப்பு.

வினா 630—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் 1980–81 முதல் 1984–85 முடிய சிறுசேமிப்பில் எவ்வளவு வசூல் செய்யப்பட்டுள்ளது ?

விடை—

சிறுசேமிப்பு வசூல்

| வரிசை எண்ணும் ஆண்டும். | சாதனை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. 1980–81 .. .. .. .. | 170.98 |
| 2. 1981–82 .. .. .. .. | 229.58 |
| 3. 1982–83 .. .. .. .. | 282.64 |
| 4. 1983–84 .. .. .. .. | 413.71 |
| 5. 1984–85 .. .. .. .. | 579.73 |
| | 1,676.64 |

34—

தங்கச்சிமடம் அருகே பேருந்து நிலையம்.

வினா 631—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் தொகுதி தங்கச்சிமடம் அருகே புதிய பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

35—

போக்குவரத்துக் கழகங்களில் கட்டாய ஓய்வு கொடுக்கப் பட்டவர்கள்.

வினா 690—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1983-84 ஆம் வருடங்களில் போக்குவரத்துக் கழகங் களில் எத்தனைத் தொழிலாளர்கள் கட்டாய ஓய்வு கொடுக்கப் பட்டு வேலையிலிருந்து நீக்கப்பட்டனர் ?

(ஆ) அதற்கான காரணம் என்ன ?

விடை : (அ) நால்வர்.

(ஆ) ஒருவர் தொழுநோய் காரணமாகவும், மூவர்கள் பார்வை குறைவு காரணமாகவும், கட்டாய ஓய்வு கொடுக்கப் பட்டனர்.

36—

தேவியாறு பகுதியில் தோட்டத் தொழிலாளர் சட்டம்.

வினா 693—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், ராஜபாளையம் தாலுக்கா, சேத்தூர் மேல்மலையில் தேவியாறு தோட்டத்தில் தோட்டத் தொழிலாளர் நலச் சட்டம் எந்த வருடத்தில் இருந்து அமுல்படுத்தப்படுகிறது ?

(ஆ) எத்தனை தொழிலாளர்கள் அத்தோட்டத்தில் வேலை செய்து வருகின்றனர் ?

(இ) எத்தனை தொழிலாளர்கள் தோட்டத் தொழிலாளர் நலச் சட்டத்தை அனுபவிக்கின்றனர் ?

விடை—

(அ) தேவியாறு தோட்டத்தில் உள்ள தோட்டங்களை 1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்கள் சட்டம் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளின் கீழ் பதிவு செய்ய போதுமான ஆதாரங்கள் இல்லாமையால் அங்கு இச்சட்டத்தை அமுல்படுத்த முடியவில்லை.

(ஆ) 25—7—1984 ஆம் தேதி நடந்த ஆய்வின்போது இந்த பகுதியில் உள்ள மொத்தம் 11 ஏலக்காய் தோட்டங்க சேர்த்து அதிகபட்சம் 60 வேலை ஆட்களும் ஆய்வின் 34 வேலை ஆட்களும் பணியில் இருந்திருக்கின்றனர்.

(இ) மேலே (அ)-ல் கூறியுள்ளபடி, 1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்கள் சட்டம் அமுல்படுத்த இயலாமையால் மேற்படி தோட்டத்தை சட்டம் பிரிவு 1 (5)-ன் கீழ் கொண்டு வர சட்டம்/விதிகளின் திருத்தம் அமுலுக்கு வந்தவுடன் உரிய நடவடிக்கை எடுச்கப்படும்.

37—

## தஞ்சை மேம்பாலம் அருகே புதிய அங்காடி.

வினா 708—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூரில், மருந்துவக் கல்லூரி சாலையில் மேம்பாலத்திற்கு அருகே ஒரு விற்பனை அங்காடி கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரிச் சாலையில் மேம்பாலத்திற்கு அருகே, விற்பனை அங்காடி கட்டும் திட்டம் எதுவும் நகராட்சியால் எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆனால், நகராட்சி பேருந்து நிலையத்திற்கு அருகில் ராசராச சோழனின் 1000-வது ஆண்டு முடிசூட்டு விழா நினைவு அரங்கமும், அங்காடிகள் மையமும் அமைக்கும் திட்டம் உள்ளது.

38—

## மெட்ராஸ் ரேஸ் கிளப்பிடமிருந்து வரி வசூல்.

வினா 716—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு வணிகத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மெட்ராஸ் ரேஸ் கிளப்பிலிருந்து 1983-84, 1984-85 ஆம் ஆண்டுகளில் அரசுக்குச் சேரவேண்டிய வரி அனைத்தும் வசூலிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

128 187—6

41—

## நியாய விலைக் கடைகள்

**வினா 930—திரு. தி. அன்பழகன் :** மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுவதும் உள்ள நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) புதிதாக கடைகள் திறக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

விடை—

(அ) தற்பொழுது 20,723 நியாயவிலைக் கடைகள் உள்ளன.

(ஆ) 15—9—1984-க்கு முன் தமிழ் நாட்டில் 18,009 நியாயவிலைக் கடைகள் இருந்தன. 15—8—1984 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 15—9—1984 முதல் 1,000 குடும்ப அட்டைகளுக்கு மேலுள்ள நியாயவிலைக் கடைகள் அனைத்தும் பிரிக்கப்பட்டு புதிய கடைகள் திறக்கப்படும் என்று அறிவித்தாகள். அதன்படி 2,714 புதிய கடைகள் திறக்கப்பட்டு தற்பொழுது 20,723 கடைகள் செயல்பட்டு வருகின்றன. இன்னும் 98 கடைகள் திறக்கப்பட வேண்டியுள்ளன.

42—

## வனத்துறை அதிகாரிகளுக்கு படைக்கலன்கள்

**வினா 953—திரு. தி. அன்பழகன் :** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வனத்துறை அதிகாரிகள் இரவு நேரங்களில் சந்தனக் கட்டைகள் திருட்டை தடுக்க ரோந்து போகும்போது அவர்கள் பாதுகாப்பிற்கு ரிவால்வர் போன்ற ஆயுதங்கள் வழங்கப்படுமா ?

விடை :

தமிழ் நாடு வனத்துறையின் பல்வேறு வனப்பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் பணியாளர்கட்கு ஏற்கனவே தேவைக்கேற்ப படைக்கலன்கள் வழங்கப்பட்டுள்ளன. அப்படி வழங்கப்பட்ட படைகலன்களின் மண்டல வாரியாக விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| மண்டலத்தின் பெயர். | .410 துப்பாக்கி. | 12 போர் பி.பி.பி.எல். துப்பாக்கி. | .303 ரைபில். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| திருச்சிராப்பள்ளி .. | 22 | 1 | .. |
| வனச்செயல் திட்டம் திருச்சி. | 1 | .. | .. |
| வேலூர் .. | 14 | .. | 1 |
| நெல்லை .. | 26 | 11 | .. |
| ஆராய்ச்சி கோவை | 1 | .. | .. |
| கன்னியாக்குமரி கிழக்கு ரப்பர் மண்டலம் | 6 | .. | .. |
| கன்னியாக்குமரி மேற்கு ரப்பர் மண்டலம். | 6 | 2 | .. |
| சேலம் .. | 24 | 15 | .. |
| மதுரை .. | 27 | 1 | .. |
| நீலகரி .. | 18 | 7 | 6 |
| | 176 | 44 | 13 |



| மண்டலத்தின் பெயர். | .22 ரைபில். | .455 ரிவால்வர். | மொத்தம். |
|---|---|---|---|
| | (5) | (6) | (7) |
| திருச்சிராப்பள்ளி .. | .. | .. | 23 |
| வனச்செயல் திட்டம் திருச்சி | .. | .. | 1 |
| வேலூர் .. | 2 | .. | 17 |
| நெல்லை .. | .. | .. | 37 |
| ஆராய்ச்சி கோவை | .. | .. | 1 |
| கன்னியாக்குமரி கிழக்கு ரப்பர் மண்டலம் | .. | .. | |
| கன்னியாக்குமரி மேற்கு ரப்பர் மண்டலம் | .. | .. | 6 |
| சேலம் .. .. | .. | .. | 39 |
| மதுரை .. .. | .. | .. | 28 |
| நீலகிரி .. .. | 1 | .. | |
| மொத்தம் : | 3 | 1 | 237 |

மேற்சொன்ன படைக்கலன்கள் தவிர இன்னும் படைக்கலன்கள் வாங்குவது பரிசீலனையில் இருக்கிறது.

43—

## புல்லூர் நீர் தேக்கம்

வினா 954—திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா—

வடஆற்காடு மாவட்டம் பாலாற்றின் குறுக்கே புல்லூர் நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு ஏதாவது நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா ?

விடை—

இத் திட்டத்தினால் சுமார் 192 ஏக்கர் பரப்புள்ள நீரில் மூழ்கும் பகுதி ஆந்திர மாநிலத்தில் இருப்பதால், அம் மாநில எல்லைக்குள் உள்ள பகுதிகள் நீரில் மூழ்காதவாறு மாற்று இடத்தில் நீர்த்தேக்கம் கட்டுவதற்கான சாத்தியக் கூறுகள் பரிசீலனையில் உள்ளன.

## சின்னசேலம் தொகுதியில் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடங்கள்

44—

வினா 966—திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் சின்ன சேலம் தொகுதியில் பெரிய சிறுவத்தூர், தாகம் தீர்த்தபுரம் ஊரிலுள்ள உயர்நிலைப் பள்ளிகட்கு நிரந்தரக் கட்டிடம் இல்லாதது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அதற்காக அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்

(ஆ) நடப்பு ஆண்டில் 1985—86) அரசு உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப் பள்ளி கட்டிடம் கட்ட மற்றும் மராமத்துப் பணி களுக்காக அரசு ஒதுக்கியுள்ள ரூபாய் ஒரு கோடி தொகையில் இப் பள்ளிகளுக்கு இரு வகுப்பறைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது

45—

வினா 967—திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?



தென்னாற்காடு மாவட்டம் சின்ன சேலம் அரசு (பெண்கள்) பள்ளியில் கட்டிடத்தின் கூரைகள் பழுது அடைந்திருப்பதால் அவற்றை சீர்செய்ய அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

நடப்பு ஆண்டில் (1985-86) அரசினர் உயர் நிலை / மேல் நிலைப் பள்ளிகளில் கட்டிடம் கட்ட மற்றும் மராமத்து பணி களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூபாய் ஒரு கோடி தொகையில் இப்பள்ளிக்கு மராமத்து பணி மேற்கொள்ள பள்ளிக் கல்வி இயக்குநரிடமிருந்து செயற்குறிப்பு பெறப்பட்டுள்ளது.

## சின்ன சேலம் தொகுதியில் பிற்பட்ட மாணவர் இல்லங்க .

46—

வினா 968—திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பிற்படுத் தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) சின்ன சேலம் தொகுதி, பெரிய சிறுவத்தூர், நயினார் பாளையம் ஆகிய உயர்நிலைப் பள்ளிகள் உள்ள இடத்தில் பின் தங்கிய மாணவர் விடுதி திறக்க அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

47—

## சிவகாசித் தொகுதியில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்

வினா 982—திரு. வ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா ?

சிவகாசி தொகுதியில் இதுவரை இலவச வீட்டுமனைப் பட் டாக்கள் எத்தனை பேருக்கு அரசு வழங்கியுள்ளது ?

விடை—

காமராஜர் மாவட்டம், சிவகாசி தொகுதியில் இதுவரை 1,292 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

48—

### சென்னம்பட்டியில் அணை.

வினா 986—திரு. மு. பிச்சை : மாண்புமிகு பொதுப்பணி. துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?—

(அ) சென்னம்பட்டியில் அணைக்கட்டி அதன் கீழ் உள்ள ண்மாய்களுக்கு தண்ணீர் கொடுத்து பாசன வசதி செய்துக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) இதனால் எத்தனை ஏக்கர் நிலம் பயன்படும் ?

(இ) இத் திட்டம் எப்பொழுது, எவ்வளவு ரூபாய் மதிப் பீட்டியில் ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இத் திட்டத்தின் மூலம் சுமார் 1,221, 90 ஏக்கர் நிலங்களுக்கு பாசன உறுதியளிக்கப்படும் மற்றும் 215.42 ஏக்கர் பாசனப்பற்றாக்குறை நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கும். தவிர, 995, 40 ஏக்கர் நிலங்களுக்கு 21 கண்மாய்கள் மூலம் புதிதாக பாசன வசதி கிடைக்கும்.

(இ) இத்திட்டத்தின் திருத்திய திட்ட அறிக்கையின் மதிப் பீடு ரூபாய் 519 இலட்சம். அது அரசினால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

49—

### புஞ்சை புகளூர் காகிதத் தொழிற்சாலை

வினா 1072—திரு. வை. தங்கவேலு : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா — ?

(அ) புஞ்சை புகளூர் காகிதத் தொழிற்சாலைகளில் எவ்வளவு தொழிலாளர்கள் நிரந்தரமாக வேலை செய்கிறார்கள் ?

(ஆ) அவர்களில் பிற்படுத்தப்பட்டவர், தாழ்த்தப்பட்டவர், மலைஜாதியினர் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை—

| | | |
|---|---|---|
| (அ) | 1. அலுவலர்கள் .. .. .. | 283 |
| | 2. அலுவலகப் பணியாளர்கள் .. .. | 111 |
| | 3, தொழிலாளர்கள் .. .. .. | 792 |
| | மொத்தம் .. .. | 1,186 |



| | | |
|---|---|---|
| (ஆ) | 1. பிற்படுத்தப்பட்டவர் .. .. | 675 |
| | 2. தாழ்த்தப்பட்டவர் .. .. | 172 |
| | 3. மலைஜாதியினர் .. .. .. | 1 |
| | 4. இதர வகுப்பினர் .. .. .. | 338 |
| | மொத்தம் .. | 1,186 |

50—

### வேம்பரளி சாலை விளக்குகள்.

வினா 1133—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா.—

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், நத்தம்-மதுரை ரோடிலிருந்து வேம்பரளிவரை மின்சார விளக்குகள் பொருத்தும் திட்டம் உள்ளதா ?

விடை—

இல்லை.

[குறிப்பு: — ஓர் உரையின் தொடக்கத்தில்(*)உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு

### எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன் வடிவு 1985 (மே.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு· தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில், 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1985) ஆய்வு செய்யப்பெற்று பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பியனுப்பப்பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

## 3. கவன ஈர்ப்புகள்

### (அ) வேடசந்தூர் வட்டம் வெல்லம்பட்டி பகுதியில் இரும்புத்தாது படிவ அமைப்பு காணப்பெறுவது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், வேடசந்தூர் வட்டம் வெல்லம்பட்டிப்

பகுதியில் அண்மையில் விவசாயக் கிணறுகள் தோண்டும்பொழுது, அக்கிணறுகளில் ஏராளமான அளவில் இரும்புத்தாது கிடைத்தது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

வெள்ளாம்பட்டி கிராமம், வேடசந்தூர் நகரத்திலிருந்து சுமார் 10 கி. மீ. கிழக்கே உள்ளது. மதுரை மாவட்டம், வேடசந்தூர் வட்டத்தில் வெள்ளாம்பட்டி பகுதியில் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இரும்புத்தாது படிவ அமைப்பு ஒன்றும், இதுவரை கண்டறியப்படவில்லை. இப்பகுதியில் கார்னைசுப்பாறைகள் (Calo gneiss) மாக்னடைட் குவார்ட்ஸைட் Magnesite Quartzizite) ஆம்பிபோலைட் பாறைகள் (Amphibol:ties) பயோடைட் நைசுப்பாறை (Bictite gneiss) மற்றும் வெங்கக்கல் கொடிகள் முதலிய பாறை வகைகள் பொதுவாக காணப்படுகின்றன: விவசாய பணிகளுக்காக இப்பகுதியில் காணப்படும் மெல்லிய பட்டை அமைப்புகளில் உள்ள இரும்பு குவார்ட்ஸைட் (Ferrugenon Quartizte) அல்லது மாக்னடைட் குவார்ட்ஸைட் முதலியன கிணறு தோண்டும் பகுதிகளில் கிடைக்க வாய்ப்பு உண்டு. இத்தன்மையான இரும்பு அல்லது மாக்னடைட் குவார்ட்ஸைட் வெள்ளாம்பட்டி பகுதி மட்டுமின்றி மாநிலத்தின் பல பகுதிகளிலும் காணப்படுகின்றது. இருப்பினும் 5 செ. மீ. அகலத்தில் மெல்லிய பட்டை அமைப்புகளில் உள்ள இரும்பு குவார்ஸைட் அல்லது மாக்னடைட் குவார்ட்ஸைட் படிவங்களில் மிகக்குறைந்த அளவுள்ள சுமார் 30 விழுக்காடுகள் இரும்புச்சத்து காணப்பட்டபோதிலும், அவைகள் பொருளாதார முக்கியமற்றவையாகும். இப்படிவ அமைப்புகள் கல்விமுறை முக்கியத்துவம் மட்டுமே வாய்ந்தனவாகும்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே பல்வேறு முறைகளிலே இப்படிக் கிணறு தோண்டுகிறபொழுது, அப்படிப்பட்ட இரும்புத்தாது படிவங்கள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. அவை 30 விழுக்காடுதான் இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த வட்டத்தில், மற்ற பகுதிகளில் இது போன்றவைகளில் கூடுதல் விழுக்காடு கிடைக்குமா என்பதை இந்தத் துறை மூலம் ஆய்வு செய்ய அரசு முயற்சிகள் மேற்கொள்ளுமா?





மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனிமவள, நீர்வளத் துறை இதுபற்றிய ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து செய்துகொண்டே இருக்கிறது. 30 சதவீதம் மட்டுமே இரும்புத்தாது இருப்பதாலே, வெட்டி எடுப்பதாலே பொருளாதார ரீதியிலே கட்டுப்படியாகாது என்ற காரணத்தாலே எடுக்க இயலாத நிலையில் இருக்கிறது. அதிகமான அளவில் இரும்புத் தாது உள்ள படிமங்கள் கிடைக்குமானால் அதை எடுக்க இந்த அரசு முயற்சி எடுக்கும்.

(ஆ) காமராசர் மாவட்டத்திற்கென நீதிமன்றம் கட்டப்பெறாமல் உள்ள நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. ஆர். வேங்கடரமணன் ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவர் இருக்கையில் இல்லாததால், அவர் சார்பில் திரு. என். எஸ். வி. சித்தன் மாண்புமிகு சட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, ''காமராசர் மாவட்டம் அமைக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் மற்றும் இதர அலுவலகங்கள் எல்லாம் கட்டப்பட்டும், மாவட்ட நீதிமன்றம் கட்டப்படாததால் எழுந்துள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

முன்பிருந்த இராமநாதபுரம் மாவட்டம், தற்போது இராமநாதபுரம், காமராசர் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கம் ஆகிய மூன்று மாவட்டங்களாக முறையே இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களைத் தலைநகரங்களாகக் கொண்டு, 15--3--1985 முதல் செயல்படத் தொடங்கியுள்ளன. இதனைத் தொடர்ந்து, மூன்று மாவட்டங்களிலும் புதிய மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள் அமைக்கப்படுவதற்கான 'வரைவு அறிவிக்கைகள் கொண்ட செயற்குறிப்பினை உயர்நீதிமன்றத்திடமிருந்து கோரப்பட்டுள்ளது. போதுமான இடவசதி போன்ற உள் அமைப்புகள் மற்றும் இதர வசதிகள் இல்லாத காரணத்தினால் மேற்கூறப்பட்ட மாவட்ட நீதிமன்றங்கள் தற்போது உடனடியாக அமைக்கப்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரையும் காமராசர் மற்றும் பசும்பொன்

(திரு. சி. பொன்னையன்) [1985 ஜூன் 28

முத்துராமலிங்கம் மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் இராமநாதபுரம் மாவட்ட நீதிபதி அவர்களுடன் கலந்து ஆலோசித்து மேலே கூறிய இடங்களில் நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டப்படும் வரை நீதிமன்றங்கள் செயல்படுவதற்காக தேவை யான தற்காலிக இடவசதி மற்றும் இதர வசதிகளைச் செய்து தருமாறு கேட்கப்பட்டுள்ளது. அவர்களிடமிருந்து பதில் எதிர் பார்க்கப்படுகிறது. அதுவரை தற்காலிக ஏற்பாடாக, முன்பு இருந்த ஒருங்கிணைந்த இராமநாதபுரம் மாவட்டத் தலைமை நீதிபதியே இந்தப் புதிய மாவட்டங்களிலும் அதிகாரத்தைச் செலுத்த தனியாக அறிவிக்கை மூலம் வகை செய்யப்பட்டுள்ளது. சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மூன்று ஆட்சித் தலைவர் களிடமிருந்தும் கேட்கப்பட்டுள்ள முழு விவரங்களும் கிடைக்கப் பெற்றதும், மாவட்டத் தலைமை உரிமையியல் மற்றும் குற்ற வியல் நீதிமன்றங்கள் மற்றும் ஏனைய நீதிமன்றங்களை அமைப்பதற்கும் அவற்றிற்கான கட்டிடங்கள் கட்டுவதற்கும் அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

## 4. அரசினர் தனித் தீர்மானம்.

### பணி ஓய்வு பெறுகின்ற பேரவைச் செயலர் திரு. கி. மு. அழகர்சாமிக்குப் பாராட்டு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை மொழிகிறேன்:—

" தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் செயலாளராக 1976 ஆம் ஆண்டு முதல் பணியாற்றி 30-6-1985 ஆம் நாள் ஓய்வு பெறவிருக்கும் திரு. கி. மு. அழகர்சாமி, பி. ஏ., பி. எல்., அவர்கள் சட்டமன்றப் பேரவை-மேலவை ஆகிய இரு அவை களிலும், 1955 முதல் 1985 ஆம் ஆண்டு வரை, 30 ஆண்டு காலம் ஆற்றியுள்ள நீண்ட பெரும் தகைசால் பணிகள், எந்த நேரத்திலும் தயக்கமின்றி உடனடியாக மேலான பரிந்துரை அளிக்கும் திறன், சட்டமன்ற விதிகள் பற்றியும், சட்டமன்ற- பாராளுமன்ற மரபுகள் பற்றியும் தெளிவாகவும், திட்பமாகவும் அறிந்து வைத்து அவ்வப்போது எடுத்தியம்பும் நுண்ணிய அறிவாற்றல், உறுப்பினர்கள் தங்கள் கடமைகளைச் சட்டமன்றப் பேரவையிலும் சரி, மேலவையிலும் சரி, அவற்றின் பல்வேறு குழுக்களிலும் சரி செவ்வனே நிறைவேற்ற அவர் நல்கிய உதவி ஆகியவற்றைப் போற்றிப் புகழ்ந்து இப்பேரவை பாராட்டுவ தோடு, இப்பேரவை, பெரிதும் விரும்பி நல்கும் பாரட்டுதல்களை அவருக்குத் தெரிவிக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறது.,,



1985 ஜூன் 28] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

(முற்பகல் 9-50)

பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலும் இந்திய நாடாளுமன்றத் திலும் இந்தச் சட்டமன்றப் பேரவையிலும், சட்டமன்ற மேலவை யிலும் வழக்கமாகக் கடைபிடித்து வருகின்ற ஒரு மரபை ஒட்டி இந்தப் பேரவையிலே செயலாளராக பணியாற்றி, வருகின்ற 30ஆம் நாள் ஓய்வுபெற இருக்கின்ற திரு. கி. மு. அழகர்சாமி அவர் களுக்குப் பாராட்டுதல் தெரிவிக்கின்ற முறையில் இந்தத் தீர்மானம் அமைந்திருக்கிறது. ஜனநாயக நாடுகளில் பாராளுமன்ற மரபுக்கு ஏற்ப இப்படி பாராட்டி அனுப்பி வைக்கின்ற ஒரு முறையை சிறப்பாகக் கையாண்டு வருகிறார்கள். அந்த முறையி லேதான் இந்தத் தீர்மானத்தை நான் இந்த அவையிலே முன் மொழிந்துள்ளேன். இந்த அவையினர் இந்தத் தீர்மானத்தை முழு அன்போடு ஆதரவோடு ஏற்றுக்கொள்வார்கள் என்ற முழு நம்பிக்கை எனக்கு உண்டு.

திரு. கி. மு. அழகர்சாமி அவர்கள் 30 ஆண்டுக் காலமாக சட்டமன்றத் துறையில் இருந்து பணியாற்றி வந்திருப்பது உள்ள படியே பாரட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரிய ஒரு செயலாகும். ஜனநாயக நாட்டிலே சட்டமன்றத்திற்கும் பாராளுமன்றத்திற்கும் எவ்வளவு முக்கியத்துவம் அமைந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். நான் ஒன்றை மட்டும் எடுத்துத் தெரிவிக்க விரும்புகிறேன். நீதித் துறை ஒருபக்கம் இருந்தாலும், நிர்வாகத் துறை மற்றொரு பக்கம் இருந்தாலும் இரண்டு துறைகளுக்கும் வழிகாட்டியாக இருப்பது சட்டமன்றத் துறை. ஆக, சட்டமன்றம் சிறப்பாக, செம்மையாக நடைபெற வேண்டுமென்றால் சட்டமன்றச் செயலகம் சிறப்பாகப் பணி யாற்ற வேண்டும். சட்டமன்றச் செயலகம் சிறப்பாக தன்னுடைய பணியை நிறைவேற்ற வேண்டுமென்றால் சட்டமன்றச் செயலகத்தை இயக்கிச் செல்லுகின்ற முழு பொறுப்பையும் கடமையையும் ஏற்றிருக்கிற செயலாளர் அவர்களுடைய திறமையையும், தகுதியையும், அணுகுமுறையையும் அவர் களுடைய ஆற்றல் சிறப்பையும் பொறுத்து அமைவதாகும்.

அந்த முறையிலேதான் திரு. கி. மு. அழகர்சாமி அவர்கள் 30 ஆண்டு காலம் ஒரே துறையிலே இருந்து பணியாற்றுகின்ற வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். இவ்வளவு நீண்டகாலம் அனுப வத்தைப் பெற்றிருக்கிற ஒருவரால் இந்தச் செயலகம் இயக்கிச் செல்லப்படுகிறது என்றால் அது மிக மிகச் சிறப்பாகத்தான் இருக்கும். 30 ஆண்டுக் காலம் ஒரே துறையிலிருந்து ஒரே துறையில் முழு கவனத்தையும் செலுத்தி, சிறப்பான பணிகளை ஆற்றி வந்திருக்கிறார்கள். சட்டமன்றப் பேரவைத் துணைச் செயலாளராக இருந்து, பிறகு சட்டமன்ற மேலவைச் செயலாளராகப் பணி யாற்றி, 1976 ஆம் ஆண்டிலிருந்து சட்டமன்றப் பேரவைச் செயலாராகப் பணியாற்றி வருகிறார்கள்.

சட்டமன்ற மேலவைச் செயலாளராக 12 ஆண்டுகள் பணியாற்றி, சட்டமன்றப் பேரவைச் செயலாளராக 9 ஆண்டுகள் பணியாற்றி இருக்கிறார்கள். ஆக, செயலாளராக மட்டும் சட்டமன்றப் பேரவை, சட்டமன்ற மேலவை ஆகிய இரண்டு துறைகளிலும் 21 ஆண்டுகள் பணியாற்றுகின்ற ஒரு சிறப்பான தன்மையை அவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. அவர்கள் பல்வேறு சட்டமன்றப் பேரவைத் தலைவர்கள் கீழே பணியாற்றி அவர்களுடைய நம்பிக்கை, நல்லெண்ணத்தைப் பெற்றிருப்பது மட்டுமல்ல, பாராட்டுதலைப் பெற்றிருப்பது மட்டுமல்ல, மேலவைத் தலைவர்கள் பாராட்டுதல்களையும் பெற்றிருக்கிறார்கள். சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்களுடைய நல்லெண்ணத்தையும் நம்பிக்கையும் அன்பையும் அரவணைப்பையும் பெற்றிருக்கிறார்கள். ஆக, எஸ். சிவசண்முகம் பிள்ளை, என். கோபாலமேனன். யு. கிருஷ்ணராவ், எஸ். செல்லப்பாண்டியன், சி. பா. ஆதித்தன், கே. ஏ. மதியழகன், புலவர் கோவிந்தன், முனு ஆதி, க. இராசாராம், பி. எச். பாண்டியன் ஆகிய மாண்புமிகு பேரவைத் தலைவர்களின் கீழும்; பி. வி. செரியன், எம். ஏ. மாணிக்கவேலு, சி. பி. சிற்றரசு, மா. பொ. சிவஞானம் ஆகிய மாண்புமிகு மேலவைத் தலைவர்களின்கீழும் பணியாற்றும் தன்மையை அவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

30 ஆண்டுக்காலம் இந்தத் துறையிலே இருந்து பணியாற்றியிருக்கிறார்கள், என்பதோடு மட்டுமல்லாமல் இந்தத் துறை பற்றிய நடவடிக்கைகள் இந்தத் துறை பற்றிய விதிமுறைகள் ஆகியவற்றை எல்லாம் மிக ஆழமாக அறிந்து வைத்திருப்பவர்களாவார்கள்.

இவ்வாறு பரந்த முறையிலும், விரிந்த முறையிலும், ஆழமான வகையிலும் சட்ட திட்டங்களை எல்லாம் தெரிந்து வைத்திருந்தால்தான் சட்டமன்ற நடவடிக்கைகளை இடையூறு ஏற்படாமல் இடுக்கண் ஏற்படாமல் சிறப்பாக நடத்துவதற்கு வாய்ப்பாக அமையும் அதற்கான முழுத்தகுதியையும் திறமையையும் திரு. கி. மு. அழகர்சாமி அவர்கள் பெற்றிருப்பவர் என்பதை நாம் நன்றாக உணர்வோம்.

அதுமட்டுமல்லாமல் அவரை நான் 1962 ஆம் ஆண்டிலிருந்து கிட்டத்தட்ட 23 ஆண்டுக்காலம் நன்கு அறிவேன். எதிர்க்கட்சித் தலைவராக நான் இருந்த காலத்தில் அப்போது அவர்கள் சட்டமன்ற மேலவையினுடைய துணைச் செயலாளராக இருந்தார்கள். எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது கூட சட்ட நுணுக்கங்கள் பற்றியும் விதிமுறைகள் பற்றியும், அணுகுகின்ற முறைகள் பற்றியும், அதற்கு முன்னால் இருந்த மரபுகள் பற்றியும் அதற்கு முன்னால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி எல்லாம் விளக்



கங்களைக் கேட்க வேண்டும் என்றால் அவர்களிடத்திலே சென்று தான் நான் விளக்கம் பெறுவேன். எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் இந்தச் சபையினுடைய பணிகள் சிறப்பாக நடைபெற வேண்டும் என்று கருதி எந்தெந்த விளக்கங்களைத் தரவேண்டுமோ எந்தெந்த விதிமுறைகளை எடுத்துச் சொல்ல வேண்டுமோ அந்த அளவுக்கு எடுத்துச் சொல்வார்கள். அந்த வகையிலே அவர்களை நான் மிக நன்றாக அறிவேன். அந்த வகையிலே பல்வேறு பணிகளை அவர்கள் சிறப்புற ஆற்றி எல்லா வகையிலேயும் தங்களுடைய கடமைகளை ஒழுங்குற நிறைவேற்றி இந்தச் சட்டமன்றத்தினுடைய பணிகள் சிறப்பாக அமைய வேண்டும் என்ற கருத்தோடு பணிகளைச் செய்தவர் அவர்கள். ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற வகையில் கட்சிகள் மாறி, மாறி வரும். அதனுடைய கொள்கைகளும் மாறுபட்டு வரும், குறிக்கோள்களும் மாறுபட்டு வரும். அவ்வாறு கொள்கைகள், குறிக்கோள்கள் ஆகியவற்றிற்கேற்ப சட்ட முன்வடிவுகள் எல்லாம்கூட மாறும். அந்த வகையிலே எப்படி எல்லாம் மாறினாலும் சட்டமன்றத்தினுடைய நடவடிக்கைகள் என்பதைப் பொறுத்த வரையிலே ஒரு முறையினைக் கையாள வேண்டும் என்பதில் அழுத்தத்திருத்தமான தன்மையை அவர்கள் கொண்டு வருவார்கள். Man may come and men may go, but I will go on for ever என்று டென்னிஷன் அவர்கள் ஆங்கிலத்திலே பாடியது மாதிரி மனிதர்கள் வருவார்கள் மனிதர்கள் போவார்கள், நான் என்றும் ஓடிக்கொண்டே இருப்பேன் எனச் சிற்றாறு சிந்து பாடிக் கொண்டே இருக்கும் என்று டென்னிஷன் அழகாகச் சொன்னார். அந்த மாதிரி Minist.y may come and Ministry may go, but I go on for ever என்ற முறையில் இந்தப் பேரவையினுடைய செயலாளர் திரு. கி. மு. அழகர்சாமி அவர்கள் காங்கிரஸ் கட்சியின் ஆட்சி இங்கே நடைபெற்றபோதும் சரி, அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி நடைபெற்ற போதும் சரி, அதன் பின்னர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி கடந்த 7, 8 ஆண்டுக் காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதும் சரி, அவர்கள் செயலாளராக இருந்து, தான் ஏற்றுக் கொண்ட பொறுப்புக்கேற்ப கடமைகள் ஆற்றி அந்தந்த ஆட்சிகளின் தன்மைகளும், கொள்கைகளும் எப்படி இருந்தாலும் சட்டமன்றத்தை நடத்திச் செல்கின்ற விதிமுறை என்பது ஒன்றுதான் என்றும் அந்த விதிமுறைகளுக்கு கட்டுப்பட வேண்டும், மதிப்புத் தரவேண்டும் என்று அந்த வகையிலே பணியாற்றி வருகிறார்கள்.

கிட்டத்தட்ட எல்லாக் குழுக்களிலும் ஈடுபாடு கொண்டிருந்து அந்தக் குழுக்களைச் செம்மையாக நடத்திச் செல்வதிலே அந்தக் காலத்தில் இருந்து இந்தக் காலம் வரையில், அவர்கள் துணைச் செயலாளராக இருந்த போதும் சரி, செயலாளராக இருந்த போதும் சரி பணியாற்றுகின்ற நல்ல வாய்ப்பையும், அனுபவத்தையும் அவர்கள் பெற்றவர்களாவார்கள்.

சட்ட முன் வடிவுகளை ஆய்வு செய்கின்ற எல்லா வகையான குழுக்களிலும் கூட அவர்கள் இடம் பெற்று சிறப்பான செம்மையை வகித்தார்கள். எந்த ஒரு சிறு பிரச்சினையைப்பற்றி எடுத்துச் சொன்னாலும் அதுபற்றிய முன் மாதிரி வேண்டும் என்றால் நாடாளு மன்றத்தில் எப்படி இருக்கின்றது, பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் எப்படி இருக்கின்றது, என்ன முறையைக் கையாண்டார்கள் என்பன வற்றை எல்லாம் கேட்டவுடனே அதுபற்றிய குறிப்புக்களைக் கொண்டு வந்து வைத்து சட்டமன்றத்தை ஒழுங்காக நடத்திச் செல்கின்ற வழிவகைகள் அமையத்தக்க அளவுக்கு கருத்துக்களை எடுத்துக் கூறுகின்ற பணிகளிலே ஈடுபட்டவர்கள் அவர்கள். எனவே சட்டமன்றம் சிறப்பாக நடைபெற வேண்டும், ஒழுங்காக நடைபெற வேண்டும், செம்மையாக நடைபெற வேண்டும் என்பதில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். ஆகவே ரூல்ஸ் கமிட்டி என்று சொல்லப்படுகின்ற விதிக்குழுக்களிலும் இடம் பெற்று நியாயமான, நேர்மையான ஒரு ஒழுங்கு வகையினுடைய அடிப்படையில் சட்டமன்ற நடவடிக்கைகள் அமைய வேண்டும் என்பதற்காக அந்தக் காலத்தில் இருந்து இந்தக் காலம் வரையில் அவர்கள் பேருதவிகளைச் செய்து வந்திருக்கிறார்கள் என்பதை நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதும், இந்த அவையின் முன்னவராக முன்பு இருந்தபோதும், இப்போதும் நான் அறிந்திருக் கிறேன். அந்த வகையில் அவர்களுடைய பணிகள் மிகச் சிறந்த வகையில் இந்த அவைக்கு அமைந்திருக்கின்றது. ஆகவே சட்ட மன்றமும் சட்டமன்ற உறுப்பினர்களின் விருப்பங்களும் மிகச் சிறப்பாக நடைபெற வேண்டும் என்பதிலே கண்ணும் கருத்துமாக இருந்து வருபவர்கள் அவர்கள்.

நிதி சம்பந்தமாக கோரிக்கைகள் எல்லாம் இந்த அவையிலே தான் நிறைவேறும். மற்றவைகள் தான் மேலவைக்குச் செல்லும்.

(முற்பகல் 10—00)

ஆனால் மேலவையிலே நிதிக் கோரிக்கைகள் பற்றி, மானியக் கோரிக்கைகள் எல்லாம் அங்கே வைக்கப் பெறா. அப்படிப்பட்ட நிலைமை இருந்தது. மேலவை உறுப்பினர்கள் எல்லாம் கொள்கை பற்றிய விளக்கங்களை எல்லாம் நாங்கள் விவாதிப்பதற்கு வாய்ப்பே இருப்பது இல்லை, அதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும் என்று கருதிய போது, அவர்கள் அப்போது மேலவை யிலே செயலாளராக இருந்தபோது, மானியக் கோரிக்கையாக வைக்காவிட்டாலும் கூட, குறிப்பிட்ட துறையைப் பற்றிய கொள்கை குறிப்பு ஏடு ஒன்றை வைத்தால், அதன் மீது விவாதத்தை வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னதற்குப் பிறகு, எப்படி ஒவ்வொரு மானியக் கோரிக்கை மீது அந்தந்த துறையைப் பற்றிய கருத்துக்களை பேரவை உறுப்பினர்கள் தாராளமாகவும் சில



சமயங்களில் ஏராளமாகவும் சொல்வதற்கு இங்கே வாய்ப்பு வழங் கப்படுகிறதோ அது போல் மேலவையிலும் வாய்ப்பு வழங்கப் பட்டது. அதற்கு முன்னாலே அந்த வாய்ப்பு மேலவையைப் பொறுத்தவரையில் இல்லாமல் இருந்தது.

அதற்குப் பிறகு கொள்கை குறிப்பு ஏடுகளைப் பேரவையில் வைத்த பிறகு மேலவையிலும் வைத்து, அந்த வாய்ப்பை ஏற்படுத்தி, 10 நாட்கள், 15 நாட்கள் அந்த விவரங்களை விவாதிப்பதற்கு வழி வகை செய்தார்கள். அதன் மூலமாக மேலவை உறுப்பினர்களுடைய வேண்டுகோளும், அவர்களுடைய அவாவும் நிறைவேறுகிற அளவுக்குச் செய்ததற்கு முக்கியக் காரண மாக இருந்தவரும், அதைச் சட்டபடி செய்யலாம் என்று எடுத்துச் சொன்னவரும், அதை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு பெரும் துணையாக இருந்தவரும், திரு. கி. மு. அழகர்சாமி ஆவார்கள்.

அது மட்டும் அல்லாமல் 1959 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து ஆண்டுதோறும் நடைபெறுகிற வகையில் இந்தியச் சட்டமன்ற மேலவை, பேரவைத் தலைவர்கள் கூட்டுகின்ற மகாநாட்டிலே ஒவ்வொரு ஆண்டும் கலந்துக் கொண்டு, பல்வேறு மாநிலங்களின் சார்பாகவும், பல்வேறு பேரவைத் தலைவர்களின் சார்பாகவும், இந்திய நாட்டினுடைய பேரவைத் தலைவர், மக்கள் அவையினு டைய தலைவர் அரசியல் அவையினுடைய தலைவர் ஆகிய எல்லோரும் சேர்ந்து விவாதிக்கும்போது அந்த விவாதத் திலே ஒவ்வொரு ஆண்டும் கலந்து கொள்வதன் மூலமாக அனைத்து இந்தியாவின் நடைமுறைகளையும், ஒவ்வொரு சட்ட மன்றத்தில் ஏற்படுகின்ற பிரச்னைகளையும், அதிலே எழுப்பப்படு கின்ற சிக்கல்களையும் அவற்றைத் தீர்ப்பதற்கு எடுக்கின்ற முறை களையும், ஒவ்வொரு ஆண்டு மாநாட்டிலும் கலந்து கொள்வதன் மூலமாக நல்ல அனுபவம் பெற்று, அதனுடைய அடிப்படையிலே இந்தச் சட்டமன்றம் நடைபெறுவதற்கு பேருதவி புரிந்தவர்கள் ஆவார்கள்.

அப்படிப்பட்ட பல்வேறு சிறப்புக்குரிய தகுதியும் திறமையும், அறிவுத் திறமையும் ஆற்றல் திறனையும் மிகச் சிறப்பாகப் பெற்று, 30 ஆண்டுக்காலம் எல்லோருடைய பாராட்டுதலையும் போற்றுதலையும் பெறத்தக்க அளவுக்கு நல்ல பணிகளை ஆற்றிய அவர், 30 ஆண்டுகள் கழித்து ஓய்வு பெறுகிறார் என்ற முறை யில் அவருடைய பணிகளைப் பற்றி நாம் நன்றி உணர்வோடும் மகிழ்ச்சி உணர்வோடும் பாராட்டவும் போற்றவும் கடமைப் பட்டிருக்கிறோம். அந்த வகையில் இந்தத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

ஆகவே எந்த வகையிலேயும் பாராட்டப்பட வேண்டியவர்கள், உள்ளபடியே ஜனநாயக முறையிலே பாராட்டப்பட வேண்டும். போற்றப்பட வேண்டியவர்கள் போற்றப்பட வேண்டும்.

வரவேற்கப்பட வேண்டியவர்கள் வரவேற்கப்பட வேண்டும். ஆகவே பாராட்டவோ போற்றவோ, வரவேற்கவோ நாம் மறந்தோமானால்—எந்த நாடு பாராட்ட வேண்டியவர்களைப் பாராட்ட மறுக்கிறதோ அல்லது பாராட்ட மறக்கிறதோ அந்த நாடு உள்ளபடியே உயர்ந்தவர் நிலையிலே வைத்து எண்ணப்படாத ஒன்றாக மாறிவிடும். ஆகவே அந்த வகையிலேதான் நாம் நம்முடைய நன்றிக் கடனை ஆற்ற வேண்டும் என்று இந்த தீர்மானத்தை நான் முன் மொழிந்துள்ளேன். இந்த அவை அதை முழு மனதோடு ஏற்று நிறைவேற்றி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே ஒப்படைப்பதன் மூலம், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அந்தக் கருத்துக்களையும், எண்ணங்களையும் ஒய்வு பெற இருக்கிற பேரவைச் செயலர் அவர்களுக்குத் தெரிவிப்பார்கள். வள்ளுவர் மிக அழகாக எடுத்துச் சொன்னார்.

''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண்விடல்.''

என்று. அந்த இலக்கணத்திற்கேற்ப இலக்கியமாகத் திகழ்ந்து 30 ஆண்டுகள் ஆழ்ந்து முழுமையாகப் பணியாற்றியவர்களை மீண்டும் மீண்டும் பாராட்டி, இந்தத் தீர்மானத்தை ஏற்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

திரு. என். எஸ், வி. சித்தன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையினுடைய செயலாளராக சிறப்பாக பணியாற்றி இம்மாத இறுதியிலே ஒய்வு பெற இருக்கிற மதிப்பிற்குரிய திரு, அழகர்சாமி அவர்களுடைய பணியினைப் பாராட்டி அவையினுடைய மாண்புமிகு முன்னவர் அவர்கள் அரசின் சார்பிலே கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை, இம்மாமன்றத்தின் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் வழி மொழிகிறேன்.

பேரவையினுடைய செயலாளருக்கு அரசின் சார்பில் இது மாதிரி நன்றி தெரிக்கும் தீர்மானத்தைக் கொண்டு வருவதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். பொதுவாக நம்முடைய சட்டமன்றப் பேரவைக்கு ஒரு பாரம்பரியம் உண்டு. இந்தப் பேரவையில் ஆற்றல் மிகுந்த தலைவர்கள் சிறப்பாகப் பணியாற்றி இருக்கிறார்கள். திறமைமிக்க செயலாளர்க்கள் நல்ல பணியாற்றி இருக்கிறார்கள். செயலாளர்களைப் பற்றி எண்ணுகிற நேரத்தில் இதற்கு முன்னாலே இந்த மன்றத்திலே செயலாளராகப் பணியாற்றிய திரு, ஆர். வி. கிருஷ்ணய்யர், திரு. அனுமந்தப்பா போன்றவர்களை எல்லாம் நாம் இந்த நேரத்தில் நினைவு கொள்கிறோம். மறைந்த திரு. ஆர். வி. கிருஷ்ண அய்யர் அவர்கள் இந்த மாமன்றத்திலே செயலாளராக இருந்து பல்வேறு நல்ல மரபுகளை கடைபிடித்து இருக்கிறார்கள். பாராளுமன்ற சம்பிரதாயங்களை தமிழகம் பின் பற்றுவதற்குத் துணையாக இருந்திருக்கிறார்கள் என்பதை நாம் நன்றாக அறிவோம். அப்படிப்பட்ட



புகழ்மிக்க செயலாளர்கள் வரிசையில் நம்முடைய செயலாளர் அவர்களும் சேர்கிறார்கள். மாண்புமிகு முன்னவர் அவர்கள் சொன்னதைப் போல 30 ஆண்டுக்காலமாக தமிழ்நாடு சட்டமன்ற மேலவையிலும், பேரவையிலும பல்வேறு துறைகளில் பணியாற்றி அவர்கள் பணியை செவ்வனே நிறைவேற்றி இருக்கிறார்கள். மாண்புமிகு முன்னவர் அவர்கள் சொன்னதைப் போல தமிழகத்திலே இது வரையில் ஆண்டு வந் மூன்று கட்சிகளினுடைய ஆட்சிக் காலத்திலும் அந்தந்தக் கட்சிகளினுடைய தலைவர்களுடைய நன்மதிப்பை பெற்றவர்களாக அவர்கள் பணியாற்றி இருக்கிறார்கள்.

பொதுவாக சட்டசபை கலைக்கப்பட்டாலும் கூட சட்டசபை செயலகமும், சபாநாயகர் அவர்களும் பதவியில் இருப்பார்கள் என்பதை நாம் அறிவோம். அந்த முறையில் சட்டசபை இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அவர்கள் நல்ல முறையில் பணியாற்றி இருக்கிறார்கள்.

நம்முடைய செயலாளர் அவர்கள் எங்களுடைய மதுரை மாநகரில் பிறந்து இளமைக்காலத்தை மதுரை மண்ணிலே கழித்து பின்னர் உயர் கல்வி சென்னையில் கற்று, இங்கே நம்முடைய மேலவையில் தன்னுடைய பணியைத் தொடங்கி இருக்கிறார்கள். மாண்புமிகு முன்னவர் சொன்னதைப் போல பல்வேறு நிலைகளில் அவர்கள் பணியாற்றியதன் மூலமாக தன்னுடைய தகுதியை, திறமையை அவர்கள் வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

எட்டு பேரவையிலும் எல்லாப் பிரிவுகளிலும், எல்லாக் குழுக்களிலும் பல்வேறு நிலைகளில் இருந்து அவர்கள் சிறப்பாக பணியாற்றி இருக்கிறார்கள். சட்ட முன் வடிவுகளில் எல்லா ஆய்வுக் குழுக்களிலும் அவர்கள் செயலாளராக இருந்து தன்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். எங்களைப்போன்ற உறுப்பினர்கள் எல்லாம் அவர்களைச் சந்திக்கிற நேரத்தில் பேரவை அலுவல்களைப் பொறுத்தவரையில், மரபுகளைப் பொறுத்த வரையில் எங்களுடைய கருத்துக்களை சில நேரங்களில் தாங்கள் சூடாகச் சொல்கிற நேரத்திலும் அவர்கள் தனக்கே உரித்தான பாணியில் சிரித்த முகத்தோடு, இது முறையாகாது, மரபாக இருக்காது என்பதைத்தான் சொல்வார்களே தவிர, கடுமையான விமர்சனம் செய்வது என்பது அவர்களுக்குத் தெரியாத ஒன்று என்றுதான் கருதுகிறேன்.

அவர்கள் செயலாளராக இருந்த காலத்தில் சட்டமன்ற மரபுகளை, விதிகளை கடைப்பிடிப்பதிலே பல்வேறு கால கட்டங்களில் நமக்குத் துணையாக இருந்திருக்கிறார்கள். இந்த மாமன்றத்தில் சூடான, சுவையான விவாதங்கள் எழுகிற நேரத்தில் எல்லாம் அவர்கள் தளர்ந்த உடல் நலத்தில் இருந்த நேரத்திலும், ஓடோடிச் சென்று பேரவைத் தலைவர் அவர்களின் காதிற்கு

அருகில் குசுகுசுவென்று சொல்வதை பல்வேறு நேரங்களில் நாம் பார்த்து இருக்கிறோம். ஆகவே இந்தப் பேரவை தன்னுடைய மரபுகளைக் காக்க வேண்டுமென்பதில் அவர்கள் மெத்த கருத்தோடு இருந்தார்கள். எந்தப் பிரச்னையாக இருந்தாலும் சரி நமக்கு சந்தேகம் வருகிறபோது, ஆங்கிலத்தில் ரெடி ரெக்கனர் என்று சொல்வார்களே, அதைப்போல தன்னுடைய கருத்துக்களை கொஞ்சம் கூட காலதாமதம் செய்யாமல், இந்தப் பக்கத்தில், இந்தப் புத்தகத்தில் இருக்கிறது என்று அவர்கள் சொல்வார்கள்.

மாண்புமிகு முன்னவர் அவர்கள் சொன்னதைப் போல பிரிட்டிஷ் பாராளுமன்ற முறை இப்படிக் கூறுகிறது என்று உதாரணங்களை எடுத்துக்காட்டி சபையின் நடவடிக்கைகள் நல்ல முறையில் நடப்பதற்கு அவர்கள் துணையாக இருந்தார்கள்.

மாண்புமிகு முன்னவர் அவர்கள் சொன்னதைப்போல மேலவையில் நம்முடைய மானியக் கோரிக்கைகளை விவாதிப்பதற்கு எடுத்துக்கொள்ளாத நேரத்தில், கொள்கை விளக்கமாக ஒரு குறிப்பை வைத்து விவாதம் செய்கிற முறையை, இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அவர்கள் முதன்முதலாகத் தோற்றுவித்தார்கள் என்று கருதுகிறேன். தமிழகத்தில் மேலவையில் விவாதத்திற்கு எடுத்த பிறகுதான் மத்தியிலே இராஜ்ய சபையிலும் கூட இந்த முறை பின்பற்றப்பட்டது என்று சொல்லக்கேட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். அந்த வகையிலே தமிழகம் இந்தியாவிற்கே வழிகாட்டியாக இந்தத்துறையில் இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறபோது உள்ளபடியே நமக்குப் பூரிப்பாக இருக்கிறது.

நம்முடைய செயலாளர் அவர்கள் பணிபுரிந்த காலத்தில் 'ரெபரன்ஸ் அண்ட் ரிசர்ச்' என்ற பிரிவை இங்கே நம்முடைய சட்டமன்ற செயலகத்தில் துவக்கி இருக்கிறார்கள். நம்முடைய நூலகம் இந்தியாவில் இருக்கிற ஏனைய சட்டமன்றங்களில் இருக்கிற நூலகங்களோடு ஒப்பிடுகையில் மிகப் பழமையான பெரிய நூலகங்களில் ஒன்று என்று நாம் நிச்சயமாகக் கூறலாம். அப்படி அது பெரிய நூலகமாக இருப்பதற்கு அவர்கள் நிறைய புத்தகங்களைக் கொண்டுவர நிறம்ப உழைத்திருக்கிறார்கள் என்று சொல்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

சட்டமன்றச் செயலாளராக மட்டும் இல்லாமல் வெளியே பல பொது நலப் பணிகளில் அங்கம் வகித்து பணிபுரிந்து இருக்கிறார்கள். 1972—73-ம் ஆண்டில் கம்பன் கழகத்தை சென்னையில் நிறுவ துணையாக இருந்து இலக்கியப் பணிகளை ஆற்றி இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறபோது நமக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறது.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் சொல்கிற நேரத்தில் இந்தப் பேரவைத் தலைவராக இருந்த திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் முதல் தங்கள் வரையில் 10 பேரவைத் தலைவர்களோடு





அவர்கள் கருத்தொன்றி, இணைந்து நல்லமுறையில் பணியாற்றி அத்தனை தலைவர்களுடைய பாரட்டுக்குரியவராக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதேபோல தமிழ்நாட்டிலே முதல் அமைச்சர்களாக இருந்த மாண்புமிகு காமராஜர் அவர்கள், பெரியவர் பக்தவச்சலம் அவர்கள், மாண்புமிகு அண்ணா அவர்கள் மாண்புமிகு நெடுஞ்செழியன் அவர்கள், மாண்புமிகு கருணாநிதி அவர்கள், மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்கள், ஆக இந்த 6 முதலமைச்சர்களோடு பணியாற்றக்கூடிய பெருமை நம்முடைய செயலாளருக்கு உண்டு. ஆகவே சபையிலே பல்வேறு நேரங்களில் ஆட்டான் விவாதம் வருகின்ற நேரத்தில் 'சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல், அமைந்து ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி' என்ற முறையிலே அந்த வாதங்களைக் கேட்டு, நல்ல தீர்ப்பை வழங்குவதற்கு அவர்கள் துணையாக இருந்திருக்கிறார்கள். நான் இன்னொன்றையும் கேள்விப்படுகிறேன். நமது சட்டமன்ற வளாகத்தைச் சுற்றி சட்டமன்றம் நடக்கிற நேரத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காகப் போராட்டம் நடத்துவது என்பது ஒரு நீண்டகால வழக்கமாக இருந்து வருகிறது. அதற்கு முன்னாலே அவர்கள் போராட்டம் நடத்தி, வழியை மறித்த காரணத்தால், சட்டப்பேரவை உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர்களும், சபைக்கு வரமுடியாத ஒரு நிலை ஏற்பட்டபோது, பிரிட்டனிலே பின்பற்றப்படுகிற ஒரு முறையை எடுத்துக்காட்டி, சட்டமன்றம், மேலவை கூடுகின்ற நாட்களிலே வளாகத்திற்கு அப்பால் இத்தனை அடி தூரத்திற்குள்ளாக யாரும் வரக்கூடாது என்ற தடை உத்தரவைப் பிறப்பிப்பதற்கு நம்முடைய பேரவைச் செயலாளர் அவர்கள் காரணமாக இருந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, நம்முடைய பணிகள் நல்லமுறையில் நடைபெறுவதற்கு அவர்கள் துணையாக இருந்திருக்கிறார்கள் என்பதை எங்களால் சொல்ல முடிகிறது.

நாங்கள் பல்வேறு கட்சிகளின் சார்பிலே அகில இந்திய ரீதியிலே சுற்றுப்பயணம் செய்கின்ற நேரத்தில், பல்வேறு மாநிலங்களில் இருக்கின்ற அமைச்சர்கள், சட்டசபை உறுப்பினர்கள், செயலாளர்கள், தமிழகத்திலே இருந்து வருகிறோம் என்று சொல்கின்ற நேரத்தில், அந்த அவையிலே திரு. அழகர்சாமி அவர்கள் செயலாளராக இருக்கிறார்கள், அவர்கள் நிரம்ப அனுபவம் பெற்றவர்கள், பழுத்த அனுபவம் பெற்றவர்கள். அவர்கள், நிச்சயமாக சட்டசபையை நல்லமுறையில் நடத்துவதற்கு உதவி செய்வார்கள், நடத்திக் கொடுப்பார்கள், அவர்களைப் பெற்று இருப்பதாலே, நீங்கள் எல்லாம் பாக்கியம் செய்தவர்கள் என்று அவர்கள் சொன்னதைக் கேட்டு நாங்கள் பெருமைப்பட்டு மகிழ்ச்சி அடைந்திருக்கிறோம்.

குழுக்களைப்பற்றிச் சொல்கிற நேரத்திலே, சட்டசபைச் செயலாளராக இருக்கின்ற நேரத்திலே, அந்தக் குழுவின் கூட்டத்திற்கு வருவார்கள், என்னைப் பொறுத்தவரையில் நான்

[திரு. என்.எஸ்.வி. சித்தன்] [1985 ஜூன் 28

பொதுக் கணக்குக் குழுவின் தலைவராக பணியாற்றிக்கொண்டு இருக்கிறேன். அந்தக் கூட்டம் நடைபெறுகின்ற நேரத்தில், சரியாக குறித்த நேரத்திலே, அந்தக் கூட்டத்தை தொடங்கி நடத்தவேண்டும் என்பதிலே எல்லோரையும் போல் நானும் அக்கறை கொண்டவன். எப்படியாவது, 5, 10 நிமிடங்கள் முன்னாலே சென்று அமர்ந்துவிடவேண்டும் என்று சொல்லும் போது, எனக்கு முன்னாலே 15 நிமிடங்களுக்கு முன்னாலே செயலாளர் அவர்கள் இங்கே அமர்ந்திருப்பார்கள். நான் வேடிக்கையாகக் கூடச் சொல்வதுண்டு. என்றைக்காவது ஒருநாள் நான் உங்களுக்கு முன்னால் வந்து அமர்ந்துவிடுகிறேன் என்று. அந்த அளவிற்கு அவர்கள் காலம் தவறாமல் வந்திருந்து, குழுவினுடைய பணிகளை ஆற்றுவதற்கு உறுதுணையாக இருந்திருக்கிறார்கள்.

நான் இன்னும்கூடச் சொல்கிறேன். விவாதங்கள் வருகின்ற நேரத்தில் அரசுத்துறை அதிகாரிகள் வருகின்ற நேரத்தில், அந்தக் குழுவின் பணிகள் சிறப்பாக அமையவேண்டும் என்பதற்காக, எங்களுக்கு ஆலோசனைச் சொல்வார். தங்களுடைய பழுத்த அனுபவத்தின் மூலம், அரசு அதிகாரிகளிடமிருந்து விளக்கங்கள் பெற்று, நிர்வாகம் நல்லமுறையில், எதிர்காலத்தில் நடைபெறுவதற்குத் துணையாக இருந்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி எண்ணும்போது நான் உண்மையில் மகிழ்ச்சி அடைகிறேன். இப்படி நிறைய விஷயங்களை அவரைப்பற்றிச் சொல்லலாம். அவர்கள் சட்டசபைச் செயலாளராக இருந்து ஆற்றிய பணியும் பாணியும் நம்மால் மறக்க முடியாத ஒன்று. பாராட்டத்தக்க ஒன்று. அவர்களுடைய பணிக்காக அவர்கள் நிச்சயமாக மன நிறைவு அடையலாம் என்று சொல்ல விரும்புகிறேன். அதே நேரத்தில் அவர்கள் ஓய்வு பெறுகின்ற நேரத்தில், நான் மாண்புமிகு அவை முன்னவர் அவர்களிடம் ஒரு கருத்தைச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன், நம்முடைய அரசில் நிறைய அரசுப் பணியாளர்கள் பணியாற்றி, ஓய்வு பெறுகிறார்கள். அப்படி ஓய்வு பெறுகின்ற நேரத்தில், அவர்கள் என்றைக்கு ஓய்வு பெறுகிறார்களோ, அந்த நாளில், அவர்களுடைய பணியைப் பாராட்டி, தலைமைச் செயலாளரிடமிருந்து ஒரு நற்சான்று பத்திரத்தைக் கொடுத்தால், அவர்கள் பிற்காலத்திலே அதைப்போற்றி, பாதுகாக்க துணையாக இருக்கும். எனவே நம்முடைய அரசுத்துறையிலே இருந்து நீண்டகாலமாகப் பணியாற்றிவிட்டு, ஓய்வு பெறுகிறவர்களுக்கு, தலைமைச் செயலாளர் அவர்கள் கையெழுத்திட்டு, உங்கள் பணியை நாங்கள் பாராட்டுகிறோம், நல்லமுறையில் நீங்கள் பணியைச் செய்திருக்கிறீர்கள் என்று சொல்லி, ஒரு சர்டிபிகேட் கொடுத்தால், அது அவர்களுக்குப் பெருமையாகவும் இருக்கும். எனவே இதை அரசு பரிசீலனை செய்யலாம்.



1985 ஜூன் 28] [திரு. என்.எஸ்.வி. சித்தன்]

நம்முடைய மதிப்பிற்குரிய பெரியவர் அழகர்சாமி அவர்களுடைய சிறப்புக்களை நான் பாராட்டி, இன்றைக்கு அவர்கள் ஓய்வு பெறுகின்ற நேரத்தில், அவர்களுக்கு இறைவன் நீண்ட ஆயுளையும், மன மகிழ்ச்சியையும் அளிக்கவேண்டும் என்று இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் செயலாளராக இருந்து ஓய்வு பெற்றாலும் கூட, சட்டசபைப் பணிகளிலே இருந்து அவர்கள் ஓய்வு பெறக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய அனுபவத்தை எங்களோடு பகிர்ந்து கொள்ளவேண்டும். சட்டசபை சம்பிரதாயங்களைக் காப்பாற்றுவதிலே சட்டசபையினுடைய பணிகளை இன்னும் காப்பதிலே அவர்கள் தங்களுக்குத் தெரிகின்ற யோசனைகளை எல்லாம் எங்களுக்குச் சொல்லி, நல்லமுறையில் பணியாற்ற வேண்டும் என்று சொல்லி, அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை மீண்டும் வழிமொழிந்து, நம்முடைய சட்டசபைச் செயலாளர் அவர்களுக்கு மீண்டும் வாழ்த்துக்களைச் சொல்லி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. என். எஸ். வி. சித்தன் அவர்களும் தெரிவித்த கருத்துக்களோடு என்னுடைய கருத்துக்களையும் இணைத்து, என்னுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைச் செயலாளர் திரு. அழகர்சாமி அவர்கள் எனக்கு 1977 ஆம் ஆண்டிலிருந்து நன்கு தெரியும். நான் துணைத் தலைவராக இருக்கும்போது, உரிமைக் குழுவின் தலைவராகவும், அவைக் குழுவின் தலைவராகவும் இருந்தேன். இன்னும் பல்வேறு குழுக்களில் பணியாற்றும்போது, அவர்களுடைய பணியை நான் கண்கூடாகப் பார்த்தவன். அவர்கள் அவ்வப்போது, ஆலோசனைகளைச் சொல்லி, விதிகளைச் சொல்லி, சட்டமன்ற மரபுகளை பாதுகாப்பதற்காக அவர்கள் நல்ல முறையில் பணியாற்றியிருக்கிறார்கள். அப்படி இந்த அவை நல்லமுறையில் நடப்பதற்கு துணை புரிந்த செயலாளர் அவர்கள், இன்றைக்குப் பதவியில் இருந்து ஓய்வு பெறுகிறார்கள். பல்வேறு பிரச்சினைகள் நம்முடைய சட்டமன்றத்தில் எழுப்பப்படுகின்ற நேரத்தில் எல்லாம் அவ்வப்போது ஆலோசனைகள் நல்கி பணியாற்றியவர்கள் நம்முடைய சட்டமன்றச் செயலாளர் திரு. கி. மு. அழகர்சாமி அவர்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சட்டமன்றம் எந்த அளவுக்கு பேணி போற்றி பாதுகாக்கப்பட வேண்டும், போற்றப்பட வேண்டும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொல்லும் போது நீதித் துறைக்கும், நிர்வாகத் துறைக்கும் வழி காட்டக் கூடிய துறைதான், அந்த முறையில் வரக்கூடியதுதான் சட்டமன்றம்

என்பதைத் தெரிவித்தார்கள். நீதிமன்றம் எந்த அளவுக்கு பேணி போற்றி பாதுகாக்கப்படுகிறதோ இன்னும் சொல்லப்போனால் அதைவிட இன்னும் அதிகமான அளவுக்கு பேணிப் போற்றி பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு அங்கம்தான் ஜனநாயகத்தில் சட்டமன்றம் ஆகும். சட்டமன்றம் எங்கும் கூறுபடுமானால் உண்மையிலே நாட்டில் ஜனநாயகத்திற்கு அர்த்தமே கிடையாது என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நீதிமன்றம் பற்றி யாரும் விமர்ச்சிப்பது கிடையாது. காரணம் அங்கே நீதிமன்றத்தை விமர்ச்சனம் செய்தால் அது நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்கு உள்ளாகின்ற காரணத்தால் யாரும் பத்திரிகையில்கூட விமர்சனம் செய்வது கிடையாது. நானும் 17 ஆண்டுகளாக பார்த்து இருக்கிறேன். ஒரே ஒரு பத்திரிகையைத் தவிர வேறு எந்த பத்திரிகையிலும் நீதிமன்ற நடவடிக்கைகளை விமர்ச்சிப்பது கிடையாது. காரணம் ஜனநாயக நாட்டில் நீதிமன்றத்தின் கண்ணியம் பாதுகாக்கப்படவேண்டும், மக்கள் அதன் மீது கொண்டுள்ள நம்பிக்கை குறைந்து விடக் கூடாது என்ற காரணத்தால் அந்த வழியை பின்பற்றி வருகிறார்கள் மக்கள், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களும், ஆட்சியாளர்களும், அதிகாரிகளும், பத்திரிகையாளர்களும், ஆனால் ஜனநாயக நாட்டில் சட்டமன்ற முறையையும், பாராளு மன்ற முறையையும் எந்த அளவுக்கு விமர்ச்சிக்க முடியுமோ அந்த அளவுக்கு இன்றைக்கு விமர்ச்சித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஜனநாயக நாட்டில் விமர்சிக்க வேண்டியதுதான். ஆனால் இந்த அங்கமும் கண்ணியத்தையும் நம்பிக்கையையும் இழந்து விடாத அளவுக்கு பாதுகாக்க வேண்டிய பொறுப்பு மக்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், இந்த அங்கத்தில் நம்பிக்கைக் கொண்ட அத்தனை பேருக்கும் இருக்க வேண்டும் என்பதை நான் இங்கே நினைவூட்டுகிறேன்.

தவறுகள் எங்கேயும் நடக்கலாம். நிர்வாகம் தவறு செய்தால் நீதித்துறை கண்டிக்கிறது. சிலநேரங்களில் நீதித்துறை தவறு செய்தால் யாருமே கண்டிப்பது இல்லை. காரணம் Contempt of Court. ஆனால் நம்முடைய சட்டமன்றத்தில் Contempt of the House என்று இருந்து இருந்தால்கூட நாம் கடுமையான நடவடிக்கை எடுப்பது கிடையாது. அதன் காரணமாகத்தான் நாள்தோறும் விமர்ச்சனங்கள் இந்த அங்கத்தை மட்டும் அதிகமாக விமர்ச்சித்துக் கொண்டு இருக்கிறார்கள் அதிகமாக வந்து கொண்டு இருக்கிறது என்பதை நான் இங்கே நினைவுப்படுத்துகிறேன்.

உதாரணத்திற்கு ஒன்றைச்சொல்ல வேண்டும். நீதிமன்றத்தில் இன்றைக்கு பொறுப்பு ஏற்கக்கூடிய இந்திய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி திரு. பகவதி அவர்கள் 1982 ஆம் ஆண்டில் தன்னுடைய ஒரு மாபெரும் தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். அதாவது நீதிபதிக்கு டிஸ்கிரிஷன் பவர் இருக்கக் கூடாது. அனி



நம்முடைய பாராளுமன்றமும், சட்டமன்றமும் அந்த அதிகாரத் தின் வரம்பை வகுத்துத் தரவேண்டும் என்று அவர்கள் ஒரு டிசென்டிங் ஜட்ஜ்மெண்டில் சொல்லியிருக்கிறார்கள்.

இந்திய தண்டனைச் சட்டத்தின் 302-வது பிரிவை அவர்கள் தள்ளுபடி செய்து இருக்கிறார்கள். செல்லாது என்று சொல்லி யிருக்கிறார்கள்.

அந்தத் தீர்ப்பைச் சொல்லும்போது சில தவறுகளையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதை எந்த பத்திரிகையும், பாராளுமன்றமும், சட்டமன்றமும் நம்நாட்டில் இதுவரை எடுத்துச் சொன்னது கிடையாது. உதாரணமாக அவர்கள் எழுதிய அந்தத் தீர்ப்பில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஒரு பெரிய வார்த்தையைத் தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த வார்த்தை என்ன என்றால், This is a classic case which illustrates the Judicial vagaries என்று சொல்லியிருக்கிறார்கள். Judicial vagaries என்று சொல்லியிருக்கிறார்கள். In the Imposition of death penalty 3 நபர்கள் ஒரே வழக்கில் ஒரே தீர்ப்பில் தூக்குத் தண்டனை பெறுகிறார்கள்.

(முற்பகல் 10-20)

ஒரு தண்டனைக் குற்றவாளி உச்சநீதிமன்றத்திலே அப்பீல் செய்கின்றார், அதை ஏற்றுக் கொள்ளாமல் தள்ளி விடுகிறார் கள். இன்னொரு தண்டனைக் குற்றவாளி தூக்குத் தண்டனை பெற்றவன் ஒரு அப்பீல் செய்கிறான். அதை திரு, பகவதி அவர்கள் ஏற்று, அதை ஆயுள் தண்டனையாக மாற்றுகிறார் கள். அந்த நேரத்தில் தான் உச்சநீதிமன்றத்திற்குத் தெரிகிறது, இன்னொரு குற்றவாளி இருப்பதாக.

அந்த ஃபைலைக் கேட்பதற்குள் அந்தக் குற்றவாளி தூக்கில் போடப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறான். இந்தத் தவறை, நீதி மன்றம் செய்த தவறு என்ற அளவுக்கு பெரிய வார்த்தை யோடு அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இதை வெளியே சொல்லவில்லை. காரணம், இந்த அங்கத்தில் நம்பிக்கை குறைந்து விடக் கூடாது.

அது போலவே, தான், நம்முடைய சட்டமன்றத்தின் மரபு களையும், கண்ணியத்தையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எல்லோருக்கும் இருக்கிறது என்பதை நான் இங்கே நினைவூட்டு கின்றேன். இங்கே சச்சரவுகள் ஏற்படலாம். இங்கே விவாதங் கள் சூடாக இருக்கலாம். ஆனால், எது மக்களுக்குப் போய்ச் சேர வேண்டுமோ, அது போய்ச் சேரவேண்டும். மக்களுக்கு அதிக மாகப் போய்ச் சேர்ந்து விடக்கூடாது.

காரணம், இன்றைக்கு ஓரளவுக்கு ஜனநாயகத்தின் மீது நம் பிக்கை வைத்து இருக்கக்கூடிய மக்கள் நாளடைவில் அதிலிருந்து மீண்டுவிடக்கூடாது, நம்பிக்கை குறைந்து விடக்கூடாது என்பதற் காகத் தான் உதாரணத்திற்காக நான் இதைச் சொன்னேன்.

ஆகவே, நம்முடைய சட்டமன்றத்தைப் பாதுகாப்பதற்கு, பேணிப் போற்றிப் பாதுகாப்பதற்கு, கட்சிப் பாகுபாடு இல்லா மல், எந்த வேற்றுமை உள்ளம் பெற்றிருந்தாலும், அதை விட்டு விடவேண்டும் என்பதை நான் ஜனநாயகத்தின் பேரால் இந்த நேரத்தில் வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

காரணம், இன்றைக்கு ஓரளவுக்கு நாட்டில் நடைபெறக்கூடிய, நிகழ்ச்சிகளை, எதைச் சொல்லவேண்டுமோ, அதைச் சொல்ல வேண்டும். எதை எழுத வேண்டுமோ, அதை எழுதவேண்டும். அன்றைக்குக் கூட நம்முடைய மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் ஒரு பத்திரிகை மீது உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வருகிற நேரத்தில் வெளியிட்டார்கள். அமைச்சர்கள் பற்றி கார்ட்டூன் வருவதாகச் சொன்னார்கள்.

இப்பேர்ப்பட்ட தீர்ப்புக்கள் எல்லாம் வந்த பிறகு, அவர்களைப் பற்றி கார்ட்டூன் போடுவது கிடையாது. காரணம், தண்டிக்கப் படுவார்கள். நிச்சயமாக, எந்த தயவு தாட்சண்யமும் இல்லாமல் என்ற காரணத்தால் போடுவது கிடையாது. ஆகவே, அந்த அளவுக்கு கடுமையாக இல்லாவிட்டாலும், ஓரளவுக்கு சட்ட மன்றத்தை பாதுகாப்பதற்கு எல்லோரும் இந்த நேரத்தில் உறு துணையாக இருக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு இங்கே ஏதாவது ஒரு தீர்மானத் தைப் போட்டால்—இன்னும் சொல்லப்போனால், வெளியிலே சட்டமன்றத்தைப் பற்றிக் கூட விமர்சித்து தீர்மானம் போட் டால் அது அதிகமாகப் பிரசுரிக்கப்படுகிறது. நான் வழக்கறிஞ ராகப் பணியாற்றிய காரணத்தினால், உயர்நீதிமன்றத்தில் எத்தனையோ நீதிபதிகள் மீது தீர்மானங்கள் வழக்கறிஞர்கள்— நாங்கள் போட்டு இருக்கிறோம். இன்றைக்குக் கூட ஒரு நீதிபதி மீது உயர்நீதிமன்றத்தில், அவர் ரிட் மனுக்களை அதிகம் அட்மிட் செய்யவில்லை என்ற காரணத்தைக் காட்டி ஒரு தீர்மானத்தை உயர்நீதிமன்றத்தில் போட்டு இருக்கிறார்கள். அதை எந்தப் பத்திரிகையும் விமர்சிப்பதே கிடையாது. காரணம், பயம் ஆனால் நம்மைப்பற்றி சட்டமன்றத்தைப்பற்றி, எதையும் பேச ளாம், எதையும் எழுதலாம் என்ற அளவுக்கு இருக்கிறது. அதை விட்டுவிடவேண்டும் என்று இந்த நேரத்தில் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு சொல்லிக் கொள்ளுகிறேன்.

இதே நாளில், என்னுடைய அலுவலகத்தில் துபாஷ்-ஆகப் பணியாற்றிய கன்னியப்பன் என்பவர் 1–4–1947 முதல் பேரவை செயலகத்தில் பணியாற்றி இம்மாத முடிவில், 38 ஆண்டுக் காலம் பணியாற்றிய பிறகு, அவரும் ஓய்வு பெறுகிறார். இதை நான்



சொல்வதற்குக் காரணம், ஜனநாயக நாட்டில் சாதாரண சாமானிய மக்களையும், சாதாரணமானவர்களையும் மதிக்க வேண்டும் என்பதால் நானே இதை இணைத்து இருக்கிறேன்.

ஆகவே, நம்முடைய செயலகத்தில் பணியாற்றிய அழகர்சாமி அவர்கள் நம்முடைய என்.எஸ்.வி. சித்தன் அவர்கள் சொன்ன தைப் போல, இந்தப் பணியை இதோடு விட்டுவிடாமல், சட்ட மன்றப் பணிகளைத் தொடர்ந்து அவர்கள் செய்யவேண்டும். நமக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். நாமும் அவரைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இங்கே, இந்தச் சட்டமன்றப் புதிய கட்டிடத்தை உருவாக்கு வதற்கு நம்முடைய முன்னாள் பேரவைத் தலைவர், இன்றைக்கு தொழில் அமைச்சராக இருக்கக்கூடிய மாண்புமிகு இராசாராம் அவர்களும், நம்முடைய பேரவைச் செயலாளர் அழகர்சாமி அவர்களும், வெளிநாடுகளுக்குச் சென்று வரைபடங்களை எல்லாம் இன்றைக்குத் தயாரித்து வைத்திருக்கிறோம்.

இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்தப் பணியை அவர்கள் ஓரளவுக்கு வரைபட அளவுக்குக் கொண்டு வந்து இருக்கிறார்கள். முழுமையான அளவுக்கு நாம் அதைக் கொண்டு போய் அதை முடிக்க வேண்டும். அப்பேர்ப்பட்ட பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் நம்முடைய செயலாளர் அவர் கள் ஆவார்கள்.

இன்றைக்கு இப்பேரவையின் சார்பில் நம்முடைய பேரவை யின் முன்னவர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிந்து இருக்கி றார்கள். இந்த அவை, அதை ஒருமனதாக ஏற்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதை ஏற்கிற வகையில், நீங்கள் மேசையைத் தட்டுவதன் மூலமாகத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பேரவை முன்னுள்ள கேள்வி.

மாண்புகு பேரவைத் தலைவர் : ''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் செயலாளராக 1976 ஆம் ஆண்டு முதல் பணியாற்றி 30-6-1985 ஆம் நாள் ஓய்வு பெறவிருக்கும் திரு. கி. மு. அழகர்- சாமி, பி.ஏ.,பி.எல்., அவர்கள் சட்டமன்றப் பேரவை, மேலவை ஆகிய இரு அவைகளிலும், 1955 முதல் 1985 ஆம் ஆண்டு வரை, 30 ஆண்டுக்காலம் ஆற்றியுள்ள நீண்ட பெரும் தகைசால் பணிகள், எந்த நேரத்திலும் தயக்கமின்றி உடனடியாக மேலான பரிந்துரை அளிக்கும் திறன், சட்டமன்ற விதிகள் பற்றியும், சட்டமன்ற— பாராளுமன்ற மரபுகள் திட்பமாகவும் அறிந்து வைத்து அவ்வப் போது எடுத்தியம்பும் நுண்ணிய அறிவாற்றல், உறுப்பினர்கள் தங்கள் கடமைகளைச் சட்டமன்றப் பேரவையிலும் சரி, மேலவை யிலும் சரி அவற்றின் பல்வேறு குழுக்களிலும் சரி, செவ்வனே நிறை

வேற்ற அவர் நல்கிய உதவி ஆகியவற்றைப் போற்றிப் புகழ்ந்து இப்பேரவை பாராட்டுவதோடு, இப்பேரவை, பெரிதும் விரும்பி நல்கும் பாராட்டுதல்களை அவருக்குத் தெரிவிக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறது.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்மானம் ஒருமனதாக ஏற்கப்பட்டிருக்கிறது. நம்முடைய திரு. அழகர்சாமி அவர்கள் எல்லா நலனும், நன்மையும் பெற்று பலகாலம் வாழட்டும் என்று வாழ்த்துகிறேன்.

5 வரவு-செலவுத் திட்டம், 1985-86—வாக்கெடுப்பு

கோரிக்கை எண் 23— கூட்டுறவு

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 23-கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,77,98,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்:

**Thiru N. S. V. CHITHAN** : To discuss about the delay in constituting t e boards for the cc-operatives, I move—

''that the allotment of Rs. 11,77,98,000 under Demand 23-Co-operation be reduced by Rs. 100.''

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு சங்க கடைகள் மூலம் குடும்ப கார்டுகளுக்கு உணவுப் பொருள்கள் வழங்கும் இடங்களில் அரிசி வழங்குவதில் ஏற்படும் தாமதத்தால் உள்ள இன்னல்கள் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

''மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,77,98,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்,''

திரு. எஸ். என், இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் தொகுதி பேய்க்குளத்தில் இயங்காமல் உள்ள பனைவெல்ல—கூட்டுறவு சங்கத்தை மீண்டும் இயங்கவைக்க வேண்டிய அவசியகுறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

''மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,77,98,000—இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''



மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவை முன் வைக்கப் பெற்றுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை * நான் படித்ததாகக் குறிப்பேட்டில் ஏற்றிக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொன்னதற்குப் பிறகு இறுதியிலே என்னுடைய உரையை வைத்துக் கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறைக்கான கொள்கை விளக்கக் குறிப்பில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்குக் கூட்டுறவுத்துறையில் விவசாயிகளுக்கான கடன்கள் பலவற்றைக் கோடிக்கணக்கில் இநத அரசு தள்ளி உளளது. ஆனாலும்கூட, அதில் சென்ற முறை நான் கேட்டபொழுது, சிறிய விவசாயி, பெரிய விவசாயி என்ற பாகுபாட்டை எந்த அடிப்படையில் நீங்கள் பிரித்திருக்கிறீர்கள் என்று கேட்டபொழுது, குறுகிய காலத்தில் பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய சூழ்நிலை இருப்பதால்

அதை இன்னும் நாங்கள் பரிசீலனையில் வைத்துள்ளோம், முடிவெடுக்கவில்லை என்ற பதில் கிடைத்தது. ஆனால் இன்றைய வரையில் பல கோடிக்கணக்கான ரூபாய் கடன் தள்ளுபடி செய்து, வட்டியைத் தள்ளுபடி செய்து கூட, சாதாரண சிறு விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்பவர்களை, நில அளவை அதாவது விஸ்தீரணத்தை வைத்து மட்டுமே நாம் கணக்கிட்டுக் கொண்டிருக்கிறோம். அதில் புஞ்சை நஞ்சை அளவு, காவேரி நீர்ப்பாசனம் போன்ற இடங்களில் அதிக நிலம் வைத்துள்ளவர் கள்கூட சிறிய விவசாயி, அதிக வருமானம் உள்ளவர்கள்கூட சிறிய விவசாயி என்ற கணக்கிலேயும், சாதாரண மேட்டுநிலம் அதாவது மழையையே எதிர்பார்த்து விவசாயம் செய்கின்றவர்களுக்கு அவர்களுடைய நிலம் அதிகமாக இருந்தால் அவர்கள் பெரிய விவசாயிகள் என்றும் கணக்கிட்டு, மின்சாரம் பற்றாக் குறை உள்ள இந்த நேரத்திலேயும்கூட, கிணற்றில் தண்ணீர் இல்லாத வறட்சியின் காரணமாக அவர்கள் அதிக நிலம் வைத்திருந்தால் பெரிய விவசாயி என்று கணக்கிட்டிருப்பதைப்பற்றி நான் மிக வருத்தத்தோடு கூறிக்கொள்கிறேன். இந்த அடிப்படையில் கடன் தள்ளுபடி செய்வது, கடன் கொடுப்பது என்று கணக்கெடுப்பதற்கு நான் என்னுடைய கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

* 644-676ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

ஆதி திராவிடர்களை அதிக அளவிற்கு இன்றைக்குக் கூட்டுற வில் அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொண்டது, பெண்களுக்கு என தனி கூட்டுறவு நிறுவனம் அமைத்திருப்பது ஆகியவற்றை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் ஏற் கனவே பல ஆண்டுகளுக்கு முன் கேரக்டர் லோன் என்று

50 ரூபாய், 100 ரூபாய், 200 ரூபாய், 250 ரூபாய் வரையில்கொடுக் கப்பட்டுள்ளன, அந்த வகையான கடன்கள் மிகவும் சொற்ப மாக உள்ளது, மிகச் சிறியதான தொகையாகவும் இருக்கிறது. பல முறை நானேகூட சட்டமன்றத்தில் கேட்டிருக்கிறேன், ஆனால் இதுவரை அது தள்ளுபடியாகவில்லை. அதனால் மேலும் பல ருக்கு அந்த சொசைட்டியில்,—அந்தக் கடன் நிலுவையில் இருக்கிறது என்றால், அந்த ஏழ்மைத் தொழிலாளிகள் புதிய சலுகைபெற இயலவில்லை. மேலும் அந்த ஊரிலுள்ள அனை வருக்குமே கடன் கிடைக்காத நிலைமையும் இருக்கிறது. ஆகவே, அதையும் அரசு பரிசீலித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கடனைத் திருப்பிக் கட்ட வேண்டுமென்று நாம் மிகவும் கடுமையான உத்தரவையிடுகிறோம். கடன்களையும் வசூல் செய்கிறோம். கடனே வசூல் செய்ய வேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால், அதை எந்த முறையில் வசூல் செய்ய வேண்டுமென்பதில்தான் கருத்து வேறுபாடு இருக் கிறது.

(முற்பகல் 10–30)

இன்றைக்கு தலைவாசலில் ஆய்வாளர் என்று ஒருவர் இருக் கிறார். அவர் 1 சரகத்தில் உள்ள பல சங்கங்களில் உடனடி யாகக் கடனைக் கட்டச் சொல்லியிருக்கிறார். கட்டச் சொல்லி விட்டு ஒருவாரத்திற்குள் புதியதாய் உங்களுக்குக்கடன் கிடைக்கும் என்று சொல்லி, இரண்டுமூன்று மாதங்கள் கூட கடன் கிடைக் காத சூழ்நிலைஇன்றைக்கும் இருந்து வருகிறது. ஆகவே, அப்பாவி விவசாயிகள் அரசுக் கொள்கையை நம்பிக் கடனைத் திருப்பிக் கொடுத்தவர்கள் எங்களைப் போன்றவர்களிடம் முறையிடும் போது நாம் பல சலுகைகளை அவர்களுக்கு அளித்துங்கூட அவை அவர்களைச் சென்று அடையாத சூழ்நிலை இருப்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு, இன்றைக்கு 1/4 பங்குக் கடனைத் திருப்பிக் கொடுத்தால், அவர்களுக்குச் சலுகை கொடுக்கிறோம் என்று முன்னதாகவே அறிவித்துள்ளோம். ஆனால், இதுவரையில் எந்தவிதச் சலுகையும் அவர்களுக்கு அளிக்கப்படவில்லை. அப ராதவட்டி அல்லது, வட்டியைத் தள்ளுபடி செய்கிறோம். 1972—லே ரூ. 5,000 கடன் பெற்றிருந்தால், இன்றைக்கு அதுவே ரூ. 17,000 ஆகிறது. குறிப்பாக, ஆத்தூர் தாலுகா





என்னுடைய பகுதியில் வறட்சியாலோ, வெள்ளத்தாலோ பல முறை தொடர்ந்து பாதிக்கப்பட்டு அந்த விவசாயிகள் கடனைக் கட்ட வேண்டுமென்று நினைத்திருந்தாலும், வட்டிப் பளுவின் காரணமாக, அவர்கள் எவ்வளவு தொகை கட்டினாலும், தண்ட வட்டியாகவும், வட்டியாகவும் எடுத்துக்கொள்கிறார்கள்என்பதன் தன் காரணமாக, கடனைக் கட்டுவதற்குச் சோர்வு அடைகி றார்கள். ஆகவே, அந்தச் சூழ்நிலையைப் போக்க தண்ட வட்டி யையும், வட்டியையும், தள்ளுபடி அறிவிப்பு செய்து கொடுத்தால் உடனடியாக அசல் முழுவதையும் கட்டக் கூடத் தயாராக பலர் இருக்கிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் அசல் ரூ. 5,000 என்று சொன்னால் சிறு விவசாயிக்கு உண்மையிலே வேறு வருமானம் இல்லை யென்றால், ரூ. 5,000-ஐயும் 5 ஆண்டுகள் தவணையில் கொடுத் தால், கண்டிப்பாக நேர்மையான முறையில் கட்டுவோம் என்ற வாக்குறுதியைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை இந்தச் சபைக்கு அறிவிக்கக் கடமைபட்டிருக்கிறேன்.

இன்றைக்கு மின்வெட்டின் காரணமாக, பல தொல்லைகள் ஏற்படுகின்றன. நேற்றைக்குக் கூட கூட்டுறவு, மின் வெட்டு, விவசாயம் ஆகிய மூன்றையும் ஒன்றாகக் கூறி இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஒவ்வொரு டிபார்ட்மெண்டுக்கும் தொடர்பில்லையென்று சொன்னாலும் வாழ்க்கையில் அனுபவ ரீதியாக, இப்படிப்பட்ட எல்லா துறைகளையும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு மனிதன் அனுபவிக்க வேண்டிய சூழ்நிலை இருப்ப தால், மின் வெட்டு இருப்பதன் காரணமாக, பழுதுபட்ட டிரான்ஸ்பார்மர்களை உடனடியாக மாற்றாததான் காரணமாக, பயிர்க் கடன் வாங்கிய விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய பயிர் ப டுப்போய் விடுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் சென்ற முறை பயிர்க்கடன் பெற்ற விவசாயிகள் 50 மூட்டை நெல்லுக்குப் பதிலாக 2 அல்லது 3 மூட்டை வரை மட்டும்கூட நெல்லை என்னுடைய தொகுதியில் புத்தூர் என்ற பகுதியில் அறுவடை செய்துள்ளார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு கண்டிப்பாக நிவாரணம் அளிக்கவேண்டும். என்னுடைய பகுதியில் என்று ஏன் சொல்கிறேன் என்றால், எனக்கு தெரிந்தவற்றைச் சொல்கிறேன். தமிழகத்தில் பல பகுதிகளில் அப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கும்.

சென்ற முறை 1983 டிசம்பரில் கூட தஞ்சாவூரில் மழையி னால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குப் பல சலுகைகள் கொடுக்கப்பட்டன. ஆனால், என்னுடைய பகுதியில் மார்ச் முதல் வாரத்தில் திடீரென்று மழையினால் வெள்ளம் வந்து பயிர்களை அறுத்துக் கொண்டு போனது. பலமுறை எடுத்துக் கூறியும் அதற்கான நிவாரணம் கிடைக்கவில்லை. பூச்சி மருந்து மற்றும் விவசாய இடுபொருள் மட்டும் மானியத்தில் கிடைத்

ததே தவிர, வேறு நிவாரணம் எதுவும் கிடைக்கவில்லை. அங்கு கொத்தமல்லி, வாழை, பருத்தி, நெல் போன்றவை பாதிக்கப்பட்டன. அதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப் பட்டிருக்கிறேன்.

என்னுடைய பகுதியில், 1969, 1972 ஆண்டுகளில் ஆத்தூரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு ரூ. 2,000, ரூ. 3,000, ரூ. 5000 வரை கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும்கூட சொற்பத் தொகையாக இருக்கிறது. வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு மோட்டார் அடித்துச் செல்லப்பட்டிருக்கும், மண் அரிப்பு ஏற்பட்டிருக்கும், அல்லது மண் மேடிட்டிருக்கும், அல்லது கிணறுகள் மூடப்பட்டிருக்கும். இப்படிப்பட்டச் சூழ் நிலையில் அந்தச் சீர்திருத்தத்திற்குக் கொடுத்த கடனை தயவு செய்து அரசு பரிசீலனை செய்து, மிகக் குறைந்த அளவே கடன் இருக்குமானால் தள்ளுபடி செய்தோ அல்லது வட்டியைத் தள்ளுபடி செய்தோ நடவடிக்கை எடுக்கவேண்டுமாய் நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஜப்தி நடவடிக்கை எங்கு பார்த்தாலும் நடக்கிறது. நாங்கள் எல்லாம் வாங்கிய கடனைத் திருப்பி கட்ட வேண்டாம் என்று கொள்கை உடையவர்கள் அல்ல; திருப்பி தரவேண்டும் என்ற எண்ணத்தை வைத்திருப்பவர்கள்தான். சாதாரண பெரிய விவசாயி என்றால் 5 ஆண்டு, 8 ஆண்டு, 9 ஆண்டு நீண்டகால கடனைப்பெற்று நீண்ட நாட்களாக கட்டப்படாத நிலையில் சிறு விவசாயிகள், நான் முன்பு சொன்னதைப்போல மேட்டு நிலம், தண்ணீர் இல்லாமல் வறண்ட கிணறு, மோட்டார் இல்லாத இடம், மின்சாரம் வழங்கப்படாததால் ஏற்படுகின்ற பாதிப்பு, வறட்சி, வெள்ளத்தால் ஏற்படுகின்ற பாதிப்பு, இப்படிப்பட்ட காரணங்களால் 10 ஆண்டுகளுக்கு மேல் கடனைத் திருப்பிக் கட்டவில்லை என்றால் அவர்களிடம் ஜப்தி நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள். அதற்கான காரணம் என்ன என்று எனக்குத் தெரியவில்லை.

நாங்கள் கிராமங்களுக்குச் செல்லும்போது சொசைட்டிகளை அணுகும்போது பொதுவாக 10 ஆண்டுகளுக்கு மேலாகக் கட்டாத கடனுக்கு ஜப்தி நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். மாணிக்கம் என்ற நபர் முக்தாகவுண்டனூர் கூட்டுறவுச் சங்கத்தில் கடன் பெறவில்லை. அந்த கூட்டுறவுச் சங்கத் தலைவர் சின்னப்பிள்ளை என்பவர் 60. 70 பேர்களுடன் சென்று அவரைத் திட்டி அடித்திருக்கிறார்கள். ஏதோ தனிப்பட்ட ஒரு விரோதத்தின் காரணமாகவோ அல்லது கட்சி மாச்சரியம் காரணமாகவோ இப்படிப்பட்டச் செயல்கள் நடைபெறுகின்றன என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்,



என்னுடைய தொகுதியில் சார்வாரய் என்ற ஊரில் கூட நீங்கள் எங்கள் கட்சிக்கு விரோதமாக வேலை செய்திருக்கிறீர்கள், அதனால் ஜப்தி செய்கிறோம் என்று சொல்லி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அவருடைய வீட்டிலே வெல்லம் இருக்கிறது. விலை இல்லை; அதை விற்றவுடன் கட்டிவிடுகிறேன் என்று சொல்லியிருக்கிறார். நான் கூட சான்று கொடுத்தேன். வெல்லம் விற்றவுடன் நானே கட்டச் சொல்கிறேன் என்று சொன்னேன். அப்போதும் அவர்கள் விடவில்லை, ஜப்தி செய்தார்கள். பெண்கள் வீட்டில் இருந்தாலும் அவர்களை இழுத்து தள்ளிவிட்டு, ஜப்தி செய்திருக்கிறார்கள். இது அரசின் கொள்கையா அல்லது அதிகாரிகளின் தான்தோன்றித்தனமா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

தற்போது கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்குக் கொடுக்கும் சம்பளம் குறைவாக இருக்கிறது. நம்முடைய அரசு ஊழியர்களுக்குக் கொடுப்பதுபோன்ற சம்பளம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டால்தான் விற்பனைப் பொருள்களின் அளவோ, விலையோ, தரமோ குறையாமல் இருக்கும், நல்ல முறையில் மக்களுக்குக் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாய கூட்டுறவுச் சங்கத்தில், ஊராட்சி ஒன்றியத்தில் இன்றைக்கு 600 பேர்களை ஐ. ஆர். டி. பி—யின்கீழ் அறிமுகப் படுத்தினார்கள். அதை ஏன் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செய்திருக்கக்கூடாது? கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ஏன் அந்த நபர்களைத் தேர்ந்தெடுக்கக்கூடாது? இதை பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராம சேவக்குள் அதை சரியான முறையில் பயன்படுத்தவில்லை. நம்முடைய கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் கொடுக்கும்போது அதை தள்ளுபடி செய்யவேண்டியிருக்கிறது. எனவே, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக இந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாதாரண மக்கள், ஆதிதிராவிட மக்கள், ஏழை எளிய மக்கள் இருக்கிற இடங்களில் நியாயவிலைக் கடைகளைத் திறக்க வேண்டுமென்ற கொள்கை இருந்தாலும் பல இடங்களில் அது நடக்கவில்லை. நானே தலையிட்டும் கூட அரிசனங்கள் வாழும் இடத்தில் கட்டிடம் இல்லாததால் வைக்க முடியவில்லை என்று சொன்னார்கள். கட்டிடம் கட்டித் தருகிறோம் என்று சொல்லி, கட்டிடம் கட்டப்பட்டு, இப்போது தயாராக இருந்தும் அங்கே கடை திறக்கப்படவில்லை.

ஆயிரம் கார்டுகளுக்கு மேல் இருக்கிற இடங்களை பிரித்துக் கொடுக்கவேண்டுமென்று ஒரு கொள்கை இருக்கிறது. மலைவாழ் மக்கள் பகுதியில் ஆயிரம் கார்டு என்ற கணக்கை பார்க்கக் கூடாது. அவர்கள் நீண்ட தூரம் போய் பொருள்களை வாங்க வேண்டியிருப்பதால், அவர்களுக்கும் மட்டும் இதை தளர்த்தி 300 கார்டுகளுக்கு ஒரு கடை என்று கொடுக்க வேண்டும். அல்லது தூரத்தைக் கணகிட்டு, மலைவாழ் மக்கள் பகுதிகளில் கடைகளைத் திறக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

[திருமதி தா. இராசாம்பாள்] [1985 ஜூன் 28

கூட்டுறவு சர்க்கரை ஆலை, கூட்டுறவு நூற்பாலைகளை ஏற்படுத்த அரசு முன்வந்ததை பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். எங்களுடைய மாவட்டமான சேலத்தில் இப்படி மேலும் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலையையும், ஒரு கூட்டுறவு நூற்பாலையையும் ஏற்படுத்த வேண்டுமென்று கூறி, பெண்களுக்கு என்று ஏற்படுத்தும் சங்கங்களில் சேலம் மாவட்டத்தில் ஒன்றை அமைத்துக் கொடுக்குமாறு கேட்டு, பெண்களுக்கு வேலைவாய்ப்பு அதிகரிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டு, முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்கத் தலைவர், பொன்மனச் செம்மல், தானைத் தலைவர் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய பாதமலர் வணங்கி இன்றைக்கு கூட்டுறவுத் துறை சார்பாக சில கருத்துக்களைச் சொல்லதற்கு முன்பாக இங்கே சர்வகட்சியினரையும் அரவணைத்து நல்லதொரு பாங்கினை கடைபிடித்து வருகின்ற நமது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு முதற்கண் நன்றி தெரிவித்து என்னுடைய வேண்டுகோள்களை அவை முன் வைக்க விரும்புகிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் குறிப்பாக என்னுடைய விழுப்புரம் தொகுதியில் வலவனூர் கிராமத்தில் பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் ஒன்று இருக்கிறது. அந்தச் சங்கத்திற்கு கறவை மாடுகள் வாங்க, கடன் வழங்க அதிக அளவு பணம் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10–40)

விழுப்புரம் பகுதியில் மிகச் சிறப்பாகச் செயல்படும் சில்லிங் சென்டர் இருக்கின்றது. அங்கே அது இருப்பதன் காரணத்தால் எங்களுடைய கிராமங்களில் பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து பால் வழங்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. அந்த வகையில் எங்கள் கிராமப்புறத்தில் இருக்கின்ற விவசாயிகளுக்கு நல்லதொரு நிலைமை ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் இருக்கின்றது. ஆகவே நிரம்ப கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கங்களை அமைப்பதற்குரிய ஏற்பாட்டினைச் செய்யவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கூட்டுறவுத் துறையின் மூலமாகப் பயிர்க் கடன் அதிகமாகக் கொடுக்கக்கூடிய வகையில் ஏற்பாடு செய்யவேண்டும். இப்போது ரூபாய் 15,000 ; 20,000 என்ற அளவுக்குக் கொடுக்கப்படுகின்றது. அதனை 25 ஆயிரம் ரூபாய் வகையில் கொடுக்கின்ற அளவுக்கு ஏற்பாடு செய்யவேண்டும். ஏனென்றால் தற்போது



1985 ஜூன் 28] [திரு எம். இராசரத்தினம்]

உரவிலை அதிகம், கூலியும் உயர்ந்திருக்கின்றது, பூச்சிமருந்து களின் விலையும் ஏறிவிட்டது. எனவே அவ்வாறு கடனை அதிகப்படுத்திக் கொடுத்தால்தான் அவர்களால் விவசாயத்தைச் சரிவர செய்யக்கூடிய சந்தர்ப்பம் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவு விவசாயச் சங்கங்களின் மூலம் உரங்கள் வழங்கு வதைப் பொறுத்தவரையில் காலத்தோடு சப்ளை செய்ய வேண்டும். அதற்கு இந்த அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்குக் கடன்களை வழங்கு கின்றபோது அவர்களுக்குச் சரியான முறையில் பொட்டாஷ் உரங்கள், மற்றும் பூச்சி மருந்துகள் போன்றவை வழங்கப்படாத நிலைமை இருக்கின்றன. என்று விவசாயிகள் மத்தியில் சொல் கின்ற நிலைமை இருக்கின்றது. அந்த இடர்பாட்டைப் போக்க அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளைப் பொறுத்தவரையில் அவர்களுக்குப் பல்வேறு சலுகைகளைச் செய்து வருவதோடு ஏழை விவசாயிகளின் கடன்களைத் தள்ளுபடி செய்து வருகின்ற அரசு தங்கத் தலைவர், தானைத் தலைவர் புரட்சித்தலைவர் அவர்களின் அரசு என்பது நாடறிந்த உண்மையாகும். இப்படிப்பட்ட நிலையில் பெரிய விவசாயிகளும் அதிக அளவில் பினாமி பெயர்களில் லோன்களைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவர்களும் இப்படிப்பட்ட நிலைமையைப் பயன் படுத்திக்கொண்டு, அவர்களிடத்திலே சென்று கடனை வசூல் செய்கின்றபோது ஏழை எளியவர்களிடத்திலே எல்லாம் கடனை வசூல்செய்கிறார்கள் ஜப்தி செய்கிறார்கள் என்று சொல்கின்ற நிலைமை இருக்கின்றது. அரசின் மீது காழ்ப்புணர்ச்சியோடு அவ்வாறு சொல்கின்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே குறிப்பாகச் சுயநலவாதிகளாக இருக்கக்கூடிய பெரும் விவசாயிகள் தான் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அதிலும் அரசாங்கம் கவனம் செலுத்தி அப்படிப் பெரிய விவசாயி கள் பினாமி பெயரால் கடன்களைப் பெற்றிருந்தால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே இருக்கக்கூடிய அருமைச் சகோதரர்களையும் மாற்றுக் கருத்துக்களைக் கொண்ட மாற்று இயக்கத்தினரையும் எதிர்க் கட்சியினரையும் கேட்டுக்கொள்வது என்னவென்றால் இந்த கூட்டுறவுத் துறை திறம்பட செயல்படக்கூடிய வகையில் உள்ள கருத்துக்களைச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடிக்கடி ஜப்தி செய்கிறார்கள், ஏழை விவசாயிகள் துன்புறுத்தப் படுகிறார்கள் என்ற அவப் பெயர் வந்து கொண்டிருக்கின்றது. அவ்வாறு வருகின்ற அவப் பெயர் உண்மையல்ல என்பதை நாம் அனைவரும் உணரவேண்டும். பல்வேறு பெரும் விவசாயிகள் பெற்ற கடனைக் கொடுக்க முன்வராமல் அவ்வாறு கொடுப்பதில்

(திரு எம். இராசரத்தினம்) [1985 ஜூன் 28

இருந்து ஒரு பாதுகாப்பைத் தேடிக்கொள்வதற்காகத்தான் இப்படிப்பட்ட நிலையை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கே இருக்கக்கூடிய அரசியல் மாற்று இயக்கத்தைச் சேர்ந்த நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்க ளிடத்திலே ஒரே ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். கூட்டுறவுச் சடன்களைப் பொறுத்தவரையில் மத்திய வங்கியானது தான் பெற்ற கடனை ரிசர்வ் வங்கிக்குச் செலுத்தவேண்டியிருக் கின்றது. அப்படிப்பட்ட நிலைமையிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏழை எளிய விவசாயிகளுக்கு உதவிக்கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கறவை மாடுகளும், மற்றவைகளும் வாங்குவதற்குரிய மானியத் தொகைகளை அதிக அளவுக்குக் கொடுத்தது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

டீச்சர்ஸ் கோவாப்பரேட்டிவ் சொசைட்டி சில ஒன்றியங்களில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதன்மூலமாக ஆசிரியர்களுக்கு கடன் களைக் கொடுக்கக்கூடிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்தித் தந்திருக்கி றார்கள். மாநில அளவில் அனைத்து ஒன்றியங்களிலும் இப்படி டீச்சர்ஸ் கோவாப்பரேட்டிவ் சொசைட்டி மாதிரி புதிய சொசைட்டிகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்களை இந்த அரசு செய்யவேண்டும் என்று பணிவோடு தெரிவித்துக்கொள்கி றேன். அதுவும் எங்களுடைய தென்னாற்காடு மாவட்டத்தில் மிகச் சீரும், சிறப்பும் பெற்று செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற மத்திய வங்கிக்கு நல்ல ஆலோசனைகளை வழங்கி மேலும் பல புதிய டீச்சர்ஸ் கோவாப்பரேட்டிவ் சொசைட்டிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள மத்திய வங்கிக்கு ஆலோசனையும், ஆதரவும் அதிக அளவில் நிதியுதவியும் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல அடுத்து, எல்.டி.பி. மூலமாக பல உபகரணங்களை வாங்குவதற்காக விவசாயிகள் எல்.டி.பி. பேங்குக்கு வருகிறார்கள். விண்ணப்பிக்கிறார்கள். அப்படி விண்ணப்பிக்கிற நேரத்தில்— ஒரு உண்மையைக் கூற விரும்புகிறேன். காலதாமதம் ஏற்படுகிறது எல்.டி.பி. மூலமாக பல விவசாயிகளுக்கு பல இடங்களில் லோன் கிடைப்பதில்லை. டிராக்டர் வாங்குவதாக இருந்தாலும் சரி, வேறு பல உபகரணங்களாக இருந்தாலும் சரி, மெஷினோ அல்லது மோட்டாரோ வாங்குவதாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு லோன் பணம் காலத்தில் கிடைப்பதில்லை. காலதாமதம் ஆகிறது. அதை விசாரிக்கிறபோது, சில புகார்கள் வந்துகொண்டிருப்பதாக தெரிகிறது.

அங்கே நீண்டகாலமாக ஒரே இடத்தில் இருக்கக்கூடிய அலுவலர்கள், அதிகாரிகள் சிப்பந்திகள் போன்றவர்கள் எல்லாம் தங்களுக்கு வேண்டியவர்களுக்குக் கொடுப்பதோடு மட்டுமல்ல,



1985 ஜூன் 28] (திரு எம். இராசரத்தினம்)

தனிப்பட்டவர்களுக்கு தேவையான உதவியை அதிகமாகச் செய்யக்கூடிய வகையிலும், சில காழ்ப்புணர்ச்சிகளை வைத்து செய்துகொண்டு வருகிறார்கள் என்று தெரிகிறது. தனிப்பட்ட நபர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை வழக்கமாகக் கொண்டி ருக்கிறார்கள். காரணம் நீண்ட நெடுங்காலமாக ஒரே இடத்தில் அவர்கள் பணி செய்து வருவதால், அப்படிச் செய்வது தங்களுக்கு நன்மை அளிக்கும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

அப்படி ஒரே இடத்தில் நீண்டகாலமாக பணியாற்றிக்கொண்டு வரும் அதிகாரிகளை, சிப்பந்திகளை, இப்படிப்பட்ட புகார்கள் வருகிற இடங்களில் இருப்பவர்களை, அரசு பொதுமக்களுக்கு செய்துவரும் நல்ல காரியங்களை செய்யவிடாமல் மறைத்து தடை செய்பவர்களை, வேறு இடங்களுக்கு, தொலை தூரத்தில் உள்ள அலுவலகங்களுக்கு மாற்றல் தருவதோடு, அரசின் நன்மைகள் பொது மக்களை சேராமல் தடுத்ததற்கு அவர்கள் மீது நடவடிக் கையும் எடுக்கவேண்டும். புகார்கள் இருந்தால் சம்பந்தப்பட்ட புகார்கள் மீது நடவடிக்கை எடுத்து, கடுமையான வகையில் அவர் கள் தண்டிக்கப் பெறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அங்காடிகளில் வேலை செய்யும் சிப்பந்திகள் தவறுகள் செய்கிறார்கள் என்று புகார்கள் வருகின்றன. ஆனால் அவர்களுடைய அடிப்படைச் சம்பளம் என்னவென்று பார்க்க வேண்டும். வெகு குறைவாக சம்பளம் வாங்குகிறார்கள். ஆகவே சூப்பர் மார்க்கெட்டிலே பணியாற்றுகின்ற சிப்பந்திகளானாலும் சரி, மற்ற கூட்டுறவு அங்காடிகளில் பணிபுரிகின்ற சிப்பந்தி களானாலும் சரி அவர்களுக்கு அதிகமாக சம்பளத்தைக் கொடுப்பதன் மூலம் இதுபோன்ற தவறுகளைக் குறித்த புகார் களை தவிர்க்க வாய்ப்பு ஏற்படுத்த முடியும்.

அடுத்து கூட்டுறவு அங்காடிகளில் மட்டுமல்லாது, கிராமங்களில் மக்களுக்கு உதவக்கூடிய கோவாப்பிரேட்டிவ் கிரெடிட் சொசைட்டி மூலமாகவும் ரவை, மைதா, அரிசி, கோதுமை, பாமாயில் போன்ற பொருள்கள் வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு அதனால் அன்றாடம் பொது மக்களை சந்திக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது, அவர்கள் சொல்கிறார்கள், அங்கே போதுமான அரிசி கிடைப்பதில்லை என்று, ஏழை எளிய மக்களுக்காக உதவி செய்யக்கூடிய நமது அரசு, நமது தானைத் தலைவர், புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் இயங்கும் இந்த அரசு, அங்கே இருக்கக்கூடிய அந்த சாதாரண ஏழை எளிய அரிசன மக்களுக்கு, அன்றாடம் அரிசி கிடைக்கச் செய்யும் வகையில் ஏதாவது ஏற்பாடு செய்தாக வேண்டும்.

அத்தோடு அந்த அரிசி எல்லாக் காலங்களிலும் கிடைப்பதில்லை என்ற புகார்கள் வந்துக்கொண்டிருக்கின்றன. ஆகவே, எசன்ஷியல் கம்மாடிட்டிஸ் எனப்படும் அத்தனை பொருள்களை

யும், மக்களுக்கு விநியோகம் செய்யும் அத்தனை கடைகளுக்கும் சரியாக ஒழுங்காக சப்ளை செய்யப்படுகிறதா என்று அரசு கண்காணிக்க வேண்டும். அதற்கு ஏதாவது ஒரு வழி முறையை புதியதாகவாவது உருவாக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு என், டி. சி. துணிகளையெல்லாம் கூட அந்த அங்காடிகளில் வைத்து, நகரப் பகுதிகளில் விற்பனை செய்யப்படுவது போல கிராமப்புறங்களில் இருக்கிற அங்காடிகளுக்கும் முன்னுரிமை கொடுத்து அவைகளை விற்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

சேல்ஸ்டாக்ஸ் துறையில் பல்வேறு குற்றங்களை கண்டுபிடித்து தவிர்ப்பதற்காக ப்ளையிங் ஸ்குவாடு என்றும், இன்டெலிஜென்ஸ் விங் என்றும் வைத்து செயல்படுத்துகிறார்கள். அதுபோல இந்த கூட்டுறவு அங்காடிகளுக்கெல்லாம் ப்ளையிங் ஸ்குவாடு என்று அமைத்து, எல்லா உணவுப் பண்டங்களும் சரியான முறையில் சப்ளை செய்யப்படுகிறதா, அது குறிப்பிட்ட வகையில் ஏழை எளியவர்களுக்குப் போய்ச் சேருகிறதா என்பதையும் கண்டறிய டிஸ்டிரிக்ட் லெவலிலே அதிகாரிகளைப் போட்டு, தேவையான கருவிகளைக் கொடுத்து, மாதந்தோறும் அவர்களுக்கு டூர் புரோக்கிராம் போட்டுக்கொடுத்து, ஜீப் வசதிகள் செய்து கொடுத்து, ஒவ்வொரு கூட்டுறவு அங்காடிக்கும் சென்று அங்கே ஏற்படக்கூடிய தவறுகளை உடனடியாக கண்டுபிடிக்க முயற்சி எடுத்து, அவைகளை களைய இந்த அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசு ஏழை எளியவர்களுக்காக செய்திருக்கக்கூடிய அத்தனை சாதனைகளையும், அவர்களிடம் சென்று அடையாமல் தடுக்கும் செயலை இதுபோன்ற ஊழல் செய்யும் அதிகாரிகள் தாம் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையிலே நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வதெல்லாம், பிளையிங் ஸ்குவாடு போன்ற ஏதாவது ஒரு அமைப்பை வைத்துதான் தவறுகள் செய்கிற நபர்கள் மீதும் அவர்களுக்கு உதவுகிற அதிகாரிகள் மீதும், நடவடிக்கை எடுக்க முடியும், இன்னும் கடுமையாக குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும், இந்த அரசும் இப்படி தனி நபர்களை பாதுகாத்து வரும் அதிகாரிகளை பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், இன்னும் சொல்லப்போனால் தவறு செய்யும் நபர்கள் மீதும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீதும் கிரிமினல் நடவடிக்கையை எடுக்க வேண்டும், இன்னும் கடுமையாகச் சொன்னால், மினி மிசாவிலே பிடித்து உள்ளே தள்ளுவது போன்று கைது செய்தால் கூட நலமாக இருக்கும் என்று கூற விரும்புகிறேன். ஏனென்றால் அங்காடிகளில் உணவுப் பொருள்கள் இல்லாமல் ஏழை மக்கள் அவதிப்படும்போது, இப்படிப்பட்ட அதிகாரிகளுக்கு தயவு





தாட்சண்யமே பார்க்கக் கூடாது. புகார்கள் எப்படி வந்திருந்தாலும் சரி, நடவடிக்கை எடுக்க வேண்டும். எங்களுடைய தங்கத் தலைவர் தானைத் தலைவர், புரட்சித் தலைவர் அவர்கள் கூறுவார்களே, ''ஒரு தவறு செய்தால் அதை தெரிந்து செய்தால் அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்'' என்று, அதைப்போல தவறு செய்கிற அவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

அடுத்து 11-7-83 அன்று என்று நினைக்கிறேன். சட்டமன்றத்தில் தென்னாற்காடு சப்ளை மார்க்கெட்டிங் சொசைட்டி சம்பந்தமாக ஒரு சட்டமன்ற உறுப்பினர் கடலூர் சூப்பர் மார்க்கெட்டைப் பற்றி புகார் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் புகார் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். இந்த மன்றத்தின் மூலமாக தெரிவித்துக் கொள்வது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறையில் மிகச்சிறப்பாக செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இந்தப் புகாரின் மீது கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தச் சட்டமன்ற உறுப்பினர்மீது அந்த அதிகாரி வழக்கு தொடர்ந்திருக்கிறார் என்பது வேதனைக்குரியதாக இருக்கிறது. அந்த வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறதா? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை ஆராய வேண்டும். காரணம் பொதுமக்களுடைய பிரதிநிதிகளாக இருக்கக்கூடிய நாங்கள் இப்படிப்பட்ட குற்றச் சாட்டுக்களை சொல்லுகிறபோது, இப்படிப்பட்ட நடவடிக்கைகளை அவர்கள் வகுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது வேதனைக்குரியது. தவறு செய்தது உண்மையென்றால், அது உண்மையென்று புரூப் செய்யப்பட்டிருந்தால் நடவடிக்கைகளை குறித்து ஆராய்வதற்காக அவர்கள் சென்னைக்கு இங்கே வந்திருந்து அந்த வழக்கை நடத்துவதற்கு மிக சௌகரியமாக இருக்கும்வகையில் அவர்களை மாற்றியிருக்கிறார்கள் என்று செய்திகள் இருக்கின்றன.

அந்த அதிகாரி அங்கே இருக்கிற சிப்பந்திகளிடம், இங்கே மட்டுமல்ல வெளியேயும் எனக்கு அதிகாரிகள் இருக்கிறார்கள் என்று தெரிவித்து, அந்தச் சட்டமன்ற உறுப்பினர் மீது இன்னமும் அப்படிப்பட்ட வழக்குகளைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கேட்கும்போது வேதனையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே அமைச்சர் அவர்கள் இதில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கூட்டுறவு பண்டகசாலைகள் மீது அரசு அதிக கவனம் செலுத்த வேண்டும். அத்தியாவசிய பண்டங்கள் அதன் மூலம் விநியோகம் செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட அளவிலே தாலுக்கா அளவிலே அட்வைசரி கமிட்டிகளை அமைத்தால்தான் பொதுமக்களுக்கு சரியாக பொருள்களை வியோகிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அட்வைசரி கமிட்டிகளை கூட்டுறவு வங்கிகளில் போடுகிறபோது, கூட்டுறவு சென்ட்ரல் பேங், எல். டி. பேங் ஆகியவைகளுக்கும் நியமித்தால்தான் தவறு நடக்காது என்பது மட்டுமல்ல, மக்களுக்கு உதவுவதற்கு வாய்ப்பாக இருக்குமென்பதைத் தெரிவித்து, இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

* திரு. மா. மீனாட்சிசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையில் எங்கள் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே நீண்ட நாட்களாக கூட்டுறவு சம்பந்தப்பட்ட சில பிரச்னைகளை ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களும், எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களும் அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கிறோம். இந்தக் கூட்டுறவுத் துறை என்பது இந்தியாவிலே மராட்டிய மாநிலத்திற்கு அடுத்தபடியாக தமிழகத்தில் தான் மிகச் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது என்ற நிலை இருந்து, இன்றையதினம் கேலிக்கும், கிண்டலுக்கும் உரிய நிலையில் இங்கே இருக்கிற எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல, மக்கள் எல்லாம் கிண்டல் சொல்கிற நிலைமையில் இன்றைக்கு மோசமான நிலையில் அந்தத் துறை இருக்கிறது.

இங்கே கொள்கைக் குறிப்புப் புத்தகத்திலே கூட தவணை தவறிய கடனைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள். இன்றையதினம் கூட்டுறவுத்துறையில் கடனை வசூலிப்பதில் விவசாயிகளுக்கு எவ்வளவு சங்கடங்கள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் எடுத்துச் சொல்லியிருந்தாலும் அதனுடைய அடிப்படைக் காரணங்களை எண்ணிப்பார்க்க தவறியிருக்கிறார்கள். அவசரநிலை பிரகடனப் படுத்திய நேரத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கூட்டுறவு அமைப்புகளுக்கும் நிர்வாகத்தை கலைத்துவிட்டு, தனிஅதிகாரிகளை நியமித்து நடத்தினார்கள். அதற்குபிறகு ஆளும்கட்சியாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப் பேற்றதற்குப் பின்னாலே இன்னமும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முறையாக தலைவர், தேர்தல் இயக்குநர் தேர்தல் நடைபெறாமல் பல கூட்டுறவுச் சங்கங்கள் இன்றைக்கும் தலைவர் இல்லாமல் இயக்குநர் இல்லாமல் நடந்து கொண்டிருக்கின்றன. அந்தச் சங்கங்களில் தனி அதிகாரிகள் தன்னிச்சையாக செயல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது. கடனை வசூலிப்பதில் இந்த அரசுக்கு சரியான கொள்கை இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தேர்தல் காலங்களில் ஒரு வாக்குறுதியும் தேர்தல் முடிந்தபிறகு வேறொரு நடவடிக்கையுமாக இந்த அரசு இருக்கிறது. நாங்கள் ஒத்திவைக்கிறோம் என்று அடிக்கடி சொல்கின்ற காரணங்களை மக்களே அதிகாரிகளிடத்திலே பத்திரிகை மூலமாக வந்ததை அவர்கள் காட்டு





கிறார்கள், சொல்கிறார்கள். அதற்குப்பிறகு அதிகாரிகளுடைய கெடுபிடி கொஞ்சம் கால தாமதம் ஆனாலும், அதிகாரிகள்மீது மக்கள் வெறுப்பு அடைகின்ற ஒரு நிலைமையை நாம் காண்கிறோம். நமது முதலமைச்சர் அவர்கள்கூட சென்ற ஆண்டு அவர்கள் சொன்னது, கடனை அடியோடு ரத்து செய்வோம் என்று சொன்னார்கள். அதற்குப்பிறகு, கடன்களுக்கு வட்டி, அபராத வட்டியை, தள்ளுபடி செய்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் இதுவரையில் எந்தவிதமான அறிவிப்பும் இல்லை.

அதிலும் நிலவள வங்கிகள் மூலமாக வாங்குகின்ற கடன்களுக்கு மட்டும் வட்டியை தள்ளுபடி செய்கிறோம் என்று சொல்கிறீர்கள். ஆனால் நிலவள வங்கிக் கடன் எப்படி என்றால், நீண்டகாலக் கடன். ஒரு நிலத்தை அபிவிருத்தி செய்வதற்காக, விளைபொருட்களை உற்பத்தி செய்வதற்காக, நீண்டகாலக் கடன் வாங்கி அவர்கள் அபிவிருத்தி செய்கிறார்கள். ஒரு ஆண்டு அவர்களுக்கு நல்ல விளைச்சல் இருக்கலாம். ஒரு ஆண்டு விளைச்சல் இல்லாமல் இருக்கலாம். ஆனால் குறுகிய காலக் கடன் அந்தந்த வருடத்தினுடைய உற்பத்தியைப் பொறுத்து அமைகிறது. அந்தக் குறுகிய கால கடனுக்கு வட்டியையோ, அபராத வட்டியையோ தள்ளுபடி செய்வதில்லை. இப்படிப்பட்ட ஏற்றத்தாழ்வுகளை மாற்றி, குறுகிய காலக் கடன்களுக்கும், அந்த வட்டியை, அபராத வட்டியை தள்ளுபடி செய்தால் நிச்சயமாக விவசாயிகள் பெரிதும் நன்மை அடைவார்கள்.

எப்போதும் ஒரு கடன் கொடுப்பதற்கு முன்னால், விவசாயிகள் வாங்கினால், திருப்பிக் கட்ட முடியுமா என்று ஆய்ந்துதான் நாம் கொடுப்பது வழக்கம். கிட்டதட்ட 7, 8 ஆண்டுக்காலமாக வசூலை தள்ளிவைத்துவிட்டு இப்போது கெடுபிடி வசூலில் வந்து அதுவும் மாஸ் என்று சொல்கிற வகையில் என்னுடைய மாவட்டத்திலே இப்போது வசூல் நடந்து கொண்டிருக்கிறது. இதிலே பல குழப்பங்கள், தகராறுகள் இருக்கின்றன. திருத்துறைப்பூண்டிக்குப் பக்கத்திலேகூட பல விவசாயிகள், கைது செய்யப்பட்டு, ரிமாண்ட் செய்து, அவர்கள் பின்பு ஜாமீனிலே வந்திருக்கிறார்கள், இப்படிப் பட்ட நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. கொடுக்கின்றபோது திருப்பிக் கட்டுவார்களா என்றுதான் பார்த்துக் கொடுக்கிறோம். ஆனால் வசூலிக்கின்றபோது முடியவில்லை என்றால், 4, 5 ஆண்டுக்காலமாக, ஒத்திவைத்து, இப்போது கெடுபிடி வசூல் செய்கிறார்கள். அப்படிச் செய்யும்போது, மக்களிடத்திலே, விவசாயிகளிடத்திலே பொருளாதார நிலைமை நல்லமுறையில் இருக்கிறதா, விளைபொருள் நல்ல விதத்திலே உற்பத்தியாகி இருக்கிறதா என்ற அதன் காரணத்தையாவது நீங்கள் சொல்ல முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது.

நான் சென்றமுறை சட்டமன்றக் கூட்டத் தொடரில்கூட ஒரு ஒத்திவைப்புக் தீர்மானம் கொடுத்து, என்னுடைய மாவட்டத்திலே பல கிராமங்கள் மஞ்சள் நோய் என்ற பெயரால் மிக

மோசமான நிலைமை ஏற்பட்டு, விதைக்கக்கூட நெல் இல்லாமல் அறுவடை செய்யமுடியாத நிலைமை இருந்தது என்று சொன்ன போது, நமது முன்னவர் அவர்கள், அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகவும், கடன், கிஸ்தி எல்லாம் தள்ளுபடி செய்வதற்கு ஏற்பாடு செய்வதாகவும் சொன்னார்கள். ஆனால் இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அப்படிப்பட்ட ஊர்களில் இப்போது கெடுபிடி வசூல் நடக்கின்றது. அந்தக் கெடுபிடி வசூல் செய்யப்போவதைப் பார்த்தால், வேடிக் கையாக இருக்கிறது. எப்படி என்றால், அதிகாரிகள் எல்லாம் பல ஜீப்புகளிலும், கார்களிலும், போலீஸ் வேன்களிலும் 70, 75 பேர்களாகச் சேர்ந்து சென்று, வசூலிக்கின்ற நிலைமையைப் பார்த்தால், ஏதோ ஒரு நாட்டை எதிர்த்து இன்னொரு நாட்டுக் காரன் போர் செய்யப் புறப்படுவதைப்போல இருக்கிறது. இப்படிப்பட்டமுறையில் செல்வது என்பது மக்களிடையே உங்கள் மீது ஒரு வெறுப்பும், அவப்பெயரும் ஏற்படுவதை நீங்கள் எண்ணிப்பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக நாங்கள் கடனை வசூல் செய்வோம், அல்லது செய்யமாட்டோம், தள்ளுபடி செய்வோம், செய்யமாட்டோம் என்று ஒரு திட்டவட்டமான முறையில் ஒரு அறிவிப்பைச் செய் வதாகவும் இல்லை. இதனால் மக்களிடையே ஒரு குழப்பமான நிலைமை இருக்கிறது. தேர்தலுக்குமுன்பு அவர்கள் தாங்கள் வாங்கிய கடனைக் கட்டாமல் அண்ணா தி.மு.க. அரசு நமக்கு எல்லாம் தள்ளுபடி செய்யும் என்ற நம்பிக்கையில் அவர்கள் உற்பத்தியான விளைபொருட்களை எல்லாம் விற்றுவிட்டு, கடனைக் கட்டுவதற்குத் தயங்கிக்கொண்டு இருந்தார்கள். ஆனால் தேர்தல் முடிந்தவுடன் இப்படிப்பட்ட நிலைமையை நீங்கள் உருவாக்கியிருக்கிறீர்கள்.

அதோடு மட்டுமல்லாமல், கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தலையாவது நீங்கள் உடனடியாக வைப்பீர்கள் என்று பார்த்தால், 1983 ஆம் ஆண்டிலிருந்து நீங்கள் புதிய சட்டங் களைக்கொண்டுவந்து, அதற்கு வடிவம் தந்து நிறைவேற்றி பிறகு தேர்தலை வைப்பதாகச் சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள். 1982 ஆம் ஆண்டிலேயிருந்து இதுவரையில் ஆய்வு செய்கின்ற பணியை மேற்கொண்டு இருக்கிறீர்கள், அதற்குள்ளாக பல கூட்டுறவுச் சங்கங்கள் நிச்சயமாக நலிந்து வீணாகப் போகின்ற ஒரு நிலைமை இன்றைக்கு நாட்டிலே ஏற்பட்டு இருக்கிறது.

(முற்பகல் 11-00)

புதியதாக இன்றைக்கு காய் கறி உற்பத்தியாளர் சங்கம் என்ற பெயராலே மதிய உணவுக்கு காய் கறி சப்ளை செய் வதற்காக சங்கங்களை ஏற்படுத்தி அதை ஒன்றியங்கள் முழுவதும்



ஆரம்பித்து இருக்கிறார்கள். அதில் என்ன நடைபெறுகிறது என்று உங்களுக்குத் தெரியாமல் இருக்காது. இருந்தாலும் கூட்டுறவு காய் கறி உற்பத்தியாளர் சங்கம் என்ற பெயரில் ஆரம்பித்து அதில் ஆளும் கட்சியில் இருப்பவர்கள் தலைவராக வந்து அதிலே காய் கறி உற்பத்தி செய்து மதிய உணவுக்கு கொடுக்கிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை, கடையில் இருக்கின்ற காய் கறிகளை குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு அந்த மதிய உணவு மையங்களுக்கு சப்ளை செய் கிறார்கள். அது உண்மையில் சரியாக நடைபெறுகிறதா? நீங்கள் கொடுக்கின்ற மானியங்கள் எல்லாம் உற்பத்தியாளர்களுக்கு போய் சேருகின்றதா என்பதை நீங்கள் நல்லமுறையில் ஆய்ந்து கவனிக்கவேண்டும்.

இப்பொழுது சத்துணவுத் திட்டம் சரியாக நடைபெறவில்லை என்ற குற்றச் சாட்டு ஒரு பக்கம் இருந்தாலும் கொடுக்கின்ற காய் கறிகளை நல்ல காய்கறிகளாக கொடுக்கவேண்டும். நீங்கள் சரியான முறையில் அந்த சங்கங்களை செயல் படுத்த ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்து, இங்கே மானாவரி பயிர்களுக்கு குறைந்த வட்டியில் கடன் கொடுப்பதாக அறிவித்து இருக்கிறார்கள். அதிலே கடலையை விட்டுவிட்டு இருக்கிறார்கள். அந்த கடலைக்கும் குறைந்த வட்டியில் மானியம் அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

அடுத்து, நாம் உற்பத்தி செய்கின்ற பொருட்களை விற்பனை செய்கின்றபோது இடைத்தரகர்கள் கூடாது என்ற நல்ல நோக்கத்தோடு இந்த கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் இன்றைய தினம் இங்கே இடைத் தரகர்கள் இல்லாமல் இருந்தாலும் இங்கே கூட்டுறவு சங்கத்தில் இருக்கின்ற தனி அதிகாரிகள் எப்படி எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பது நாடு முழுவதும் தெரியும், உங்களுக்கும் தெரியும். அப்படிப் பட்ட நிலைமையை மாற்றி இதை நல்லமுறையில் சீராக செயல் படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உர வினியோகத்தில் நடக்கின்ற ஊழல் மிக அதிகமாக இருக்கிறது. உரங்களின் விலைகள் எல்லாம் இன்றைக்கு 2 மடங்காக ஏறியிருக்கிறது, ஆனால் உற்பத்தி செய்கின்ற விளைப்பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க வில்லை. இப்படிப்பட்ட பல காரணங்களால் விவசாயிகள் கடனை கட்டுவதற்கு தயங்குகிறார்கள். ஆகவே தயவுசெய்து மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அந்த தண்ட வட்டி, அபராத வட்டியை எல்லாம் தள்ளுபடி செய்யவேண்டும்.

ஒரு கால கெடுவை நிர்ணயித்தால் நிச்சயமாக விவசாயிகள்
கடனை கட்டுவதற்கு தயாராக இருக்கிறார்கள் விவசாயிகள்
கடனை ஏமாற்றுவதற்கு தயாராக இல்லை. இருந்தாலும்
நாட்டில் ஏதோ எதிர்க்கட்சிகள் தன் கடனை கட்டவேண்டாம்
என்று சொல்வதாக நீங்கள் சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள்.
நிச்சயமாக நாங்கள் எந்த இடத்திலும் கடனை திருப்பி
கொடுக்கவேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால்
உங்களுடைய பேச்சும் எழுத்தும் அப்படிப்பட்ட நிலைமையை
உருவாக்குகிறது. அந்த அடிப்படையில் நீங்கள் கூட்டுறவுத்
துறையை நல்ல முறையில் செம்மைப்படுத்த வேண்டும் என்று
கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி,
வணக்கம்.

திரு. எம். சண்முகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, காந்தி கண்ட இராமராஜ்யம்
உருவாகுவதற்கு கூட்டுறவு இயக்கம் அச்சாணி போன்றது.
இந்த கூட்டுறவு இயக்கத்தின் நோக்கம் விவசாயிகளின் விளை
பொருட்களுக்கு உரிய விலை கிடைக்கச் செய்வதும், அவர்
களுக்கு தரமான பூச்சி மருந்து இரசாயன உரங்கள் கிடைப்
பதற்கு இந்த கூட்டுறவுச் சங்கங்கள் சேவை செய்து வருகின்றன.
இதற்கு இடையில் விவசாய சங்கம் என்ற பெயரில் சில பெரிய
விவசாயிகள் ஒன்று சேர்ந்து விவசாய கூட்டுறவு வங்கியிட
மிருந்து. வாங்கிய கடனை திரும்ப செலுத்தக்கூடாது என்று
ஓயாது பிரச்சாரம் செய்து கொண்டு வருகிறார்கள், அந்த
முறையில் விடாமல் ஒரே மூச்சாக 1978 முதல் செயல்பட்டுக்
கொண்டு வருகிறார்கள். இதனால் பல்வேறு மாவட்டங்களில்
நலிந்த பிரிவினருக்கும் மத்திய தர வகுப்பினருக்கும் உரிய
காலத்தில் கூட்டுறவு கடன்கள் கிடைக்கவில்லை. சிரமம் ஏற்பட்டி
ருக்கிறது. இதன் மூலம் கூட்டுறவு சங்கங்களின் மூலம் வழங்கக்
கூடிய நன்மைகள் சாதாரண மக்களுக்கு இன்னும் கிடைக்க
வில்லை.

வேலை இல்லாத விதவைகளுக்கும், ஆதரவு அற்ற
அனாதைகளுக்கும் உடல் ஊனம் உற்றவர்களுக்கும் அவர்
களுக்கு சொந்தமாக வாழ்வு இடைக்க தொழில்கள் செயயவும்
வறுமையை ஒழிக்கவும், ஆங்காங்கு கூட்டுறவு சங்கங்கள்
அமைக்க அரசு ஊக்குவிக்கவேண்டும். எனது தொகுதியைப
பொறுத்தவரையில் மேற்சொன்ன பணிகளை செய்து கொண்டு
இருக்கிறேன்.

இந்த நாட்டில் வறுமையை ஒழிக்கவேண்டுமானால், நமது
இதய தெய்வம் புரட்சித் தலைவர், பொன் மனச் செம்மலின்
கரத்தை வலுப்படுத்த வேண்டும். உண்மையான ஏழை
எளியவர்கள் வாழ்வில் ஒளி வீச கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக
செயல்படுத்துவதற்கு நிபுணர்களின் ஆலோசனைகளைக் கேட்டு
நம்முடைய அரசு ஆவன செய்யவேண்டுமென்று மெத்த
பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



விவசாய விளை பொருட்களை இருப்பு வைப்பதற்கு கிராமங்
கள்தோறும் கிட்டங்கிகள் கட்டி, குறைந்த வட்டி விகிதத்தில்
பொருட்களுக்கு ஈட்டாக வைத்துக்கொண்டு 90 சதவிகிதம்
விவசாய கடன் கொடுத்து. கூட்டுறவுச் சங்கங்களை, விவசாயி
களை உற்சாகப் படுத்தவேண்டும். எங்களுடைய
பிராந்தியத்தில் குறிப்பாக, சங்கரன்கோவில், கோயில்பட்டி,
திருநெல்வேலி, போன்ற மூன்று இடங்களில் பெருவாரியான
கமிஷன் கடைகள் உள்ளன, நாள்தோறும் கடைகள் பெருகிக்
கொண்டே வருகின்றன.

விவசாயிகளுடைய பொருட்களுக்கு 100 ரூபாய் விற்பனை
செய்யவேண்டுமானால், 100க்கு 5 ரூபாய் என்று கமிஷனாகப்
பெற்றுகொள்கிறார்கள். வருஷம் பூராவும் நெற்றி வியர்வை
நிலத்தில் சிந்த பணியாற்றி, விவசாயிகள் உழைத்து. 20
குவிண்டால் பருத்தி விற்பனை செய்யவேண்டுமானால். அவர்
களுக்கு சுமார் 1,00. ரூபாய் வரை கமிஷனாகவே கொடுக்க
வேண்டி இருக்கிறது.

குறிப்பாக, சங்கரன்கோவில் மார்க்கெட்டிங் சொசைட்டி
அதிகாரிகள், சங்கரன்கோவில் கமிஷன் கடைக்காரர்களுடைய
கைப்பாவைகளாக இருக்கிறார்கள். அத்தகைய அதிகாரிகள்
முறையாகப் பணி செய்வதில்லை. உடனடியாக அந்த அதிகாரி
களை விசாரணை செய்து ஏழை எளியவர்களுக்கு உதவுகின்ற
அதிகாரிகளாக அங்கே அமர்த்த வேண்டும்.

கமிஷன் கடைகள், இடைத் தரகர்களை ஒழிக்கவேண்டும்
என்றால். தஞ்சை மாவட்டத்தில் நெல்லை அரசே நேரடியாக
கொள்முதல் செய்வது போல், எங்கள் பிராந்தியத்தில் குறிப்
பாக பருத்தி, கடலை, மிளகாய் வத்தல் போன்ற மூன்று
வகை விளை பொருட்களை அரசாங்கமே விவசாயிகளிடமிருந்து
கட்டுப்படியாகக் கூடிய விலைக்கு கொள்முதல் செய்து விவசாயி
களைக் காப்பாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, நலிவடைந்து கொண்டிருக்கும் விவசாயப் பெருங்
குடி மக்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக போர்க்கால
நடவடிக்கைகள் எடுத்து, விவசாயிகளைக் காப்பாற்றும்படியும்
மெத்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளிடமிருந்து இலட்சக்கணக்கில் சம்பாதிக்கக்கூடிய
கமிஷன் கடைக்காரர்கள் அரசுக்கு ஒழுங்காக வரி செலுத்துவது
இல்லை. ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களின் மூலமாகத் தான்
விவசாய விளை பொருள்களை விற்பனை செய்யவேண்டும் என்று
கட்டாயமாக அரசு விதிமுறை விதித்தால் நன்மையாக இருக்கும்
என்று பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கின்றேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, வணிகர்கள்
ஒழுங்காக வரி கட்டுவதில்லை என்று சொல்கிறார். இந்த
ஆண்டு அரசுத் தரப்பிலே 22 சதவிகிதம் கூடுதலாக அது
வந்திருக்கிறதுஎன்ற கணக்கு காட்டப்பட்டிருக்கிறது. 1,000கோடி
ரூபாய் வசூல் செய்யும் வணிகர்களை இப்படி மாண்புமிகு
உறுப்பினர் குறைவாகப் பேசுவதை வருத்தத்தோடு கண்டிக்
கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் எல்லோரையும்
சொல்லவில்லை. வரி கட்டாமல் இருக்கின்றவர்களைத் தான்
சொல்கிறார்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
சொல்வது, ஒழுங்காகக் கட்டி இருந்தால் இன்னும் கொஞ்சம்
வரும் என்று சொல்கிறார்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அப்படி
என்றால், அரசினுடைய அதிகாரிகள் சரியாக கவனிக்கவில்லையா
என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு அதிகாரிகள்
பிரம்மாக்கள் அல்ல, எல்லாவற்றையும் சரிபார்ப்பதற்கு; முடிந்த
அளவுக்கு சரி பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார்கள்.
அதிலேயும் தப்பித்துக் கொள்கிறார்கள் வியாபாரிகள்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் வியாபாரி...............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு பாயிண்ட்
ஆஃப் க்ளாரிபிகேஷனில் இவ்வளவு விளக்கம் கேட்க முடியாது.
உட்காருங்கள்.

திரு. எம். சண்முகையா பாண்டியன் : மாண்புமிகு அமைச்சர்
அவர்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள். கூட்டுறவுத் துறைக்
கான கொள்கை விளக்கக்குறிப்பில், 14-வது பக்கம், 19-வது
தலைப்பில் பொய்த்த கிணறுகள் கொடுக்கப்பட்டுள்ள சலுகை
கள் பற்றி விளக்கம் தரப்படுகிறது.

ஆலங்குளம் தொகுதியில், சங்கரன் கோயில் நில வள வங்கி
மூலம் வழங்கப்பட்ட கிணறுகளில் பல தண்ணீரே இல்லாமல்
வறண்டு பொய்த்த கிணறாக இருக்கிறது. அந்தத் தண்ணீர்
இல்லாத கிணற்றுக்கு தண்ணீர் வருவதற்கான வாய்ப்பு இல்லை.
இன்று சான்றிதழ் வழங்கக் கூடிய சம்பந்தப்பட்ட நிலத்தடி



நீர்ப் பொறியாளர் அவர்கள், பொய்த்த கிணறுகளுக்கு சான்றி
தழ்கள் வழங்க மறுக்கிறார்கள். அதனால், பாதிக்கப்பட்ட
விவசாயிகள் என்னிடம் பல முறை சொல்லி யிருக்
கிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அரசு ஆணை
பிறப்பித்து, உண்மையிலே பொய்த்த கிணறுகளுக்கு உரிய
சான்றிதழ் வழங்கி இந்த விவசாயிகள் நல்வாழ்வு வாழ வழி
வகுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டி
ருக்கிறேன்.

விவசாய கிட்டங்கிகள் மூலம் பல்லாயிரக்கணக்கான பூச்சி
மருந்து பாட்டில்கள் குறைந்த விலையில் சிறு விவசாயிகளுக்கு
விற்கப்படுகின்றன. இப்படி சலுகை விலையில் விற்கவேண்டிய
பூச்சி மருந்து பாட்டில்கள் விவசாயக் கிடங்குகளில் பணி செய்யும்
அலுவலர்களால் மொத்தமாக தனியார் கடை வைத்திருப்பவர்
களிடம் விற்றுவிடப்படுகிறது. தனியார் விற்கும் மருந்து பாட்டில்
களுக்கும், அரசு கிட்டங்கிகளில் இருந்து விற்கப்படும் பாட்டில்
களுக்கும் வித்தியாசமே தெரியாமல் போய் விடுகின்றது.

(முற்பகல் 11–10)

மதுபான பாட்டில்களுக்கு அரசு சீல்
அதைப் பாதுகாப்பதற்காக, மதுபான பாட்டில்களுக்கு அரசு சீல்
ஒட்டுவதைப்போன்று, விவசாயக் கிடங்குகளிலிருந்து விற்கபடும்
பூச்சி மருந்து பாட்டில்களுக்கும் அரசு சீலை ஒட்டுவதற்கு ஆவன
செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேற்படி கிடங்குகள் மூலம் குறைந்த விலையில் வழங்கப்
படுகின்ற, மானிய விலையில் வழங்கப்படுகின்ற, விதைகள் சிறு
விவசாயிகளுக்கு முறைப்படி வழங்காமல் 50 மூட்டை 1,00
மூட்டை என்று பெரிய விவசாயிகளுக்கு விற்கின்ற நிலைமை
இருக்கிறது. இதைக் கண்காணித்து, இப்படிப்பட்ட தவறுகள்
நடக்காமல் பாதுகாக்கப்பட வேண்டும்.

வேளாண்மைக்
விதைகள், பூச்சிக் கொல்லி மருந்துகள், வேளாண்மைக்
கருவிகள் ஆகியவைகளைக் குறைந்த விலைக்கு சிறு விவசாயி
களுக்கு வழங்குவதற்காக 402 இலட்சம் ரூபாய்களை இந்த
நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கியிருப்பதாக நான் அறிகிறேன்.
அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்து, மொத்தத்தில்
இந்தக் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையை வரவேற்று
நான் அமர்கிறேன்.

* திரு, கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இந்தக் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையின்
மீது நான் சார்ந்திருக்கின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின்
சார்பில் சில கருத்துக்களைக் கூற விழைகிறேன். கூட்டுறவுத்
துறையைப் பொறுத்தவரையில் பல்வேறு முறைகளில் கூட்டுறவுத்
துறை பணியாற்றினாலும்கூட, குறிப்பாக கிராமப்புற ஏழைகள்

தனியாரிடம் தங்கள் தேவைகளுக்குக் கடன்பட்டு அவதிப்படாமல் இருக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு அது செயலாற்ற வேண்டிய ஒரு அமைப்பாகத் துவக்கப்பட்டு, செயலாற்றும் இப்படிப்பட்ட நேரத்தில் எனக்கு முன் பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போன்று, மராட்டியத்திற்கு அடுத்த நிலையில், இந்திய நாட்டில் தமிழகம் எப்படிச் சிறப்பாக விவசாயிகள் அதிலே பங்கு பெற்றிக்கிறார்கள் என்பதற்கு உதாரணமாக, நம்முடைய அமைச்சரவர்களால் கூட்டுறவுத் துறையின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கைக் குறிப்பிலே, ஏறத்தாழ 45.48 லட்சம் பேர்கள் உறுப்பினர்களாக கூட்டுறவு அமைப்பிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. அவர்களில் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகள்—ஐந்து ஏக்கர்களுக்கும் உட்பட்டவர்கள் 34.90 இலட்சம் பேர் இருக்கிறார்கள்.

ஆளுங்கட்சி உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, எதிர்க்கட்சிகளைச் சார்ந்தவர்கள் காழ்ப்புணர்ச்சியோடு அல்லது கெட்ட நோக்கத்தோடு இந்தப் பிரச்னையை அணுகுவதாக அவர்கள் குறிப்பிட்டார்கள், தயவு செய்து அப்படி நாங்கள் பார்க்கவில்லை என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அப்படிக் கருதவில்லை. அப்படிக் காழ்ப்புணர்ச்சியோடு குற்றச்சாட்டுக்களைச் சொல்வதாக ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும், அமைச்சர்களும், அரசும் எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த 45.48 இலட்சம் பேர்களில் 34·90 இலட்சம் சிறு விவசாயிகள் போக, 10·58 இலட்சம் பேர்கள்—ஐந்து ஏக்கர்களுக்கு மேற்பட்டவர்கள்—உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இ லே உள்ள விதிமுறைகள் எப்படி இருக்கின்றன என்றால் அந்த விவசாயிகளுக்கு அலைகள் உதவி செய்வதாக இருப்பதற்குப் பதிலாக அவர்களுக்கு எப்படிப் பல்வேறு முறைகளில் சிரமங்களை உண்டாக்குவதாகக் கூட்டுறவுச் சட்டத்தினுடைய அமைப்புகளும் விதிமுறைகளும் இருக்கின்றன என்பதற்கு உதாரணமாக ஒன்றே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

பயிர்க் கடனைப் பொறுத்தவரையில், ஒரு விவசாயி இரண்டாயிரம் ரூபாய் பெற்றால், பயிர் முடிந்து திரும்பச் செலுத்த வேண்டுமென்று தவணை விதிக்கப்பட்டிருக்கிறது. 6 மாதம், 9 மாதம் என்று அந்தத் தவணை முடிந்து இரண்டாயிரம் ரூபாயத் திரும்பச் செலுத்தாத நிலைமை ஏற்படுகின்ற போது தவணை கடந்த கடனாக அது மாறுகிறது. ஆறு மாதங்களில் அது தவணை கடந்த கடனாக மாறியதற்குப் பிறகு அதற்கு வட்டி, அபராத வட்டி என்று சேர்த்து விதிக்கப்படுகிறது. தொடர்ந்து அந்த விவசாயி திருப்பிச் செலுத்தும்





பொழுது அதுவரையிலே ஆகியிருக்கும் அபராத வட்டி வரவு வைக்கப்படுகிறது. வட்டி வரவு வைக்கப்படுகிறது. பிறகுதான் அசல் வரவு வைக்கப்படுகிறது. இப்படி இரண்டாயிரம் ரூபாயில் ஒரு ரூபாய் பாக்கி வைத்திருந்தால் கூட தவணை கடந்த கடனாகக் கருதப்பட்டு அபராதவட்டி விதிக்கப்படுகிறது.

அப்படிப்பட்ட விதிமுறைகள் விவசாயிகளுக்கு விரோதமாக இருக்கின்றன. ஆனால் கூட்டுறவு அமைப்புகளுக்கு அப்படி இல்லை. கூட்டுறவு அமைப்புகள் மத்திய ரிசர்வ் வங்கிக்கு 40 சதவீதத்தைசெலுத்திவிட்டால் அது தவணை கடந்த சங்கமாகக் கருதப்படாமல் பார்க்கப்படுகிறது. ஆனால் தனிப்பட்டவர்கள் தாங்கள் பெற்றிருக்கும் கடனில் ஒரு ரூபாயகூட பாக்கியில்லாமல் செலுத்தாவிட்டால் தண்ட வட்டி கட்ட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இந்த விதிமுறைகள் விவசாயிகளுக்கு விரோதமாகவும், பாதகமாகவும் அமைந்திருக்கின்றன.

அடுத்தபடியாக இந்த நிலவள வங்கிகளைப் பொறுத்தவரையில், கடன் கொடுக்கின்றபொழுது எத்தனை ஆண்டுகளிலே அவர்கள் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று தவணை விதித்து 10 ஆண்டு தவணை, 15 ஆண்டு தவணை என்ற முறையில் கட்டும்பொழுது வட்டியும் சேர்த்து தீர்மானிக்கப்பட்டு, வட்டியும் அசலோடு சேர்க்கப்படுகின்றது.

ஒரு ஆண்டுக்கு ரூ. 1,000 அல்லது ரூ. 1,500 கட்ட வேண்டுமென்றால், வட்டியும் சேர்த்து அதோடு வட்டிக்கும் அசலுக்கும் தண்டத் தீர்வை விதிக்கப்படுகிறது. அதற்குப் பிறகு 10, 15 ஆண்டுகளிலே கட்ட வேண்டுமென்று தவணை தீர்மானிக்கப்படுகிறது. இது கூட்டுறவுத் துறையிலே ஏற்றுக்கொண்டிருக்கிற ஒரு கொள்கை. அவர்கள் ஓரே நேரத்திலே கட் முடியாது என்ற காரணத்தாலே, 10 ஆண்டுகள் தவணைகள் கொடுக்கப்படுகின்றன. அவர்களுடைய வருமானம், அவர்களுடைய வாழ்க்கைத் தரம், அவர்கள் எப்படிக் கடனைத் திருப்பிச் செலுத்துவார்கள் என்று திருப்பி தரும் சக்தி இவையெல்லாம் சேர்த்து தீர்மானிக்கப்படுகிறது. அதோடு வட்டியும் அசலோடு சேர்த்தே தீர்மானிக்கப்பட்டு விடுகிறது. ஆனால், அதை அவர்கள் கட்ட முடியாத நிலைமை ஏற்படும்போது, இப்பொழுது அந்தக் கூட்டுறவுக் கடன் 10 ஆண்டுகளுக்கு அவர்களுக்கு என்று இருக்கும்போது, இதுவரையிலே ஏறத்தாழ நம்முடைய தமிழகத்தில் 1972 ஆம் ஆண்டிலிருந்து 1985 ஆம் ஆண்டு வரையிலே 13 ஆண்டுக் காலம் தேங்கியிருக்கக்கூடிய கூட்டுறவுக் கடன்கள், பாக்கிகள் சேர்ந்திருக்கின்றன. அந்த 13 ஆண்டுக் காலத்திலே வறட்சி ஏற்பட்டது. வெள்ளம் ஏற்பட்டது. புயல் ஏற்பட்டது. இவற்றையெல்லாம் அரசு கணக்கில் எடுத்துக்கொண்டு குறிப்பாக, நம்முடைய நாட்டில் அவரசகால நிலை அமுலில் இருந்தபொழுது 1976 ஆம் ஆண்டு ஆளுநர் ஆட்சி இருந்த காலத்தில், மேட்டூர்

அணையிலே இருந்து போதிய தண்ணீர் விடப்படாமல், தஞ்சை மாவட்டத்திலே கல்லணை பகுதி முழுவதும் தரிசாகக்கிடந்தது. அது இந்த அரசுக்கும் தெரியும். கூட்டுறவுத் துறைக்கும் தெரியும்.

ஒரு பக்கம் இயற்கைப் பாதிப்பு, தொடர்ச்சியாகப் பல ஆண்டுகள் வறட்சி ஏற்பட்டது, வெள்ளம் ஏற்பட்டது, புயல் ஏற்பட்டது, மாறி, மாறி 13 ஆண்டுக் காலத்திலே, 6, 7 ஆண்டு கள் விவசாயிகள் இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள்.

விலையும் அவர்களை பயமுறுத்திக் கொண்டே இருக்கிறது. குறிப்பாக, அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது இந்த ஆண்டு அறுவடை நடந்து கொண்டிருந்த நேரத்திலே, விவசாயிகள் நெல்லை விற்ற விலை 60 கிலோ மூட்டைக்கு ரூ. 90லிருந்து ரூ. 95 வரை ஆகும். அந்த விவசாயிகளிடமிருந்து விற்பனை முடிந்ததற்குப் பிறகு இன்றைய தினம் அதே 60கிலோ மூட்டை ரூ. 135லிருந்து ரூ. 138வரைக்கும் விற்கப்படுகிறது. அதே போல்தான் பருத்தியைப் பொறுத்தமட்டில் எம்.சி.யூ. 7, சென்ற ஆண்டு இதே காலத்தில் ரூ. 620-க்கு விற்கப்பட்டது. இந்த ஆண்டு வெறும் ரூ. 400-க்கும் ரூ. 390-க்கும் விற்கப்படு கிறது.

கரும்புக்கு அரசு தீர்மானித்த விலையை அரசோடு சேர்த்து ஏற்றுக்கொண்டு, தனியார் சர்க்கரை ஆலை முதலாளிகள் அந்த விலையைக் கொடுக்க மறுக்கிறார்கள். 13 ஆண்டுக்காலம் இயற்கைப் பாதிப்பினாலும் விலை வீழ்ச்சியினாலும் மார்க் கெட்டை, தனித்த பெரு முதலாளிகள், ஆலை முதலாளிகள் தங்கள் கையிலே வைத்திருப்பதனால், அந்த மார்க்கெட்டை அவர்கள் தீர்மானிக்கின்ற காரணத்தினால், விவசாயிகள் தங்கள் விளை பொருளுக்கு, விலை கிடைக்காமல் அழுத்திவிட்டிருக் கிறார்கள். இப்படி ஒரு பக்கத்திலே இயற்கையின் தாக்குதல் இன்னொரு பக்கத்திலே செயற்கையின் தாக்குதல், இவை முழுவதும் சேர்ந்து அவர்கள் வாங்கக்கூடிய அந்த நெல்லை கடனை திருப்பிச் செலுத்தமுடியாத சந்தர்ப்பத்திற்குத் தள்ளப் பட்டிருக்கிறார்கள், இப்படித் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கக்கூடிய ஏறத்தாழ 45 இலட்சம் குடும்பங்கள், ஏறத்தாழ 2 கோடி மக்களைச் சேர்ந்திருக்கிற குடும்பங்கள் ஒரு பக்கம் இயற்கைச் சீற்றம், இன்னொரு பக்கம் செயற்கைத் தாக்குதல் ஆகியவற் றிற்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்களை இந்த அரசும் 3வது பக்கத்திலே தாக்கக் கூடாது. கூட்டுறவுத் துறையும் அவர்களை மூன்றாவது பக்கத்திலே தாக்கக் கூடாது. இந்த நிலைகளை எல்லாம் அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, 1981 வது ஆண்டு மாண்புமிகு முனு ஆதி அவர்கள் தலைமை யில் ஒரு குழுவை நியமித்தது. அந்தக் குழுவும் 4 ஆண்டுக் காலம் பரிசீலனை செய்து அரசுக்குப் பரிந்துரை வழங்கியிருக்கிறார்கள்.



அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கின்றது என்று இந்த அவையிலே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தப் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டால் ஏறத்தாழ ரூ. 400 கோடிக் குப் பொறுப்பேற்க வேண்டிய நிலைமை வரும் என்று தெரிவித் தார்கள். எனக்குத் தெரிந்தவரையில் அரசாங்கமே கூட்டுறவுத் துறையிலே ஒரு கையெழுத்துப் பிரதி வெளியிட்டிருக்கிறது. 30—6—1984முடிய நிலுவையில் இருக்கக்கூடிய மொத்தக் கடன் கூட்டுறவுத் துறையிலும், கூட்டுறவுச் சங்கங்களிலும், நிலவளவங்கி களிலும், அசலாகவும், வட்டியாகவும், அபராத வட்டியாகவும் நிலுவையிலே தங்கியிருக்கக் கூடிய கடன் ரூ. 491.84 கோடி என்று அந்தக் கையேட்டுப் பிரதியிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11—20)

இதிலே அசல் 401·21 கோடி ரூபாய் என்றும் மீதி வட்டி, அபராத வட்டி 90.63 கோடி ரூபாய் என்றும் கையேடு புத்த கம் கூறுகிறது. ஆனால் அந்தப் பரிந்துரையில் கூறப்பட்டிருப் பது, அரசாங்கம் வட்டி, அபராத வட்டியாக 90.63 கோடி ரூபாயை தள்ளுபடி செய்து, 400 கோடி ரூபாய் அசலை 5 ஆண்டு தவணை கொடுத்து வசூல் செய்தால் சிக்கல் இல்லாமல், சிரமம் இல்லாமல், விவசாயிகளுக்குத் தொல்லை இல்லாமல் கூட்டுறவுத் துறையிலே ஏற்பட்டிருக்கிற தேக்கத்தைப் போக்க தமிழ்நாட்டில் நல்லதொரு நிலைமை உருவாகும் என்பதுதான். அனைத்து சங்கங் களும், விவசாயிகளும் ஆட்சியிடமும், அமைச்சரிடமும், கூட்டு றவுத் துறையிடமும் கேட்டிருக்கக்கூடிய கோரிக்கை இதுவாகும்.

அதைப்போன்று இதுவரையில் அரசு 200 கோடி ரூபாய்க்கு மேல் விவசாயிகளுக்கு நிவாரணம் அளித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் பல்வேறு இடங்களிலே சொல்லியிருக்கிறார்கள். பல் வேறு சந்தர்ப்பங்களில் அமைச்சர் பேசியதாக இப்படி செய்தி கள் வருகின்றன. ஆனால் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் 17வது பாராவில் என்ன கூறப்பட்டிருக்கிறது என்றால் சிறு விவ சாயிகளுக்கு கூட்டுறவு பயிர்க் கடனை தள்ளுபடி செய்தது வட்டியும் அசலும் சேர்த்து 99 கோடி ரூபாய் என்று இருக்கிறது. வட்டியில் தள்ளுபடி 88 இலட்சம் ரூபாய். ஆக மொத்தம் 99.88 கோடி ரூபாய் நிவாரணம் அளிக்கப்பட்டிருக்கிறது என்று கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அரசு தரப்பிலே 200 கோடி ரூபாய் தள்ளுபடி செய்திருக்கிறோம் என்று அமைச் சர்கள் கூறுகிறார்கள். இது இந்த அளவுக்கு முரண்பாடாக இருக்கிறது. இப்போது இந்த வகையில் ஏறத்தாழ 100 கோடி ரூபாய் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். நீங்கள் சொல்கிறபடி இந்த 100கோடி ரூபாய் போக இன்னும் ஒரு 100 கோடி ரூபாய் தள்ளுபடி செய்து கொடுங்கள். குறிப்பாக இந்த 90 கோடி ரூபாய் வட்டி, அபராத வட்டியை தள்ளுபடி செய்து

கொடுத்தால் நீங்கள் சொல்லுகிற 200 கோடி ருபாய் தள்ளுபடி வந்துவிடும்: விவசாயிகளுக்குப் பிரச்சனை தீரும். நாங்கள் புதிதாக ஒன்றும் கேட்கவில்லை என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

ஜப்தியே இருக்காது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதன் பிறகு வசதி படைத்தவர்களிடம்தான் வசூல் செய்கிறோம் என்று சொன்னார்கள். ஏழை எளிய மக்களிடம் வசூல் செய்யவில்லை என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ, இது அரசாங்கத்தின் கொள்கையா அல்லது அதிகாரிகளின் நடவடிக்கையா என்பதை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வசூல் என்பது ஒரு படையெடுப்பைப்போல், கிராமப்புறங்களில் நடைபெறுகிறது. 10 கார், 200 அல்லது 300 ஆட்கள், போலீஸ் ஜவான், கூட்டுறவுத் துறை அதிகாரிகள், வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள் இத்தனை பேர்களும் சேர்ந்து கிராமங்களுக்கு படையெடுப்பதைப் போல் செல்கிறார்கள். அதனால் ஏற்படுகிற செலவு முழுவதையும் கடன் பெற்ற விவசாயிகள் தலையில் சுமத்துகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால் நாகை வட்டத்தில் மேலாசகாரில் இராமச்சந்திரன் என்ற விவசாயி. அவர் ஒன்றரை ஏக்கர் நிலத்திற்குச் சொந்தக்காரரர். அவர் வாங்கியிருக்கிற கடனில் பாக்கி 1,200 ருபாய். 24— 5— 1985 அன்று அவர் வீட்டுக்கு ஜப்தி செய்ய சென்றார்கள். அவருடைய வீட்டில் அவர் இல்லை. பக்கத்து வீட்டிலே அவருடைய பெண் தனியாக குடியிருக்கிறார். அந்தப் பெண்ணின் பெயர் இராமத்திலகம். அந்தப் பெண்ணிடம்போய் உன் தகப்பனார் இருக்கிறாரா என்று கேட்டிருக்கிறார்கள். அந்தப் பெண்மணி, இல்லை என்று சொல்லியிருக்கிறார். என்னுடைய தகப்பனார் வீட்டிலே இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார். அந்தப் பெண் இப்படிக் கூறும்போதே அதிகாரிகள் திமு, திமு, என்று உள்ளே போய் தண்ணீர்க்குடத்தை காலால் தட்டியிருக்கிறார்கள். அந்தப் பெண் குனிந்து குடத்தை எடுத்திருக்கிறார். குனிந்து குடத்தை எடுக்கும்போது கழுத்திலே கிடந்த தாலி தெரிந்திருக்கிறது. அந்தத் தாலியை விற்று, கடனைக் கட்டு என்று கேட்டு, தாலியைப் பறிக்க முயற்சி செய்திருக்கிறார்கள். மகள் வீட்டிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிற சம்பவத்தைக் கேள்விபட்டு இராமச்சந்திரன் ஓடி வந்திருக்கிறார். அதிகாரிகள் நடவடிக்கையைப் பார்த்து அவர்களைப் பிடித்துத் தள்ளியிருக்கிறார். அந்தச் சூழ்நிலையில் அவரைக்கைது செய்து, தாக்கி, இராமச்சந்திரன் மீது வழக்குப்போட்டு, பின்னால் அவர் நிபந்தனை ஜாமீனில் வெளியே வந்து இன்றைய தினம் திருத்துறைப்பூண்டியில் இருந்துகொண்டிருக்கிறார். இப்படி வசூல் நடந்து கொண்டிருக்கிறது.



அதைப்போன்று சேலம் மாவட்டத்தில் பூப்போடிப்புதூர் என்ற கிராமத்தில் 30-4-1985 அன்று கடனே வாங்காத பெருமாள் உடையார் வீட்டில் புகுந்து 4 மூட்டை நெல், 7 மூட்டை மிளகாய் முதலியவற்றை ஜப்தி செய்திருக்கிறார்கள். அது பற்றி அவர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எழுதியிருக்கிறார். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் கடிதம் எழுதியிருக்கிறார். இதுவரை அந்தப் பொருட்கள் திருப்பிக் கொடுக்கப்படவில்லை. கடனே வாங்காத பெருமாள் உடையார் வீட்டில் இந்த அக்கிரமம் நடந்திருக்கிறது.

அதைப்போன்று செங்கை மாவட்டம் வெளிப்பாக்கம் கிராமத்தில் பராங்குசம் என்ற விவசாயி வாங்கிய கடன் 2,150 ரூபாய். 6—5—1985 அன்று அவருடைய வீட்டில் ஜப்தி செய்யப்பட்டு இருக்கின்றது. அந்த வீட்டிலே இருந்த அண்டா கைப்பிடியுள்ளது ஒன்று. பித்தளை தேக்ஷா ஒன்று, டைம்பீஸ் ஓடாதது ஒன்று, மர்பி ட்ரான்ஸிஸ்டர் ஒன்று (பழையது), பித்தளை தவலை ஒன்று, பித்தளை தவலை சிறியது ஒன்று, நெல்மூட்டை 10 ஆகியவற்றை ஜப்தி செய்து கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஆத்தூர் கிராமத்தில் 14—5—1985 அன்று ரூ. 1,993.50 பசாவிற்காக திரு. முருகேசன் என்பவரது வீட்டிலே ஜப்தி செய்யப்பட்டிருக்கின்றது. இரும்பு பைப்பு 10 அடி நீளம் உள்ளது ஒன்று, இரும்பு நாற்காலி ஒன்று, மிளகாய் சிப்பம் 2, இரும்பு பழைய வண்டி அச்சு ஒன்று, போனிச்சட்டி சிறியது ஒன்று, ஆகியவை ஜப்தி செய்யப்பட்டிருக்கின்றன.

அதேபோல் தொழுப்பேடு கிராமத்தில் மாணிக்க ரெட்டி என்பவர் வீட்டில் 1,2(5 ரூபாய் கடனுக்காக சைக்கிள் பழையது ஒன்று, சைக்கிள் பம்பு ஒன்று, ஓஸ் பைப்பு பழையது ஒன்று, பழைய பித்தளைத் தவலை மூன்று, டிரான்ஸிஸ்டர் ரேடியோ ஒன்று, பித்தளை அண்டா ஒன்று, பித்தளை சிறிய குண்டான் ஒன்று ஆகிய பொருட்களை ஜப்தி செய்திருக்கிறார்கள். இந்தக் கடன்களை எல்லாம் பார்க்கும்போது 2,150ரூபாய், 1,993ரூபாய் 1,205 ரூபாய் என்றுதான் இருக்கிறது, இந்தக் கடன்களை எல்லாம் டிராக்டர் வாங்குவதற்காக வாங்கப்பட்ட கடன்கள் என்றும், பெரும் நிலச்சுவான்தார்கள் மற்றும் சினிமா தியேட்டர் சொந்தக்காரரர்கள் வாங்கிய கடன் என்றும் யாரும் சொல்ல மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

அடுத்து சேலம் பெத்தநாயக்கன்பாளையத்தில் ஆர். நாராயணன் என்பவருக்கு இரண்டு ஏக்கர் நிலம்தான் சொந்தம். அவர் வீட்டிலே இல்லாத நேரத்திலே 25—5—85 அன்று அவருடைய மனைவியின் காதிலே கிடந்த தோட்டைக் கழற்றித் தருமாறு நிர்பந்தப்படுத்தி ஜப்தி செய்திருக்கிறார்கள்,

செங்கற்பட்டு மாவட்டம் வீட்டலாபுரத்திலே திரு. வி, சிவானந்தம் என்பவருடைய வீட்டிலே 25—5—85 அன்று ஜப்தி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள், அவ்வாறு ஜப்தி செய்து எடுக்கப்பட்ட பொருட்களுக்கு எந்தவிதமான ரசீதும் கொடுக்காமல் எடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள. எனவே இவ்வாறு கடன் பெற்றவர்கள் எல்லாம், இவ்வாறு ஜப்தி செய்யப்பட்டவர்கள் எல்லாம் டிராக்டர் வாங்குவதற்காகவோ, சினிமா தியேட்டர் கட்டுவதற்காகவோ கடன் வாங்கியவர்கள் அல்ல. அவ்வாறு நிச்சயமாகக் கூற முடியாது என்று நான் நம்புகிறேன்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த அரசே ஏற்றுக்கொண்டு குறுகிய காலக் கடனை மத்திய காலக் கடனாகவும், நீண்ட காலக் கடனாகவும் மாற்றிக் கொடுத்திருக்கின்றது. அந்த வகையில் இந்தக் கடன்கள் எல்லாம் மிக நீண்டகாலமாக இருந்து வருகின்ற கடன்களாகும். அவற்றை எல்லாம் ஒரே நேரத்தில் கொடுக்க வேண்டும் என்றால் அவர்களால் கொடுக்க முடியாது என்பதால்தான் 6,000 ரூபாய் கடன் என்றால் 10 ஆண்டுத் தவணை என்று எல்லாம் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட கூட்டுறவுத் துறையின் கொள்கைகளுக்கேற்ப விவசாயிகளைப் பாதுகாக்கின்ற வகையிலேயும் கூட்டுறவுத் துறையினை பாதுகாக்கின்ற வகையிலேயும் விவசாய உயர்மட்டகுழு அதாவது மாண்புமிகு திரு. முனு ஆதி அவர்களைத் தலைவராகக் கொண்டிருக்கின்ற குழு அளித்திருக்கின்ற சிபாரிசின் அடிப்படையிலும் பரிசீலித்து சுலபமான முறையில் இந்தக் கடன்களைச் செலுத்தக்கூடிய அளவுக்கு உரிய முயற்சிகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அரிசனங்களுக்கு 50 ரூபாய், 100 ரூபாய் என்று 20 ஆண்டுகளுக்கு முன்பு கடன் கொடுக்கப்பட்டது. அதைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலைமையில் இன்றைக்கு 50 ரூபாய் என்பதற்கு 200 ரூபாய் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இப்படித் திருப்பிச் செலுத்த முடியாத நிலைமையில் தவணை கடந்தவர்களாக இருக்கிறார்கள். இப்படி தமிழகம் முழுவதும் பார்த்தால் கிட்டத்தட்ட ஒன்றரை இலட்சம் பேர்களுக்கு ஒரு கோடி ரூபாய் கொடுக்கப்பட்டு பாக்கி வர வேண்டி இருக்கின்றது. இது கூட்டுறவுக் கடன் என்பதன் காரணத்தால் அந்தத் துறையின் மூலம் பெறக்கூடிய கறவை மாட்டுக் கடன், ஆட்டுக் கடன் மற்றும் ஏழை எளிய மக்கள் இதர சில வசதிகளுக்காக வாங்கக் கூடிய கடன்களைப்பெற முடியாமல் இருக்கிறார்கள். எனவே 1983ஆம் ஆண்டிலேயே இந்தக் கடன் முழுவதையும் தள்ளுபடி செய்யவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சரிடம் அன்றைக்கே கோரிக்கை வைத்திருக்கிறோம். அந்த வகையில் பரிசீலித்து அந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து உர விற்பனையைப் பொறுத்தவரையில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவுத் துறையின் மூலம் கொடுக்கப்படுகின்ற உரத்தைப் பொறுத்தவரையில் தனியார் கடைகளிலே கொடுக்கப்படுகின்ற விலையை விட அதிகமாக இருக்கின்றது. உதாரணமாகச் சொல்லவேண்டும் என்றால் காம்ப்ளக்ஸ் உரத்தைப் பொறுத்தவரையில் 50 கிலோ கொண்ட மூட்டையின் விலை தனியார் கடைகளில் 120 ரூபாய். கூட்டுறவுத்துறை மூலம் வழங்கப்படுவது 135 ரூபாய். இவ்வாறு 50 கிலோ கொண்ட மூட்டையில் 15 ரூபாய் வித்தியாசம் இருக்கின்றது. எனவே இது விவசாயிகளுக்கு உதவி செய்வதாக இல்லை. கூட்டுறவுத் துறை விவசாயிகளுக்கு உதவுவதாக இருக்க வேண்டும். உபத்திரவம் கொடுக்கக்கூடியதாக இருக்கக்கூடாது. அந்த முறையில் தனியார் கடைகளில் உள்ள விலையைவிட கூட்டுறவுத் துறையில் விலை குறைவாகக் கிடைக்கின்ற வகையில் ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்திலே, நாகை நகரத்திலே ஒரு கூட்டுறவு உர உற்பத்தி ஆலையை ஏற்படுத்தித் தருவதற்கும் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

(முற்பகல் 11–30)

**டாக்டர் கே.பி. இராமலிங்கம் ;** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த மாமன்றத்திலே கொண்டு வரப்பட்டிருக்கிற கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையை வரவேற்று, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

நல்ல பல காரியங்களை இந்தத் துறை மூலமாகத்தான் நாட்டு மக்களுக்கு, அதுவும் குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு செயலாற்ற முடியும் என்பதைத், தெள்ளத் தெளிவாகப் புரிந்து கொண்டு, 1977 ஆம் ஆண்டு முதல் இன்று வரை தமிழகத்தினுடையே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர் அவர்கள் நல்ல பல காரியங்களை ஆற்றி வருகிறார்கள்.

விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவிடும் வகையிலும், இடைத்தரகர்களை ஒழித்து விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும் என்ற வகையிலும், விற்பனைச் சங்கங்களையும், அதேபோல விவசாய சேவா சங்கங்கள் மூலமாகவும், கிராமப்புறங்களில் வாழக்கூடிய விவசாயிகள் பல்வேறு நலன்கள் பெற வழிவகை செய்யும் வகையில்தான் இந்தத் துறை செயல்பட வேண்டும் என்று நல்லெண்ணம் கொண்டு அதற்காக 11 கோடியே 77 லட்சத்து 98 ஆயிரத்திற்கு மேற்படாத தொகை இந்தத் துறைக்கு வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்.

[டாக்டர் கே. பி. இராமலிங்கம்] [1985 ஜுன் 28

விவசாயிகளுக்கு நிவாரணப் பணிகளைக் குறித்து இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அரசு வாங்கிய கடனைத் திருப்பிக் கேட்கிறார்கள் என்று குறிப்பிட்டுருக்கிறார்கள். விவசாயிகள் கூட்டுறவுச் சங்கத்தில் வாங்கிய கடனாக இருந்தாலும், நிலவள வங்கி வழங்கிய கடனாக இருந்தாலும் அந்தக் கடன்களை திருப்பிக் கொடுக்க வேண்டும், திருப்பிக் கொடுக்கவேண்டும் என்றே சொல்கிறார்களே, தள்ளுபடி செய்யக்கூடாதா என்று கேட்டார்கள். பேசினார்களே தவிர, இந்த ஆட்சி, புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர் அவர்களுடைய ஆட்சி செய்திருக்கிற நல்ல காரியங்களைக் கோடிட்டுக் காட்டிட விருப்பம் இல்லாமல் விட்டு விட்டுச் சென்று விட்டார்கள்.

விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தினால்தான் இந்தியத் துணை கண்டத்திலேயே, எந்த மாநிலமும் செய்திராத அளவுக்கு, அரிய பணிகளை ஆற்றியிருக்கிறார்கள். இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழகம் பெருமைப்படுகிற வகையில், 1976–77லேயிருந்து. கடந்த ஆண்டு 83–84 வரை 94 கோடிக்கு மேலாக குறிகிய காலக் கடன்களையெல்லாம் நீண்டக்காலக் கடன்களாக மாற்றி அமைத்து அதன் வாயிலாக மட்டும் 94 கோடிக்கான இழப்பை இந்த அரசு ஏற்றிருக்கிறது. அதுமட்டும் அல்லாமல் வட்டியை தள்ளுபடி செய்ததன் மூலமாக மட்டும் ஏறத்தாழ 2½ கோடியை இந்த அரசு இழந்திருக்கிறது. அத்தோடு மட்டுமல்லாமல் 1981–82 முதல் குறித்த காலத்தில் தவணை தவறாமல் கடனை திருப்பிச் செலுத்துகிற விவசாயிகளுக்கு 2 சதவித வட்டி தரும் சலுகையையும் இந்த அரசு செய்திருக்கிறது. அதை இதற்கு முன்னாலே இருந்த எந்த அரசும் செய்யவில்லை. இன்றைக்கு வாய்ச் சொல்லில் வீரராக பேசித் தீர்க்கிற அந்தக் கட்சி தாம் அரசு ஆண்ட காலத்திலே இவைகளையெல்லாம் செய்யாமல் காலதாமதப்படுத்தி வந்து, கடைசியில் செய்ய மனமும் இல்லாமல் அப்படியே விட்டு விட்டார்கள். அவர்கள் செய்யாவிட்டாலும், செய்திருக்கிற நன்மைகளை பாராட்டக்கூடிய நல்ல எண்ணம் இல்லாமல், எப்போதும்போல் அவர்கள் சொல்லிக்கொண்டே வருகிறார்கள்.

ஆனால் எவ்வளவுதான் சலுகை செய்தாலும், விவசாயிகள் பெற்ற கடன்களை திருப்பிச் செலுத்துவதன் மூலம்தான் மேற்கொண்டு நன்மை அடைய முடியும். கடனை வைத்துக்கொண்டு மேற்கொண்டு எப்படி நன்மை அடைய முடியும்.

இந்தக் கடன்களைப் பற்றிச் சொல்கிறபோது, இலக்கியத்திலே ராவணன் தன்னுடைய படையை இழந்து, தோல்வியுற்று நிற்கையிலே அவனைப் பார்த்து, ராமன், 'இன்றுபோய் நாளை படையோடு வா' என்று சொன்னபோது, அவனுக்கு ஏற்பட்ட அவமான உணர்வு பற்றி சொல்லுவார்கள். 'கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்று அதை அழகாகச் சொல்லியிருக்கிறாகள். அப்படி கடன் படுவது என்பது தன்னுடைய படைகளையெல்லாம் இழந்து, நாடிழந்து, அரசிழந்து, மிகவும் துன்புற்ற நிலைக்கு சமமானது என்று அந்த வகையிலே அந்தக் காலத்தில் சொன்னாலும், இப்போதெல்லாம் கடன் படுவது என்பது அவ்வளவு பெரிய முக்கியமான ஒன்றாக கருதப்படாததால், சாதாரணமாக ஒரு அலட்சிய உணர்வு மக்கள் மத்தியிலே எழுந்திருக்கிறது. அதிலும் அரசு கொடுத்த பணம் என்றால், அது தங்களுக்கே சொந்தமானது போல் எண்ணக்கூடிய நிலைமையில், அதைச் சற்று வலியுறுத்தித்தான் பெறவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இப்படி பல சலுகைகளையும், தள்ளுபடியையும் செய்த அரசே வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற உணர்வையும் ஊட்ட வேண்டிய கட்டாய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் தமிழக அரசு மூலமாக, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக, கூட்டுறவு சங்கங்கள் மூலமாக. மத்திய வங்கிகள் மூலமாக, பலச் சங்கங்கள் எல்லாம், கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய அத்தனை விவசாயிகளுக்கும் இந்தக் கடனை ரத்து செய்து தரும்படிக் கேட்டபோது, அதற்கு ஆதரவாக, அப்போது அரசியலை நடத்துவதற்கு வேறு வழியின்றி இருந்த கட்சிகள் எல்லாப் கூட அந்தச் சலுகையை அளிக்க வேண்டும் என்று கேட்டார்கள். அல்லது தங்களுக்கு அதிகமாக விவசாயிகளிடமிருந்து வரவு வராதா? ஆதரவு வராதா என்ற எண்ணத்தோடு தேசிய கட்சிகளும் கேட்டன.



1985 ஜுன் 28] (டாக்டர் கே. பி. இராமலிங்கம்)

ஆனால் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் இதுபோன்ற கடனை வழங்கியிருக்கின்றன. கிராமப்புறக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மட்டும் மாநில அரசு விவசாயிகளுக்கு கடன் வழங்கவில்லை. தேசியமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவும் விவசாயிகள் கடன் பெற்றிருக்கிறார்கள், நிலவள வங்கி மூலமாக ஒருவர் ட்ராக்டர் வாங்குகிறார் என்றாலும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக ட்ராக்டர் வாங்குகிறார் என்றாலும் இரண்டுமே விவசாயத்திற்குப் பயன்படக் கூடிய நிகழ்வுதான். ஆனால் மாநில அரசுக்கு உள்ளிட்டப் பகுதியைப் பகுதியாக இருக்கிற கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கியிருக்கிற கடனைமட்டும் தள்ளுபடி செய்யவேண்டுமென்று இந்த மன்றத்திலும், வெளியிலும் பல்வேறு நேரத்தில் கூக்குரல்கள், கோரிக்கைகள் வைக்கிறார்கள்.

ஆனால் இதுகாறும் யாரும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் வழங்கியிருக்கிற கடனைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று மத்திய அரசுக்கு கோரிக்கை வைத்ததாகத் தெரியவில்லை. எனக்குப் பின்னாலே பேசவிருக்கிற மாண்புமிகு தேசிய கட்சியை சேர்ந்த உறுப்பினர் சித்தன் அவர்களாவது இந்த மன்றத்தின் வாயிலாக விவசாயிகளுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் வழங்கியிருக்கிற கடனைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று

வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்குக்
காரணம் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு இதுபோன்ற
நிகழ்வுகள் இல்லையா என்றால் இருக்கிறது. பல ஆலை அதிபர்
கள், பெரும் பணக்காரர்கள், தொழில் துவங்குபவர்கள்
எல்லாம் பல ஆண்டுகளாக, 20, 30 ஆண்டுகளாக தேசிய
மயமாக்கப்பட்ட வங்கிகளில் வாங்கிய கடனை திரும்பச்
செலுத்தவில்லையென்று அரசாங்கத்திற்கு தகவல் தெரிவித்து
மத்திய அரசு அவற்றை ரைட்-ஆப் செய்திருக்கிற நிலைமை
இருக்கிறது. அதுகுறித்த பட்டியல் வைத்திருக்கிறேன். தேவை
யென்றால் தருகிறேன். அது எல்லோரும் அறிந்த ஒன்றுதான்.
அப்படி கோடிக்கணக்கான ரூபாயை தள்ளுபடி செய்கிற மத்திய
அரசு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் வழங்கிய கடனையும்
தள்ளுபடி செய்யவேண்டும்.

அதே நேரத்தில் மாநில அரசு மூலமாக, கூட்டுறவுச் சங்கங்
கள் மூலமாக விவசாயிகளுக்கு வழங்கியிருக்கிற கடனை தள்ளுபடி
செய்யவேண்டுமென்று சொன்னால், ஏற்கனவே இருநூறு கோடி
ரூபாய் அளவிற்கு கடன் தள்ளுபடி செய்திருக்கிற இந்த அரசுக்கு
மத்திய அரசு மானியம் வழங்க வேண்டும். கிராம ராஜ்யத்தை
உருவாக்க வேண்டுமென்று மகாத்மா காந்தி அவர்கள் எப்படி
சுதந்திரம் வாங்குகிறபோது சொன்னார்களோ, அதைப்போல
காந்தி அவர்களின் கொள்கையில், அண்ணா அவர்களின் வழியில்
புரட்சித் தலைவர் ஆட்சி செய்கிற இந்த அரசுக்கு, இந்த அரசு
வழங்கியிருக்கிற சலுகைகள் நியாயமானவை என்பதை புரிந்து
கொண்டு மத்திய அரசு 200 கோடி ரூபாய் மானியம் வழங்க
வேண்டும்.

அப்படி மானியமாக வழங்கினால் இன்னும் பல தள்ளுபடி
களை நாம் மக்களுக்குச் செய்யலாம் என்பதை இந்த
மன்றத்தின் மூலம் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்ய வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல கூட்டுறவுச் சங்கங்
கள் விவசாயிகளுக்கு கடன் வழங்கினாலும் இந்த நேரத்தில்
ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். விவசாயக் குடும்பத்தில்
பிறந்த நானும் இங்கே பேசுகிறேன். விவசாயக் குடும்பத்தில்
பிறந்தவர் இங்கே கூட்டுறவுத் துறை அமைச்சராக வந்திருக்
கிறார்கள். விவசாயிகள் குடும்பத்தில் பிறந்த மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்கள் இந்த மன்றத்தில் தலைமைப்
பொறுப்பிலே இருக்கிறார்கள். பெரும்பாலானவர்கள் விவசாயக்
குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். எனவே
அவர்கள் செய்கிற ஒரு தவறையும் நான் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன்.

பல இடங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக, நிலவள
வங்கிகள் மூலமாக குறைந்த வட்டியில் கடனைப் பெற்று,
பினான்சிங் நிறுவனங்களை இன்றைக்கு உருவாக்கிக் கொண்டி



ருக்கிறார்கள். 5, 10 பேர்கள் ஒன்றாக இணைந்து இந்த நிதி
நிறுவனங்களை உருவாக்குகிறார்கள். இப்படி சிறுசிறு பினான்சிங்
நிறுவனங்களை உருவாக்கி சிறு விவசாயிகளுக்கு அதிக வட்டிக்கு
பணம் கொடுத்து அதை வாங்குகிற சூழ்நிலை இருக்கிறது. இந்த
நேரத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களையும்
சேர்த்து ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். இந்த
மன்ற உறுப்பினர்கள் முழுவதுமாக ஒன்று சேர்ந்து எப்படி
அரசாங்கம் வழங்குகிற கடனுக்கு தள்ளுபடி கொடுக்கிறோமோ,
அதேபோல தனியார் விவசாயிகளுக்கு வழங்குகிற கடன்களுக்கும்
தள்ளுபடி கேட்க வேண்டும். விவசாயத்திற்கு வாங்கிய
கடனுக்கு விவசாயிகள் புரோ நோட்டுக்களை எழுதி கொடுத்
திருக்கிறார்கள். அந்தக் கடனையும் தள்ளுபடி செய்யவேண்டும்,
அதிலே சில சலுகைகளைச் செய்யவேண்டும். என்று அந்த
வகையில் மத்திய அரசு ஒரு புதிய சட்டத்தை இயற்ற வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மாமன்றம் இதிலிருக்கிற நியாயத்தை உணரவேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் எப்படி அரசாங்கம்
கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக கிராமப்புற விவசாயிகளுக்கு
கடனைக் கொடுத்து, கூட்டுறவு அடிப்படையிலே அவர்கள் வாழ
வேண்டும், வளர வேண்டுமென்று. இந்த நாட்டிற்கு அவர்
களுடைய தேவை புரிய வேண்டுமென்று, கூட்டுறவு அமைப்பு
களை உருவாக்குகிறபோது, அதன்மூலம் கடன்களை வழங்குகிற
போது, அந்தக் கடனைத் திருப்பிக் கொடுத்தால் தான் வேறு
பலருக்கு கடன் தரலாம் என்ற நிலை இருக்கிறது. அப்படி
இருக்கிற போது அந்தச் சங்கங்கள் நலிவுற வேண்டும். அழிந்து
போக வேண்டும், அதில் வேலை பார்க்கிற பணியாளர்களுக்கு
சம்பளம் கொடுக்காத நிலை உருவாக வேண்டுமென்று நாம்
ஒன்றாகச் சேர்ந்து பேசுகிறோமே, ஓட்டுக்காக விவசாயிகளிடம்
நல்ல பெயரை வாங்கவேண்டுமென்று அந்த எண்ணத்தோடு
பேசுகிறோமே, அந்த நிலையில் இதையும் அடிப்படையாக
வைத்துக்கொள்ள வேண்டும். இப்படி விவசாயத்திற்கு வாங்கிய
கடனுக்காக எழுதப்பட்டிருக்கிற புரோ-நோட்டுகளை செல்லாது
என்று சட்டம் கொண்டு வருவதற்கு இந்த மன்றத்திலே
இருக்கிற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து குரல்
கொடுக்க தயாரா? அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாரா
என்ற கேள்விக் கணையை நான் விடுக்கக் கடமைப்பட்டு
இருக்கிறேன்.

(முற்பகல் 11-40)

**திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ராமலிங்கம் அவர்கள்
குறிப்பிட்டதைப் போல, அது தேச உடமையாக்கப்பட்ட வங்கி
யாக இருந்தாலும் சரி, அல்லது தனியார்களுடைய கடன்களாக

இருந்தாலும் சரி, விவசாயிகள் பயிர் செய்து, பயிர்களுக்கு
பாதிப்பு ஏற்பட்டு, அந்தப் பயிர் அழிந்து, அதனால் அந்தக்
கடன்களிலேயிருந்து அவர்கள் மீள முடியாத நிலையில் இருக்கும்
போது, அவர்களுக்கு நிவாரணம் கோருகிறோம். கூட்டுறவுத்
துறை அழிந்துவிட வேண்டும் என்ற நோக்கத்தில் அல்ல.
அசலை தள்ளுபடி செய்யவேண்டும் என்று நாங்கள் கோரிக்கை
வைக்கவில்லை. வட்டி, அபராத வட்டிக்கும், ரிசர்வ் வங்கிக்கும்
சம்பந்தம் இல்லை. அபராத வட்டி முழுவதும் நம்முடைய
மாநிலத்தில் இருக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்தது
தானே தவிர, ரிசர்வ் வங்கிக்கு இதுவரையில் நாம் ஒரு சல்லிக்
காசு கூட அபராத வட்டி கொடுக்கவில்லை. எதிர்காலத்திலே
யும் கொடுக்க வேண்டிய நிலை வராது. எனவே அபராத வட்டி
என்பது இந்த மாநிலம் சம்பந்தப்பட்டது. நாம் அபராத
வட்டியை ஓரளவு தள்ளுபடி செய்யவேண்டும். அவர்கள் பயிர்
அழிந்திருக்கிறது என்று கூறுகிறார்கள். தனியார்களுடைய,
ரிசர்வ் வங்கியினுடைய கடனை எல்லாம் தள்ளுபடி செய்ய
வேண்டும் என்று ஒரு சட்டம்கூட இந்த மன்றத்தில் நிறை
வேற்றப்பட்டு, அது அமுலில் இருக்கிறது என்பதை மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் அறிந்திருப்பார்கள். எனவே எதிர்
காலத்தில் தனியார்களுடைய கடன், வங்கிக் கடன், கூட்டுறவுக்
கடன், ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு இருக்கக்கூடிய நேரத்தில்
தள்ளுபடி செய்யவேண்டும் என்று கூறுவதிலே மாண்புமிகு
உறுப்பினரோடு நாங்களும் சேர்ந்து கொள்வதற்குத் தயாராக
இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்
கிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : நன்றி. மேற்கு வங்கத்திலே
எங்களைப்போல உங்களுடைய ஆட்சி ஆண்டு கொண்டு இருப்ப
தால், நீங்கள் ஆதரவு தருகிறீர்கள். அதைப்போலவே மாண்புமிகு
உறுப்பினர் யசோதா அவர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்று
கருதுகிறேன். அவர்கள் பேசும்போது, இதை ஏற்றுக்கொள்வார்
கள் என்று கருதுகிறேன். நீங்கள் ஓரளவிற்காவது அசலைத்
திருப்பித் தரவேண்டும் என்ற உணர்வைச் சொன்னார்கள்.
அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
காரணம் இந்த விவசாயிகளுக்காக வழங்கப்பட்டு இருக்கிற
இந்தக் கடன் என்பது கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ஷேர்
கேப்பிடல் ஆங்காங்கு இருக்கிற சிறு சிறு விவசாயிகள் உருவாக்கிய
அந்தச் சங்கங்கள் மூலமாகவும் அரசும் கொஞ்சம் கொஞ்சமாக
பணம் மானியமாகத் தரப்பட்டதிலே அந்த விவசாயச்
சங்கங்கள் உருவாக்கப்பட்டு, அதிலேயிருந்து வழங்குகின்ற பணம்
தான். ஆகவே விவசாயிகள் பணம்தான். திருப்பிச் செலுத்தினால்
அவர்களுக்குப் பலன் கிடைக்கும். அதற்காக நாம் முழுவதுமாக
விவசாயிகளுக்கு உதவி செய்யக்கூடாது என்ற வாதத்திலே
இருப்பவன் அல்ல. என்னைப் பொறுத்தவரையில் கடன் வாங்கி
இருக்கிற விவசாயி மட்டும் இந்த நாட்டிலே பலன் அடையக்



கூடாது. இன்னும் கடன் பெறாதவர்கள் எத்தனையோ பேர்கள்
இருக்கிறார்கள். வளர்ச்சியை நோக்கிச் செல்ல வேண்டிய
விவசாயிகள், நலிந்து போனவர்கள், எவ்வளவோ லட்சக்
கணக்கான, கோடிக்கணக்கான பேர்கள் இன்றைக்கு நாட்டிலே
இருக்கிறார்கள். அவர்களும் பயன் பெறவேண்டும். அவர்களும்
உதவி பெற வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் நான்
பேசிக்கொண்டிருக்கிறேன் என்பதை இந்த மன்ற உறுப்பினர்
களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதைப்போலவே இன்றைக்கு காய்கறி பயிரிடுவோர்கள்
கூட்டுறவுச் சங்கம் உருவாக்கப்பட்டிருக்கிறது. வரவேற்கப்பட
வேண்டிய ஒரு முக்கிய சாதனையாக, பெரிய சங்கமாக அது
அமையும். ஊராட்சி ஒன்றியத்தின் அடிப்படையிலோ, வட்டங்
கள் அடிப்படையிலோ அந்தச் சங்கங்கள் இன்றைக்கு உருவாக்
கப்பட இருப்பது, சிறு விவசாயிகளுக்கு சிறு சிறு தோட்டங்கள்
போட்டு, காய்கறி விளைவிப்பவர்களுக்கு நியாயமான விலைகள்
கிடைப்பதற்கு அது வாய்ப்பாக அமையும். ஆனால் அந்த
ஊரிலே விளைகிற பொருள்களை அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்
வாங்கித்தான், அங்கேதான் விற்கக் கூடிய நிலைமை இன்றைக்கு
இருக்கிறது. எனவே அவைகளை ஒன்றாகச் சேர்த்து மாவட்ட
அளவிலே ஒரு பெடரேசன் உருவாக்க வேண்டும். இன்றைக்கு
பால் வளத்திலே எப்படி புதுப் புது கூட்டுறவுச் சங்கங்கள்
உருவாக்கப்பட்டு, அந்தச் சங்கங்கள் மூலமாக புரக்யூர் செய்யப்
படுகிற பால் மத்திய சங்கத்திற்குக் கொண்டுவரப்பட்டு, குளிரூட்டு
நிலையங்களில் வைக்கப்பட்டு, வேறு பல இடங்களுக்குச் செல்
கிறதோ, அதைப்போல மாவட்ட முழுவதுமாக விளைய இருக்கிற
காய்கறிகளை ஒரு மையத்திற்குக் கொண்டு வந்து அங்கேயிருந்து
வியாபாரம் செய்வதற்கு வழி வகை செய்ய வேண்டும் என்று
இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஆதி திராவிட விவசாயிகள் என்று வரும்போது.
ஓர் துர்பாக்கியமான நிலைமை இருப்பதை இந்த மன்றத்திலே
நான் சொல்லவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகி இருக்கிறேன்.
ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த விவசாயிகள் கூட்டுறவுச்
சங்கங்களில் உறுப்பினர்களாக வேண்டும் என்று மாண்புமிகு
முதல்வர் அவர்கள் திட்டமிட்டு, 1981–82-லே இருந்து
இது வரையும் 96 ஆயிரம் பேர்கள் உறுப்பினர்களாக ஆகியிருக்கி
றார்கள். அப்படி 96 ஆயிரம் பேர்கள் உறுப்பினர்களாக ஆகி
யிருந்தாலும், அதிலே 23,85 பேர்கள்தான் பலன் அடைந்து
இருக்கிறார்கள். எஞ்சியுள்ளவர்களுக்கு பலன் கிடைக்கவில்லை.
லட்சக்கணக்கான கோள்கணக்கான அளவில் இருக்கிற ஆதி
திராவிடர்கள் இன்னும் உறுப்பினர்களாக சேர்க்கப்படவில்லை.

இப்போது புதிய கூட்டுறவுச் சட்டம் வருவதாகச் சொல்கிறார்கள், 6 ஆண்டுக் காலத்திற்கு மேல் பதவியில் இருக்கக் கூடாது இந்தச் சட்டம் செலக்ட் கமிட்டிக்குப் போய், அது ஏற்றுக் கொண்டு. இந்த மன்றமும் ஏற்றுக்கொண்டு, இந்த நாட்டு மக்களும் ஏற்றுக் கொண்டு. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மூன்றாவது முறையாக இந்நாட்டின் பொறுப்புக்கு வந்த பிறகு அதற்கு உரிமை கொடுக்கப்படுறது, இந்த மன்றத்தின் அடிப்படையிலே உரிமை கொடுக்கப்படுகிறது. சட்டத்தின் அடிப்படையிலே உரிமை கொடுக்கப்படுகிறது. இருந்தாலும், 8, 9 ஆண்டுக்காலம் விவசாயக் கூட்டுறவு நாணயச் சங்கங்களிலே, கூட்டுறவு சேவா சங்கங்களிலே தலைவர் பொறுப்பிலே இன்றைக்கு நாட்டுக்குத் தேவையில்லாத புல்லுருவிகள் எல்லாம் பதவியிலே இருக்கிறார்கள்.

காரணம் 6 ஆண்டுகளுக்கு மேல் இனிமேல் நாம் பதவிக்கு வர முடியாது என்று சட்டம் இருக்கிறது என்று அவர்களுக்குத் தெரியும். ஆக இனிமேல் தேர்தல் வந்தால் அவர்கள் ஜெயிக்கப் போவது இல்லை. இனிமேல் அவர்கள் தேர்தலில் நிற்பதற்கு வாய்ப்பு இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலை இருப்பது அவர்களுக்குத் தெரியும். அப்படி நிற்பதற்கு வாய்ப்பு இல்லாமல் இருப்பவர்களை தலைமையில் பொறுப்பில் வைத்து இருப்பது இந்த கூட்டுறவு சங்கத்தினுடைய சீர் அழிவிற்கு அடிகோலியாக அமையும், இதை நான் சொல்வதற்கு காரணம் அங்கே இருக்கின்ற கிராம மக்களுக்கு இருக்கின்ற கஷ்டங்கள் சொல்ல வேண்டும் என்பதற்காக சொல்கிறேன.

இவ்வளவு நான் இங்கே வலியுறுத்திச் சொல்லக் காரணம். ஒரு சேருக்கு 100 ரூபாய் அரசு மானியமாக கொடுத்து அந்த ஆதிதிராவிடர்கள் உறுப்பினர்களாக ஆக வேண்டும் என்று வலியுறுத்திச் சொன்னாலும் தேர்தல் அடிப்படையில் தேர்தல் காலங்களில் அந்த ஆதி திராவிட மக்கள் எல்லாம் புரட்சித் தலைவரின் பின்னால் இருந்த காரணத்தால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தான் இந்த நாட்டுக்கு ஆட்சிக்கு வரவேண்டும் என்ற உணர்வோடு இருந்த காரணத்தால் அவர்கள் மதிக்கப்படவில்லை. அவர்களுக்கு சரியான சலுகைகள் அளிக்கப்படவில்லை. இந்த நிலை ஒவ்வொரு கூட்டுறவு விவசாய சங்கத்திலும் இருந்து கொண்டு இருக்கிறது. எங்கேயாவது சொல்ல முடியுமா என்றால் அனைத்து சங்கங்களிலும் அப்படித் தான் இருக்கிறது என்பதை இங்கே நான் சொல்ல வேண்டும். இதற்கு வேண்டுமானால் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நேரடியாக பல விசாரணைகள் செய்தாலும் கூட இது தெரியவரும். அப்பம அவர்கள் 6 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் இருப்பது நல்லது அல்ல. விற்பனை சங்கம், நிலவள வங்கிகள் இவைகளில் எல்லாம் அதிகாரிகள் பொறுப்பில் இருக்கிறது. அதைப் போல இவைகளையும் விட்டு ஆலோசனைக் குழுக்களைப் போடுங்கள். ஆலோசனைக் குழுக்களில் நிச்சயமாக மக்களுடைய பிரதிநிதிகள் தேவை. இதில்



பல பேருக்கு கருத்து மாற்சரியங்கள் கட்சி மாற்சரியங்கள் எல்லாம் சொல்வார்கள். அனைத்து கட்சிகளைச் சேர்ந்தவர்களை கூட அதில் போடுங்கள். அதைப்பற்றி கவலை இல்லை. ஆனால் மக்களுடைய பிரதிநிதிகள் அங்கே இருந்து ஆக வேண்டும். வெறும் அதிகாரிகளை மட்டுமே நம்பி நாம் காரியம் ஆற்ற முடியாது. அதிலும் தவறு நடக்கும்.

இன்றைக்கு அனைத்து அங்காடிகள் சரியாக செயல்படுகிறதா என்றால் செயல் படுகிறது ஆனால் அந்த அளவுக்கு மக்கள் பிரதிநிதிகள் இருந்த காலத்தில் நடந்த அளவுக்கு ஒரு வேக உணர்ச்சி இல்லை என்பதை நான் அவைக்கு சொல்லி ஆக வேண்டும். அந்த உணர்வோடு ஆலோசனைக் குழுக்களை போட்டு இந்த விவசாய சேவா சங்கங்களில் இன்றைக்கு இருக்கிற பதவியாளர்களை நீக்க வேண்டும். காரணம் ஏற்கெனவே அந்த பதவி முடிந்துவிட்டது. ஆகவே, இன்னும் தொடர்ச்சியாக வைத்துக் கொண்டு இருப்பது இந்த ஜனநாயக அமைப்புக்கு நன்றாக இருக்காது. அதை ஏற்றுக் கொள்ளுவது என்பது பொருந்தாது. இந்த முறையை நீக்க வேண்டும். என்று கேட்டுக்கொள்கிறேன்.

நலிந்த பிரிவினருக்கு 4 சதவீத வட்டியில் சலுகையில் இன்றைக்கு நபர் ஜாமின் முறையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு இந்த கடனை வழங்குகிறது. இதை இன்னும் கொஞ்சம் அதிகமான அளவில் சேவை சங்கங்கள் மூலமாக கிராமப்புறங்களில் வாழ்பவர்களுக்கும் வழங்குவதாக அறிகிறேன். ஆகவே அதில் சற்று கண்காணிப்பு அதிகமாக தேவை. கிராமப்புறத்தில் உள்ள ஏழை எளியவர்களுக்கு இந்த சலுகைகளை வழங்கப்படும்போது இடையில் இருப்பவர்கள் அந்த சலுகைகளை சாப்பிட்டுவிட்டு சென்று விடக் கூடாது. ஆக எச்சரிக்கையாக இந்த கூட்டுறவு கடன் வழங்குவதில் இருக்க வேண்டும். இன்னும் பெரிய அளவில் விவசாயிகளுக்கு பயன்படுகிற அளவில் இதை செய்ய வேண்டும்.

வேலை இல்லாத டிப்ளமோ மற்றும் பொறியியல் பட்டதாரிகளுக்காக கட்டுமான கூட்டுறவு சங்கங்கள் உருவாக்கி ஒரு பிரிவினை சென்னையில் நடத்தி, அதைப்போல் மதுரையில் ஒரு சங்கம் உருவாக்கி இருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். இதை ஒவ்வொரு மாவட்ட தலைநகரிலும் ஒவ்வொரு மாவட்ட வாரியாக இப்படிப்பட்ட படித்த பட்டதாரிகளுக்கு சங்கங்கள் உருவாக்கி அவர்கள் மூலமாக கட்டுமான பணிகளை செய்வதற்கு கூட்டுறவு அமைப்பில் அவர்களுக்கு நாம் சலுகைகளை ஏற்படுத்திக் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு விவசாயிகளுக்கு சலுகைகள் அளிக்க வேண்டும் என்று கேட்கிறவர்கள் கூட நானும் சேர்ந்து அவர்களுக்காகப் பேச ஆசைப்படுகிறேன். இன்றைக்கு மின்சார தட்டுப்

பாடு காரணமாக பலயிடங்களில் அவர்களுக்கு மின் இணைப்பு கிடைக்காத சூழ்நிலையில் விவசாயிகள் பெரும்பாலான கிராமங்களில் டீசலை பயன் படுத்தி ஆயில் என்ஜின் வைத்து பம்புசெட் மோட்டார்களை இயக்குகிறார்கள். அவர்கள் டீசலை பெட்ரோல் பங்குகளின் மூலமாகத்தான் பெறுகிறார்கள். கிடைப்பதிலும் சிரமங்கள் அதிகமாக இருக்கிறது.

ஆகவே, நியாய விலைக் கடைகள் மூலமாக விவசாய கூட்டுறவு சங்கங்கள் மூலமாக, விவசாயிகளுக்கு பம்பு செட்டுகளுக்கு டீசல் வழங்க வேண்டும். அப்படி விவசாயிகளுக்கு மோட்டார்களுக்கு டீசலை வழங்குவதில் அக்கறை செலுத்தி அவர்களுக்கு ஆகிய செலவில் 3–ல் ஒரு பங்கு தள்ளுபடி மானியமாக கொடுக்கவேண்டும். டீசலில் விலை சலுகைத்தர வேண்டும். பம்பு செட்டுகளுக்கும், டிராக்டர்களுக்கும் வழங்குகிற டீசலில் 3-ல் ஒரு பங்கு தள்ளுபடி தந்து மாநில அரசு சலுகை தந்தாலும் சரி, அல்லது மத்திய அரசிடம் பெற்று மானியமாக தந்தாலும் சரி மற்றவர்களுக்கு கிடைக்கிற டீசல் விலையைவிட விவசாயிகளுக்கு 3-ல் ஒரு பங்கு தள்ளுபடியில் இருக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மிக முக்கியமான ஒரு பிரச்சினையை நான் இங்கே கொண்டுவர விரும்புகிறேன்.

(முற்பகல் 11-50)

தாம்பரம் பகுதியிலே இருக்கக் கூடிய கல் உடைப்பவர்களுக்கென்று கூட்டுறவுச் சங்கம் வைத்திருக்கிறார்கள். அதிலே பல தவறுகள் நடைபெறுவதாக அறிகிறேன். தாம்பரம் பகுதியிலே இருக்கிற கூட்டுறவு சங்கத்தினை அங்கே 3 சங்கங்களாக பதிவு செய்து கூலி ஆட்களை வைத்து அவர்கள் கல் உடைத்தாலும், அதிலே பினாமிகளிலே உறுப்பினர்களைச் சேர்த்துக் கொண்டு 45 ரூபாய் மட்டும் தான் கூலி ஆக கூலியாட்களுக்குக் கொடுத்து விட்டு, அரசாங்கத்தின் மூலமாகப் பெறுகிற சலுகையை வைத்து, 145 ரூபாயை அவர்களே பெறுகிறார்கள். இடையிலே 106 ரூபாய் 10, 15 பேருக்கு மட்டும் போய்ச் சேருகிற நிலைமை இருக்கிறது.

இதை அரசு கவனம் செலுத்தி, அந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் தவறாக நடக்கிற நிகழ்ச்சிகளை அகற்ற வேண்டும், தாம்பரம் பகுதியிலே (1) புலிக்கொரடூர் ஆதி திராவிடர் கல் உடைப்புத் தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம், (2) தாம்பரம்—கடப்பேரி ஆதி திராவிடத் தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம், (3) அன்னை இந்திரா தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம் ஆகிய இந்த மூன்று சங்கங்களும் தவறான பாதையிலே கூலி ஆட்களை வைத்து, கூலி ஆட்களுக்கு ஒழுங்காக அரசாங்கம் செய்கிற சலுகையை தராமல், 10, 15 பேர் மட்டும்,



முதலாளிகள் பெறுகிற நிலைமை இருக்கிறது. பினாமிகள் பெயரிலே இந்தச் சங்கத்தை நடத்துபவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு, சேலம் மாவட்டத்திலே ........(மணியடிக்கப் பெற்றது)

*திரு எ.எஸ்.ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்து, ஜனதா கட்சியின் சார்பாக என்னுடைய கருத்தினை எடுத்து வைக்கிறேன்.

இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 1983 ஆம் ஆண்டிலிருந்து தேர்தல் நடத்தப்படாமல் இருப்பதாக உங்களுடைய அறிக்கையிலே இருக்கின்றது கூட்டுறவு சங்கங்கள் 1983-மார்ச் மாதம், எல்லாம் கலைக்கப்பட்டு, தமிழ்நாடு அரசிதழிலே செய்தியிலே; எஸ். ஒ, அதாவது, தனி அதிகாரியைப் போட்டு இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அந்தச் செய்தியிலே முறையாக விதிகள், சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, அதன் பிறகு நிர்வாகக் குழுக்களின் தேர்தல்கள் நடைபெறும் என்று போட்டிருக்கிறது.

1983-மார்ச் என்று சொல்லும்போது, ஏறத்தாழ 2 1/4 வருஷங்கள், 27 மாதங்கள் ஆகிறது. இன்னும் அந்தச் சட்டங்கள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றது. நீங்கள் முறையாக அதற்குரிய சட்டங்களை விரைவாக நிறைவேற்றி, நிபுணர்கள் தமிழ்நாட்டிலே அதிகம் இருக்கிறார்கள். அவர்களை வைத்து முறையாக சட்டங்கள் நிறைவேற்றி, தேர்தல் நடத்த வேண்டும் என்பது தான் எங்களுடைய கோரிக்கை.

இப்போது அந்தத் தனி அதிகாரிகள்; சாலிகிராமத்திலே கொள்முதல் மையம் இருக்கிறது அங்கே ஜாயின்ட் ரிஜஸ்திரார் இருக்கிறார், அங்கே கொள்முதல் செய்யும்போது, வியாபாரிகளிடம் கொள்முதல் செய்கிறார்கள். அதனாலே முறைகேடுகளுக்கு வாய்ப்பிருக்கிறது. அங்கே பல தவறுகள் நடப்பதற்கு வாய்ப்பு இருப்பதாக செய்தி வந்து கொண்டு இருக்கிறது. அவர்களுக்கு குண்டு மிளகாய் வேண்டுமானால் பரமக்குடிக்கு சென்று விடலாம். அதே போல் சம்பா மிளகாய் வேண்டுமானால், விருதுநகருக்கு வரலாம் அங்கே மார்க்கெட்டிங் கமிட்டிகள் இருக்கின்றன. முறையாக சிட்டை போட்டு நியாயமான முறையில் வாங்கிக் கொண்டு வந்து சரக்குகளை விற்பனை செய்யலாம். அப்படி செய்யாமல் தனி வியாபாரிகளிடம் வாங்கும்போது விலைகள் கூடுகிறது. தரமும் இல்லாமல் இருக்கிறது. பல தவறுகள் நடப்பதற்கு ஏதுவாக இருக்கிறது என்பதை அரசுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல், சிறப்பங்காடி, சிற்றங்காடி எல்லாம் ரொக்கப் பணம் இல்லாமல் மிக சிரமமான சூழ்நிலையில் இருப்பதாக செய்திகள் வந்து கொண்டிருக்கிறது. அவர்களுக்கு வந்திருக்கக் கூடிய இன்டென்டுகளை கொண்டு வந்து காட்டி, தனிப்பட்ட வியாபாரிகளிடம் பணம் வாங்கி அதற்குப் பிறகு பணம் செலுத்துவதாக தகவல் வருகிறது. பாங்குகளில் கடன் தர மறுப்பதாகவும் தகவல் வருகிறது. இதை எல்லாம் அமைச்சர் அவர்கள் கவனித்து, சிறப்புச் சிற்றங்காடிகள் மிக நல்ல முறையில் நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், தஞ்சை, திருச்சி ஜில்லாக்களிலே பண்டக சாலைகளுக்கு சப்ளை செய்யக் கூடிய அரிசி, வெளி வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு. பிறகு அதேஅரிசி அரசின் லெவி டெபாசிட்டுகளுக்கு வந்து சேருகிறது என்று செய்தி வருகிறது. இந்த வியாபாரிகள் வெளி மார்க்கெட்டிலே வாங்கிக் கொடுத்தால், மூட்டை ஒன்றுக்கு 40 ரூபாய், 50 ரூபாய் கூடுதலாக இருக்கின்ற காரணத்தால், அந்த சரக்குகளை வாங்கி மறுபடியும் லெவி டெபா சிட்டுக்குக் கொடுப்பதாகச் செய்தி வருகிறது.

சொசைட்டிகளில் நெசவாளர்களுக்கு நூல் முறையாகக் கொடுக்கின்ற முறையில் செயல்படவில்லை என்று மாநிலம் முழுவதிலிருந்தும் புகார் வருகிறது. ஒரு மாதத்திற்கு ஒரு முறைதான் கொடுக்கப் படுவதாக சேலம் அம்மாப் பேட்டையிலிருந்து செய்தி வருகிறது.

விவசாயிகள் வாங்கிய கூட்டுறவுக் கடன்களுக்குத் தண்ட வட்டி போட்டு வசூலிப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. சென்ற மார்ச் மாதம் 31 ஆம் தேதி வரை வானொலியில் அறிவிப்பு கொடுத்தார்கள். அதிலே மார்ச் 31 ஆம் தேதிக்குள் செலுத்தி விட்டால் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதில் பேசிய பெண்மணி மிகவும் நல்ல முறையில் விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள்கூட வானொலியில் தெரிவித்தார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனாலும்கூட, இப்பொழுது கிராமங்களிலேயிருந்து வருகின்ற செய்திகளைப் பார்த்தால் மிகமிக சிரமப்படுகின்ற விவசாயிகள் மேலும் மேலும் சிரமப்படுகின்ற நிலைமையிலேதான் செய்திகள் வந்து கொண்டு இருக்கின்றன.

1971 ஆம் வருஷத்திலே உள்ள பாக்கிகளுக்கெல்லாம் வட்டி போட்டு வசூல் செய்தால் விவசாயிகள் தலை தூக்க முடியுமா என்று நான் கேட்க விரும்புகிறேன். சற்று முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் கேட்டார்கள், தனியார் கொடுத்த கடன்களை வசூல் செய்வதற்குத் தடை விதிக்கப்படுமா என்று.



ஏற்கனவே 1975 ஆம் வருஷத்திலேயிருந்து தடை விதிக்கப்பட்டுக் கொண்டு வந்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்திருப் பார்கள். சிறு விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் தொடர்ச் சியாக ஆறு மாதங்களுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட்டுக் கொண்டே வந்து, தனியார் கொடுத்த கடனை வசூலிக்க முடி யாமல் இந்த அரசு செய்திருப்பதைக் கண்டிருக்கிறீர்கள். அப்படி வாங்குகின்ற சூழ்நிலை இருந்தாலும், வருஷ வருமானம் எவ்வளவு நிலம் என்று கணக்கு கொடுக்க வேண்டியிருக்கிறது. அதிலேயும் அரசியல் செல்வாக்கு தலையிட்டு அங்கேயுள்ள தாசில் தாரை, 50,000 ரூபாய் மதிப்புள்ள சொத்து இருந்தால்கூட 4,000 ரூபாய் மதிப்புள்ள சொத்துதான் இருக்கிறது என்ற கணக்கைக் கொடுக்க வைத்திருக்கிறார்கள். மூன்று வருடத்திற்கு மேல் செலுத்தவில்லை என்றால் பிராமசரி நோட் காலாவதி பிரச்னை வருகிறது. அதைப் புதுப்பிக்க வேண்டுமென்றால் கோர்ட்டுகளுக்கு எடுத்துச் செல்கின்ற பொழுது வழக்குகளை எடுக்க மறுக்கிறார்கள். இப்படிப் பல ஆண்டுகளாகப் பிரச்னைகள் இருக்கின்றன. தனியார் கொடுத்த கடனை ஒழுங்காக வசூல் செய்ய முடியவில்லை.

இந்த அரசும், முறையாக விவசாயிகளுக்குக் கருணை கூர்ந்து ஏற்கெனவே, தள்ளுபடி செய்ததைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். இன்னமும் கட்ட முடியாத விவசாயிகளுக்கும் முறையாக வட்டியைத் தள்ளுபடி செய்து அசலை வாங்குவதற்கு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாய உயர் மட்டக் குழு ஒன்று அமைத்திருப்பதாக அறிகிறேன். உங்களுடைய ஆளுங்கட்சியைச் சேர்ந்த முனு ஆதி அவர்கள் தலைமையில் இருப்பதாக நான் நினைக்கிறேன். அந்தக் குழுவின் பரிந்துரைகளின்படி இந்த அரசு நடந்து கொள்ள வேண்டும்.

விவசாயிகளுக்கான கடன்களைத் தள்ளுபடி செய்வதாக ஆளுங்கட்சி வாக்குறுதி கொடுத்திருப்பதாகப் பல மகஜர்கள் வந்திருக்கின்றன. தேர்தல் நேரத்தில் கொடுக்கின்ற வாக்குறுதிகள் எல்லாவற்றையுமே நிறைவேற்ற முடியாதுதான். ஆனால் கடன் பட்டிருக்கின்ற ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை யாவது நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மன்றத்திலேயே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஜப்தி செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால், பல்வேறு இடங்களில் ஜப்தி செய்யப்படுவதாகத் தகவல்கள் வந்திருக்கின்றன. மன்றத்தின் அனுமதியுடன் இதிலே சிலவற்றைப் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

திருமங்கலம் தாலுக்காவிலே உள்ள மையிட்டான்பட்டி என்ற இடத்தில் நடந்த ஒரு சம்பவத்தைப் பற்றித் தபால் வந்திருக்கிறது. ஒரு பெண்மணியின் கணவர் சமீபத்தில் இறந்திருக்கிறார். அவர் கள்ளிக்குடி ஜனதா கட்சி வட்டாரத் தலைவராக இருந்தவர். கணவனை இழந்த விதவையான அந்த அம்மையாரின் வீட்டைப் பூட்டியிருக்கிறார்கள். அவர் 15-6-1985 அன்றுதான் 500 ரூபாய் கட்டியிருந்திருக்கிறார். அப்படிக் கொடுத்த நான்கு தினங்களுக்குள்ளேயே 19.6.85 அன்று அவருடைய வீட்டைப் பூட்டி, அங்கேயிருந்த சாமான்களை எடுத்துச் சென்றிருக்கிறார்கள். சொத்துக்களை ஜப்தி செய்துள்ளதாகக் கணக்கு கொடுத்து இருக்கிறார்கள். அதிலே, ஃபேனுக்கு 400 ரூபாய் என்றும், சுவர்க் கடிகாரத்திற்கு 100 ரூபாய் என்றும், பானைக்கு 25 ரூபாய் என்றும், சட்டிக்கு 10 ரூபாய் என்றும், வரகு மூட்டைக்கு 40 ரூபாய் என்றும் கணக்கு கொடுத்திருக்கிறார்கள். நான் இந்த மன்றத்திலே தெரிவிக்க விரும்புகிறேன், மாண்புமிகு அமைச்சரவர்கள், ஏப்ரல் மாதம் சொன்னார்கள் என்று நினைக்கிறேன், ஜப்தி எடுக்கவில்லை என்று. ஜப்தி நடவடிக்கை எடுக்கப்படுவதாக சொல்லப்பட்ட நேரத்தில் இல்லையென்று மறுத்தார்கள். ஆனால் இப்பொழுது ஜப்தி செய்யப்படுகிறது அதிகாரிகளால் என்று தகவல் வந்து கொண்டிருக்கிறது. அமைச்சரவர்களின் கவனத்திற்கு நான் இதை வைக்கிறேன்.

(நண்பகல் 12–00.)

அதே போல் நாமக்கல் தாலுகா, வளையகுடி ஈச்சவாரி என்ற ஊரிலிருந்து ஒரு தகவல் வந்திருக்கிறது. அது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தக் காப்பி என்னிடம் இருக்கிறது. அதிலே நாங்கள் விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்துவிடவேண்டுமென்றுதான் இந்த அரசாங்கத்தைக் கேட்டிருகிறோம். கடந்த 7 வருஷ காலமாக, இயற்கைச் சூழ்நிலை காரணமாக, நாங்கள் கடனைக் கட்ட முடியாது என்று சொல்லி வருகிறோம். நாங்கள் பெற்ற கடனை ரத்து செய்வதாக, தேர்தல் காலத்திலே குறிப்பிட்டீர்கள்.

குறிப்பாக, சிறு விவசாயிகள் கடனை ரத்து செய்வதாக வாக்குறுதி கொடுத்தீர்கள். ஆனால் இப்பொழுது நடப்பதோ, வாக்குறுதியை மீறி, வேறு விதமாகச் செய்வதால் பாதகமாக இருக்கிறது. தாங்கள் ரத்து செய்து விடுவதாகச் சொன்னீர்கள். அந்த வாக்குறுதியின் அடிப்படையில்தான் நீங்கள் சுகம் அடைந்து மீண்டும் முதலமைச்சராக வந்திருக்கிறீர்கள். எங்களை சிறிய விவசாயிகள் என்று கருதி, நாங்கள் வாங்கியக் கடனை ரத்து செய்து மறு வாழ்வு தருவீர்கள் என்ற முழு நம்பிக்கையுடன்தான் நாங்கள் இப்படி அனைத்திந்திய அண்ணா தி.மு.க. கட்சிக்கு மாபெரும் வெற்றியைத் தேடித் தந்தோம் என்று எல்லாம் எழுதியிருக்கிறார்கள். தேர்தலுக்கு முன்னால் அளித்த அந்த வாக்குறுதி





மீறாத அளவில், மறு நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம். உடனடியாக நடவடிக்கையை மேற்கொண்டு, ஜப்தி நடவடிக்கையை நிறுத்தி, அரசு எங்களுக்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

அதிலே, கடைசியாக, சட்டசபை அனைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இது விஷயமாகத் தேவையான நடவடிக்கையை எடுத்து, உங்களுடைய கடமையை ஆற்றி, ஏழை விவசாயிகளை இப்பொழுது இன்னலிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இந்த ஆட்சி வாக்குறுதி கொடுத்து ஆட்சிக்கு வந்திருக்கிறது. ஏழை விவசாயிகள் நீங்கள் கொடுத்த அந்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள் என்று கேட்கிறார்கள். ஏழை விவசாயிகளுடைய கடனை ரத்து செய்ய முடியாவிட்டாலும் அபராத வட்டியை ரத்து செய்யுங்கள் என்ற கோரிக்கை இருக்கிறது.

அதே போல், மங்கைவட்ட பரவாகோட்டை என்ற கிராம விவசாயிகளிடமிருந்து ஒரு நோட்டிஸ் வந்திருக்கிறது. அவர்கள் அதில் நாங்கள் 7 ஆண்டு காலமாக வறட்சி, புயல், வெள்ளத்தின் காரணமாக அவதிப்படுகிறோம். எங்களால் கடனைக் கொடுக்க முடியவில்லையென்று சொல்லியிருக்கிறார்கள். அது தஞ்சை மாவட்டத்தில் இருக்கிறது. அவர்கள் சொல்வதெல்லாம் இந்தக் கடன் கொடுப்பதிலே, சிறிய விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்று பாகுபாடு பார்க்காதீர்கள் என்பதுதான். ஏனென்றால், கடன் வாங்குவது என்று வந்து விட்ட பிறகு, அதிலே உள்ள பெரிய விவசாயியும்தானே கடன் வாங்குகிறான். ஆகவே, சிறிய விவசாயி, பெரிய விவசாயி என்று பாகுபாடு காட்ட வேண்டாம், அனைவருக்கும் ஒரே சலுகை கொடுங்கள் என்று கேட்டிருக்கிறார்கள்.

அதே போல், சுந்தரபாண்டியம் என்பது ஒரு சிறு ஊர்' திரு. தாமரைக்கனி தொகுதியில் இருக்கிறது. அங்கே அதிகாரிகள் போலிசை வைத்து, தவறான, தரக்குறைவான வார்த்தைகளை எல்லாம் பேசுவதாகத் தகவல் வந்திருக்கிறது. அனைத்துக் கட்சியினரும் சேர்ந்து நோட்டீஸ் அடித்திருக்கிறார்கள். அந்த காப்பியும் எனக்கு வந்திருக்கிறது. 1984 ஆம் ஆண்டு பெரு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு விவசாயிக்குப் ரூ. 5,000–லிருந்து ரூ. 20,000 வரை பாதிக்கப்பட்ட நிலையில் எப்படியும் வாழலாம் என்று வாழ்கின்ற இந்த நேரத்தில், விவசாயிகள் வாங்கிய கடனுக்கு போலிசை வைத்துக் கொண்டு ஜப்தி நடவடிக்கை எடுப்பது நியாயமற்றது. பாரபட்சமானது. இந்த நிலை சரியில்லை, கடன் வசூலை நிறுத்தி வைக்கவும், தள்ளி வைக்கவும் கேட்டுக்கொள்கிறோம். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, இ. காங்கிரஸ், ஜனதா கட்சி எல்லாம் சேர்ந்து நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள்,

அதேபோல், காமராஜர் மாவட்டத்திலே, வெம்பக் கோட்டை வட்டாரம் அப்புநாய்க்கன்பட்டி என்ற ஊரிலிருந்தும் புகார் வந்திருக்கிறது. அதிலே போலிஸ் கெடுபிடி இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள், வீட்டைப் பூட்டி விட்டு, சாவிகூட கொடுக்க மறுப்பதாகவும் சொல்லி இருக்கிறார்கள், சமையல் கூட செய்ய முடியாமல் ரோடில் இருப்பதாகவும் சொல்லியிருக் கிறார்கள். நூற்றுக்கணக்கான கையெழுத்து கூட வாங்கி அனுப்பி யிருக்கிறார்கள்;

அதேபோல், மங்களம் கிராமத்தைச் சேர்ந்த—விருதுநகர் தொகுதி—பூட்டி, மறுநாள் நான் எழுதிக் கேட்ட பிறகு சாவி கொடுத்தார்கள். அதற்கு முன்பாக நோட்டீஸ் எதுவும் கொடுத்த தாகத் தெரியவில்லை. மேலும், குழந்தைக்கு வைத்திருந்த பாலை எடுக்கக்கூட அனுமதி கொடுக்கவில்லையென்று சொல்லி யிருக்கிறார்கள், இது மனிதாபிமானமற்ற செயலாகத் தெரிகிறது. பாக்கியை 3 தவணைகளில் கொடுபபதாகச் சொல்லியிருக் கிறார்கள், சாவியைப் பிறகுதான் கொடுத்திருக்கிறார்கள்.

அதேபோல், புதுப்பட்டி வத்திராயிருப்பு வட்டாரம் என்ற ஊரில், வீட்டைப் பூட்டி உள்ளே போக விட மறுக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடம் புகார் கொடுக்கப்படுகிறது. அதற்குப் பிறகு அவர்கள் சாவியைத் திருப்பித் தருகிறார்கள், இப்படிப் பல்வேறு புகார்கள் நாடு முழுவதும் இருந்து வந்திருக் கின்றன. நான் எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், தெரிந்தோ தெரியாமலோ, எந்த அரசானாலும் சரி, அவர்கள் கடன்களைக் கட்ட வேண்டியதில்லை என்ற மாதிரி, ஏழை விவசாயிகளுக்கு வாக்குறுதி, சலுகை கொடுக்கிற மாதிரி சொல்லி விடுகிறார்கள்.

இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டாலும் பரவாயில்லை கண்டிப்பாக ஜப்தி செய்யக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். கடனை 4 அல்லது 5 ஆண்டு தவணைகளில் வாங்கிக் கொள்ள வேண்டும். அபராத வட்டியை தள்ளுபடி செய்து, அசலை மட்டும் வாங்கிக் கொள்ளுங்கள்.

முடிவாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கடன் பெற்றவர்களில் பெரிய விவசாயிகள், சிறிய விவசாயிகள் என்று பிரிக்க வேண்டாம். ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன். நான் மீண்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புவது விவசாயிகளுடைய கடனில் அசலை மட்டும் 4, 5 ஆண்டு தவணைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.

அது மட்டுமல்லாமல் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முறையாகத் தேர்தல் நடத்தி, முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நிர்வாகம் நடத்த ஏற்பாடு செய்யுங்கள். எஸ். ஓ-க்கள் நிர்



வாகத்தை கூடிய சீக்கிரம் மாற்ற வேண்டும். சட்டம் வந்து 2½ வருஷம் ஆகியும் அமுலாகவில்லை. முறையான, செம்மையான சட்டங்களைக் கொண்டு வந்து, நிர்வாகத்தை தேர்ந்தெடுக்கப் பட்ட மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைத்து, கூட்டுறவு இயக்கத் தின் மூலம் மக்கள் அடைய வேண்டிய பலன்களை இன்னும் அதிக மாகச் செய்ய இந்த அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டு, முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் மூலமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிற மானியக்கோரிக்கைகள் மீது பேச வாய்ப்பளித்ததற்காக தங்களுக்கும் சட்டமன்ற அரசு கொறடா அவர்களுக்கும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்தியாவில் இருக்கிற அனைத்து மாநிலங்களை யும்விட தமிழ்நாட்டிலே இருக்கிற கூட்டுறவுத் துறை நல்ல முறை யில் செயல்பட்டு வருகிறது என்பதை அறிந்து எல்லா மாநிலங் களுமே பாராட்டுகின்ற அளவுக்கு தமிழக கூட்டுறவுத் துறை இருக்கிறது. இங்கே கூட்டுறவுத் துறை இந்த அளவுக்குச் செயல் பட காரணம் 1978 முதல் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நல்லமுறையில், செம்மையான முறையிலே நடவடிக்கை எடுத்து வந்திருப்பதால்தான். நல்லவர்கள் நா வல்லவர்கள் அனைவரும் இந்தக் கூட்டுறவுத் துறை பொறுப்பை ஏற்று செயலாற்றுகின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறார்கள். முந்தைய காலத்தில் இந்தத் துறையில் வளர்ந்துவந்த குறைபாடுகள் மாண்பு மிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக்குப் பின்னால்தான் குறைந்து கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

கூட்டுறவுத் துறையின் மூலமாக சிறு விவசாயிகள், ஏழை எளிய மக்கள், தொழிலாளர்கள் பயன் பெறும்தன்மையை இந்த மாமன்றத்தில் எடுத்துக்கூற கடமைப் பட்டிருக்கிறேன். நாடு நலம் பெற, ஏழை எளிய மக்கள் நலம் பெற நல்ல முறையில் பணி யாற்றிக் கொண்டிருப்பது இந்தக் கூட்டுறவுத் துறையாகும். நம்முடைய தமிழ்நாட்டில் இன்றைக்கு ஆயிரக்கணக்கான கல் குவாரிகள் இருக்கின்றன. அங்கிருந்து எடுக்கப்படுகின்ற கல் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவது அல்ல. அன்றாடம் இங் கேயே பயன்படுத்துகிற கல்தான். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் கூட எனக்கு முன்னாலே பேசும்போது சொன்னார்கள். மூன்று அரிசன கல் உடைப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் இங்கே இயங்கி வருகின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் அந்தத் தொழிலாளர் அத்தனை பேரும் ஒரு சில ஏஜெண்டுகளிடம் குத்தகைத் தொழி லாளர்களாக இருந்தார்கள். புரட்சித் தலைவர் அரசு வந்த பிறகு

அந்த குத்தகைத் தொழிலாளர்கள் எல்லோரும் சுதந்திரத் தொழி லாளர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசை வாழ்த்தி, பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதியான பென்னாகரத்தில் கல் உடைக்கும் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அந்த ஏழைத் தொழிலாளர்கள் வாழ்க்கை வளம் பெற, அவர்களுடைய வாழ்க் கையில் மறுமலர்ச்சி ஏற்படச் செய்வது அரசின் தலையாய கடமை யாகும்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் அருமைச் சகோதரர் சுப்பராயன் அவர்கள் பேசும் போது அவர்களுடைய கம்பம் தொகுதியில் அண்ணா கல் உடைக்கும் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் இருப்பதாகக் கூறினார்கள். கல் குவாரிகளை தனிப்பட்ட வர்களுக்கு குத்தகைக்கு விடாமல் இப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங் களுக்கு, கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு குத்தகைக்கு விட வேண்டும். அப்படிச் செய்தால் கூட்டுறவுத் துறையில் இருக்கிற ஏழை எளிய தொழிலாளர்கள் வாழ்க்கை மறு மலர்ச்சி அடையச் செய்த பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுக்கு ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12—10)

கூட்டுறவு ஸ்தாபனங்களைப் பொறுத்தவரையில் அவற்றுக்குத் தேர்தல் நடத்தப்படாத நிலைமையில் அவை தனி அதிகாரிகளின் மூலம் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் பல வவசாயிகள் பல ஏழை எளிய மக்கள் நன்மை பெற்றிருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய அருமை நண்பர் டாக்டர் இராமலிங்கம் அவர்கள் சொன்னது போல் ஆலோசனைக் குழுவை அமைத்து எல்லா கட்சிகளின் தரப்பிலேயும் அதிலே உறுப்பினர்களாகச் சேர்த்தால் நல்லது. அதாவது சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் அந்தந்தத் தொகுதிகளுக்குச் செல்கிறபோது அங்கே நடக்கின்ற நிலைமை களைப் பொறுத்தவரையில் அதாவது இந்த அரசு கொடுக்கின்ற சலுகைகள் எல்லாம் சரியான வகையில் நடைமுறைப்படுத்தப் படுகின்றதா என்பதை எல்லாம் கண்காணிக்க வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அந்த வகையில் ஆலோசனைக் குழுக்களை அமைக்கவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்,

கூட்டுறவே நாட்டுயர்வு என்ற கருத்திற்கேற்ப கூட்டுறவுத் துறையின்மூலம் அன்றாடம் வாழ்க்கையில் ஏழை எளியவர்கள் நல்ல பலனை அடைகின்ற வகையில் கூட்டுறவுச் சங்கங்கள்



என்றைக்கும் பயன்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசில் ஏழைஎளிய விவசாயிகளுக்கு பயன்படுகின்ற வகையில் கூட்டுறவுத்துறையின் மூலம் செய்துவருகின்ற பணிகளைப் பார்த்து வியக்காமல் இருக்க முடியவில்லை. சிறு விவசாயிகளுக்கு மானியக் கடனாக கிணறு தோண்டவும், உழவு மாடுகள் வாங்கவும், எருதுகள் வாங்கவும், கடன்களை அளிப்பதோடு பூச்சி மருந்துகள், உரங்கள் போன்ற வற்றையும் கூட்றடுவுத்துறையின் மூலம் அளித்து வருகின்றது. மாநிலத்திலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்களில் ஐந்தில் நான்கு பங்கு விவசாயிகள் கூட்டுறவு இயக்கத்திலே உறுப்பினர்களாக உள்ளனர். மேலும் எனது தொகுதியில் நியாய விலைக்கடைகள் மிகக்குறைவாக இருக்கின்றன. எனது தொகுதி மலைப்பகுதியாக இருக்கின்றது. மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் வந்திருந்தார்கள். பென்னாகரத்திற்கு வந்திருந்தார்கள். அப்போது அங்கே நடைபெற்ற அந்த கூட்டத்தின் மேடையிலே பேசுகின்ற போதுகூட மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களிடத் திலே கோரிக்கை வைக்கப்பட்டது.

என்னுடைய பகுதி மலைப்பகுதியாகும். அங்கே கடன் வாங்க வேண்டும் என்றாலும் மற்றும் பலவற்றுக்கும் 5 கிலோ மீட்டர், 6 கிலோ மீட்டர் நடந்து சென்று காரியங்களைப் பார்க்க வேண்டி யிருக்கின்றது. கோட்டூர் மலை என்று ஒரு மலை இருக்கின்றது. அங்கே இருப்பவர்கள் 11 கிலோ மீட்டர் வந்துதான் நியாய விலைக் கடைகளுக்கு வந்து வாங்கிச் செல்லவேண்டியிருக்கின்றது. எனவே கோட்டூர் மலையிலே ஒரு நியாய விலைக் கடையினை அமைத்துத் தரவேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், புரட்சித்தலைவர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

குறுக்கலியூர் கிராமத்தைப் பொறுத்தவரையில் அங்கே சுமார் 100 வீடுகள் இருக்கின்றன. இப்படி குறுக்கலியூர் கிராமம், கொண்டாரப்பட்டி போன்ற கிராமங்களில் இருந்து 11 கிலோ மீட்டர் நடந்துவந்து ஏழை எளிய மக்கள் மிகவும் கஷ்டப்பட்டு நடந்துவந்து பொருட்களை வாங்கிச் செல்லவேண்டியிருக்கின்றது. அங்குள்ள மக்கள் பெரும்பாலோர் மீனவர்களாக இருக்கின்றனர். எனவே அவர்கள் எல்லாம் மீன்பிடிக்க சென்றுவிட்ட பின்னர் பெண்கள்தான் வந்து வாங்கவேண்டியிருக்கின்றது. அந்தப் பெண்கள் எல்லாம் விவசாயக் கூலிகளாக வேலை பார்க்கின்ற நிலைமையில் அந்த வேலைகளை எல்லாம் முடித்துவிட்டு கூலியை வாங்கிக்கொண்டு மாலை 5 மணிக்கு மேலாக 11 கிலோ மீட்டர் தூரம் நடந்து வந்து வாங்கவேண்டியிருக்கின்றது. அவர்கள் பொருட்களை வாங்கவேண்டிய கடை பெறுப்பூரில்தான் இருக் கின்றது. அங்கு வந்து வாங்குவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே குறுக்கலியூரிலே ஒரு நியாய விலைக் கடையினை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒகேனக்கலில் மீன் பிடிக்கின்ற தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். இப்படிப் பல இடங்களில் இருக்கிறார்கள். நாகமலை, பென்னாகரம் போன்ற பகுதிகளில் மீன் பிடிக்கின்ற மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். நேற்று முன்தினம் கூட என்னுடைய தொகுதியிலிருந்து 100 பேர்களுக்குமேல் சென்னையை நோக்கிவந்து என்னுடைய அறைக்கு வந்திருந்தார்கள். மேட்டூரிலே கூட்டுறவுச் சங்கம் இருக்கின்றது. அங்கே ஏ. டி. ஆபீஸ் இருக்கின்றது. நேற்று முன்தினம் வந்திருந்தவர்கள் மீன்வளத்துறை செயலாளரைச் சந்தித்து லைசன்ஸ் வழங்கப்படுவது பற்றிக் கேட்பதற்காக வந்திருந்தார்கள். அங்கே 650, 700 பேர்களுக்குத் தான் லைசன்ஸ் கொடுக்கப்பட்டு இருக்கின்றது. ஆனால் அதிகமான தொழிலாளர்கள் மீன்பிடிக்கின்றவர்கள் இருக்கிறார்கள். அப்படி நாகமலை, குறுக்கலியூர் போன்ற இடங்களில் அதிகமானபேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு மீன்பிடிக்க லைசன்ஸ் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்திலே மீன்பிடியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் மேட்டூரிலே இருக்கிறது. அந்தச் சங்கத்தின் பிரான்ச் ஒன்றை தர்மபுரி மாவட்டத்திலேயும் ஏற்படுத்தித் தருவதற்கு ஏற்பாடு செய்துதர வேண்டும். அத்தோடு தர்மபுரி மாவட்டத்திலே ஒகேனக்கல், நாகமலை, குருக்கலியூர் போன்ற இடங்களில் உள்ள மீன்பிடித் தொழிலாளர்களுக்கு லைசன்ஸ் வழங்குவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்சொள்கிறேன்.

பாரதிதாசன் சொல்வாரே, அந்த வரியை சொல்ல விரும்புகிறேன்.

''வாடித் தொழில் இன்றி வறுமையால் சாவதெல்லாம்
கூடித் தொழில் செய்யா குற்றத்தினால்தான்''

என்று சொன்னதுபோல் விவசாயிகளும், தொழிலாளர்களும் கஷ்டத்திற்கு உள்ளாகாமல், காளிமுத்துவிடம்தான் கலி பயின்று, காசைப்பற்றிக் கவலைப்படாமலும், மீசையைக் கொண்டு மிரட்டாமலும், முறுக்கோடு கூட்டுறவுத் துறையை வளர்க்கும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் புனிதப் பெயர் கொண்ட சாத்தூரார் என்றும் சரித்திரத்திலே நிலைத்து நிற்கும் வண்ணம் புகழ் கொண்டு இந்தக் கூட்டுறவுத் துறையில் புரட்சிகளையும் மாற்றங்களையும் செய்யவேண்டும், என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, பாப்பாரப்பட்டி பகுதியிலே பருத்தி, கடலை போன்ற பயிர்கள் அதிகமாக விளைகின்ற அந்த அடிப்படையில் அங்கே கூட்டுறவுத் துறை மூலமாக ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தை ஆரம்பித்துக் கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு, அதற்குக் காரணம், பாப்பாரப்பட்டியிலே 30, 40 கிலோ மீட்டர் வந்து தர்மபுரி மாவட்டத்தில்தான் அவர்கள் விற்பனை செய்யவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே பாப்பாரப்பட்டியிலே கண்டிப்பாக ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை ஏற்படுத்தித் தருமாறு மிகப்பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)



அடுத்து, நெசவாளர் அதிகமாக இருக்கிற பாப்பாரப்பட்டியிலே ஒரு கூட்டுறவு நூற்பு ஆலையையும், அரூர் பகுதியிலே கூட்டுறவு சர்க்கரை ஆலையையும் ஏற்படுத்தித் தருமாறு இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்ததற்கு துணைத் தலைவருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மானியக் கோரிக்கை மீது நான் சார்ந்திருக்கிற இந்திய தேசீய காங்கிரசின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை வைக்க விரும்புகிறேன். இன்றைக்கு கூட்டுறவு இயக்கம் நாட்டிலே பலதரப்பட்ட மக்களுக்கும் உபயோகப்படுகிற முறையிலே அனைத்துத் தரப்பு மக்களும் சங்கங்கள் அமைத்து கல் உடைக்கும் சங்கத்திலிருந்து எழுத்தாளர்கள் சங்கம் வரையில் பல தரப்பட்ட சங்கங்கள் அமைத்து நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது என்று கூறிக்கொள்கிறேன். இந்தக் கூட்டுறவு இயக்கம் தனி மனிதனுடைய சுரண்டலை ஒழிக்கவேண்டும் என்ற குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் இன்றைக்கு விவசாயக் கூட்டுறவு சேவா சங்கங்களைப் பொறுத்தவரையில் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களே ஒரு சுரண்டல் சங்கமாக பயன்பட்டு வருவது குறித்து வருந்தம் அடையவேண்டிய நிலை இருக்கிறது.

இன்றைக்கு தமிழகத்திலே கிராம பாதுகாப்புச் சங்கங்கள் தவிர, நிலவள வங்கியானாலும், மார்க்கெட்டிங் சொசைட்டி போன்றவைகளும் தேர்தல் இல்லாத நிலையில் இருக்கிறது. அப்படி இந்த தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இல்லாத நிலையாலே அங்கேயிருக்கிற அதிகாரிகளுடைய எதேச்சாதிகாரமும், சுரண்டலும் எல்லையில்லாமல் இருக்கிற நிலையைப் பார்க்கிறோம்.

1983 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட புதிய சட்டம் இயற்றப் பட்டது. இரண்டு ஆண்டுகள் ஆகியும்கூட சட்ட விதிகள் இதுவரையில் இயற்றப்படாத நிலையில் இருக்கின்றன. அதனால் அந்தச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்த முடியாத நிலை இருந்து வருகிறது. எனவே, இரண்டொரு மாதங்களில் இயற்றப்பட வேண்டிய சட்ட விதிகள் இரண்டு ஆண்டுகள் ஆகியும் இயற்றப்பட வில்லை என்று சொன்னால் மக்கள் மத்தியிலே ஐயப்பாடு எழுந்திருக்கிறது. தேர்தல் நடத்தக் கூடாது என்பதற்காகவே சட்ட விதிகள் இயற்றப்படவில்லையா என்ற கருத்துகூட படித்தவர்கள் மத்தியிலே நிலவி வருகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே அந்த சட்ட விதிகளை குறுகிய காலத்திற்குள்ளாக இயற்றப்பட்டு அந்த சங்கங்களுக்கு தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நான் கேட்டுக்கொள்கிறேன். அந்தச் சங்கங்களுக்கு தேர்தல் இல்லாத காரணத்தினாலே அதிகாரிகள் அந்தச் சங்கத்தினுடைய பணத்தை கையாளுகிற நிலைமையும், துஷ்பிரயோகம் செய்கிற நிலைமையும் பல இடங்களில் ஏற்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 12-20)

என்னுடைய தொகுதியில் இருக்கிற ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா சொசைட்டியைப் பொறுத்தவரையில், இன்றைக்கு சொசைட்டியிலே பல லட்ச ரூபாய்கள் கையாளப்பட்டதாகவும், தவறாக விநியோகிக்கப்பட்டதாகவும் செய்தி இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் இருக்கவேண்டுமென்றால் அந்தச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தியாக வேண்டும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டவிதிகளை ஓரிரு மாதங்களில் திருத்தி அந்தச் சங்கங்களுக்கு தேர்தலைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கொள்கைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆங்கில குறிப்பில் சொல்லி இருக்கிறார்கள். 'The village agricultural service co-operative societies constitute the nucleus of the co-operative movement in the State''. ஆனால் இன்றைக்கு கிராமங்களில் இருக்கிற நிலைமை என்ன? கிராமங்களில் 1973 ஆம் ஆண்டு முதல் பல காரணங்களினால் விவசாயிகள் கடனைச் செலுத்த முடியாத நிலையில் இருந்து வருகிறார்கள். செங்கை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விவசாயிகள் வறட்சியாலும், புயலாலும் பாதிக்கப்பட்டார்கள். அதுமட்டுமல்லாமல் இரண்டு ஆண்டுகளாக தும்புவைரஸ் என்ற நோயினால் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிற நிலைமையும் இருக்கிறது.

பல கிராமங்களில் விவசாயிகள் சங்கங்கள் அமைக்கப்பட்டு, அந்தச் சங்கங்களில் இருக்கிற நிர்வாகிகள் கடனை திருப்பிச் செலுத்துபவர்களை செலுத்தவிடாமல் செய்து, அவர்கள் இன்றைக்கு பெரிய கடன்காரர்களாக மாறி இருக்கிறார்கள். இரண்டாயிரம் கடன் வாங்கியவர்கள் 10 ஆயிரம் திருப்பிச் செலுத்த வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆங்காங்கு சங்கங்கள் போராட்டம் நடத்தி, அரசாங்கமே அவர்களுக்கு சலுகைக் கொடுப்பதைப்போல, அந்தக் கிராமங்களில் வசூல் செய்யாததால் ஏழை, அப்பாவி விவசாயிகள் கடன் சுமை அதிகமாகி இருக்கிறது. அந்த நிலையில் இருக்கிறபோது இன்றைக்கு ஓரிரண்டு மாதங்களாக ஜப்தி போன்ற கெடுபிடி நடவடிக்கைகள் எங்கள் மாவட்டம் தோறும் நடந்து வருகின்றதை நாள்தோறும் பார்க்கிறோம். எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் பல கிராமங்களில் ஜப்தி நடவடிக்கைகள் எப்படி இருக்கின்றன என்பதை விவரித்துக் காட்டினார்கள்.

அந்த நிலைமை எங்கள் மாவட்டத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் இன்றைக்கு இருந்து வருகிறது. 20 சதவீதம், 25 சதவீதம் செலுத்தினால்கூட அதை ஏற்றுக்கொள்ளாத நிலை கிராமங்களில் இன்றைக்கு இருக்கின்றது. அந்த நிலையை மாற்றவேண்டும். எங்கள் காங்கிரஸ் பேரியக்கத்தின் கோரிக்கை எல்லாம் இன்றைக்கு





தேங்கியிருக்கிற கடனை எல்லாம் விவசாயிகள் ஒரே தவணையில் செலுத்த முடியாமல் இருப்பதால், அதிக வட்டி என்கிற முறையில் அது கூடியிருக்கிற காரணத்தால், விவசாயிகள் செலுத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள்; 1980-ம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அந்த வாக்குறுதியிலே மத்திய அரசு ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அதேபோல நபார்டு, மற்றும் ரிசர்வ் வங்கி ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் கடன் வட்டி, அதிக வட்டி ஆகியவைகளை தள்ளுபடி செய்வோம் என்று சொல்லி இருக்கிறார்கள். அந்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள் என்று ஏழை விவசாயிகள் சார்பிலே நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

அடுத்து திரு முனுஆதி அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைத்ததின் நோக்கமே விவசாயிகளுடைய கடன் சுமையைப் போக்கவேண்டும் என்பதுதான். அந்தக்குழு இன்றைக்கு அரசாங்கத்திற்கு தன்னுடைய அறிக்கையை கொடுத்திருக்கிறது. அந்த அறிக்கையினால் தங்களுக்கு நல்லது கிடைக்கும், அந்த அறிக்கையின் சிபாரிசுகள் செயல்படுத்தப்படும்போது தங்களுக்கு பெரிய லாபம் கிடைக்குமென்று விவசாயிகள் நம்பி இருக்கிறார்கள். இன்றைக்கு ஜப்தி செய்யப்படுகிற நேரத்தில்கூட, கடனைக் கட்டினால் திரு முனுஆதி அவர்கள் குழுவின் சிபாரிசுகள் நிறைவேற்றப்பட்டால், இப்போது கடன் கட்டுவதால் ஏமாந்து விடுவோமோ என்று கூட அந்த ஏழை விவசாயிகள் எண்ணுகிறார்கள். எங்களுடைய காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பிலே நாங்கள் கேட்டுக்கொள்வது எல்லாம், முனுஆதி அவர்களுடைய கமிஷன் அறிக்கையை அமுல்படுத்துங்கள். 1980 ஆம் ஆண்டு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை அமுல்படுத்துங்கள். விவசாயக் கடன் சுமையை நீக்குங்கள். விவசாயத்தைத் தவிர வேறு எந்தத் தொழிலையும் தெரிந்து வைத்துக்கொள்ளாத மக்கள்தான் இன்றைக்கு விவசாயம் செய்து கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் விவசாயத்திலே லாபம் கிடைக்கும் என்றுவேறு எந்த தொழிலையும் செய்வதில்லை. என்னைப் பொறுத்தவரையிலும், இந்த மக்களுக்கு வட்டி, அசல்வட்டி ஆகியவற்றைத் தள்ளுபடி செய்தால்தான் என்னுடைய மாவட்டத்தில் விவசாயம் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி இல்லை என்றால், 2, 3 ஆண்டுகளிலே, விவசாயம் பல கிராமங்களில் நின்றுவிடக்கூடிய ஒரு ஆபத்து இருக்கிறது.

மேலும் இப்போது நடைபெறுகின்ற ஜப்தி, கெடுபிடிகளை நிறுத்தவேண்டும். ஐந்தில் ஒரு பகுதி செலுத்தினாலும் ஜப்தி செய்யமாட்டோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கு இந்த மன்றத்திலே உத்தரவாதம் அளிக்க வேண்டும், மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் சந்தித்தபோது எங்களுக்கு ஒரு உத்தரவாதம் அளித்தார்கள். அந்த உத்தரவாதத்தினுடைய அடிப்படையில் என்னுடைய தொகுதியில் உள்ள

விவசாயிகள் கடன் கட்டவேண்டும் என்று சொல்லி, பல கிராமங் களில் கடனை செலுத்திக்கொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு உத்தரவாதத்தை இந்த மன்றத்திலே, தமிழகத்திலே எந்தப்பகுதியிலும் ஐந்தில் ஒரு பங்கு கடன் செலுத்தி னாலும்கூட, ஜப்தி செய்யப்படாது என்று ஒரு உத்தரவாதத்தினை உடனடியாக அமைச்சர் அவர்கள் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால், இன்றைக்கு மின்சாரக் கட்டணம், மின்சாரத் தாமதத்திற்கான கட்டணம் செலுத்த வேண்டும் என்ற கட்டாயம், அதுமட்டுமல்லாமல், பல ஆண்டுக் காலமாக கொடுக்கப்படாமல் இருந்த கிஸ்தி வசூல் செய்கின்ற ஒரு கெடுபிடி, ஆக இந்த மூன்றுமாகச் சேர்ந்து விவசாயிகளுக்கு இன்றைக்கு பெரும் சுமையாக இருக்கிறது. எனவே உடனடியாக ஜப்தி கெடுபிடியில் இருந்தாவது நீங்கள் விவசாயிகளைக் காப் பாற்றவேண்டும்.

இந்தக் கொள்கைக் குறிப்பிலே பலதரப்பட்ட சங்கங்களுடைய நலிந்த பிரிவுகளுக்கு பல குறிப்புக்கள் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட குறிப்புகளை எல்லாம் என்னுடைய கட்சியின் சார்பிலே நான் வரவேற்கிறேன். மேலும் இன்றைக்கு தேசியமய மாக்கப்பட்ட வங்கிகளிலே கடன் நின்றுவிட்டால், மாதத்திற்கு 100, 200 ரூபாயை அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே பலர் தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து கடன் பெறுவதே நல்லது என்று கருதுகிறார்கள். எனவே நீங்கள் இந்தக் கூட்டுறவுக் கடன் சுமையிலிருந்து விவசாயிகளைக் காப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லி. வாய்ப்பளித்த, துணைத்தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன், ஜெய் ஹிந்த்.

*திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப் பட்டு இருக்கிற மானியக் கோரிக்கை மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இன்றைக்கு கூட்டுறவுத்துறை என்பது ஒரு நாட்டினுடைய உற் பத்திப் பெருக்கத்திற்கு ஒரு முக்கியமான துறை என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்கமுடியாது. இந்தத் துறை எந்த அளவிற்கு வளர்ச்சி பெருகிறதோ, அந்த அளவிற்குத்தான் ஒரு நாட்டினுடைய விவசாய உற்பத்தியை பெருக்க முடியும். இந்தக் கூட்டுறவுத் துறை வந்ததற்குப் பிறகுதான் விவசாயிகள் கந்து வட்டிக்கு பணம் வாங்கக்கூடிய ஒரு கொடுமையிலிருந்து விடுபட்டார்கள் என்பதைப்பற்றி யாருக்கும் ஆட்சேபணை இருக் காது. மேலும் இந்தத் துறையை வலுப்படுத்த வேண்டும், வளர வேண்டும், என்று எதிர்பார்க்கக்கூடிய கட்சியைச் சேர்ந்தவர்கள் நாங்கள், ஆளும் கட்சித் தரப்பிலே சொல்கிறார்கள். எதிர்க்கட்சியினர் வசூலைக் கொடுக்கக்கூடாது என்று பிரச் சாரம் செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் ஒன்றை தாம் சிந்திக்க வேண்டும். கடந்த 10 ஆண்டுக்காலம் யாரால்



இப்படி கடன் சுமத்தப்பட்டது, இதற்கு யார் பொறுப்பு என் பதைப்பற்றி எல்லாம் பேசும்போது அரசுக்கும் பங்கு உண்டு. கார ணம் சென்ற 1977—லே அடித்த புயலால் விவசாயிகள் பாதிக்கப் பட்டதற்குப் பின்னால், தமிழக அரசு 5 ஏக்கருக்கு உட்பட்ட விவ சாயிகளுக்கு சலுகை அளித்தார்கள். நாம் எல்லோரும் வரவேற் றோம். அதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. குறிப்பாக இந்த 10 ஆண்டுக் காலத்தில், 81, 82—ல் கடுமை யான வறட்சி, 1983 டிசம்பரிலே 2 நாளில் பெய்த மழை காரணமாக தஞ்சை மாவட்டம் முழுமையான அளவில் பாதிக் கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட நேரடி யாக வந்து பாத்தார்கள்.

(பிற்பகல் 12-30)

ஆனால் அப்படிப்பட்ட முழு பாதுகாப்பும் விவசாயிகளுக்கு எந்தவிதமான நிவாரணமும் இன்னும் கிடைக்கவில்லை. இதனால் விவசாயிகளின் வட்டியும் முதலும் கடுமையாக ஏறியிருக்கிறது.

நான் ஒன்றை உதாரணமாக சொல்ல விரும்புகிறேன். திருத் துறைப்பூண்டி மருதாவலம் கிராம கூட்டுறவு விவசாய சேவை சங்கத்தில் குறுகியகால கடன் பெற்றது 3,780 ரூபாய். வட்டி 3,827 ரூபாய், செலவு 30 ரூபாய் ஆக மொத்தம் 7,637 ரூபாய் அதேபோல் மாற்றுக் கடன் அசல் ரு. 8,194, வட்டி ருபாய் 7,320, செலவு ரு. 5 ஆக மொத்தம் ரூ. 15,519. அவன் வாங்கிய கடன் 11,974 ரூபாய், அதற்கு வட்டி ரூ. 11,147. ஆக மொத்தம் ரூபாய் 23,121, எப்படி விவசாயி இந்த கடனை இவ்வளவு வட்டியை திருப்பி கட்ட முடியும். அந்த விவசாயிகளுக்கு எவ் வளவு நிலம் இருக்கிறதோ அதை விற்றால் வருகிற தொகையை விட இந்த வட்டி தொகை அதிகமாக இருக்கிறது என்பதை நான் அரசுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, விவசாயிகள் வாங்கிய கடனை தள்ளுபடி செய்து விடுங்கள், கூட்டுறவு இயக்கங்களை மூடிவிடுங்கள் என்று நாங்கள் ஒரு போதும் சொல்லமாட்டோம என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு இதில் மத்திய அரசுக்கு பங்கு இல்லை என்று நான் சொல்லவில்லை. ரிசர்வ் பாங்கு மத்திய அரசின் கண்டி ரோலில் இருக்கிறது. ஒரு மாநிலத்தில் விவசாயி பாதிக்கப்பட் டால் ஒரு மாநிலத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டால் மத்திய அரசு இதை திரும்பிப் பார்க்கவேண்டும்.

இந்த வட்டி, அபராத வட்டி முழுவதையும் தள்ளுபடி செய் யக்கூடிய அதிகாரம் மாநில அரசுக்கு உண்டு. மத்திய அரசுக்கு இல்லை. ஆனால் நான் கேட்டுக்கொள்வது எல்லாம் இந்த

[திரு. பொ. உத்திராபதி] [1985 ஜூன் 28

விவசாயிகள் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஒரு உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டது. அதில் மற்ற கட்சிகளைச் சேர்ந்த விவசாய சங்க பிரதிநிதிகளும் பங்கு கொண்டார்கள். அந்த விவசாய சங்கம் அந்த உயர்மட்டக்குழு வறட்சியால், வெள்ளத்தால் பாதிக் கப்பட்ட இடங்களை நேரிடையாக பெரும்பாலான மாவட்டங் களுக்குச் சென்று பார்த்துவிட்டு அந்தக்குழு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்துப் பேசி ஒரு முடிவு செய்து அரசுக்கு சிபாரிசு செய்து இருக்கிறார்கள். அந்த சிபாரிசு தான் வட்டியும், அபராத வட்டியும் தள்ளுபடி செய்து அசலை 5 ஆண்டு தவணை யில் கட்டலாம் என்று அந்த உயர்மட்டக்குழு சிபாரிசு செய்து இருக்கிறார்கள்.

நான் கேட்டுக்கொள்ளுவது எல்லாம் இந்த உயர்மட்டக் குழு சிபாரிசுகளை குறைந்த பட்சம் அரசு நிறைவேற்றிக் கொடுத் தால் தான் விவசாயிகளுடைய பிரச்சினையை தீர்க்க முடியும் விவசாயிகளின் மேல் கடுமையாக ஏறியிருக்கிற சுமையிலிருந்து பாதுகாத்தாலதான் தமிழகத்தினுடைய உணவு உற்பத்தியை பெருக்க முடியும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

அடுத்து, இன்றைக்கு இந்தக் கூட்டுறவுத் துறையில் 3 அடுக்கு முறையாக இருக்கிறது. ஒன்று தாலுக்க மட்டத்தில் ஒரு அமைப்பு இருக்கிறது. இன்னும் ஒன்று மாவட்ட அளவில் ஒரு அமைப்பாக இருக்கிறது. மற்றும் ஒன்று மநில அளவில் ஒரு அமைப்பாக இருக்கிறது. இது தேவைதானா என்பதை சிந்திக்க வேண்டும். காரணம் ஒரு மாவட்டத்தில் ஒரு அமைப் பும் இருப்பதால் அதற்கு 100-க்கும் மேற்பட்ட அதிகாரிகள், கட்டிட வாடகை, வாகனங்கள் இருப்பதால இதற்கு கோடிக் கணக்கான ரூபாய் செலவாகிறது. ஆகவே என்னுடைய கருத்து எல்லாம் 2 அடுக்கு முறை போதும். ஒன்று மாநில மட்டத்தில் ஒரு அமைப்பும், அடுத்து தாலுக்கா மட்டத்தில ஒரு அமைப்பும், வைத்து 10 கூட்டுறவு சங்கங்களுக்கு ஒரு அதிகாரி என்று நியமித் தால் கோடிக்கணக்கான ரூபாய் விவசாயிகள் தலையில் விழாமல் பார்த்துக் கொள்ளலாம், ஆகவே, எதிர்காலத்தில் அரசு 2 அடுக்கு முறையைக் கொண்டு வந்தால் எந்த அளவுக்கு விவ சாயிகளை பாதுகாக்க முடியும் என்பதை சிந்திக்க வேண்டும்.

வட்டியைப் பார்க்கும்போது இன்றைக்கு ரிசர்வ் வங்கி 7 சதவீதம், வட்டி. மநில அரசு ½ சதவிதம், சென்டிரல் பங்கு 1½ சதவிதம், கிராம கூட்டுறவு 2½ சதவிதம் இப்படி 11½ சதவித வட்டியும் அதற்கு மேல் அபராத வட்டியும் போட்டால் 15 சதவித வட்டியும் சேருவதால் இன்றைக்கு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.



1985 ஜூன் 28] [திரு. பொ. உத்திராபதி]

அந்த நிலையைப் போக்குவதற்காக, அந்த உயர்மட்டக்குழு விலிருந்து எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட, உயர் மட்டக் குழுவின் முடிவைக்கூட அரசாங்கம் பரிசீலித்து நிறை வேற்றவில்லை என்று சொல்லி எங்களுடைய தோழர் R. நல்லக் கண்ணு அவர்களும், M. ஆதிமூலம் அவர்களும் கூட அதை வற் புறுத்துவதற்காக ராஜினாமா செய்திருக்கிறார்கள். எனவே, எதிர்காலத்தில் இந்த விவசாயப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாக, பணப்பயிர்; இன்று டிராக்டர் வாங்கி இருக்கி றார்கள்; நிலவள வங்கி மூலம் வாங்கியிருக்கிறார்கள் நாங்கள் கேட்டுக்கொள்வது; பணப் பயிர் என்பது இன்றைக்கு இயற்கை சீற்றங்களால் அழிந்து விடுகிறது. ஆனால், இன்றைக்கு ஏக போக முதலாளிக்கு, அங்கு முழுமையாக, நான் கேள்விப்படுகிற வரையிலேயும், தொழில் துறை பாதிக்கப்படுவதனால், ரிசர்வ் வங்கி மூலம், மத்திய சர்க்கார் செய்து இருக்கக்கூடிய சலுகை யில் ஒட்டு மொத்தமாக 40 ஆயிரம் கோடி ரூபாய் சலுகை அளித்து இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன்.

அப்படி சலுகை அளிக்கிற நேரத்தில், இந்த நாட்டு மக் களுக்கு உணவு அளிக்கக்கூடிய விவசாயிகள் பணப் பயிர் இயற்கைச் சீற்றத்தால் அழிவு ஏற்பட்டு இருக்கக்கூடிய, விவ சாயிகளுக்கு குறைந்தபட்சம் உயர்மட்டக் குழுவினுடைய சிபாரிசை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போல், கூட்டுறவுத் துறையில் பணியாற்றக் கூடிய ஊழியர்கள்; இன்றைக்கு பாகுபாடாக அவர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகிறது. சில கூட்டுறவுச் சங்கத்தில் அதிக வருமானம் கிடைத்தால் அதிகச் சம்பளமும், குறைந்த வருமானம் கிடைத் தால் அந்தக் கூட்டுறவுத்துறையில் பணியாற்றக்கூடிய ஊழியர் களுக்கு குறைந்த சம்பளமும் கொடுக்கப்படுகிறது.

நான் கேட்டுக்கொள்வது; விலைவாசி ஏறுவதும், பஞ்சம் வருவதும், எல்லாத் தொழிலாளர்களுக்கும் சமமாகத்தான் வரு கிறது. அவர்களுக்கு நீங்கள் இன்றைக்கு சர்க்காரில் தரக்கூடிய பே-கமிஷன் என்ற அடிப்படையில் சகல தொழிலாளர்களுக்கும் சமமான சம்பளம் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஒன்று கேள்விப்படுகிறேன். தமிழ்நாடு கூட்டுறவுத் துறையில் 16 மத்தியக் கூட்டுறவு வங்கியில் எல்லாவற்றிலும், செயலாளர், தலைவர், செயலாளர், மானேஜர்; நிர்வாக அதிகாரி இப்படி 16 உயர்மட்ட அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இதற்கு முன்னால் முதலமைச்சரிடத்தில் பேச்சுவார்த்தை

நடத்தி, அந்தப் பெரிய அதிகாரிகளுக்கு குறைந்தபட்சம் ரூ. 3
ஆயிரம் உச்சவரம்பு முதலமைச்சர் அவர்கள் விதித்து, உத்
தரவு இட்டு இருக்கிறார்கள்.

ஆனால் முதலமைச்சர் மருத்துவமனையிலே இருக்கிறபோது
இடைக்காலத்தில், அந்தப் பெரிய அதிகாரிகள் அமைச்சருடன்
பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், இப்போது அவர்களுக்கு
4,500 ரூபாய் என்று சம்பளம் உயர்த்தப்பட்டிருப்பதாகவும்
தகவல் கிடைத்திருக்கிறது.

நான் கேட்டுக்கொள்வது;—பெரிய அதிகாரிகளுக்கு இப்படி
ரூ. 3,000—இலிருந்து, ரூ. 4,500 ரூபாயாக, 1,500 ரூபாய்
சம்பளம் உயர்த்தி வழங்கப்பட்டிருப்பதாகவும், அமைச்சரவர்
கள் அதற்கு ஆணை பிறப்பித்து இருப்பதாகவும், எனக்கு
தகவல் கிடைத்திருக்கிறது. உண்மையோ, பொய்யோ
தெரியாது. இருந்தாலும், நான் கேட்டுக்கொள்ள விரும்புவது:—
அப்படிப் பெரிய அதிகாரிகளின் கீழ் இலட்சக்கணக்கான,
ஆயிரக்கணக்கான அளவில் பணியாற்றக்கூடிய அந்த ஊழியர்
களையும் இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சர் அவர்கள் கணக்கில்
எடுத்துக் கொண்டு அவர்களுக்கும் அப்படிப்பட்ட சம்பள
உயர்வு கொடுப்பதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், 10–10–84–ம் தேதி திருப்பூரிலே ஆர்.டி.ஒ.
முன்னிலையிலே 17 கூட்டுறவுத் தொழிலாளர்களுக்கு நிரந்தர
வேலை கொடுக்கவேண்டும் என்று ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்
டிருக்கிறது. அதையும் நிறைவேற்ற வேண்டும் என்று இந்தச்
சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகள் வாங்கக்கூடிய உரம், தனியார்கள் ஒரு மூட்
டைக்கு ரூ. 5, 10, 15 என்று குறைத்துக் கொடுக்கிறார்கள்.
ஆனால், கூட்டுறவுத் துறையில் 10 முதல் 15 வரை விலை
உயர்த்தி விற்கிறார்கள். அந்தப் பாகுபாடு இல்லாமல், தனியார்
துறையைவிட கூட்டுறவுத் துறையில் தான் விவசாயிகளுக்கு
சலுகை அளிக்க வேண்டும். அதுதான் கூட்டுறவுத் துறை.

வருகிற ஆண்டிலாவது, விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய
அந்த உரம் போன்றவற்றை, கூட்டுறவுத்துறையிலிருந்து
குறைந்த விலைக்கு கொடுக்கவேண்டும், அதற்கு நடவடிக்கை
எடுக்கவேண்டும் என்று கோருகிறேன்.

நேற்றைக்குக் கூட ஒரு கேள்வி கேட்கும்போது சொன்னேன்
இந்த விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு காப்பீடு கழகத்தின்
மூலமாக இருக்கக்கூடிய திட்டத்தை, சட்டத்தை மத்திய சர்க்
கார், அதைத் திருத்தாமல் எப்படித்தான் நீங்கள் சட்டத்தை
அறிவித்திருந்தாலும், பயிர் இன்சூரன்ஸ் அவர்களுக்குக் கிடைக்



காது. இப்போது இருக்கக்கூடிய திட்டத்தில் விவசாயிகள் 10 ஆண்டு, அந்தத் தாலுகா முழுமையிலும் கணக்கு எடுத்துத்தான் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குக் கொடுக்க முடியும் என்று இன்சூரன்ஸ் திட்டம் உள்ளது.

(பிற்பகல் 12-40)

ஒரு தாலுகாவில் 10 கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கும், 10 கிராமங்கள் பாதிக்காமல் இருக்கும். அந்த தாலுகா முழுமையும் கணக்கிட்டால், அந்த 10 கிராமத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அந்த சலுகை கிடைக்காது. நாங்கள் கேட்பது. அந்தச் சட்டத்தைத் திருத்தி, தாலுகா என்பதற்குப் பதிலாக, அங்கே பாதிக்கக் கூடியவர்கள் விவசாயிகள் எல்லோருக்கும் இந்த சலுகை அளிக்க வேண்டும். அதைப்போல பத்தாண்டுகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பத்தாண்டுகள் என்றால் அந்த விகிதாச்சாரப்படி முழுமையாக விவசாயிகளுக்குச் சலுகை கிடைக்காது. எனவே, ஒவ்வொரு ஆண்டும் பாதிக்கப்படுகின்றபொழுது அது பாதிக்கப்பட்ட ஆண்டாகக் கருதப்பட்டு அந்த விவசாயிகளுக்கு இந்த இன்சூரன்ஸ் திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஜப்தியைப்பற்றி எல்லோரும் பேசிவிட்டார்கள். அதிகாரிகள் வசூல் செய்யட்டும், அதை வேண்டாமென்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால் எப்படி வசூல் செய்கிறார்கள்? பத்து வாடகைக் கார்கள் போகின்றன, ஐந்து போலிஸ் வண்டிகள் போகின்றன, நமது துறை வண்டிகள் ஐந்து போகின்றன; இப்படி 20, 25 வண்டிகள் போகின்றன. மந்திரி வந்தால்கூட இவ்வளவு வண்டிகளைப் பார்க்க முடியவில்லை. அந்த அளவிற்குக் கிராம மக்கள் ஓடி ஒளியக்கூடிய அளவிற்கு காட்டு தர்பார் நடைபெறுகின்ற அளவிற்கு நமது கூட்டுறவு நாணயச் சங்க அதிகாரிகள் வசூல் செய்கிறார்கள். முன்பெல்லாம் ஒன்றிரண்டு பேர் போவார்கள், சம்பந்தப்பட்ட கிளார்க் போவார், அங்கு சென்று கடன் வாங்கியவர்களிடம் உட்கார்ந்து நயமாகப் பேசி வசூல் செய்வார்கள். அப்பொழுதெல்லாம் வசூலும் ஆகிக்கொண்டிருந்தது. ஆனால் இப்பொழுது இப்படி அதிகார தோரணையில் வசூல் செயயப் போகின்ற நேரத்தில்தான் அவர்களெல்லாம் ஒன்றுதிரண்டு தடுக்கின்ற அளவிற்கு நடைபெற்றிருக்கிறது.

என்னுடைய தொகுதியில் சர்வகட்சித் தலைவர்கள், சி.பி.ஐ. கட்சியைச் சார்ந்த நா. முத்தரசன், சி.பி.எம். கட்சியைச் சார்ந்த வழக்கறிஞர் இராஜமாணிக்கம், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த லட்சுமணன், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ஆலத்தாம்பாடி கணேசன் உட்பட 16 பேர் இப்படிப்பட்ட முறையில் காட்டு தர்பார் முறையில் வசூல் செய்ய வேண்டாமென்று கூடிப்பேசி, வரையறைக்குட்பட்ட முறையிலே வசூல் செய்யலாம் என்றும் சொன்னார்கள். கூட்டுறவுத் துறை

அதிகாரிகளிடம் ஜப்தி சம்பந்தமாகப் பேசியதற்கு வசூலைத் தடுத்ததாகச் சொல்லி காவல் துறை மூலம் வழக்கு போட்டார் கள். திருத்துறைப்பூண்டி தாலுக்காவில் உள்ள தலைவர்கள்மீது மன்னார்குடி தாலுக்காவில் வழக்கு போட்டு ஜாமினில் வரும் நிலை ஏற்பட்டது. இப்படி, அரசாங்கத்திற்கு கெட்ட பெயர் வர வேண்டுமென்று அதிகாரிகள் செய்கிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை. நான் எல்லா அதிகாரிகளையும் சொல்லவில்லை. ஆனால் இப்படி ஒரு சில அதிகாரிகள் விவசாயி களைப் புண்படுத்துகின்ற அளவிற்கு, வேதனைப்படுத்துகின்ற அளவிற்கு காட்டு தர்பார் முறையில் வசூல் செய்யக் கூடாது என்றுதான் சொல்கிறோமே தவிர மொத்தப் பணத்தையும் திரும்ப பெற்றுக் கொள்ள வேண்டாம் என்று சொல்லவில்லை. அப்படி எந்தக் கட்சியும் சொல்லமாட்டோம். அப்படி எந்தக் கட்சியும் விரும்பவில்லை ; அதிலும் குறிப்பாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில் பொதுவுடைமை என்பதுதான் ஒரு நாட்டு மக்களை வாழவைக்க முடியும் என்ற கொள்கையில் நம்பிக்கை கொண்ட கட்சி. கூட்டுறவுத் துறையின் மூலம்தான் உற்பத்தியைப் பெருக்க முடியும் என்ற கொள்கையைக் கொண்ட கட்சி. எனவே அந்த வசூலை செய்யக் கூடாது என்று நாங்கள் சொல்லவில்லை.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் 1980-ம் ஆண்டில், மத்திய சர்க்கார் சலுகைகளை வழங்காமல் இருந்தாலும் நாங்கள் கண்டிப்பாக விவசாயிகள் பிரச்னையைத் தீர்ப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். கடந்த காலங்களில் மாநில சர்க்கார் விவசாயிகளுக்குச் சலுகைகள் அளிக்கின்றபொழுதெல்லாம் மறைந்த பிரதமர் அவர்கள் அவர்களைப் பற்றி பேசக்கூடாது என்றாலும். அவர் கூட நேரடியாகக் கடிதம் எழுதி, நீங்கள் தமிழகத்தில் விவசாயிகளுக்குச் சலுகைகளை அளித்தால் எல்லா மாநிலங்களுக்கும் அந்த வியாதி பரவி விடும். ஆகவே தமிழ் நாட்டில் இப்படிப்பட்ட சலுகைகளை அளிக்கக்கூடாது என்ற மத்திய சர்க்கார் தொடர்ந்து கடிதம் எழுதிக் கொண்டிருந்தார் கள். ஆனால் அதையும் மீறி தமிழக அரசு 99 கோடி ரூபாய் அளவிற்கு விவசாயிகளுக்கு அரசு சலுகை அளித்ததை அன்றைக்கு நாங்கள் பாராட்டினோம். வரவேற்றோம். இன்றைக்கும் அதை வரவேற்கிறோம். ஆகவே, மத்திய சர்க்காரை மட்டும் காட்டிக் கொண்டிராமல், மத்திய சர்க்காரைக் காட்டிக்கொண்டு சும்மா யிராமல், தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த அமைச்சர்கள் இங்கே இருக்கிறார்கள். அரசு கொறடா அவர்கள் இங்கே இருக்கிறார் கள். அவர்கள் எல்லோருக்கும் அநேகமாகத் தெரியும். தஞ்சை மாவட்ட விவசாயிகள் தொடர்ந்து பத்தாண்டுகளாகக் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து இந்த ஆண்டு இப்பொழுதும் தண்ணீர் கிடைக்காத நிலைமை இருக்கிறது. தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு விவசாயத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை.





13394

மேலத் தஞ்சையைப் பொறுத்தவரையில் நிலக்கடலை அல்லது கிழங்குகளைத்தான் போடுவார்கள். மூன்று வருடங்களாக இயற்கை மாற்றத்தின் காரணமாகச் சரியான வசதிகள் இல்லாமல் கிழங்கும் சரியாகப் பயிராகவில்லை. நிலக்கடலையும் சரியாக இல்லை. மேலத்தஞ்சையைப் பொறுத்தவரையில் இந்த நிலைமை.

கீழத் தஞ்சையைப் பொறுத்தவரையில் நெல்லைத் தவிர வேறு எதையும் செய்யமுடியாது.

தஞ்சை மாவட்டம், திருச்சியில் ஒரு பகுதியும், தென்னார்க் காடு மாவட்டம் சிதம்பரத்திற்கு ஒட்டி ஒரு பகுதியும் காவிரியை நம்பி வாழும் விவசாயிகளைக் கொண்ட பகுதிகளாகும். பணப் பயிரைத் தவிர வேறு எந்த விவசாயத்தையும் அதிகமாகச் செய்யமுடியாத பூமியாக இருப்பதால் தமிழக அரசு இந்த ஆண்டு கருணைகூர்ந்து, இந்தக் காட்டு தர்பார் முறையில் வசூல் செய்து கெட்ட பெயரைத் தேடிக்கொள்ளாமல் அதை உடனடியாக நிறுத்த வேண்டும். போடப்பட்டிருக்கும் வழக்குகளையெல்லாம் உடனடியாக வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டும். கூடிய விரைவில் உயர்மட்டக்குழு எடுத்த முடிவுகளையும், சிபாரிசு களையும் அறிவிக்க வேண்டும். இந்தச் சபையிலேயே முதலமைச் சருடைய அனுமதி பெற்று அமைச்சர் அவர்கள் அறிவித்தால் விவசாயிகள் உண்மையிலேயே அரசாங்கத்தைப் பாராட்டுவார்கள் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லி, இந்தச் சலுகைகள் எல்லாம் உடனடியாக வழங்க வேண்டும், வரக்கூடிய ஆண்டிலே வேண்டுமானால் கொஞ்சம் காலம் கடந்து தந்தாலும், விவசாயி களுக்குக் காலதாமதம் இல்லாமல் கடன் கொடுத்து உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு சந்தர்ப்பம் அளித்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள கூட்டுறவுத் துறை மானியத் தின்மீது நான் சார்ந்துள்ள காந்தி காமராஜ் தேசிய காங்கிரசின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்று கூட்டுறவுச் சங்கம், கூட்டுறவு இணையங்கள், கூட்டுறவு வங்கி கள் ஆகியவைகளில் முறையான தேர்தல் நடைபெறாததால், சீராக இயங்கவில்லை. தனி அதிகாரிகள் நிர்வாகத்தில் ஊழல் மிகுந்து காணப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் அரசின் மானியத் தொகையை நம்பியே உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. கோடிக்கணக்கான மக்களின் வாழ்வோடு இணைந்த கூட்டுறவுத் துறை இன்று மக்களுக்காக இல்லாமல் யாரோ ஒரு சிலரின் நன்மைக்காக நடந்து வருவது போல் காட்சி அளிக்கின்றன. குறிப்பாக விவசாயிகளுக்குப் பல்வேறு கடன்கள் வழங்கப் படுகின்றன. அந்தக் கடன்கள் விவசாயிகளுக்குத் தேவையான

காலத்தில், தேவையான அளவில் வழங்கப்படவில்லை. இதனால் விவசாயிகள் நிரந்தரக் கடனாளியாகிவிட்டார்கள். எனவே சிறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன்களில் வட்டி மற்றும் அபராத வட்டிகளையும் தள்ளுபடி செய்து கடன் தொகையைத் தவணைகளில் வசூல் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கெடுபிடி வசூல்களை நிறுத்தி விவசாயிகளின் அன்றாடத் தேவைப் பொருட்களை ஐப்தி செய்வதை உடனடியாக நிறுத்த வேண்டும். என்னுடைய பகுதியில் ஐப்தி நடவடிக்கை எடுத்து விவசாய பம்பு செட்டுகள், மாட்டு வண்டி, சைக்கிள் போன்ற விவசாயப் பொருட்களை எல்லாம் ஐப்தி செய்து இருக்கிறார்கள். இதுபோன்ற நடவடிக்கைகள் விவசாய வளர்ச்சிக்கு வழிகோலாது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோன்று இராதாபுரம் தாலுகா வறட்சிப் பகுதியாக அறிவிக்கப்பட்டிருந்த நேரத்திலே அந்தப் பகுதியைச் சேர்ந்த விவசாய மக்கள் அங்கே கடன் வாங்கி, வாழை போட்டு, அந்த வாழை புயல் காற்றின் காரணமாகப் பல நஷ்டத்திற்கு உள்ளாக்கப்பட்டு, கிட்டத்தட்ட பல இலட்சம் ரூபாய் வாழை அங்கே நாசம் அடைந்திருக்கிறது. எனவே அந்த விவசாய மக்கள் வாங்கிய குறுகிய காலக் கூட்டுறவுக் கடன்களை நீட்டிக் கொடுத்து வசூல் செய்வதற்கு ஏற்பாடு செய்து தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்தில் பனை வெல்ல கூட்டுறவுச் சங்கங்கள் நிறைய இருக்கின்றன. அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பனைத்தொழில் புரிபவர்களுக்குக் குறைந்த நிலம் உடையவராக இருந்தால் மூன்றில் ஒரு பங்கு மானியத்துடன் கடன் வழங்கப் படுகிறது. ஆனால், அந்தக் கடன் தொகை உண்மையில் போய்ச் சேரவேண்டிய நபருக்குப் போய்ச் சேர்வதில்லை. அதிகாரிகளால் நியமிக்கப்பட்ட கூட்டுறவுக் சங்கத் தலைவர் தனக்கு வேண்டியவர்களையும் சில பினாமி பெயர்களையும் சேர்த்து கடன் தொகையைப் பெற்று, அரசை மோசடி செய்து வருகிறார்கள்.

இன்னும் சில இடங்களில் கடன் தொகையைப் பெற்று 3-ல் 1 பங்கு மானியத் தொகையை தலைவரே எடுத்துக் கொண்டு மீதம் உள்ள கடன் தொகையை மட்டும் கொடுக்கிறார்கள். பல கூட்டுறவுச் சங்கங்களில் வசதி உள்ளவர்களை மட்டும் உறுப்பினர்களாகச் சேர்த்து அவர்களுக்கு மட்டும் கடன் வழங்கப்பட்டுள்ளது. ஒரே வீட்டில், கணவன், மனைவி, பிள்ளைகள் ஆகியோர்கள் பெயரில் கடன் பெற்று ஒரு கடனைக் கொடுத்துவிட்டு, மற்றவர் பெயரில் வாங்கிய கடனைத் தலைவரே வைத்துக் கொள்கிறார். இவை அனைத்துக்கும் அதிகாரிகளும் உடந்தையாக இருந்து வருகின்றனர். இதனால் எந்தப் புகார்கள் கொடுக்கப்பட்டாலும் அதன்மீது நடவடிக்கை ஏதும் எடுக்கப்படுவதில்லை. புதிய உறுப்பினர்கள் சேர்க்கப் படுவதும் இல்லை.





(பிற்பகல் 12-50)

அதைப்போன்று பால் கூட்டுறவுச் சங்கம் மூலம் பசுமாடுகள் வழங்கப்பட மூன்றிலொரு மானியத்தில் கடன் வழங்கப் படுகிறது. அதிகாரிகள் மாடுகள் கரூர் சமீபம் உப்பிடமங்கலம் என்ற ஊரில்தான் வாங்கப்பட வேண்டும் என சொல்கிறார்கள். அந்த ஊரில் வாங்கப்படும் மாடுகளில் எந்த சங்க உறுப்பினருக்கும் லாபமில்லை. மேலும் பால் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்கள் வாரம்தோறும் செலுத்தும் கடன் தொகையை தலைவர் வங்கியில் செலுத்தாமல் இருப்பதால் உறுப்பினர்கள் கடனுக்கு பொறுப்பாகிறார்கள். மேலும் குறிப்பிட்ட அளவு கடன் செலுத்தியபின் இரண்டாவது மாடு கடனில் பெறலாம். இதையும் பெறமுடியாமல் பால் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் நிரந்தர கடனாளிகளாக உள்ளனர். எனவே இதனை உடனடியாகக் கவனித்து நடவடிக்கை எடுத்து சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி வரண்ட பகுதியாக இருப்பதாலும் பனை மரங்கள் நிறைந்த அளவில் இருப்பதாலும் பனை ஓலைப் பொருள்கள் தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து பாய் முடைதல், பெட்டி முடைதல், கூடை பின்னுதல் ஆகிய தொழில் செய்பவர்களுக்கு கடன் வழங்கி, அப்பகுதி ஏழைப் பெண்களுக்கு வாழ்வளிக்க தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் சின்னராணிபுரம் என்ற ஊரில் தென்னை ஓலையில் கீற்று முடையும் தொழில் மட்டுமே செய்து வருகின்றனர். 100 கீற்றுகள் முடைய நான்கு ரூபாய் கூலியாகப் பெறுகின்றனர். இதனால் இவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழேயே நிரந்தரமாக உள்ளனர். எனவே, இவர்களுக்கு ஓர் கூட்டுறவு சங்கம் அமைத்து, வங்கி மூலம் கடன் வழங்கி இவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

நுகர்பொருட்கள் வழங்கும் பொறுப்பினை கூட்டுறவுச் சங்கங்களிடமும் பல இடங்களில் வழங்கியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இதில் கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். பெரும் பகுதி பொருட்களை கறுப்பு மார்க்கெட்டில் விற்றுவிடுகின்றனர். எங்கள் பகுதியில் மண்ணெண்ணெய் கறுப்பு மார்க்கெட்டில் மட்டும்தான் கிடைக்கிறது.

அதுமட்டுமல்ல. கண்ட்ரோல் விலை துணிகள் இருப்பதுகூட மக்களுக்குத் தெரியாது. எனவே கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை சீரமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் ஒரு தொகுதியிலுள்ள கூட்டுறவுச் சங்கம் வேறு தொகுதியில் கிளைக்கடை திறந்து இத்தகைய நிர்ணயிக்கப்பட்ட பொருள்

களை கள்ள மார்க்கெட்டில் விற்றுவருகிறார்கள். அதைத் தடுக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காய்கறி பயிரிடுவோர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டு சத்துணவு மையங்களுக்கு விநியோகம் செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. நோக்கம் நல்லதுதான். ஆனால் என்னுடைய பகுதியிலே உள்ள காய்கறி பயிரிடுவோர் கூட்டுறவுச் சங்கத்தில் எந்த காய்கறி பயிரிடும் விவசாயியும் உறுப்பினராக இல்லை. மேலும் காய்கறிகள் மார்க்கெட்டில் விலைக்கு வாங்கி மார்க்கெட் ரேட்டைவிட கூடுதல் விலைக்கு கொடுக்கப்பட்டு வருகிறது. எனவே இத்திட்டத்தின் நோக்கம் நிறைவேறவில்லை. சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு தரமான காய்கறிகளும் கிடைக்கவில்லை. நியாயமான விலையிலும் கிடைக்கவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவு வங்கிகள் நகை ஈட்டுக் கடன் வழங்குவதில் தாராளம் காட்ட வேண்டும். விவசாயி தனது அவசர காலத்தில் தான் நகையை எடுத்துக் கொண்டு ஓடோடி வருவான். அந்நேரம் வங்கியில் பணமில்லை என்பார்கள். இந்த நிலை மாறி எந்த நேரத்திலும் நகைக் கடன் வழங்க உத்தரவிட வேண்டும். எனவே, கூட்டுறவுத் துறையில் புகுந்து விட்ட இக்குறைகளை களைய உடனடியாக தேர்தல்களை நடத்த வேண்டும்; அதிகாரிகளின் வரம்பற்ற அதிகாரத்தைக் குறைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தணிக்கை வேறு துறையினரைக் கொண்டு நடத்தவேண்டும் எல்லா கூட்டுறவுச் சங்கங்களையும் ஒழுங்குபடுத்தி குறைகளை கலைந்து சீராக்க வேண்டும். கூட்டுறவின் பயன்களை மக்கள் அடைய வேண்டும். அவ்வகையில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. என்.எஸ்.வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். ஆர். அவர்களால் இந்த மாமன்றத்தில் கொண்டு வரப்பட்டிருக்கிற கூட்டுறவு மானியத்தின்மீது எங்கள் கட்சியின் சார்பிலே கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்தும், எங்கள் கட்சியின் சார்பிலே பேசிய கருத்துக்களை ஆதரித்தும், என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

பொதுவாக கூட்டுறவுத் துறை முதலாளித்துவத்திற்கும் சம்யூனிசத்திற்கும் இடைப்பட்டு இருக்கிற துறை என்று உலகத்

தில் கருதப்படுகிறது. நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் கூட்டுறவு இயக்கம் மக்கள் மத்தியில் ஒரு கடுமையான விமரிசனத்திற்கு உள்ளாகி இருக்கிறது.

அந்த அளவிற்கு இந்தத் துறை இன்றைக்கு உள்ளாகி இருக்கின்றது. நீண்ட நெடு நாட்களாக எதிர்பார்க்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் இன்னும் நடக்காத காரணத்தால் பல இடங்களில் அவை அதிகாரிகளின் சாம்ராஜயங்களாக மாறி இருக்கின்றன என்பதை எதிர் வரிசையில் பேசியிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

தமிழகத்தில் கடந்த பல ஆண்டுகளாகவே கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கின்ற நேரத்தில் தொடர்ச்சியாக வசூல் செய்யப்படாமல் திடீரென்று வசூலிலே கெடுபிடி செய்வதன் காரணத்தால் விவசாயப் பெருங்குடி மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்ற அல்லல்களும், அவலங்களும், துன்பங்களும், துயரங்களும் பற்றி எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

1968-69 லே நமது மாநிலத்திலே ஏதாவது ஒரு பகுதியிலே வறட்சி அல்லது வெள்ளத்தால் பாதிப்பு என்பது ஏற்பட்டுக் கொண்டு வருகின்றது என்பதை நாம் நன்றாக உணர்வோம். சில ஆண்டுகளில் சில பகுதிகளில் பாதிப்பு ஏற்படுகின்றன. வேறு சில ஆண்டுகளில் வேறு சில பகுதிகளில் பாதிப்புகள் ஏற்படுகின்றன. அவ்வாறு பாதிப்பு ஏற்பட்டு அதிகமான அளவில் சாகுபடிப் பரப்பு பாதிக்கப்பட்டதன் காரணத்தால் கடன்பெற்ற விவசாயிகளால் அதனைத் திருப்பித் தரும் சூழ்நிலை குறைகிறது என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். கூட்டுறவுக் கடன்களைத் திரும்பச் செலுத்தத் தவறியதன் காரணத்தால் சாகுபடிப் பணிகளைச் செய்ய புதிய கடன்களைப் பெறுவதற்கான வகையில்லாமல் அந்தவகையில் புதிய கடன்களைப் பெறுவதற்கான தகுதியினை அவர்கள் இழந்துவிடுகிறார்கள் என்பதை நாம் நன்றாக அறிவோம்.

சில ஆண்டுகளுக்கு முன்பு வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிர்க் கடன் மத்திய காலக் கடனாக மாற்றப் பட்டது. தமிழக அரசால், சாகுபடி செய்வதற்கு புதிய கடன்கள் வழங்கப்பட்டன. ஆனால் அடுத்தடுத்து இயற்கை பாதிப்பு ஏற்பட்டபோது மத்திய காலக் கடன் தவணைகள் நீட்டிக்கப் பட்டு மாற்றுக்கடன்களாக ஆக்கப்பட்டன. இவற்றின் நிலைமை அதிகமாக இருந்ததால் பிறகு சிறிது சிறிதாகத் தவணைகளைச் செலுத்த அனுமதிக்கப்பட்டது. நிலவள வங்கியைப் பொறுத்த வரையில் நீண்டகாலக் கடன்கள் ஒத்திவைக்கப்பட்டன. தொடர்ந்து வறட்சி நிலை நீடித்த காரணத்தால் கடன்

சலுகைகளை நம்முடைய அரசு அறிவித்தது. அந்த வறட்சி தொடர்ந்த காரணத்தால் விவசாயிகளின் நிலை அபிவிருத்தி அடையவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். கடன்கள் வழங்குவதில் சிறு விவசாயிகள், ஏனைய விவசாயிகள்என்ற வேறுபாடு அளவுக்கு அதிகமாகப் பார்க்கப்படுகின்றது, என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நிலவள வங்கியைப் பொறுத்தவரையில் நீண்டகாலக் கடன்களுக்கும் வேளாண்மைக் கடன்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கின்ற குறுகிய காலக் கடன்களுக்கும் வேறுபாடு அதிகமாகக் காட்டப்படுகின்றது. 31-3-80 வரை மத்திய காலக் கடன் தவணை குறித்த மாற்றுக் கடன் போன்றவற்றைப் பொறுத்த வரையில் சிறு விவசாயிகளுக்கு மட்டும் தள்ளுபடி செய்யப்பட்டது என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் நஷ்டங்களும் கஷ்டங்களும் அத்தனை விவசாயிகளுச்கும்தான் ஏற்படுகின்றது. எனவே சிறு விவசாயிகளுக்கும் எனைய விவசாயிகளுக்கும இந்தச் சலுகை ஒட்டுமொத்தமாக வழங்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஆனால் எனைய விவசாயிகளுக்கும் வட்டிச் சலுகைகூட வழங்கப்படவில்லை, நிலவள வங்கியைப் பொறுத்தவரையில் 1975-ஆம் ஆண்டிலே வழங்கப்பட்ட ஒன்றரைச் சதவீத அபராத வட்டிச் சலுகை தவிர வேறு ஒன்றும் வழங்கப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே சொல்ல விரும்புகிறேன், இது தவறு என்று சொன்னால், சொல்லுங்கள் ஏற்றுக்கொள்கிறேன்.

பயிர்க்கடன் பெற்ற சிறு விவசாயிகளுக்கு சாதாரண வட்டி, அபராத வட்டி தள்ளுபடி போன்ற சலுகைகளைப் பொறுத்த வரையில் ஏனைய விவசாயிகளுக்கு வெறும் அபராத வட்டித் தொகை தள்ளுபடி மட்டுமே வழங்கப்பட்டது. ஆனால் நீண்ட காலக் கடன் சலுகை அளிக்கப்படவில்லை. கடன் தவணைகளைத் திரும்பச் செலுத்துவதில் உள்ள 2 சதவீத வட்டிச் சலுகை வழங்கப் பட்டது. ஆனால் அந்தச் சலுகை வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில் கடன் பெற்ற சிறு விவசாயிகளுக்கு மட்டுமே பொருந்துமே தவிர நிலவள வங்கியில் கடன் வாங்கிய சிறு விவசாயிகளுக்குப் பொருந்தவில்லை. செப்டம்பர் 74-லே தவணைத் தொகையைத் திரும்பச் செலுத்தியும் நிலவள வங்கியிலே கடன் பெற்றவர்களுக்கு, சிறு விவசாயிகளுக்கு அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால் வேளாண்மைச் சங்கத்திலேயிருந்து பயிர்க்கடன் பெற்றவர்களுக்கு எந்தவிதமான சலுகையும் அளிக்கப்படவில்லை. இந்தக் குறைகள் களையப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பெருத்த பயிர்ச்சேதமும் வறட்சிச் சூழ்நிலைகளும் ஏற்பட்டதன் காரணத்தால் விவசாயப் பெருமக்கள் பெரிதும் வாடிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே உங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன். குறுகிய காலப் பயிர்க்கடன் பெற்றவர்



களுக்கு நிலுவையிலுள்ள மத்திய காலக் கடன் அத்தோடு தவணை கடந்த மாற்றுக் கடன் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் சாதாரண வட்டி, அபராத வட்டி ஆகியவற்றைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதிலே சிறிய விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்ற பாகுபாடு இல்லாமல் அனைத்து விவசாயிகளுக்கும் சாதாரண வட்டியும், அபரத வட்டியும் தள்ளுபடி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

இதைத்தான் இந்த எதிர்க்கட்சி வரிசையில் இருக்கின்ற மாண்புமிகு நண்பர்கள் கேட்டனர். அசல் பாக்கியை 5 ஆண்டுகளில் திரும்பச் செலுத்துவதற்கு அனுமதிக்கவேண்டும். அப்படித் திரும்பச் செலுத்துகின்றபோது சிறு விவசாயிகளுக்கு வட்டியை வசூலிக்கக் கூடாது. ஏனைய விவசாயிகளுக்கு நெபாட் நிறுவனம் எந்த அளவுக்கு வட்டியை வசூலிக்கிறதோ அந்த அளவுக்குத் தொகையை வசூலிக்கவும் அப்படி இருதரப்பு விவசாயிகளுக்கும் வட்டி, அபாரத வட்டி, ஆகியவற்றைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு சங்கங்களுக்கு ஏற்பட்டுள்ள வட்டி இழப்பை அரசாங்கம் இதற்கு முன்னாலே செய்தது போல மானியமாகவும் உரமாகவும் கொடுக்கலாம் என்ற யோசனையை தெரிவிக்க விரும்புகிறேன். கடனை முழுவதுமாக செலுத்துகின்ற விவசாயிகளுக்கு புதிய கடனை வழங்குங்கள். அப்போதுதான் அவர்கள் மறுபடியும் கடனை வாங்கிய செய்து, அதன் மூலமாகப் பணம் பெற்று விவசாயம் வாங்கிய கடனைச் செலுத்துவார்கள். ஆகவே ஒரு தவணை கடனைக் கட்டத் தொடங்கினால்கூட அவர்களுக்கு புதிய கடனை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பயிர்க் கடன்களைப் பொறுத்த அளவிலே 30—6—74லே இயற்கையின் பாதிப்புக்கு உள்ளான விவசாயிகளின் கடன்களைப் பொறுத்த வரையில் சாதாரண வட்டி, அபராத வட்டி ஆகியவைகளில், அபராத வட்டியை முழுவதும் தள்ளுபடி செய்ய வேண்டும். அசலையும் சாதாரண வட்டியையும் 5 ஆண்டு தவணைகளில் வசூல் செய்யவேண்டும். அதிலே சிறு விவசாயிகளுக்கு வட்டி வசூலிக்கப்படக் கூடாது என்று முன்னமேயே சொல்லியிருக்கிறேன். அத்தோடு கூட்டுறவுத் துறையிலே தவணைகளை நிர்ணயம் செய்கிற முறையிலே டிசம்பர் 31 ஆம் தேதி அன்று தேதியை நிர்ணயிக்கிறார்கள். வறட்சியால் பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகளுக்கு பயிர்கடன்களை முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும். ஏற்கெனவே கட்டிய தொகையையும் திரும்பக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீண்டகாலக் கடன்களைப் பொறுத்தவரையில் கெடு தவறிய கடன்களைப் பொறுத்தவரையில் சாதாரண வட்டி, அபராத வட்டி ஆகியவற்றில், தவணை முழுமைப் பணத்தையும் குறுப் பிட்ட காலத்திற்குள் செலுத்தப்படுமானால் எல்லா வட்டியை யும் ரத்து செய்யவேண்டும் என்ற யோசனையை நான் சொல்ல விரும்புகிறேன்.

இதற்கு முன்னாலே இந்தப் பக்கத்திலேயிருந்து பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கிராமப்புறங்களில் விவசாய பெருங்குடி மக்களிடம் வட்டி வசூலிக்கச் சென்ற அதிகாரிகள் எந்த அளவு கெடுபிடியைக் காட்டினார்கள் என்பது பற்றி பேசினார்கள். கிராமத்திலே இருக்கிற விவசாயிகள் அளவிலே லஞ்சம் இருப்பதாகச் சொல்ல முடியாது. சொல்லப்போனால் சாயம் போகாத ஒரே தொழில் விவசாய தொழில்தான். அவர்கள் என்ன செய்வார்கள்? இல்லாத குறைதான். தொடர்ந்து பருவ மழை பொய்த்து வருகிற காலத்தில், இடு பொருள்களின் விலை கூடி வருகிற காரணத்தினால், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கும் குறிப்பிட்ட அளவுக்கு விலை கிடைக்காத காரணத்தினால், அவர்கள் ஆண்டு முழுவதும் கடனிலே வாழ்கிறார்கள்.

கடனிலே பிறந்து கடனிலே வளர்ந்து கடனாளியாகவே மடிய வேண்டிய ஒரு கொடுமையான நிலை இருக்கிற காரணத்தினால் தான் அவர்களால் கொடுக்க முடியவில்லை. ஆனால் அந்த விவசாயிகளிடத்திலே கடன் வசூல் செய்யப் போகிற அதிகாரி கள் ஏதோ கள்ளக் கடத்தல்காரர்களைப் பிடிப்பது போல, கொலைக் குற்றம் செய்தவர்களைப் பிடிப்பது போல, சமுதாயத் திலே கேவலமான தொழில் செய்பவர்களைப் பிடிக்கப் போவது போல நிறைய வேன்களிலே போய் மிரட்டுகிறார்கள். எனக்கு ஏற்படுகிற பயமெல்லாம் அத்தனை செலவுகளும் சேர்ந்து மறுபடியும் அவர்கள் தலையிலேயே போய் முடியுமே என்றுதான், எத்தனை லாரிகள், எத்தனை வேன்கள், போலீஸ் பந்தோபஸ்து கள், இவை எல்லாம் அந்த விவசாயிகளின் தலையிலே தானே போய் விழுகிறது.

ஆகவே முழுமையாக கடனையே திருப்பிச் செலுத்த வேண்டாம் என்று சொல்லுகிற கட்சியைச் சார்ந்தவர்கள் அல்ல நாங்கள். செலுத்த வேண்டும், செலுத்தினால்தான் அரசாங்கம் சரியாக இயங்க முடியும். அதெல்லாம் சரிதான். ஆனால் அவ்வளவு நாட்கள் வசூலிக்காமல் இருந்து விட்டு, திடீரென்று ஒரு நேரத்தில் போய் வசூலைச் செய்தால் எப்படி அவர்களால் கொடுக்க முடியும்? அறுவடைக் காலத்தில் போய் கேட்க வேண்டும். இப்போது அவர்களுக்கே பணம் தேவைப்படும் நிலை. எப்படிக் கொடுப்பார்கள்? அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மேட்டூரிலே தண்ணீர் வருகிறது என்று சொல்கிறார்கள்.



பருவ மழை பெய்ய ஆரம்பித்து இருக்கிறது. நம்பிக்கை வேண்டும் நம்பிக்கையின் அடிப்படையில்தான் வாழ முடியும் என்று சொன்னார்கள்:

ஆனால் விவசாயிகளுக்கு பணம் தேவைப்படும் நேரத்திலே போய் வசூல் செய்தால் எங்கேயிருந்து கொடுப்பார்கள்? எதிலிருந்து கொடுப்பார்கள்? அதனால் ஜப்தி என்ற பெயராலே வசூல் செய்யக்கூடாது. என்னுடைய கட்சியிலேயிருந்து இது குறித்து எனக்கு நிறைய விவரங்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அவைகளையெல்லாம் நான் படித்தால் காலம் அதிகம் ஆகும் என்ற காரணத்தினால் நிறுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் மூலமாக அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்வது தயவுசெய்து, அருள் கூர்ந்து உடனடியாக ஜப்தி நடவடிக்கையை நிறுத்துங்கள். இன்றைக்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கூட வசூல் செய்கிறார்கள். ஆனால் ஜப்தி நடவடிக்கை எடுப்பதில்லை. ஆகவே வசூல் செய்வதில் ஒரு முறை வைத்து செய்யுங்கள். நான் நல்ல வசதியுள்ளவர்களுடமிருந்து வாங்க வேண்டாம் என்று சொல்லமாட்டேன். வேறு தொழிலை செய்பவர்களுக்கு கடனை கொடுக்கக்கூடாது என்று சொல்லவில்லை, அவர்களிடம் வசூல் செய்வதில் இது மாதிரி செய்யாதீர்கள் என்று சொல்ல வில்லை. ஆனால் விவசாயத்தையே நம்பி இருக்கிற விவசாயி களிடத்தில் கெடுபிடியில் வாங்க வேண்டாம் என்று சொல்கிறேன்.

10 ஏக்கருக்கு மேலே வைத்திருந்தால் வசூல் செய்யலாம் என்று சொல்லுகிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர் களைக் கேட்கிறேன். 10 ஏக்கர் வைத்திருப்பவர்கள் வசதி உள்ளவர்களா? உச்சவரம்பு சட்டம் வந்த பிறகு எங்கே பணக் காரர்கள் இருக்கிறார்கள் கிராமத்தில்? தமிழகம் பூராவும் நிலையை எண்ணிப் பார்த்துச் சொல்லுங்கள்? 2, 3 தலை முறையாக 5 ஆண்டு 10 ஆண்டுகளாக வளர்ந்த நிலையில் எந்த கிராமமாவது இருக்கிறதா? விவசாயமே செய்ய முடியாமல், காய்ந்துக்கொண்டிருக்கிற கிராமங்களைப் பார்க்கிறோமே தவிர, எந்தக் கிராமம், வளர்ந்த நிலையில் இருக்கிறது? ஆகவே நான் கேட்டுக்கொள்வது இதற்காக ஜப்தி நடவடிக்கை நிறுத்த வேண்டும். இந்த கடனுக்கான வட்டி அபராத வட்டியும் சேர்த்து 5 தவணைகளாக கொடுக்க வேண்டும். நிச்சயமாக அவர்களும் திருப்பிக் கொடுப்பதற்கு தயாராக இருப்பார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இளைய அமைச்சர், மாண்புமிகு முதல்வர் அவர்களோடு தொடர்பு கொண்டவர், எங்களுடைய கட்சியின் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் மரியாதைக்குரிய பழனியாண்டி அவர்களும், திரு. சுப்பிரமணியன் அவர்களும் முதலமைச்சரை சந்தித்து இதுபற்றி பேசியிருக்கிறார்கள். ஏனைய கட்சித் தலைவர்களும் பேசியிருக்கிறார்கள். மாண்புமிகு

[திரு. என்.எஸ்.வி. சித்தன்] [1985 ஜூன் 28

கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களையும் பார்த்து பேசியிருக்கிறார்கள். நான் எண்ணிப் பார்க்கிறேன். அமைச்சர் அவர்கள் இதில் ஏதாவது செய்யவேண்டுமென்று எண்ணுகிறார்கள் என்று எண்ணுகிறேன். ஆனால் அதே நேரத்தில் வருகிற அளவிற்கு பணம் வரட்டும், வசூல் நடக்கிற அளவிற்கு நடக்கட்டும். ஜப்தி நடவடிக்கைகள் தொடரட்டும் என்று சொன்னால் அது நல்ல கொள்கையாக இருக்காது. இந்த அரசு அதை கடைபிடிக்கக் கூடாது. உடனடியாக இன்றைக்கு அறிவிப்பைச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். இந்த மானியக் கோரிக்கை விவாதத்தில் பதில் சொல்லுகிறபோது அமைச்சர் அவர்கள் ஒரு வேளை பதில் சொன்னாலும் சொல்லலாம். அப்படிச் செய்து தமிழக விவசாயிகள் வயிற்றில் பாலை வார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக அபராத வட்டி, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் அபராத வட்டி இல்லை, உறுப்பினர் ஒருவர் சொன்னார்கள் மேற்கு வங்கத்திலும் இது இல்லை. ஆகவே இதனை தள்ளுபடி செய்து விவசாயிகளுக்கு நல்ல சூழ்நிலையை உருவாகக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு முன்னால் இந்த அரசு செய்திருக்கிறது. நான் மறுக்கவில்லை. ஆனால் விவசாயிகள் மத்தியில் நிறைய எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. தொடர்ந்து வரட்சியாலும், புயலாலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தினிடம் எல்லா கட்சியினரும் சொன்னோம். விவசாயிகள் அதிகமாக எதிர்பார்க்கிற காரணத்தால் அந்த அறிவிப்பை அமைச்சர் அவர்கள் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நமக்கு தெரியும், அண்மையில் கூட கூட்டுறவுத் துறையில் பணியாற்றுகிற பணியாளர்களுக்கு 100 கோடி அளவிற்கு சம்பளத்தை உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். அதை அரசாங்கம் தாங்க முடிகிறதென்றால், ஏன் விவசாயிகளுக்கு கொடுக்கக் கூடாது? அவர்கள் வயலிலேயே நாள் முழுவதும் இருக்கிறவர்கள். அவர்கள் சேற்றிலே கால் வைக்கவில்லை என்றால் நாம் சோற்றிலே கை வைக்க முடியாது. அந்த விவசாயிகளுக்கு ஏன் கொடுக்கக்கூடாது என்று கேட்காமல் இருக்க முடியவில்லை.

அதே நேரத்தில் மீனவர்களுக்கு 4 சதவிதத்தில் கடன் கொடுக்கிறோம். கைத்தறி நெசவாளர்களுக்கு 7 சதவிதத்தில் கடன் கொடுக்கிறோம். ஆனால் இந்த விவசாயிகளுக்கு மட்டும் 12 சதவீத வட்டி. ஆறுமாதத்திற்குமேல் போனால் 2 சதவீத வட்டி கூட வரும். நான் இப்படி சொல்வதால் மீனவர்களுக்கு நெசவாளர்களுக்கு சலுகை கொடுக்கக் கூடாது என்று சொல்லவில்லை. யாரும் கோபித்துக் கொள்ளக் கூடாது. தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது, விவசாயிகளுக்கு 16 சதவீதம் வட்டி போடுகிறதால் அவர்களால் அதிலிருந்து மீண்டு வர முடியவில்லை என்றுதான் சொல்கிறேன். அமைச்சர் அவர்கள் அவர்களிடத்தில் கருணை காட்ட வேண்டும்.



1985 ஜூன் 28] [திரு. என். எஸ். வி. சித்தன்]

நம்முடைய முன்னாள் சபாநாயகர் முனு ஆதி அவர்கள் தலைமையில் உயர்மட்டக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அந்த குழு அறிக்கை ஒன்றை அளித்திருப்பதாக அறிகிறேன் அதனுடைய அறிவிப்பை சபைக்கு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது உங்களால் அமைக்கப்பட்ட குழு, அந்தக் குழு கொடுத்திருக்கிற சிபார்சுகளை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டாமா? அப்படி ஏற்றுக் கொண்டால் விவசாயிகள் எதிர்பார்க்கிற பல சலுகைகளைக் கொடுக்க முடியும். உங்களால் அறிவிக்க முடியும். அறிவிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்து முன்னாலே சொன்னதைப்போல பல்வேறு காலக் கட்டங்களில் விவசாயிகளுக்கு நிவாரணம் அளிப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 1980-ம் ஆண்டில் முன்னாள் முதலமைச்சர் பிறந்த நாளில் பேசுகிறபோது விவசாயிகள் கொடுக்கவேண்டிய 240 கோடி ரூபாயை 5 ஆண்டுகளில் தள்ளுபடி செய்வதாக அவர்கள் பேசி, 16—8—1980-ம் நாள் இந்துப் பத்திரிக்கையில் அது வந்திருக்கிறது. மராட்டிய மாநிலத்தில் கூட 18—10—79 அன்று சரத்பவார் அவர்களால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பல சலுகைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல 16—1—85 அன்று கர்நாடக மாநிலம்கூட பல்வேறு சலுகைகளை அறிவித்து இருக்கிறார்கள், இன்று காலையில் கூட வானொலி மூலம் கேள்விபடுகிறேன். பாண்டிச்சேரி அரசு கூட விவசாயிகளுக்கு நல்ல அறிவிப்பை அளித்திருக்கிறது. நம்முடைய அரசு விவசாயிகளுக்கு தன் பங்கிற்கு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய ஆளும்கட்சி உறுப்பினர் இராமலிங்கம் அவர்கள் ஒரு வினாவை கொடுத்தார்கள். எங்கோ போய்விட்டார் என்று நினைத்தேன், நல்லவேளையாக வந்துவிட்டார். சொன்னார்கள். விவசாயிகளுடைய கடன் பாக்கிகளை வசூல் செய்வதில் மட்டும் சொல்கிறீர்களே, தேசிய வங்கிகளின் மூலம் வாங்கிய கடன்களையும் ஏன் தள்ளுபடி செய்யக்கூடாது என்று சொன்னார்கள். ஒரு வாதத்திற்கு தப்பித்துக் கொள்வதற்கு இன்னொரு வாதத்தை உருவாக்குவது முறையாகாது என்பது அவர்களுக்குத் தெரியும். தேசிய வங்கிகளில் வாங்கிய கடனை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் அது விவாதத்தை திசைத் திருப்புவதாக அமையுமென்று எணணுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. எனக்கு முன்னாலே பேசிய பொதுவுடமை கட்சி உறுப்பினர் வீரய்யன் அவர்கள் கூட சொன்னார்கள். அபராத வட்டி மேற்கு வங்கத்தில் இல்லையென்று சொன்னார்கள்.

டாக்டர் கே. பி, இராமலிங்கம் : உறுப்பினர் அவர்களுக்கு
தெரிவிக்க விரும்புகிறேன். விவசாயிகளுக்கு தமிழக அரசு மூல
மாக, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்கப்பட்ட கடன்களை
தள்ளுபடி செய்யவேண்டுமென்று சொல்லும்போது, அதே நேரத்
தில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் வழங்கியிருக்கிற விவ
சாயக் கடன்களை தள்ளுபடி செய்ய எங்களுக்கு ஆதரவாக
மத்திய அரசை நீங்கள் வலியுறுத்துவீர்களா என்ற கேள்வியைத்
தான் கேட்டேன். ஆகவே வாதத்தை திசைத் திருப்புவதற்
காக இல்லை. நீங்கள் அந்தக் கூற்றை ஒப்புக் கொள்கிறீர்
களா என்றக் கூற்றைத்தான் கேட்டேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : அரசு வழங்கிய கடன்களை
தள்ளுபடி செய்வது என்பது வேறு. தேசியமய
மாக்கப்பட்ட வங்கிகள் வழங்கிய கடனைத் தள்ளுபடி
செய்வது என்பது வேறு நம்முடைய அரசு க்ஷேமநல அரசு.
தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இருக்கிற பணம் மக்கள்
டெபாசிட்டாக கொடுத்திருக்கிற பணம். அவை ரிசர்வ் வங்
கியின் நேரிடை கண்ட்ரோலில் இருக்கிறது. நம்முடைய அரசைப்
பொறுத்தவரையில் நாம் செய்வதற்கு வாய்ப்பிருக்கிறது.
ஆனால் இந்த தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே ஜப்தி என்ற
பெயராலே விவசாயிகளைக் கொடுமைப்படுத்துவது இல்லை
என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகை
யினாலே இந்த விவாதத்தைச் சொல்லி அதனாலே வசூல்
செய்யக் கூடாது. விவசாயிகளைப் பொறுத்தவரையிலும். கடன்
சுமையைக் குறைப்பதிலே எல்லோரும் ஒரே கருத்திலே இருக்கி
றோம் அந்தக் கருத்திலே நாங்கள் என்றைக்கும் உங்களுக்கு
உறுதுணையாக இருப்போம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1–10)

அதேபோல் நம்முடைய கொள்கைக் குறிப்பிலே 12வது பக்
கத்திலே தவணை தவறிய கடன்கள் என்ற தலைப்பில், 1985
ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதியன்று, சேவைக்
கூட்டுறவு சங்கங்களுடைய நிலுவை பாக்கி 67.9 விழுக்காடு
என்றும், நிலவள வங்கிகள் மூலமாக அன்றைய தினம்
இருக்கின்ற நிலுவை 75.1 விழுக்காடு என்றும் குறிப்பிட்டு இருக்
கிறார்கள். நான் உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக்
கேட்டுக்கொள்கிறேன், சதவீதத்தை மட்டும் கொடுத்து இருக்
கிறீர்கள், கடன் பாக்கி எவ்வளவு என்று துல்லியமாக ஏன்
சொல்லவில்லை. சொல்லியிருக்கலாம் அல்லவா? சதவீதத்தை
மட்டும் வைத்து என்ன பார்க்க முடியும். அதைக் கொடுக்கின்ற
இந்த இலாக்கா, இதையும் கொடுத்திருந்தால் பேசுவதற்கு எங்
களுக்குத் துணையாக இருக்கும். இதைச் சொல்வதிலே
உங்களுக்கு என்ன சிரமம் இருக்கிறது என்பது தெரியவில்லை.
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, இதற்கு
பதில் சொல்வார்கள் என்று கருதுகிறேன். எவ்வளவு கடனாக





இருக்கிறது, வட்டியாக எவ்வளவு இருக்கிறது, அபராத வட்டி
யாக எவ்வளவு இருக்கிறது, குறுகிய காலக் கடன், நீண்ட காலக்
கடன் எவ்வளவு இருக்கிறது என்பதைக் கொடுத்தால் எங்களுக்கு
பேசுவதற்குத் துணையாக இருக்கும். எனவே மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் சொல்கின்ற நேரத்தில் இதற்கும் பதில்
சொல்வார்கள் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக பயிர் ஈட்டுறுதித் திட்டம் சம்பந்தமாக கடந்த
ஆண்டிலே கொடுக்கப்பட்டு இருக்கின்ற கொள்கைக் குறிப்பிலே
1979ஆம் ஆண்டு முதல் இது வரையில் 10,016 ஏக்கர் நிலத்தில்
உள்ளபடியாக சராசரி விளைச்சல் பொது ஈட்டுறுதிக் கழகம்
நிர்ணயித்துள்ள அளவிற்கும்கீழ் குறைவாக இருந்தபோது,
6,059 விவசாயிகளுக்கு 9.89 லட்சம் ரூபாய் அளவிற்கு இழப்புத்
தொகை தரப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டிருந்தார்கள்.
இந்தத் திட்டம் 1984ஆம் ஆண்டு நிலக்கடலைப் பாசனப் பயிருக்
கும் விரிவாக்கப்பட்டு உள்ளது என்று 1984ஆம் ஆண்டு கொடுத்
திருந்த கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். ஆனால்
இந்த ஆண்டு கொள்கைக் குறிப்பைப் படித்துப் பார்த்தேன். கடந்த
ஆண்டு சொன்னதைப் போலவே, ''1979-80ஆம் ஆண்டு முதல்
இதுவரையில் 10,016 ஏக்கர் நிலத்தில் உள்ளபடியான சராசரி
விளைச்சல் பொது ஈட்டுறுதிக் கழகம் நிர்ணயித்துள்ள அளவிற்
கும் கீழ் குறைவாக இருந்தபோது, 6,059 விவசாயிகளுக்கு 9.89
இலட்சம் ரூபாய் அளவிற்கு இழப்புத் தொகை தரப்பட்டுள்ளது
என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

சில கடைகளிலே போர்டு எழுதி வைத்திருப்பார்கள். இன்று
ரொக்கம் நாளை கடன் என்று. இது இன்றைக்கும் இருக்கும்,
நாளைக்கும் இருக்கும், நாளை மறு நாளும் இருக்கும். அதைப்
போல இந்த பயிரீட்டுறுதித் திட்டம் என்ற தலைப்பிலே ஒரு
விவரத்தைத்தான் தர வேண்டுமா? இரண்டு வார்த்தையை
மாற்றிக் கொடுக்கக் கூடாதா? போன வருஷமும் கொடுத்த
அதே 9.89 லட்சம் வந்திருக்கிறது. இந்த வருஷம் அந்தப் புள்ளி
விவரம் மாறாதா? இதை யாரும் படிக்கவில்லை என்று நினைக்
கிறார்களா பயிர் ஈட்டுறுதித் திட்டப் பணிகளை
செய்யவில்லையா? எனவே அமைச்சர் அவர்கள்
பதில் சொல்லுகின்றபோது, இதற்கும் பதில் சொல்வார்
கள் என்று நினைக்கிறேன். அதிலேகூட நம்முடைய
அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு பேசியபோது, பெருமை
யாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் பேசுகின்ற நேரத்தில்
இந்த ஆண்டு, இந்த நிலக்கடலைக்கும் விஸ்தரிக்கப்பட உள்
ளது, இனிமேல் மற்ற பயிர்களுக்கும் இன்ஷுரன்ஸ் திட்டத்தைக்
கொண்டுவர அரசு பரிசீலித்துக்கொண்டு இருக்கிறது என்பதை
நான் உங்கள் மத்தியிலே சொல்லி மகிழ்ச்சி அடைகிறேன்.
அமைச்சர் அவர்களும் மகிழ்ச்சி அடைந்து இருப்பார்கள் என்று
நம்புகிறேன். இப்போது பதில் சொல்லுகின்ற நேரத்தில் இந்த

மகிழ்ச்சியைத் தெரிவிப்பார்கள் என்று நினைக்கிறேன். ஏன்
என்றால். இது மற்ற பயிர்களுக்கும் விஸ்தரிக்கப்படுகிறது என்ற
காரணத்தால் மக்கள் மத்தியிலே எதிர்பார்க்கப்படுகிற ஒன்றாக
இருக்கிறது. அதே நேரத்தில் நான் ஒன்று சொல்கிறேன்.
6,059 விவசாயிகளுக்கு 9.89 லட்சம் என்று சொன்னால் சராசரி
யாக ஒரு விவசாயிக்கு 160 ரூபாய்தான் வருகிறது. இந்த
திட்டத்தால், விவசாயப் பெருமக்களுக்கு ஏற்பட்ட கடனை
ஓரளவிற்கு திருப்பிச் செலுத்துகிற அளவிற்காவது இந்தத் திட்
டம் வரவேண்டுமே தவிர. இப்படி இந்தப் புள்ளி விவரத்தைப்
போட்டு வகுத்துப் பார்த்தால், எங்களைப் போன்ற சாமான்யர்
களுக்கு 160 ரூபாய்தான் ஒரு ஏக்கருக்கு கிடைப்பதைப் போல
தெரிகிறது என்பதால், அமைச்சர் அவர்கள் இதை விளக்க
வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குக் காலையிலேகூட இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை
யில் ஒரு செய்தி வந்திருக்கிறது. 1985ஆம் ஆண்டு பட்ஜெட்
டிலே இந்திய அரசு எல்லா மாநிலங்களுக்கும் கட்டாய
மாக பயிர் பாதுகாப்புத் திட்டத்தை அமுல் செய்ய
வேண்டும் என்று. திட்டத்தைக் கொண்டு வந்து, ஏப்ரல்
30 ஆம் தேதியன்று, மாநிலத்தில் இருக்கிற எல்லா அதிகாரிகளை
யும் டெல்லிக்கு அழைத்து, இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல்
அளித்திருக்கிறார்கள் ஆனால் என்ன காரணத்தினாலோ
இதுவரை, கேரளம், கர்நாடகம் தவிர, மற்ற மாநிலங்களில்
இருந்து ஒப்புதல் வரவில்லை. பாண்டிச்சேரி மாநிலத்
திலிருந்து விரைவில் ஒப்புதல் வரப்போவதாகச் சொல்
கிறார்கள். ஆகையினாலே தமிழக அரசு ஏன் இதிலே தயக்கம்
காட்டுகிறது? ஏற்கனவே ஒரு முன்னோடித் திட்டமாக ஏனைய
மாநிலங்களிலே இல்லாமல் இருந்தபோது. தமிழகத்திலே இருந்
தது. நம்முடைய மாநிலம் இன்றைக்கு உடனடியாக ஒப்புதல்
அளித்து இருக்க வேண்டுமே? ஏன் அளிக்கவில்லை? அப்படி
அளித்து இருந்தால், அந்த விவரத்தை அமைச்சர் அவர்கள்
சொல்ல வேண்டும்.

அதைப்போலவே இந்தத் திட்டத்தில் கோதுமை, தானியங்
கள், கடலை போன்ற எண்ணெய் வித்துக்களுக்கு விஸ்தரிக்கப்
பட இருக்கிறது. வறட்சி, வெள்ளம், புயலால் பாதிக்கப்பட்ட
விவசாயிகளுக்கு கடனைத் திருப்பிக் கட்டுவதற்கு உதவியாக
ஸ்டேட் கோ-ஆப்பரேடிவ் இன்சுரன்ஸ் கார்ப்பரேஷன்
என்று நிறுவி அதன் மூலமாக மத்திய அரசு இரண்டு கோடி
ரூபாயும். மாநில அரசு இரண்டு கோடி ரூபாயும், இதற்கு
இணையாக நம்முடைய கூட்டுறவு இன்சூரன்ஸ் கழகம் கொடுப்
பதாக இருக்கின்ற காரணத்தால், இந்தத் திட்டத்தை விரைவாக
செயல்படுத்த வேண்டும், அதற்கான அறிவிப்பை அமைச்சர்
அவர்கள் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு அது தனியார்
கிணறுகளாக இருந்தாலும் இன்றைக்கு 5 ஆயிரம் ரூபாய் தான்
கொடுக்கிறோம். ஏற்கனவே அது மிகவும் குறைவாக இருக்கிறது.
ஒவ்வொரு ஆண்டும் நிலத்தடியில் இருக்கக்கூடிய தண்ணீருடைய
மட்டம் குறைந்து கொண்டே கீழே போகிறது, அதில் இன்
னொரு சிக்கல் நிலவள வங்கியில் பணம் வாங்கி இருந்தால் ஒரு
கிணறு ஆழப்படுத்த வேண்டுமானால் அதற்கு நிலநூல் ஆய்வா
ளர் அவர்களிடமிருந்து கிளியரன்ஸ் சர்ட்டிபிகேட் வாங்க வேண்
டும் என்று இருக்கிறது. நிலவள வங்கியின் மூலமாக வெட்டு
கின்ற கிணறுகளுக்கு அது பொருந்துகிறது, தனியார் எவ்வளவு
ரூபாய் செலவழித்தாலும் எந்த இடத்தில் வேண்டுமானாலும்
வெட்டிக் கொள்ளலாம். ஆனால். அதே நேரத்தில் இந்த கிளி
யரன்ஸ் வழங்க வேண்டியது இல்லை, இன்னும் ஒரு பெரிய
இடையூறு என்ன என்பதை இதற்கு முன்னால் சொல்லியிருக்
கிறோம். அதற்குத் தகுந்த நடவடிக்கையை அரசு எடுக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் விவசாயிகளுக்கு கடனை வழங்கும்போது
அவர்கள் வழங்கும் கடனை எந்த வேலைகளுக்
காக வாங்குகிறார்களோ அந்த வேலைக்குப் பயன்படுத்துகிறார்
களா என்பதை சரி பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன். பல கோடி ரூபாயை நாம் கொடுக்கிறோம். பயிர்க்
கடன் என்ற முறையில் பல்வேறு இனங்களில் அந்தப் பணத்தை
என்ன காரியத்திற்காக வாங்குகிறார்களோ அதற்கு செலவழிக்
கிறார்களா என்பதைப் பார்க்க வேண்டிய பொறுப்பு நமக்கு
இருக்கிறது. அந்த முறையில் உதாரணமாக தனியார் விவ
சாயிக்கு கடன் கொடுக்கிறான் 20 ஆயிரம் 30 ஆயிரம்
கொடுக்கிறான் என்றால் பயிருக்கு நோய் வந்தால்
உடனே அவன் 500 ரூபாய் 1000 ரூபாய் கொடுத்து பயி
ருக்கு மருந்து அடிக்கச் சொல்லி அந்தக் காப்பாற்றி அவன்
கொடுத்த பணத்தை பெறுகின்ற முயற்சியை எடுத்துக் கொள்
கிறான். ஆனால் நம்முடைய துறையைப் பொறுத்த
வரையில் அப்படி பின்னால் நடவடிக்கை இல்லாத காரணத்
தால் சில வேளைகளில் அறுவடை நேரத்தில் நோயால் தாக்கப்
பட்டால் கூட அவர்களுக்கு வருகின்ற அறுவடை சரியான
முறையில் இல்லாமல் நஷ்டம் ஏற்படுகிறது. இதை தவிர்ப்
பதற்கு ஏ.ஈ.ஓ. அளவில் ஒரு அதிகாரியை போட்டு அதன் மூல
மாக தொடர் நடவடிக்கை பின்னால் எடுக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து காய் கறி விற்பனை சங்கம் பற்றி இந்தக் குறிப்
பில் வருகிறது, நான் கடந்த முறை இன்னொரு மானியத்
தில் பேசுகிறபோது சொன்னேன், இந்த சங்கம் இந்த மாநிலத்
தில் என்ன நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டதோ அந்த
நோக்கம் நிறைவேறவில்லை, பல இடங்களில் சொல்கிறார்கள்

நான் அனுபவப்பட்டு சொல்கிறேன். பல இடங்களில் சத்துண விற்கு காய் கறி மார்க்கெட்டில் இருக்கின்ற விலையை விட இங்கே கூட்டிப் போடுகிறார்கள். அதனுடைய நோக்கம் நிறை வேறவில்லை. யாரோ சிலர் இடையில் இருப்பவர்கள் பயன் அடைகிறார்களே தவிர குறைந்த விலையில் நல்ல காய்கறிகள் சத்துணவு திட்டத்திற்கு கொடுக்கவில்லை. அதே நேரத்தில் காய்கறி உற்பத்தி செய்கின்றவர்களுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கமும் நடைபெறவில்லை. நான் உங்கள் மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள் கிறேன். இந்த காய்கறி சங்கத்தை கலைத்து விட்டால் நல்லது. நம்முடைய இலாகாவிற்கு அது தேவையில்லை., அதிலே எடை போடுவதில் பல புகார்கள் வருகிறது. இதில் இவ்வளவு தவறு கள் இருக்கிற காரணத்தால் இதை மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

அதேபோல் நம்முடைய கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் பற்றிய ஒரு ஆய்வு நம்முடைய அரசு சிறப்பு அலுவலர் கொடுத்து இருப்பதாகவும், அரசு அதை பரிசீலனை செய்வதாக வும் இங்கே கொள்கை விளக்க குறிப்பில் இருக்கிறது. இந்த பரிந்துரையை அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள். அரசு எதை ஏற்றுக்கொண்டு உள்ளது என்ற விவரத்தை மாண்புமிகு அமைச் சர் அவர்கள் சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் வருகின்ற காலங் களில் நல்ல முறையில் பணி ஆற்றுவதற்கு துணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது சில கூட்டுறவுத் துறை அதிகாரிகள் எங்கள் பகுதியில் உயர் நிலை யில் இருப்பவர்கள் எல்லாம் வந்து எங்களுக்கு எதிராக பணி யாற்றினார்கள். அதிகாரிகளாக இருக்கிறவர்கள் பொறுத்த வரையில் யார் ஆட்சியில் இருந்தாலும் அவர்களுக்கு பிரச்சினை இல்லை. அவர்களுடைய பணியைத்தான் அவர்கள் பார்க்க வேண்டுமே தவிர சென்னையில் மாநில கூட்டுறவு வங்கியி லுடைய பெரிய பொறுப்பில் இருப்பவர்கள் லீவ் போட்டுவிட்டு அங்கே வந்து எதிராக வேலை செய்கிறார்கள். இங்கே இருக்கிற உயர் அதிகாரி மதுரை பகுதியில் கேம்ப் என்று போட்டுக் கொண்டு அங்கே இருக்கின்ற அதிகாரிகளை எல்லாம் அழைத்து வந்து எங்களுக்கு எதிராக வேலை செய்கிறார்கள். நான் ஆதா ரத்தோடு பெயர் சொல்வேன், இங்கே திருப்பி அவர்கள் பதில் சொல்ல முடியாது என்ற காரணத்தால் நான் சொல்கிறேன். மதுரையில் மாவட்ட மைய கூட்டுறவு வங்கியில் இருக்கின்ற உயர் அதிகாரி எதிராக வேலை செய்து இருக்கிறார்கள்.

நான் உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுவது எல்லாம் இந்த மாதிரி வேறு இடங்களி லும் நடந்து இருப்பதாக தகவல் கிடைத்து இருக்கிறது. அப்





படி தவறு செய்பவர்களை தேர்தல் காலத்தில் தங்களுடைய பணியை விடுத்து அரசு சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு எதி ராக வேலை செய்தவர்களை அரசியல் கட்சிக்கு ஆதரவாக வேலை செய்தவர்களை இனம் கண்டு கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி எடுத்தால் தான் வருகின்ற காலங்களில் வருகின்ற தேர்தலில் அவர்கள் ஒழுங்காக எந்த கட்சிக்கும் ஆதரவாக இருக்க வேண் டாம். அவர்களுடைய பணியை செய்து விட்டு போகட்டுமே, இதில் எந்த வேட்பாளருக்கும் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. நான் மனம் வேதனைப்பட்டு நொந்து சொல்கிறேனே தவிர இந்த மாதிரி இந்த துறையில் இனி வரக் கூடாது. இந்தத் துறை அமைச்சர் அவர்கள் கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

1982-83-ஆம் ஆண்டிலே 'ரிப்போர்ட் ஆஃப் தி கம்ப்ட்ரோலர் அண்டு ஆடிட்டர்-ஜெனரல் ஆஃப் இந்தியா—அவர்களுடைய'' அறிக்கையிலே 182ஆம் பக்கத்திலே ''அசிஸ்டென்ஸ் டு வில்லேஜ் கோவாபரேடிவ் சொசைட்டீஸ்'' என்ற தலைப்பின் கீழே பெரிய விளக்கம் தரப்பட்டிருச்கிறது. அதைப் படிக்க தாங்கள் அனுமதிக்கமாட்டீர்கள் என்று நினைக்கிறேன். அதிலே, எப்படி மத்தியிலே பணத்தைப் பெற்று, அந்தப் பணத்தைச் சரியாகச் செலவிடாமல், மானியம் பெற முடியாமலே, சில இனங் களிலே இந்த அரசு முறையாக, சரியாக ஆய்வு செய்யாமலே இருந்த காரணத்தாலே, இவ்வளவு பணம் இழப்பு வந்து இருக்கிறது என்ற குறிப்பைக் கொடுத்திருக்கிறார்கள்.

தங்களுக்கு வசதியாகத் தான் அந்தப் பக்கத்தைச் சொன்னேன். எனவே, அந்தக் குறைகளைக் களையவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இங்கே இருக்கிற அத்தனை உறுப்பினர்களும் வலியுறுத்திச் சொன்னார்கள்—தேர்தல் நடைபெறவேண்டும் என்று.

உண்மையிலேயே கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் நடைபெறாத காரணத்தாலே, மக்கள் இயக்கமாக இருக்கின்ற இந்தத் துறை, அதிகாரிகள் சாம்ராஜ்யமாக மாறியிருக்கிறது என்று சொல்லாமல் இருக்க முடியவில்லை.

6-8-1980-இலே ஒரு சட்ட முன் வடிவு இந்த மன்றத்திற்குக் கொடுத்த பின்னாலே, ஆய்வுக் குழுவுக்கு அனுப்பி, 29-3-1982 அன்று திருத்திய சட்ட முன் வடிவு வந்ததற்கு பின்னால் கூட இன்னமும் தேர்தல் நடத்தப்படவில்லை என்பதை நான் வன்மையாகக் கண்டிக்க விரும்புகிறேன்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லி இருக்கிறீர்கள், இந்தப் புதிய சட்டத்தின் கீழ் இயற்றப்பட வேண்டிய விதிகள் அரசாலே முடிவு செய்யப்படவுள்ளன. விதிகள் முடிவு செய்யப்பட்டு, வெளியிடப்பட்டு, பிற்பாடு, புதிய சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு, அதன் பின்னர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் வரவேண்டும் என்று இந்த அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. விதிகள் முடிவு செய்யப்பட்டு, வெளியிடப்பட்டு, கொண்டுவரப்பட்டு, ஆகபட்டு, பட்டு என்று இருக்கிறதே—நான் கேட்டுக்கொள்வேன். இந்த இயக்கம் பட்டுப் போகாமல் பாதுகாக்கவேண்டும். விரைவாக தேர்தலை நடத்தவேண்டும்.

விதிமுறைகளை வகுப்பதற்கு திறமையான அதிகாரிகள் இருக்கிறார்கள். விதிகள் இயற்றச் சொன்னால், 15, 20 நாள் அல்லது ஒரு மாதத்திற்குள்ளே செய்து கொடுத்து விடுவார்கள். எந்தவிதமான சிக்கலுக்கும் இடமில்லை.

பஞ்சாயத்து தேர்தலுக்கே நாள் குறிக்கப்பட்டுவிட்ட இந்த நேரத்தில், பல ஆண்டுக் காலமாக கூட்டுறவுச் சங்கத்திற்கு நடக்காமல் இருக்கும் தேர்தலின் தேதியை விரைவிலே அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி அறிவித்து கூட்டுறவு இயக்கங்களை மக்கள் பிரதிநிதிகள் பொறுப்பேற்று, அதன் மூலமாக தமிழக மக்களுக்கு நல்ல பணி செய்வதற்கான வாய்ப்பை இந்த அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு, அமைச்சர் அவர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கான தேர்தல் தேதியை இன்றைக்கே அறிவித்தால், அவர்களைப் பாராட்டுவேன் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது பல உறுப்பினர்கள் பேசினார்கள். பேசிய நேரத்தில் உணர்வு பூர்வமான கருத்துக்களையும், இந்த அரசாங்கத்திற்கு அறிவுரையாகச் சொல்ல வேண்டிய நேரத்தில் அறிவுரையாகவும் கடுமையாகச் சொல்கிற நேரத்தில் கடுமையாகவும் சொன்னதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காரணம், இங்கே இருக்கின்ற எதிர் அணியைச் சேர்ந்தவர்கள் மிகத் தெளிவாக; பொறுப்போடு சொன்னார்கள். அதற்காக நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே பேசிய அதே எதிர் அணியைச் சேர்ந்தவர்கள், வெளியே சென்ற உடனேயே, பொது மக்கள் மத்தியிலே மேடை போட்டு பேசுகிற நேரத்தில், இன்றைக்கு எந்தப் பொறுப்புணர்ச்சியோடு பேசினார்களோ அதே பொறுப்புணர்ச்சியோடு





பேசினார்களானால், அல்லது அதற்கு முன்னாலே பேசி இருப்பார்களானால், இந்த அளவுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் நலிந்து போகக்கூடிய சூழ்நிலை தமிழகத்திலே வந்து இருக்காது என்பதை நான் இங்கே பணிவோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இங்கே பேசிய காங்கிரஸ் இயக்கமானாலும் சரி, ஜனதா இயக்கமானாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகமானாலும் சரி, கம்யூனிஸ்டு இயக்கங்களானாலும் சரி, இங்கே பேசிய நேரத்தில் விவசாயிகள் மீது பாசத்தோடு பேசினார்கள். இந்த அரசாங்கம் எப்படியெல்லாம் செய்ய வேண்டும் என்று எல்லாம் சொன்னார்கள். சில கட்சித் தலைவர்கள், இந்தக் கடன் சுமை வந்ததற்கு அவர்களும் காரணம் என்பதை இந்த நேரத்தில் அவர்கள் ஒப்புக் கொள்ள வேண்டும்.

காரணம், கடந்த 6, 7 வருட காலமாகவே வாங்கிய கடனைக் கட்ட வேண்டாம் என்று சொல்லிய கிளர்ச்சிக்குச் சொந்தக்காரர்கள் இவர்கள் தான் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன், அவர்கள் அப்படிச் சொல்லாமல் இருந்து இருப்பார்களானால், கடந்த 6, 7 வருடங்களுக்கு முன்பாகவே, கடனை தள்ளி வைக்கும் நேரத்திலே, இன்றைக்குச் சொல்லிய வாதங்களை; வசூல் செய்யுங்கள் என்று சொல்லவில்லை.

வட்டியை மட்டும் தள்ளுபடி செய்யுங்கள், கூடுதல் வட்டியை மட்டும் தள்ளுபடி செய்யுங்கள் என்று அன்றைக்கே வாதங்களை எடுத்து வைத்திருந்தால் இவ்வளவு பெரிய வட்டிச் சுமை, நிச்சயமாக விவசாயிகளுக்கு வந்து இருக்காது என்பதை நான் இங்கே பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அன்றைக்கு அவர்கள் சொல்லத் தவறிவிட்டார்கள், காரணம் எப்படியாவது கடனை தள்ளி வைத்து விட்டால் பின்னால் பார்த்துக் கொள்ளலாம். அரசாங்கத்திடம் போராடி வட்டியை தள்ளுபடி செய்யலாம் என்று எண்ணிக்கொண்டு இருந்துவிட்டார்கள். எங்களுடைய முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில் தேர்தல் காலத்தில் சொல்லியதைவிட அதிகமாகச் செய்திருக்கிறோம்.

சுமார் 100 கோடி ரூபாய் அளவிற்குத் தள்ளுபடி செய்தும் 100 கோடி ரூபாய் அளவிற்கு "நபார்ட்"-இடம் கடன் பெற ஏதுவாக கூட்டுறவு வங்கிகளுக்கு வழிவகை முன்பணமாக வழங்கியும், ஆக 200 கோடி ரூபாய் அளவிற்கு எங்கள் முதலமைச்சரவர்களுடைய அரசாங்கம் விவசாயிகளுக்குக் கடனிலே தள்ளுபடி செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்] [1985 ஜூன் 28*

மாண்புமிகு உறுப்பினர் மரியாதைக்குரிய திரு. சித்தன் அவர்கள், பக்கத்து மாநிலங்களிலேயும் இப்படித் தள்ளுபடி செய்திருப்பதாகக் கூறினார்கள். அங்கேயெல்லாம் 5 கோடி, 8 கோடி, 10 கோடி என்ற இந்த அளவுகளுக்கு மேல் இல்லை. ஆனால் எங்களுடைய புரட்சித் தலைவரவர்களுடைய அரசாங் கம்தான் 200 கோடி ருபாய் அளவிற்குத் தள்ளுபடி செயதிருக் கிறது என்பதை அவர்கள் ஒத்துக் கொள்வார்கள் என்று கருது கிறேன்.

இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் விவசாயிகள் மீது பாசம் வைத்துள்ள அரசாங்கம், விவசாயிகள் எப்படி உங்களுக்கு வாக்களிக்க வேண்டுமென்று நிலைத்தார்களோ அதைப்போலத்தான் எங்களுக்கும் வாக்களித்து, இந்த அரசாங் கத்தை, மூன்றாவது முறையாக புரட்சித் தலைவரவர்கள் பொறுப்பு ஏற்று நடத்த வேண்டுமென்பதற்கு விவசாயப் பெரு மக்களும் உறுதுணையாக இருந்திருக்கிறார்கள் என்பதை நாங் களும் எண்ணிக்கொண்டுதான் இருக்கிறோம்.

இன்றைக்கு அரசாங்கத்திற்கு உள்ள மிகப்பெரிய சிக்கல் என்னவென்றால், வருகின்ற பசலி ஆண்டுக்குக் கடன் கொடுத் தாக வேண்டும், நாங்களும் உங்களோடு சேர்ந்து பேசிக்கொண் டிருந்தால்; இந்தக் கடனை வசூல் செய்யவில்லையென்றால் வருகின்ற பசலி ஆண்டுக்குக் கடன் கொடுக்கவில்லை என்று சொன்னால்; இதே எதிர்க் கட்சிகள் இந்த அரசாங்கத்தைப் பார்த்து, இது கையாளாகாத சர்க்கார், விவசாயிகளுக்குக்கூட சரியாகக் கடன் கொடுப்பதற்கு வக்கில்லாத அரசாங்கம் என்று சொல்லக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவார்கள்.

ஆகவேதான், அரசாங்கத்திற்கு உள்ள சிரமங்களுக்கு மத்தி யில், ஜப்தி போன்ற நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறோம். அதிகாரிகளுக்கு உத்தரவு கொடுத்தாலும்கூட, கட்டுப்படுத்தி அணுகுமுறையில் சுமுகமான முறையைக் கையாண்டு வசூல் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

இங்கே உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்தில், நிறைய போலீஸ் வந்தது, அதிகாரிகள் நிறைய ஜீப்பில் வந்தார்கள்; படை பட்டாளம் வந்தது என்றெல்லாம் கூறினார்கள் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன், எங்கள் அதிகாரிகள் ஒரு ஜீப்பிலேதான் போய் இருக்கிறார்கள், அப்படிப் போகின்ற நேரத்தில் எங்கள் அதிகாரிகளை வெட்டியிருக்கிறார்கள், எங்கள் அதிகாரிகளை அடித்திருக்கிறார்கள், எங்கள் அதிகாரிகள் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள், எங்கள் அதி காரிகள் போகின்ற நேரத்தில் அவர்களைத் தரக்குறைவாகப் பேசியிருக்கிறார்கள், ஒட்டுமொத்தமாகக் கதவை மூடிக்கொண்டி ருந்திருக்கிறார்கள், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அதிகாரி களை ஊருக்குள் வர வேண்டாமென்று சொல்லியிருக்கிறார்கள்.



*1985 ஜூன் 28] [திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்]*

அதிகாரிகளும் நம்முடைய உடன் பிறந்தவர்கள்தான். நாம் அமைச்சர்களாக, சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறோம் என்றால் அவர்கள் அதிகாரிகளாக இருக்கிறார்கள். அதிகாரி களும் தமிழ்நாட்டிலே பிறந்தவர்கள்தான், அதிகாரிகளும் தமிழ் நாட்டு மக்கள்தான். அவர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான், இன்றைக்கு அந்தப் பகுதி களுக்குப் போகின்றபொழுது ஒரு போலீஸ்காரரைப் பந்தோ பஸ்திற்காக வைத்துக் கொள்ளுங்கள் என்று அதிகாரிகள் அடி வாங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக அந்த உணர்வோடு சொல்கிறோமே ஒழிய. விவசாயிகளை மிரட்டி கெடுபிடி வசூல் செய்ய வேண்டுமென்ற நிலையில் எங்கள் முதலமைச்சர் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாங்கள் இன்றைக்கு அணுகுமுறையில் வேகத்தோடு இருப்ப தற்குக் காரணம்' 30-6-1985க்குள் வாங்கிய கடனிலே 40 சதவீதத்தை வசூல் சேய்து நபார்ட்க்குக் கட்டியாக வேண்டும் அப்படி நபார்ட்டுக்கு கட்டினால்தான் நாங்கள் திரும்ப கடன்களை வாங்கி ரூப்பரேட் செய்ய முடியும் பணத்தை எடுக்க முடியும்.

மொத்தக் கடனில் 60 சதவீதத்தை வசூலித்துக் கட்டினால் தான், எம். டி. என்று சொல்லப்படுகின்ற, மீடியம் டெர்ம், லோன் என்று, ஆடு வளர்த்தல், கோழி வளர்ப்பு போன்ற சிறிய திட்டங்களுக்கு மத்திய காலக் கடன்களுக்குப் பணத்தை எடுக்க முடியும், ஆப்பரேட் செய்ய முடியும். எனவே, இதை யெல்லாம் கருத்திற்கொண்டுதான் நாங்கள் செய்கிறோம்.

நீங்கள் சொல்வதைப்போல, நாங்கள் கடனை வசூலிக்க வில்லையென்று சொன்னால், ''நபார்ட்'' இடமிருந்து அந்தப் பணத்தைப் பெற முடியாது. அப்படிப் பெற முடியாமற் போகின்ற நேரத்தில், வங்கிகளின் சொந்த நிதியிலிருந்துதான் பணத்தைக் கொடுக்க வேண்டியிருக்கும். வங்கிகளின் சொந்த நிதியிலிருந்து கொடுக்க வேண்டுமென்று சொல்லக் கூடிய நேரத்தில் நம்மைப் போன்ற பொதுமக்களிடமிருந்து திரட்டப்பட்டு இருக்கின்ற வைப்பு நிதியை, இந்தத் தமிழகத் திலே உள்ள ஏழை எளியவர்கள், அரசாங்கத்திலே வேலை பார்ப்பவர்கள், வியாபாரிகள் ஆகியவர்களுக்கு கியாரண்டி கொடுத்து நம்பிக்கையோடு இந்தக் கூட்டுறவு வங்கிகளில் டெபாசிட் செய்திருக்கிறார்கள்.

இந்த டெபாசிட் பணத்தைப் பொது மக்கள் மத்தியிலேயிருந்து பெறுகின்ற நேரத்தில் 11 சதவீதத்துக்குப் பெற்றுக் கொண்டி ருக்கிறோம். கடனை வசூல் செய்யாமல், சொந்த நிதியிலி ருந்து கொடுக்க வேண்டியிருந்தால் 11 சதவீதத்திற்கு வாங்கி சிறிய விவசாயிகளுக்கு 9 சதவீதம் என்றும், பெரிய விவசாயி

களுக்கு 10 சதவீதம் என்றும் கொடுக்கின்ற நேரத்தில். சுமார் 100க்கு 2¼ சதவீதம் பணத்தை நாம் கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

அப்படியே கொடுத்தாலும்கூட, இந்தப் பணம் திரும்பி வருமா என்ற அச்சம் இருக்கிறது. ஏனென்றால். கடனை வசூலிக்காமல், திரும்பத் திரும்ப பணத்தைக் கொடுத்துக் கொண்டேயிருந்தால், பொதுமக்களிடத்திலேயிருந்து திரட்டப்பட்ட பணம் முடங்கிப் போய்விடுகின்ற நிலைமை ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் இருக்கிறது. கூட்டுறவு வங்கிகளில் அந்தப் பணத்தை டெபாசிட் செய்தவர்களுக்கு, சரியான நேரத்தில், வேண்டுமென்று கேட்டு வருகின்ற நேரத்தில் பணம் கிடைக்குமா என்ற அச்சம்கூட பொது மக்கள் மத்தியிலே எழுப்பப்பட்டிருக்கிறது.

இந்தக் காரணங்களினாலே, இன்றைக்கு நாம் செய்வதற்கு நியாயம் கற்பிக்கவில்லை. ஆனால், இருக்கின்ற சூழ்நிலைகள் அப்படி இருக்கிறது. இந்த இடத்திலே எந்த அரசாங்கம் இருந்தாலும்கூட அவர்களும் இதைத்தான் செய்ய முடியும். இந்த அரசாங்கத்திலேயாவது நாங்கள் சுமூகமாக இருக்கிறோம். ஆனால், இதற்கு முன்னால் இந்த அரசாங்கத்தை ஆண்டவர்கள், மினசாரக் கட்டணத்தில் இரண்டு பைசா குறைக்க வேண்டுமென்று கேட்ட நேரத்தில் அவர்களைச் சுட்டார்கள் என்பதையும் இங்கே நினைவுக்குக் கொண்டுவர விரும்புகிறேன் இந்த முறையில் அணுகியவர்கள்தான் முன்னாலே இந்த அரசாங்கத்திலே இருந்தவர்கள். முன்னாள் முதலமைச்சரவர்கள் கல்யாண வீட்டிற்குச் சென்றாலும்கூட அங்கேயுள்ள மணமக்களை வாழ்த்துவதிலேகூட அக்கறைகாட்டாமல்விவசாயிகளின் கடன்களைப்பற்றி அக்கரையோடு பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

[பிற்பகல் 1-30]

**மாண்புமிகு திரு. கே. கே எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தஞ்சாவூருக்குப் போகிற நேரத்தில் முன்னால் முதல் அமைச்சர் கல்யாண வீட்டில் போய் விவசாயிகளைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். அப்படிப் பேசுகிறவர்கள்தான், அன்றைக்கு மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று சொன்ன நேரத்தில், விவசாயிகளைச் சுட்டுக் கொன்றவர்கள் என்பதை நான் இங்கே இருக்கிற உறுப்பினர் பெருமக்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, இத்த அரசாங்கம் எவ்வளவு சிரமம் வந்தாலுங்கூட விவசாயிகளை சகோதர பாவத்தோடு அணுக வேண்டுமென்ற உணர்வை முதல் அமைச்சர் அவர்கள் எங்களுக்கும் சொல்லியிருக்கிறார்கள் அதிகாரிகளுக்கும் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன்.





இன்றைக்குத் தமிழகத்திலே சுமார் 4,700 கூட்டுவுச் சங்கங்
கள் செயல்பட்டுக் கெண்டிருக்கின்றன. அந்தக் கூட்டுறவுச்
சங்கங்கள் கிராமத்திலே இருக்கிற மக்களுக்குக் கடனைக் கொடுத்
துக் கொண்டிருக்கின்றன. இதே போன்று அங்கே அத்தி
யாவசியத் தேவைப் பொருளை நாங்கள் விநியோகித்துக்
கொண்டுருக்கிறோம். இன்றைக்கு ஏறத்தாழ 3,500 சங்கங்கள்
நலிந்து கொண்டிருக்கின்றன. அதற்குக் காரணம் கொடுத்த
கடனைத் திருப்பி வாங்க முடியாமல் விழித்துக் கொண்டிருப்
பதுதான். அந்தச் சங்கங்களை நாம் காப்பாற்றியாக வேண்
டும்.

இங்கேயிருக்கிற திரு. என். எஸ். வி. சித்தன் அவர்களுக்குச்
சொல்ல விரும்புகிறேன், நீங்கள் காங்கிரஸ் ஆண்டகாலத்தில்
இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாக இருந்தன என்று பெறு
மையோடு சொன்னீர்கள். இந்தக் கூட்டுறவுச் சங்கங்களை நாங்கள்
காப்பாற்றி, வருகின்ற தலைமுறைக்கு வைத்துவிட்டுச் செல்வதா
அல்லது வேண்டாமா என்பதை இங்கேயிருக்கிற பெருமக்கள்
சொல்லியாக வேண்டும். நாங்கள் ஓரளவுக்குக் கடுமையாக இருக்
கிறோம் என்று சொன்னால் வருகின்ற தலைமுறைக்கு அந்தச்
சங்கங்களை வைத்துவிட்டுச் செல்லவேண்டும்என்பதற்காகத்தான்.
இன்றைக்கு நாங்கள் அமைச்சர்களாக இருக்கின்றோம், சட்டமன்ற
உறுப்பினர்களாக இருக்கின்றோம். ஆனால், பின்னால் வருகின்ற
வர்கள் இந்தச் சங்கங்கள் எல்லாம் நன்கு இருக்கின்றன என்று
சொல்லக்கூடிய அளவுக்கு இருக்க வேண்டுமென்றுதான் நாமெல்
லாம் செய்யவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

உதாரணத்திற்குச் சில புள்ளிவிவரங்களைத் தருகின்றேன்.
1975–76-லே குறுகிய காலக்கடனாக ரூ. 100 கோடி கொடுத்திருக்
கிறோம். 1976–77-லே, அதற்குப் பின்னாலே 119 கோடி ரூபாய்
கொடுத்திருக்கிறோம். அதற்குப் பின்னாலே, அந்தக் கடனைத்
திருப்பிக்கொடுக்க வேண்டாம் என்ற வியாதி இங்கே பரவிவிட்டது.
அதிலேயிருந்து 1978–79-லே ரூ. 90 கோடியாகி, 1979–80-ல்ரூ. 37
கோடியாகி, 1980–81-லே ரூ. 21 கோடியாகி இருக்கிறது. இதை
அவர்கள் கட்டவேண்டாம் என்று சொல்லி, கட்டாமலிருப்பதால்,
விவசாயிகளுக்கு நம்மால் கடன் கொடுக்கமுடியவில்லை.
1979–80-ல் ரூ. 37 கோடியாக இருந்து, 1980–81-ல் ரூ. 21
கோடியாகக் குறைந்திருக்கும் நிலையில் இந்த ஆண்டு ரூ. 135
கோடி கொடுக்கவேண்டுமென்று மாண்புமிகு முதல் அமைச்சர்
சொல்லியிருக்கிறார். அதே குறுகிய காலக்கடன் ரூ. 37 கோடிக்கு
மேல், ரூ. 21 கோடிக்கு மேல் எங்களால் கொடுக்கமுடியவில்லை.
காரணம் அன்றைக்கு விவசாயிகள் மத்தியில் கடன் கொடுக்க
வேண்டாம் என்ற நிலை ஏற்பட்டு, கடன் வசூல் செய்யமுடியாத
நிலை இருந்தது.

இந்நிலையில், நாம் நாபார்டிடமிருந்து கடன் வாங்கி விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டியிருந்தது. இதேபோன்ற சூழ்நிலை தமிழ்நாட்டிலே இருந்தால், இன்னும் 5 ஆண்டுகள், 6 ஆண்டுகளில் விவசாய உற்பத்தியெல்லாம் குறையும் என்பதை நாங்கள் எல்லாம் எதிர்பார்த்துதான் இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறோம் என்பதை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன், ஆகவே. இன்றைக்கு ஜப்தி நடவடிக்கையை நாங்கள் துரிதப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், எப்போதுமே ஒரு பெட்டிஷன் எழுதுகிற நேரத்தில், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒரு விதமாகத்தான் சொல்வார்கள். இங்கே பேசுவதுபோல் பொது மக்களிடத்திலே பேசினால் பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அதேபோல், மனுக்களில் ஒன்றுக்கு இரண்டாகச் சொல்வதுதான் வழக்கம். இது எப்போதுமே அரசியலிலே நடப்பது. அந்த எண்ணத்தோடுதான் செய்திருக்கிறார்கள்.

இன்றைக்கு நாங்கள் 40 சதவிகிதம் வசூல் செய்தாகவேண்டும் என்ற கணக்கோடு தான் செய்துகொண்டிருக்கிறோமே தவிர, விவசாயிகளைக் கசக்கி பிழிய வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசாங்கத்திற்கு இல்லை என்பதைச் சொல்லவிரும்புகிறேன்.

அதேபோல் மத்திய அரசாங்கமும் இன்றைக்கு ஒன்றைச் சொல்லிக் கொண்டிருக்கிறது. மத்திய அரசாங்க அமைச்சர் ராவ் பிரேந்திர சிங் அவர்கள் அரசாங்கத்திற்கு 28–4–1984 அன்று ஒரு கடிதம் எழுதி இருக்கிறார்கள். விவசாயிகள் கடன் வசூலிக்காவிட்டால், விவசாய மக்களுக்கு கடன் சாகுபடி வழங்கமுடியாமல் பயிர்த்தொழிக்குப் பெரிதும் பாதிப்பு ஏற்படும் என்று சுட்டிக்காட்டி, விவசாயச் சங்கங்கள் கடன்கள் வசூலிப்பதை எதிர்த்துப் போராடுவதைக் குறிப்பிட்டு இது மிகவும் அபாயமானது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, மத்திய அரசாங்கத்திலேயிருந்து நமக்குத் தாக்கீது வந்துகொண்டே இருக்கிறது. அவர்கள் விவசாய உற்பத்தி கூட வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் செய்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் வசூல் செய்யவில்லையென்றால் விவசாயச் சேவை கூட்டுறவுச் சங்கங்கள் நலிந்துவிடும் என்று மத்திய அரசாங்கம் எச்சரித்துக் கொண்டிருக்கிறது, ஆகவே, இந்த நடவடிக்கையை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம், வசூல் செய்து கொண்டிருக்கிறோம் என்றுசொல்லி, நமக்குப் பணம் வேண்டுமென்றால் மத்திய அரசாங்கத்திற்கு நாம் சொல்லியாகவேண்டும்.

இங்கே மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் பேசினார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன், நான் இதைக் குற்றமாகச் சொல்ல வேண்டுமென்று சொல்லவில்லை. 1983-வது வருடம் அவர்கள் கட்சி ஆளுகின்ற மேற்கு வங்காளத்திலே, மிக மோசமான வறட்சி ஏற்பட்டது. அந்த மாநில முதலமைச்சரே, அந்த ஆண்டு ஏற்பட்டது வரலாறு காணாத வறட்சி என்று பேசியிருக்கிறார்கள்



அந்த மாநிலத்தில் அப்பொழுது 50 சதவிதம் தண்ணீர் வரி பாக்கி கட்டினால்தான் தண்ணீரே திறந்து விடுவோம் என்று அன்றைக்கு அரசாங்கம் சொல்லியிருக்கிறது.

அன்றைக்கு ஆட்சியை நடத்திக்கொண்டிருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு தண்ணீர் வரி பாக்கியில் 50 சத வீதத்தை செலுத்தினால்தான் அரசு பாசனக் கால்வாயிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படும் என்று சொன்னார்கள். அது ஸ்டேட்ஸ் மென் பத்திரிகையில் 6–1–83-ல் வந்திருக்கிறது. அதைப்போன்று 21–5–83 டெலிகிராஃப் பத்திரிகையிலும் செய்தி வந்திருக்கிறது. (குறுக்கீடு)

நான் தப்பாக ஒன்றும் சொல்லவில்லை. ஆட்சி நடத்துகிற வர்கள் யாராக இருந்தாலும், எந்தக்கட்சி அரசாக இருந்தாலும் அதைச் செய்துதான் ஆகவேண்டும், செய்யும். கம்யுனிஸ்ட் கட்சி அரசாக இருந்தாலும் வேறு எந்த அரசாக இருந்தாலும் ஆளுகிறவர்கள் அப்படிப்பட்ட அணுகு முறையைத்தான் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. யாராக இருந்தாலும் பாக்கியை வசூல் செய்து ஆகவேண்டும்.

அதைப்போன்று அன்றைக்கு அங்கே இருந்த அரசாங்கம் 2,000 ரூபாய்க்கு குறைவாக பாக்கி இருக்கிறவர்கள் மீது போலீஸ் வைத்து தொந்தரவு செய்யவேண்டாம். 2,000 ரூபாய்க்கு மேல் தரவேண்டியவர்கள் இருந்தால் அவர்கள் மீது போலீஸ் வைத்து நடவடிக்கை எடுக்கவேண்டும்; ஜப்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மேற்கு வங்க முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை எதிர்த்து அன்றைக்கு அங்கே வலதுசாரி கம்யுனிஸ்ட் கட்சியினர் துண்டு நோட்டீஸ் அடித்திருக்கிறார்கள். அப்போது அந்த முதலமைச்சர் அவர்களை அழைத்து வைத்து பேசியிருக்கிறார். எல்லோரும் ஒன்றாக இருந்துகொண்டு பஞ்சாயத்துத் தேர்தல் வரும் என்று சொல்லுகின்ற இந்தநேரத்தில் இப்படி நோட்டீஸ் அடித்திருக்கிறீர்களே, இது சரியா என்று கேட்டிருக்கிறார்கள். அப்போது வலதுசாரி கம்யுனிஸ்ட் கட்சித் தலைவர் எங்கள் கட்சி இதை ஆதரிக்கும், வசூல் செய்ய ஜப்தி நடவடிக்கை எடுப்பதை எதிர்க்கவில்லை; இந்த அரசு எடுக்கிற நடவடிக்கையை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். கடன் வசூல் செய்தால்தான் ஆட்சி நடத்த முடியும் என்பதை உணர்ந்து அப்படிச் சொல்லியிருகிக்றார்கள்'

அவர்கள் மேலும் சொல்லியிருக்கிறார்கள். உழவர்கள் அனைவரும் விவசாயம் நல்லமுறையில் நடைபெற வாங்கிய கடனை திருப்பிச் செலுத்தவேண்டும் என்பதை இக்கட்சி அறியும். வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் சொல்லியிருக்கிறார். விவசாயிகள் எப்படிப்பட்ட நிலையில் இருந்தாலும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்த வேண்டுமென்ற அரசின் முடிவை வலதுசாரி கம்யுனிஸ்ட் ஏற்றுக்கொள்கிறது, என்று சொல்லியிருக்

கிறார்கள். ஆக, விவசாயிகள் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டுமென்ற கொள்கையை வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக்கொண்டிருக்கிறது; இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியும் ஏற்றுக்கொள்கிறது, வலியுறுத்துகிறது. அதைச் செய்யாமல் ஒரு கட்சி அரசாங்கத்தை நடத்தமுடியாது. யாராக இருந்தாலும் அதைச் செய்துதான் ஆகவேண்டும். ஆகவே, மரியாதைக்குரிய மேற்குவங்க முதலமைச்சர் கடனை திருப்பிச் செலுத்தவேண்டு மென்று வலியுறுத்தினார்கள். மற்றவர்கள் அதை ஏற்றுக்கொண் டார்கள். அன்றைக்கு கூட்டுறவுத்துறை அமைச்சராக இருந்த மரியாதைக்குரிய நிர்மல்போஸ் வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியினர் துண்டு நோட்டீஸ் விட்டதைக் குற்றச்சாட்டாகவே சொல்லியிருக் கிறார். ஊராட்சித் தேர்தலை முன்னிட்டு உதயப்பூர் மாவட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் உள்ளூர் கிளையினர் இந்த நோட்டீஸை வெளியிட்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக் கிறார்கள்.

நிர்வாகத்தை ஒழுங்காக நடத்திச்செல்ல ஆட்சியிலே இருப் பவர்கள் நடவடிக்கை எடுப்பதும் அதை எதிர்க்கட்சியினர் குறை சொல்வதும் இயற்கைதான். அதை நான் ஒரு குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை, குறைசொல்லவில்லை. எந்த அரசு வந்தாலும் இப்படித்தான் செய்யமுடியும். கடன் வசூலில் மேற்குவங்க அரசு கடுமையாக இருந்திருக்கிறது. அதைப்போன்று மற்ற மாநில அரசுகளிலும் நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் எங்களுடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 40 சதவிதம் கடனை வசூல் செய்தால்தான் விவசாயிகளுக்கு மீண்டும் கடன் கொடுக்கமுடியும், இல்லை என்றால் கொடுக்கமுடியாது, ஆகவே, கடனை திருப்பிச் செலுத்த வேண்டுமென்ற உண்மையை விவசாயிகளிடம் சொல்லுங்கள், கடனை வசூல் செய்யுங்கள் என்று சொன்னார்கள். ஆனால் எங்களுடைய அணுகுமுறையில் வேறு மாநில அரசுகள் எடுக்கிற நடவடிக்கைகளைவிட குறைவாகத்தான் நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம்.

அதைப்போன்று 2,000 ரூபாய்க்கு குறைவான கடன் இருந்தால் தான் போலீஸ் நடவடிக்கை எடுக்கவேண்டாம்; 2,000 ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால் கட்டவில்லை என்றால் போலீஸ் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்போன்று இந்தியாவில் இருக்கிற எந்த மாநில அரசாக இருந்தாலும்சரி, காங் கிரஸ்பேரியக்கம் ஆளுகிற மாநிலமாக இருந்தாலும்சரி, ஜனதாபேரி யக்கம் ஆளுகின்ற மாநிலமாக இருந்தாலும்சரி, எந்த மாநிலமாக இருந்தாலும் சரி, ஜப்தி நடவடிக்கையை அவர்கள் 'பான், பண்ண வில்லை, தடைசெய்யவில்லை, நிறுத்திவைக்கவில்லை. கடனை வாங்குவதும் வசூல் செய்வதும், கடனை திருப்பிக் கட்டாதவர்கள் மிது ஜப்தி நடவடிக்கை எடுப்பதும் அன்றாட நிகழ்ச்சியாக இருக் கிறது. ஆனால் அங்கே இருக்கிற அரசியல்வாதிகள் அதை கையிலே எடுத்துக்கொள்ளவில்லை. இன்றைக்கு நாங்கள் அத்தனை மாநிலங்





களையும் கேட்டிருக்கிறோம். எல்லா மாநிலங்களிலும் ஜப்தி நடவடிக்கை மூலம் வசூல் நடக்கிறது என்று தெரிந்தபிறகுதான் நாமும் அந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறோம். நம்முடைய மாநிலத்தில் கடந்த 7, 8 ஆண்டுகாலத்தில் அரசியல்வாதிகள் உள்ளே புகுந்ததன் காரணமாகத்தான் கடனைத் திருப்பி செலுத் தாத நிலைமை ஏற்பட்டது, இந்த விவகாரம் வந்தது என்று சொல்வதில் தவறு இல்லை என்று நான் கருதுகிறேன். காரணம் எல்லோருக்கும் தெரியும்.

விவசாயிகள் மீது, ஏழை எளிய மக்கள்மிது எல்லாக் கட்சிக் காரர்களுக்கும் அக்கறை இருக்கிறது. எல்லாக் கட்சிகளை சேர்ந்த வர்களும் கடன் வாங்கியிருக்கிறார்கள். நம்முடைய மரியாதைக் குரிய துணைச் சபாநாயகர் அவர்கள்கூட கடன் வாங்கி கட்டாமல் இருந்தார்கள் என்று அவர்கம்மீது நடவடிக்கை எடுத்தோம். 2,500 அல்லது 3,000 ரூபாய் கட்டிவிட்டார்கள். ஆதலால் நடவடிக்கை நிறுத்திவைக்கப்பட்டது. அதைப்போன்று நம்முடைய சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் கடன் வாங்கியிருக் கிறார்கள். நடவடிக்கை எடுக்கப்பட்டபோது 7,000 ரூபாய் கட்டி விட்டார்கள். நடவடிக்கை நிறுத்தப்பட்டது. ஆக, எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களையும் விட்டுவிடவில்லை. கட்டாதவர்கள் மிது நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இந்த அரசைப் பொறுத்த வரையில் அண்ணா தி. மு. க. என்றோ, தி. மு. க. என்றோ, காங்கிரஸ் என்றோ, கம்யூனிஸ்ட் கட்சி என்றோ பார்த்து கடனை வசூல் செய்யச் சொல்லவில்லை. எந்தக் கட்சியாக இருந்தாலும், யாராக இருந்தாலும் எப்படியாவது பணத்தை வசூல் செய்யுங்கள் என்று சொல்லுகிறோம்.

கடனை எப்படியும் வசூல் செய்யவேண்டுமென்று சொன்ன போது திரு. ஆனந்தகிருஷ்ணா அவர்கள் சொன்னார்கள். எங்கள் பகுதிக்கு அதிகாரிகள் வரவேண்டாம், பட்டியலைக் கொடுங்கள், நாங்களே வசூலித்துக் கொடுத்துவிடுகிறோம் என்றுசொன்னார்கள். உடனே நாங்கள் அவர்களிடம் பட்டியலைக் கொடுத்தோம். பணம் வசூல் ஆனால் போதும், மக்களுக்கு தொந்தரவு கொடுக் வேண்டும் என்பது அரசின் எண்ணம் அல்ல, நீங்களே வசூலித்துக கொடுப்பதனால் எங்களுக்கும் நல்லது, அரசுக்கு வீண் செலவு ஏற்படாது, அதிகாரிகள் வரமாட்டார்கள் என்று சொன்னோம். அவர்களும் பணத்தைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

எங்களுக்கு பணம் வந்தால் போதும்; வீண் செலவு வேண்டாம்; விவகாரம் வேண்டாம். பணத்தை வசூல் செய்யச் செல்கிறஅதிகாரி களை அந்த ஊர்காரர்கள் சேர்ந்துகொண்டு திட்டுகிறார்கள். உங்களுக்கு மூளை இருக்கிறதா என்று கேட்கிறார்கள்; மானங் கெட்டவார்த்தைகளை சொல்லுகிறார்கள் என்று அதிகாரிகளும் எங்களிடம் குறைசொல்கிறார்கள். வருத்தப்படுகிறார்கள். கடனை வசூல் செய்யும்போது உங்களுடைய அணுகுமுறை

சரியாக இருக்கவேண்டும், கம்பிளைன்ட் இல்லாமல் வசூல் செய்
யுங்கள் என்று சொல்கிறோம். கம்பிளைன்ட் வந்தால் உங்கள்மீது
நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லுகிறபோது அதிகாரிகள்
இப்படிப்பட்ட குறைகளைச் கொல்கிறார்கள். கடன் பெற்ற
வர்கள் மனு கொடுப்பதைப்போல அதிகாரிகளும் மனு கொடுக்
கிறார்கள்.

(பிற்பகல் 1-40)

ஆகவே எங்களுடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில்
எங்களுடைய முதலமைச்சரைப் பொறுத்தவரையில் விவசாயி
சாயிகளின் மீது பாசத்தோடுதான் இருந்துகொண்டிருக்கிறோம்.
இங்கே மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு.
சித்தன் அவர்கள் சொன்னார்கள். நீண்டகாலக் கடன்களைப்
பொறுத்தவரையில் சிறு விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்று
பார்க்காமல் 6 மாத காலத்திற்குள் நீங்கள் வாங்கிய கடனைக்
கட்டிவிட்டால் அபராத வட்டியையும், கூடுதல்வட்டியையும் தள்ளு
படி செய்கிறோம் என்று அறிவித்திருந்தோம். அப்படி அறிவுக்கின்ற
நேரத்தில் இந்த அரசாங்கத்திலிருந்து 10 கோடி ரூபாய் அளவுக்கு
மானியமாகக் கொடுக்கப்பட வேண்டும் என்று கணக்கிட்டு நாம்
அந்த அறிக்கையில் அறிவித்திருந்தோம். முதலிலே ஒரு 3 மாதம்
என்றும் பிறகு ஒரு மூன்று மாதம் என்றும் அறிவித்து இருந்தோம்.
அப்போது விவசாயிகள் வேகமாகக் கட்ட ஆரம்பித்தார்கள்.
அன்றைக்கு நம்மைப் போன்ற அரசியல் வாதிகள் சொன்னார்
கள். பார்த்தீர்களா இந்த புரட்சித்தலைவர் அரசு கூடுதல்
வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்கின்றது.
எனவே நீங்கள் இன்னும் கொஞ்ச நாள் கட்டாமலே போனால்
வட்டியையும் தள்ளிவிடுவார்கள் என்று சொல்லி ஒரு பொய்ப்
பிரச்சாரத்தைச் செய்தார்கள்.

3 கோடி ரூபாய் அளவுக்குத்தான் அரசாங்கத்திலே இருந்து
தள்ளுபடியாக இந்த மானியத்தை நாங்கள் கொடுத்திருக்கி
றோம். இதை எல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்று
சொன்னால் உங்கள் மத்தியில் சொல்லித்தான் ஆகவேண்டும்.
10 கோடி ரூபாய் அளவுக்கு வரும் என்று நினைத்துத் தான் அந்தச்
சலுகையை அறிவித்தோம். ஆனால் சலுகை கொடுக்க முடிந்
தது 3 கோடி ரூபாய் என்று அளவுக்குத்தான். அதனைப் பொது
மக்கள் மத்தியில் வரவேற்றனர். முதலிலே அதற்கு வரவேற்பு
இருந்தது. முதல் நாள் அறிவித்த உடனே வேகமாக வசூல்
நடந்து கொண்டிருந்தது. ஆனால் பின்னாலே பிரச்சாரம் செய்
கின்ற நேரத்தில் நீங்கள் இப்படியே இருந்துவிட்டால் இன்னும்
கொஞ்சநாள் கழித்து வட்டியையும் தள்ளுபடி செய்வார்கள்.
எனவே அதைக் கட்ட வேண்டாம் என்று பிரச்சாரம் செய்தார்
கள். அதன் காரணத்தால் அந்த விவசாயிகள் கட்டாமல் போய்
விட்டார்கள். பிறகு ஜப்தி நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலை
யில் அத்தனையும் சேர்த்து கட்டவேண்டியிருக்கின்றது. எனவே





விவசாயிகள் மனப்பான்மை இப்படியே போனால் தள்ளுபடி
செய்து கொண்டே இருப்பார்கள் என்று எண்ணினால் நான்
உங்கள் மூலம் தெளிவாகச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.
இந்த அரசைப் பொறுத்தவரையில் கட்ட முடியவில்லை
என்றால் அவர்களைக் கருணையோடு பார்ப்பதற்குத் தயாராக
இருக்கின்றது. ஆனால் கட்ட முடியாது என்று சொல்லி அச்
சுறுத்துகிறார்கள் என்று சொன்னால் அந்தச் சவாலைச் சந்திப்
பதற்கும் இந்த அரசு தயாராக இருக்கின்றது என்பதைப் பணி
வோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் பொய்யான
கதைகளை எல்லாம் சொல்கிறார்கள். ஒரு சில புள்ளிவிவரங்
களை வைத்து இருக்கிறோம். அவர்கள் சரியான தகவலைச்
சொல்லி இந்த நாட்டு மக்களுக்கு நன்மை செய்யவேண்டும்
என்ற உணர்வை மட்டும் வைத்துக் கொண்டு அவர்கள் அதைச்
சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல்
இங்கே தேர்தல் பற்றிப் பேசினார்கள். ஆனால் தேர்தலைப்
பற்றிப் பேசிய நேரத்தில யாரும் வேகத்தோடு சொல்லவில்லை.
காரணம் இந்த அரசு தேர்தலை நடத்தும் என்று நம்பிக்
கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த அரசு தேர்தலை நடத்
தும். நான் கூட முதலமைச்சர் அவர்களிடத்திலே சொல்லிய
நேரத்தில் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். தேர்
தல் நடத்துவதற்கு வேண்டிய வேலைகளைச் செய்யுங்கள் என்று
சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தேர்தலே வராது என்று
பஞ்சாயத்துத் தேர்தலைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்த
நிலையில் அந்தத் தேர்தலுக்கு நாம் ஏற்பாடு செய்திருக்கி
றோம். அதே போன்று இதற்கும் மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் திடீரென்று தேர்தல் தேதியைச் சொல்வார்கள்.
எனவே அதிலே எந்தவிதமான வகையிலேயும் பயப்படவேண்டிய
தில்லை என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

அதிகாரிகள் மத்தியில் நான் பேசியபோது கூட சொல்லி
யிருக்கிறேன். அந்த விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதைப்
பொறுத்தவரையில் தயாராக இருங்கள் என்று சொல்லியிருக்
கிறோம். தேர்தலை நடத்தியாகவேண்டும், பொதுமக்களின்
பிரதிநிதி வந்தால்தான் நல்லது என்பதை உணர்கிறோம். குற்றச்
சாட்டுக்களைச் சொல்கிறபோது அதிகாரிகளைச் சொன்னாலும்
அரசாங்கத்தைச் சொல்வதாகத்தான் அர்த்தமே தவிர
அதிகாரிகளை மட்டும் சொன்னதாக நாங்கள் ஏற்றுக்
கொள்ளவில்லை. எனவே குற்றம் நடக்காமல் இருக்க
வேண்டும். கூட்டுறவுச் சங்கம் இலாபகரமாக நடக்கவேண்டும்
என்ற எண்ணத்தோடுதான் இருக்கிறோம். அந்த வகையில் அது
செயல்பட வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் இருக்கிறோம்.
மேலும் பொதுமக்கள் மத்தியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட
பிரதிநிதிகள் வந்தால் அவர்கள் ஆர்வத்தோடு இருப்பார்கள்,

இன்னும் சொல்லவேண்டும் என்றால் மத்திய வங்கியிலே தேர்ந் தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் இல்லை என்பதால் இந்த அரசுக்கு வசூல்கூட கம்மியாகத்தான் இருந்து கொண்டிருக்கின்றது. காரணம் சங்கத்தலைவர்கள் இல்லாததுதான். இந்த அரசு நன்றாக உணர்ந்திருக்கின்றது. அதை எல்லாம் றாகப் புரிந்திருக்கின்றது. எனவே தேர்தலை வேகமாக நடத்து வதற்கான வேலைகளை நிச்சயமாகச் செய்வோம் என்று சொல் லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவற்றை நன்

இந்த விவாதத்தில் கலந்துகொண்ட மாண்புமிகு உறுப்பினர் திருமதி இராசாம்பாள் அவர்கள் பெண்களுக்காகத் தனியாகச் சங்கம் சேலம் மாவட்டத்திலே ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். அந்த யோசனையை இந்த அரசு பரிவோடு கவனிக்கும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று வறட்சி, வெள்ளம் பாதிப்புக்கள் ஏற்பட்டது பற்றியும் அந்தப் பணிகள் பற்றியும் அவர்கள் சொல்லியிருக் கிறார்கள். அதையும் இந்த அரசு பரிவோடு கவனிக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

விழுப்புரம் திரு. இராசரத்தினம் அவர்கள் பேசிய நேரத் தில் பால் கூட்டுறவுச் சங்கம் வேண்டும் என்று சொன்னார்கள் அதற்காக நான் மாண்புமிகு அமைச்சர் அருமை அண்ணன் திரு. கே. ஏ. கே. அவர்களிடத்தில் சொல்லி அதற்கான ஏற்பாட் டைச் செய்து கொடுப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

உர விநியோகத்தைப் பொறுத்தவரையில் சரியான நேரத் தில் வழங்கவில்லை என்று சொன்னார்கள். இந்தப் பிரச்சி னையை அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொண்டிருக்கின்றது. அதற்கான நல்ல ஏற்பாட்டினை செய்வோம் என்பதைக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆசிரியர்கள் கூட்டுறவுச் சங்கம் புதியதாக ஆரம்பிக்க வேண்டும் என்றும் மாவட்டங்களில் கூட அவை இருக்க வேண் டும் என்றும் கேட்டிருக்கிறார்கள். அந்த நல்ல யோசனையை ஏற்றுக்கொண்டு அதிலே எவ்வளவு சாத்தியக்கூறுகள் இருக் கின்றன என்பதை எல்லாம் பார்த்து அதில் நடவடிக்கை எடுப் போம் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடலூர் சார்நிலை கூட்டுறவுச் சங்கத்தின்மீது விசாரணை இருந்தது என்று சொன்னார்கள் அந்த கூட்டுறவு சங்கத்தின்மீது 65 என்கொயரி போட்டு விசாரணை நடத்திக்கொண்டிருக்கிறோம் அதிலே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொறுப்பாக இருப்பார் கள் என்று சொன்னால் நிச்சயமாக நடவடிக்கை எடுப்போம் என்பதை இங்கே நான் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர் களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





அதேபோன்று திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் இங்கே பேசி னார்கள். அவர் பேசிய நேரத்தில் விவசாயிகளை கைது செய் கிறார்கல் என்று சொன்னார்கள். கைது செய்கிறார்கள் என்று சொன்னால் அங்கே அதிகாரிகளோடு தகராறு செய்து ஒரு வருக்கொருவர் அடிதடி நடந்திருந்தால் போலீஸ் தலையிட்டு அதன் பிறகுதான் அந்தக் காரணத்தின் அடிப்படையில் தான் கைது செய்திருப்பார்களே தவிர, வசூலுக்குப் போகிற நேரத்தில் கைது செய்கிற வழக்கம் இல்லை என்பதையும் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல மரியாதைக்குரிய மாண்புமிகு வீரய்யன் அவர் ள் சொல்லிய காலத்தில் விவசாயிகளுடைய பிரச்னையைப் பற்றி மிகத் தெளிவாகச் சொன்னார்கள் சொல்லிய அதே நேரத் தில் உயர்மட்டக் குழுவினர் பரிந்துரை செய்திருக்கிறார்கள் என்று சொல்லி, அசல் 420 கோடி ரூபாய், வட்டியாக 90 கோடி நிலுவை இருக்கிறது என்று சொன்னார்கள் அதிலே வட்டி பூராவும் தள்ளுபடி செய்தாக வேண்டும் என்று சொன்னார்கள். அசலை 5 வருடத்திலே திருப்பிக் கட்டவேண்டும் என்று சொன்னார்கள். 90 கோடியை நாம் தள்ளுபடி செய்தால் அந்தத் 90 கோடி ரூபாய் பணமும் உடனடியாக அரசின் கையைவிட்டுப் போய் விடும். அத்தோடு அந்த 400 கோடி ரூபாயை நாபாட் நிறுவனத் திற்கு அரசாங்கத்திடமிருந்து உடனடியாக கட்டிவிட்டு, பிறகு 5 வருஷத்தில் நாம் அதை வசூல் செய்தாக வேண்டும். விவசாயிகள் கட்ட கட்ட, அதை நாம் வரவு வைத்தாக வேண்டும். ஆகவே ஒரே நேரத்தில் அரசாங்கத்தின் கணக்குக்கு, அவர்களுடைய கணக்கின்படியே 500 கோடி ரூபாய் கையை விட்டுப்போகும். ஆகவே அந்த வகையில் உடனடியாக அரசாங்கத்தின் கையை விட்டு 500 கோடி ரூபாய் போக வேண்டிய நிலைமை இருப்ப தால்தான், விவசாய உயர் மட்டக் குழுவினுடைய பரிந்துரை களை அதிகாரிகளிடத்தில் சொல்லி எந்தெந்த பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளலாம் என்று அதிலே சரிபார்க்கச்சொல்லி அதை துரிதப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

இன்றைக்கு அவர்கள் சொல்லாமலேயே சில பணிகளை நாங்கள் விவசாயிகளுக்காகச் செய்து வருகிறோம். சிறு விவசாயி களுக்கு குறைந்த விலையில் மின்சாரக் கட்டணமும், இலவச மின்சாரமும் கொடுத்து வருகிறோம், அதை நாங்கள் உயர் மட்டக்குழு சொல்லாமலேயே செய்து கொண்டிருக்கிறோம் என்பதைச் சொல்லி, எங்களைப் பொறுத்த வரைக்கும் விவ சாயிகளுடைய பிரச்னைகளை சரியாகத்தான் அணுகிக் கொண் டிருக்கிறோம் என்று இந்தப்புள்ளி விவரத்தின் மூலமாக நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து தாலியை ஜப்தி செய்வதாகச் சொன்னார்கள். நிச்சயமாக அப்படி எங்கேயும் இருந்திருக்காது. அப்படி தாலியை ஜப்தி செய்து ஆபிசில் கொண்டு வைத்திருப்பார்கள் என்று சொன்னால் நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்பதை சொல்லிக் கொள்கிறேன். ஆனால், உறுப்பினர்களை அணுகியவர்கள் அந்த நேரத்தில் இப்படிச் சொன்னதால்தான் கோபம் வரும் என்று அதுவும் நம்முடைய சமூகத்தில் தாலியை ஜப்தி செய்தார்கள் என்று சொன்னால், அது யாராக இருந்தாலும் கோபம் வரும் என்ற காரணத்திற்காகத்தான் அப்படிச் சொல்லியிருப்பார்களே தவிர, உண்மையிலேயே தாலியை ஜப்தி செய்யக்கூடிய அளவுக்கு அதிகாரிகள் ஒன்றும் காட்டுமிராண்டிகள் இல்லை என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல உரப்பிரச்சினைப் பற்றிச் சொன்னார்கள். உரத்தைப் பொறுத்தவரையில், நாம் அவர்களுக்கு உரம் வாங்குவதற்காக கடனைக் கொடுக்கின்ற காலத்திலே அதற்குப் பதிலாக உரத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்த உரத்தை சில விவசாயிகள் வாங்கி அவர்களுடைய விவசாயத்திற்கு பயன்படுத்தியது போக, மிச்சத்தை தனியார்களிடத்திலே விற்றுவிடுகிறார்கள். நம்முடைய உரத்தை வாங்கி அதை குறைந்த விலைக்கு விற்றுவிடுவதால் நம்மைவிட குறைந்த விலைக்கு வெளியில் கிடைக்கிறது. ஆகவே அந்தக் கருத்தில் கொண்டுதான், இதற்கு மாற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதிகாரிகளிடத்தில் சொல்லியிருக்கிறேன். நம்முடைய உரத்தின் விலையைவிட வெளியிலே மிகக் குறைவாக விற்கிறது என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருப்பதால்தான் அதைப் பரிசீலனை செய்யச் சொல்லி அதிகாரிகளிடத்தில் நாங்கள் உத்தரவு இட்டிருக்கிறோம் என்பதையும் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் ராமலிங்கம் அவர்கள் பேசுகிறபோது அரசாங்கம் செய்திருக்கிற நல்ல காரியங்களை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். காய்கறி சங்கம் பற்றி சொன்னார்கள். காய்கறிச் சங்கத்திலே உற்பத்தி ஆகிய காய்கறிகளை வெளியிலே கொண்டு போய் விற்பனை செய்கிற அளவுக்கு அதை நாம் வளப்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். அதற்காக தமிழகத்திலே இருக்கிற 44 காய்கறிச் சங்கங்களை ஒன்று சேர்த்து, உற்பத்தியாளர் சங்கங்களை தேர்வு செய்து அவைகளுக்கு காய்கறி விதைகள், உரங்கள் எல்லாம் வாங்கிக் கொடுத்து, வண்டிகள் வாங்கிக் கொடுத்து வெளியிலே கொண்டு போய் விற்பதற்கான வசதிகளையெல்லாம் செய்து கொடுத்திருக்கிறோம். 44 சங்கங்களுக்கு இவ்வாறு கொடுக்கப்பட்டிருக்கிறது. குளிர் சாதன வசதிகளைச் செய்து





கொடுத்திருக்கிறோம். ஆகவே காய்கறிச் சங்கங்களை முறைப்
படுத்தச் செய்து அரசாங்கம் அதைச் செய்து கொண்டுதான்
இருக்கிறது என்பதையும் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டி
ருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் அவர்கள்
சொல்லிய காலத்தில் கொள்முதலிலே தவறு இருப்பதாகச்
சொன்னார்கள். அதற்காகவே ஜே. சி. சி. பர்ச்சேர்ஸ் என்று
சொல்லி 3, 4 அதிகாரிகளை சேர்த்து ஒரு இடத்திலே மீட்டிங்
போட்டு வாங்கச் சொல்லியிருக்கிறோம். தனியாரிகளிடத்திலும்
கொள்முதல் செய்ய வேண்டும் என்று அதிகாரிகளை உத்திரவிட்
டிருக்கிறேன். அதிலே தவறு இருக்கிறது என்று சொன்னால்,
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரியாக அதைக் குறிப்பிட்டுச்
சொன்னால், நிச்சயமாக சம்பந்தப்பட்டவர்கள் மீது நட
வடிக்கை எடுக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது என்று
சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே போல மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். ஜி. ஆறுமுகம்
அவர்கள் சொல்லிய காலத்தில் கல் உடைக்கும் குவாரிகளை
தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுக்க வேண்டும் என்று
சொன்னார்கள். நல்ல யோசனை அது. அதிலே இருக்கிற
சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து நிச்சயமாக அரசு அதிலே ஒரு
நல்ல முடிவை எடுக்கும் என்பதைச் சொல்லிக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன். அதே போல மாண்புமிகு உறுப்
பினர் அனந்தக் கிருஷ்ணன் அவர்கள் பேசினார்கள். அவர்
களுடைய தொகுதிக்கு வசூலுக்கு அதிகாரிகள் சென்றபோது
கூட, அரசாங்கத்தின் உணர்வுகளை சிரமங்களை புரிந்துக்
கொண்டு, அதிகாரிகளிடம் நீங்கள் போய் வசூல் செய்ய
வேண்டாம். நானே வசூல் செய்து கொடுக்கிறேன் என்று
சொல்லி வசூல் செய்து கொடுத்தார்கள். அதற்காக நன்றியைச்
சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி அவர்கள்
பேசினார்கள். அவர்களின் உயர்மட்டக்குழுவினுடைய தலைவர்
ராஜினாமா செய்தார்கள் என்று சொன்னார்கள். (குறுக்கீடு)
அதுதான், உயர்மட்டக் குழுவில் அவர்களுடைய கட்சியைச்
சார்ந்த 2 உறுப்பினர்கள் ராஜினாமா செய்தது பற்றிச் சொன்
னார்கள். நான் சொல்வது எல்லாம், அந்தக் குழுவிலே இருந்து
விவசாயிகளுக்காக அவர்கள் வாதாட வேண்டுமே தவிர, ராஜி
னாமா செய்திருக்கக்கூடாது. அரசாங்கம் அதனுடைய பரிந்துரை
களை ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொல்லவேயில்லை.

எப்படி அவைகளைச் சரி செய்யலாம். எந்த எந்தப் பரிந்
துரைகளை ஏற்றுக் கொள்ளலாம் என்றுதான் நம்முடைய அர
சாங்கம் அதிலே ஆராய்ந்துக் கொண்டிருக்கிறோம். அவர்கள்
சற்று அவசரப்பட்டு விட்டார்கள் என்று நினைக்கிறேன். எங்

களைவிடப் பெரியவர்கள்; ஏனோ அவசரப்பட்டு விட்டார்கள்
அதற்காக வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அர
சாங்கம் உயர்மட்டக்குழு செய்த பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ள
வில்லை என்று சொல்லவேயில்லை. சொல்லாமலேயே ராஜி
னாமா செய்து விட்டார்கள். ஏற்றுக்கொள்ளவேயில்லை.
என்று சொல்லிய நேரத்தில் அப்படிச் செய்திருந்தால் அது
நியாயமாக இருந்திருக்கும் என்பதை நான் அந்த உறுப்பினந்
களுடைய கவனத்திற்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-50;

அதேபோல திருப்பூர் வளர்மதி ஸ்டோர்சைப் பற்றிச்
சொன்னார்கள். 17 பேர்கள் டெம்பரரியாக இருப்பதாகவும்,
நான்கு பேர்கள்தான் பெர்மனென்ட் என்றும் சொல்லியிருக்
கிறார்கள். அரசாங்கம் இதுகுறித்து ஆராய வேண்டுமென்று
சொல்லி இருக்கிறேன். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை,
நல்ல முடிவுகளை நாம் எடுப்போம் என்று சொல்லிக் கொள்
கிறேன்.

அதேபோல மத்திய வங்கிகளில் இருக்கிற செயலாளர்களின்
சம்பளத்தைப் பற்றிச் சொன்னார்கள். அவர்களைப் பொறுத்த
வரையில் சொல்ல விரும்புவது கமர்ஷியல் வங்கியில் இருப்பவர்
களுக்கும், நம்முடைய மத்திய வங்கியில் இருப்பவர்களுக்கும்
திரு. பிரகாசம் அவர்கள் நம்முடைய பதிவாளராக இருந்த
போது, கமர்ஷியல் வங்கியில் அந்தப் பதவியை வகிக்கக்கூடிய
மானேஜர்களை விட அதிகமாக நம்முடைய வங்கியில் இருப்பவர்
கள் வாங்கி இருக்கிறார்கள். திரு. பிரகாசம் அவர்கள் பதி
வாளராக இருந்தபோது இரண்டு பேரையும் ஒன்றாக வைத்து
நம்முடைய அதிகாரிகள் அதிகமாக சம்பளம் வாங்குகிறார்கள்
என்று சொல்லி, இரண்டு பேரையும் ஒன்றாக வைத்திருக்கிறார்
கள். அதிலேயிருந்து கமர்ஷியல் வங்கிகளில் சம்பளம் ஏற்றுகிற
நேரத்திலே நாமும் பாங்குகள் நடத்துகிற காரணத்தால்,
அவ்வப்போது சம்பளத்தைக் கூட்டிக் கொடுத்துக் கொண்டிருக்
கிறோம். நாம் சம்பளத்தை அதிகரித்துக் கொடுத்திருக்கிறோம்
என்று சொன்னால் நாம் கமர்ஷியல் வங்கிகளின் சம்பளத்தின்
அடிப்படையில் கொடுக்கவில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

நம்முடைய மரியாதைக்குரிய திரு.எஸ்.என். இராமசாமி அவர்
கள் ஒரு நல்லகருத்தைச் சொன்னார்கள். அதற்காக என்னுடைய
பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல
மாண்புமிகு சித்தன் அவர்கள் பேசியபோது எல்.டி. பாங்கில்
கூடுதல் வட்டி, அபராத வட்டியை தள்ளவில்லை என்று
சொன்னார்கள். தள்ளியதை நான் புள்ளி விவரத்தோடு
சொல்லியிருக்கிறேன். அவற்றை உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்
கொள்வார்கள் என்று நம்புகிறேன். அடுத்து விவசாயிகள்



உற்பத்தி செய்வதற்குரிய நேரமென்றும், கடன்களை வசூல்
செய்வதற்கு சரியான நேரமில்லையென்றும் சொன்னார்கள்.
எங்களுக்கு 30—6—85க்குள் 40 சதவிதம் வாங்கியாக
வேண்டிய சூழ்நிலை. விவசாயிகளிடமிருந்து ஆண்டு முழுவதும்
சராசரியாக வாங்குவதற்கு முயற்சிகளை எடுக்கிறோம். ஆனால்
முயற்சி பயனளிக்கவில்லை. கடைசியாக வருகிறபோது ஜப்தி
நடவடிக்கையில் ஈடுபட்டால்தான் வசூல் செய்ய முடியும் என்ற
நிலை வந்து விடுகிறது. அந்த நிலையில்தான் நாங்கள்
செய்கிறோமே தவிர செய்ய வேண்டுமென்று செய்யவில்லை.
அடுத்து இன்ஷூரன்சைப் பற்றிச் சொன்னார்கள். அதுகுறித்தும்
கவனத்தில் இருக்கிறது.

அடுத்துச் சொல்கிறபோது நேஷனலைஸ்ட் பாங்குகளில் ஜப்தி
நடவடிக்கையில்லையென்று சொன்னார்கள். வர்த்தக வங்கிகளில்
இருப்பவர்கள் அங்கே ஏலம் விடுகிறார்கள். ஜப்தி நடவடிக்கை
இல்லையேயொழிய, வங்கிக் கடன்களை வசூல் செய்வதற்கு
கோர்ட்டுகளுக்குச் சென்று சொத்தை எல்லாம் ஏலம் போடுகிறார்
கள்.அந்த கமர்ஷியல்வங்கியில இருப்பவர்கள் மூன்று மாதத்திற்கு
ஒருமுறை வட்டி போட்டு, அந்த வட்டியை அசலாக சேர்த்து
விடுகிறார்கள். அவர்கள் தங்கள் பாணியிலே போய்க் கொண்டிருக்
கிறார்கள். (குறுக்கீடு) பீனல் இன்ட்ரஸ்ட் சேர்ந்து சுமார்18 சத
விதம் போடுகிறார்கள். ஆகவே எந்த வங்கியாக இருந்தாலும்
லாபத்தில் நடக்க வேண்டுமென்று அவர்கள் செய்து கொண்டிருப்
பார்கள். ஆகவே வர்த்தகவங்கியில் இருப்பவர்கள் அவர்கள் பாணி
யில்போய்க் கொண்டிருக்கிறார்கள். நாம் நம்முடைய பாணியில்
பணிகளைச் செய்து வருகிறோம். அவர்கள் செய்யாமல் நாம்
மட்டும் செய்கிறோம் என்பதில்லை என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். அந்த அளவிற்கு சிறப்பாக எடுக்க வேண்டிய
நடவடிக்கைகளைச் சொல்லி, புதிய கருத்துக்களை வருகிற காலத்
தில் இந்த அரசாங்கம் ஏற்று நடப்பதற்கு நல்ல யோசனைகளை
சொன்னதற்காக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் நன்றி
சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்துச் சொல்லும்போது உறுப்பினர்கள் சிறு விவசாயிகள்
சொத்தை ஜப்தி செய்கிறார்கள் என்று சொன்னார்கள். என்
னிடத்தில் அந்தப் பட்டியலே இருக்கிறது. பெரிய ரைஸ் மில்
உரிமையாளர்கள், பஸ் உரிமையாளர்கள், நெல் வியாபாரிகள்,
சாராயக்கடை உரிமையாளர்கள், கால்நடை பண்ணைகளை
வைத்திருப்பவர்கள், பெட்ரோல் பங்க் உரிமையாளர்கள், சிறு
உணவு விடுதி வைத்திருப்பவர்கள் ஆகியவர்கள் தாங்கள் வாங்கிய
கடனை வாங்கிய நாளிலிருந்து பணத்தை கட்டாமல் இருக்கிறார்
கள். ஏழு வருடமாக வாங்கிய கடனுக்கு வட்டியே கட்டவில்லை.
அவர்கள் பணம் கட்டவில்லை. அப்படியே வைத்திருக்கிறார்கள்.
அவர்கள்தான் அரசாங்கத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.
சிறு விவசாயிகளைப் பொறுத்தவரையில், வசூலுக்குப் போகிற

போது அவர்கள் கட்ட தயாராக இருக்கிறார்கள். ஆயிரம் ரூபாய்
வாங்கியிருப்பவர்கள் எல்லாம் 200 ரூபாய் வாங்கிக் கொள்ளுங்கள்
மீதியை இரண்டு மாதங்களில் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்
கள். அதற்கு நாங்களும் சரியென்று சொல்கிறோம். ஆனால்
அதிகாரிகள் வருவதற்கு முன்னாலே ப்ரஸ் மில் உரிமையாளர்கள்,
பஸ் உரிமையாளர்கள் எல்லாம் கூட்டம் போட்டுக் கொண்டு
செய்கிறார்கள். அவர்களிடம் பாக்கியாக 20 ஆயிரம், 30 ஆயிரம்,
40 ஆயிரம், 60 ஆயிரம் என்ற அளவில் இருக்கிறது. இவர்கள்
தான் சிறு விவசாயிகளை சேர்த்து வைத்துக் கொண்டு பணத்தை
கட்ட வேண்டாம் என்று சொல்லி அந்த முறையில் செய்து
கொண்டிருக்கிறார்கள். அதன் மூலமாக வங்கிகளின் வேலையை
அதிகரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். என்னிடத்திலே அதற்கான பட்டியலே இருக்
கிறது. யார் யாருக்கு எந்த வருடத்தில் எவ்வளவு கொடுக்கப்
பட்டது? எவ்வளவு வாங்கினார்கள்? எவ்வளவு பாக்கி இருக்கிறது
என்று விவரம் இருக்கிறது. பெரிய விவசாயிகள் 30 ஆயிரம்
வாங்கியவர்கள் பூராவும் வட்டியே கட்டவில்லை. கடன் வாங்கிய
நாளிலிருந்து கட்டாமல் அப்படியே வைத்திருக்கிறார்கள். ஆனால்
சிறு விவசாயிகள் அரசாங்கத்தோடு ஒத்துப் போய்க் கொண்டிருக்
கிறார்கள் என்பதை மட்டும் நான் இங்கே சொல்லி கொள்ள
கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே நல்ல கருத்துக்களைச் சொன்ன
மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

அடுத்து மானாவாரி பயிர் செய்வதற்கு சிறு விவசாயிகளுக்கு
சலுகைகளை அரசாங்கம் செய்திருக்கிறது. மாண்புமிகு முதல்வர்
புரட்சித் தலைவர் அரசு இதுவரையில் எந்த அரசாங்கமும்
செய்யாத சலுகையை முதன்முதலாக மானாவாரிப் புஞ்சையிலே
விவசாயம் செய்து கொண்டிருக்கிற சிறு விவசாயிகளுக்கு நான்கு
சதவித வட்டியிலே உதவியை கொடுத்துள்ளது. இதற்கு முன்னாலே
எந்த அரசாங்கமும் கொடுத்ததில்லை. எங்களுடைய முதல்வர்
அவர்கள் மானாவாரி பயிர் விவசாயம் செய்கிற சிறு விவசாயிகளை
உற்சாகப்படுத்துவதற்கு 4 சதவிகித வட்டியிலே இன்றைக்கு
பணத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

அதேபோன்று இங்கே பயிர் ஈட்டுறுதித் திட்டத்தைப் பற்றிச்
சொன்னார்கள். எல்லா அரசாங்கமும் இதைப் பார்த்து பயந்து
கொண்டு இருந்த நேரத்தில் முன்னோடித் திட்டமாக நம்முடைய
அரசாங்கம் அதை ஏற்று நடத்தியது. இப்போது மத்திய சர்க்காரி
லிருந்து புதிதாக ஒரு திட்டத்தைச் சொல்லியிருக்கிறார்கள். கம்பல்-
சரியாக எல்லோருமே, விவசாயச் சேவைச் சங்கங்களிலிருந்து கடன்
வாங்குகின்ற அத்தனை பேருமே, கம்பல்சரியாக இன்சூரன்ஸ்
செய்ய வேண்டும் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து இருக்
கிறார்கள். இந்தத் திட்டத்தை அரசாங்கம் கொள்கை அளவில்
ஏற்றுக் கொண்டு இருக்கிறது. அதிலே இருக்கிற நடைமுறை





சிக்கல்களை மட்டும் நாம் சரிபார்த்துக் கொண்டு இருக்கிறோம். அதனால்தான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதுலே லேட்டாகிக் கொண்டிருக்கிறதே தவிர, இதிலே வேறு எந்த விதமான காலதாமதமும் இல்லை. மத்திய அரசாங்கம் சொல்லி இருக்கின்ற இந்த கம்பல்சரி திட்டத்தை — முன்பு வாலண்டரியாக இருந்தது — கொள்கை அளவிலே ஏற்றுக் கொண்டு, அதிலே உள்ள சிறு சிறு பிரச்னைகளை ஆய்ந்து கொண்டு இருக்கிறோம். ஆகவே அதை சீக்கிரமாக முடித்து, மிக விரைவில் அதை நடைமுறைப் படுத்துவதற்கு வேண்டிய வேலைகளை நாம் எடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

அடுத்து, முன்பெல்லாம் நெல்லுக்கும், கடலைக்கும் மட்டும் கொடுத்து இருந்தோம். இப்போது இந்தப் புதிய திட்டத்தின் மூலமாக வருகின்ற ஆண்டுகளில் கோதுமை, சிறு தானியங்கள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருப்பு போன்ற இந்த வகைப் பயிர் களுக்கும் இந்தத் திட்டத்தை அரசாங்கம் விரிவுபடுத்தும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். இப்படிச் செய்கின்ற காலங்களில் நாம் வருகின்ற ஆண்டுகளிலே எல்லாம் வறட்சி, வெள்ளம் வருகின்ற காலத்தில், விவசாயி தன்னுடைய கடனை தள்ளி வைத்து விடக் கூடிய அளவிற்கு வராத நிலைமை களை இந்த காப்புறுதித் திட்டம் காப்பாற்றும் என்று நினைக் கிறேன் என்பதை இங்கே பேசிய உறுப்பினர்களுக்கு நான் தெரி வித்துக் கொள்கிறேன்.

வட்டார அளவில் பயிர் சோதனை நடத்த வேண்டும் என்று சொன்னார்கள். இந்த புதிய திட்டத்தின்படி இப்போது நாம் பிளாக் லெவலிலே கொண்டு வந்திருக்கிறோம். இதிலே ஒரு சிக்கல் என்ன என்று சொன்னால், நாம் சொல்லுகின்ற கணக்கை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. புள்ளி விவர இலாக்காவிலேயிருந்து கொடுக்கின்ற கணக்கைத்தான் அந்த இன்சூரன்ஸ் கம்பெனியினர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நாம் மேலும் தெரிவித்து இருக் கிறோம், இதை கிராம அளவிலே கொண்டு வந்தாக வேண்டும் என்று. நீங்கள் தனித்தனி விவசாயிகளுக்கு கொண்டுவரா விட்டாலும் பரவாயில்லை. இந்த பயிர் ஈல்டை கணக்குச் செய்வது என்பதை கிராம அளவிலே கொண்டுவர வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திற்குச் சொல்லியிருக்கிறோம். அதற்கு வேண்டிய நட வடிக்கையை நிச்சயமாக எடுப்போம்.

முன்பெல்லாம் 10 இடங்களில் மட்டும் அந்த ஈல்டை கணக்கில் எடுத்தார்கள். இப்போது பஞ்சாயத்து லெவலில், வருகின்ற காலங் களில், 16 இடங்களில் அந்த பயிர் பரிசோதனை செய்து, நாம் இன்சூரன்ஸ் வழங்கப் போகிறோம். அதே போல் பல இடங்களில் பலவிதமான பிரிவுகள் இருந்தது. ஒரு இடத்திலே 4 சதவீதம் இருந்தது. இன்னொரு இடத்திலே 6 சதவீதம் என்று இருந்தது.

அப்படி இல்லாமல் எல்லா இடத்திற்கும் நாம் 2 சதவீதமாக அறிவிக்கப் போகிறோம். ஆகவே இந்தத் திட்டத்தைக் கொள்கை அளவிலே நாம் அறிவித்து விட்டோம். மிகச் சீக்கிரமாக இந்தத் திட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவரப் போகிறோம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அதே போல் போன வருடமெல்லாம் விவசாயச் சேவைக் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து அரை ஏக்கர் விவசாயம் செய்பவர்களுக்கு, மிகச் சிறிய விவசாயிகளுக்கு ஈமச் சடங்கு என்று சொன்னால், 75 ரூபாய் நாம் கொடுத்துக் கொண்டிருந்தோம். இந்த 75 ரூபாய் காணாது என்று சொல்லி, அந்த 75 ரூபாயைக் கூட்டி, 500 என்று கொடுக்கச் சொல்லியிருக்கிறோம். காரணம் கிராமங்களில் இருப்பவர்கள் அதிலே எதுவும் செய்ய முடியவில்லை என்று சொன்னதை மனதிலே கொண்டு, இந்த 75-க்குப் பதிலாக 500 ரூபாய் உடனடியாக கடன் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறோம்.

அதேபோல் திருமணங்கள் செய்கின்றவர்களுக்கு, கலப்புத் திருமணம் செய்கின்றவர்களுக்கு எல்லாம் அவர்கள் ஆண்களாக இருந்தால், 1,000 ரூபாயாகவும், கலப்புத் திருமணம் செய்கின்ற பெண்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கும் நாம் இப்போது உத்தரவிட்டு இருக்கிறோம்.

அதேபோல் தனி நபர் ஜாமீனில் சென்னையிலே வாழ்கின்ற அரசாங்கத்திலேயும், தொழிற்சாலைகளிலும் வேலை செய்பவர்களுக்கு இப்போது 2 ஆயிரம் ரூபாய் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். சென்னையில் இருக்கின்றவர்கள் எப்போது வேண்டுமானாலும் போய் 2 ஆயிரம் ரூபாயை வாங்கிக் கொள்ளலாம். ஆனால் அதே நேரத்தில் மதுரை, திருச்சி, திருநெல்வேலி போன்ற இடங்களில் வாழ்கின்ற அதிகாரிகள், தனியார் துறையிலே இருப்பவர்கள், மற்றவர்களுக்கெல்லாம் இந்த லோன் கிடையாது. இப்போது அத்தனை மத்திய கூட்டுறவு வங்கிகளிலும், தனி நபர் ஜாமீன்பேரில், எப்படி சென்னையில் உள்ளவர்களுக்குக் கொடுக்கிறார்களோ, அதைப் போன்று, 2 ஆயிரம் ரூபாய் இவர்களுக்கும் கொடுக்க நாம் சொல்லியிருக்கிறோம்.

அதேபோல் மத்திய வங்கிகளிலே இப்போது ஓ. டி. 5 ஆயிரம் ரூபாய் என்றுதான் இருக்கிறது. இதை 5 ஆயிரம் ரூபாய் ஓ. டி. வாங்கிக் கொண்டு, வெற்றிலைப் பாக்குக் கடைக்காரர்களோ, மற்றவர்களோ சரியாக நிர்வாகம் நடத்த முடியவில்லை என்று சொன்னதை மனதிலே வைத்துக் கொண்டு, இப்போது கூட்டுறவுச் சங்கங்களிலே எல்லாம் 10 ஆயிரம் ரூபாய் அளவிற்கு ஓ. டி.-யாக அதிகப்படுத்தி அறிவித்து இருக்கிறோம்.

அதேபோன்று தமிழ்நாட்டில் இருக்கின்ற கூட்டுறவு விற்பனை இணையத்தின் மூலமாக காமராஜ மாவட்டம் விருதுநகரில் பருப்பு உடைக்கும் தொழிற்சாலையை ஏற்படுத்த இருக்கிறோம். காரணம்



இன்றைக்குக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களிலே எல்லாம் ஆந்திரா விலேயிருந்து நாம் உடைத்து வாங்கிக் கொடுத்துக் கொண்டு இருக் கிறோம். நமக்கு என்று ஒரு பருப்பு உடைக்கும் தொழிற்சாலை இல்லை என்பதைப் புரிந்து கொண்டு உளுந்து போன்ற பயிர்கள் வருகின்ற காரணத்தால், அந்தப் பகுதியில் புதிதாக பருப்பு உடைக் கும் ஆலை ஏற்படுத்துவதற்கு சுமார் 27 லட்சம் செலவில் நாம் ஏற்பாடு செய்து கொண்டு ருெகிறோம்.

அதேபோன்று மணப்பாறையில், திருச்சி மாவட்டத்தில் பருத்தி பதனிடும் ஆலையை ஏற்படுத்த யோசித்துக் கொண்டு இருக்கிறோம். அதேபோல் தஞ்சை, திருச்சி, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் வீரிய விதைகளை விநியோகம் செய்கின்ற திட்டத்தை ரூபாய் 32 லட்சம் செலவில் கொண்டுவர நாம் ஆய்வு செய்து கொண்டு இருக்கிறோம். அதை முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய வேலைகளைச் செய்து கொண்டு இருக்கிறோம்.

(பிற்பகல் 2-00)

அதேபோல் மதுரையில் வெங்காயம் நிறைய விளைகிறது. மிக சீப்பாக விற்கின்றது. இப்படி சீப்பாக விற்கின்ற சூழ்நிலையை தவிர்ப்பதற்காக மதுரையில் மாவட்டத்தில் வெங்காய சேமிப்பு கிடங்கு ஏற்படுத்துவதற்கு சுமார் 18 லட்ச ரூபாய் திட்டம் அரசி னுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதை நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் இங்கே பேசியவர்கள் எல்லாம் மலைவாழ் மக்களுடைய பிரச்சினையைப் பற்றி சொன்னார்கள். இப்போது கல்வராயன் மலை, வள்ளிமலை, ஏளக்காடு போன்ற பகுதிகளில் எல்லாம் அதிகமான கறிவேப்பிலை உற்பத்தி ஆகிறது. அங்கே அந்த கருவேப்பிலையை ஆய்ந்து கொடுப்பதற்கு சரியான அளவில் சம்பளம் கொடுக்காமல் இருப்பதை மனதில் கொண்டு அங்கே கறி வேப்பிலையை குத்தகைக்கு வாங்கி இந்த வேலையை டென்பேட் நிறுவனமே செய்து அதை சென்னையில் கொண்டுவந்து விநியோகம் செய்கின்ற ஒரு திட்டத்தை போட்டுஇருக்கிறோம். 36 லட்சம் ரூபாய் செலவில் அந்த கறிவேப்பிலை வியாபாரத்தை துவங்கயிருக் கிறோம். நான் அங்கே போகும் நேரத்தில் கறிவேப்பிலை எடுத்து ஆய்ந்து செய்வதற்கு சரியான பணம் கிடைக்கவில்லை என்பதை மனதில் வைத்து அதையும் நாங்கள் செய்து இருக்கிறோம் என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் பெண் ஊழியர்களே நிர்வகிக்கும் வகையில் மாவட்ட தலைநகரங்களில் எல்லாம் ஒரு வங்கியை உண்டாக்க வேண்டும் என்ற நிலையில் பெண்களே நிர்வாகம் செய்யக் கூடிய

[திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்] [1985 ஜூன் 28

அளவுக்கு வங்கியை உண்டாக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். இப்போது சென்னையில் 2 வங்கிகள் பெண்களே நடத்தக்கூடிய வங்கிகள் நாம் திறக்க ஏற்பாடு செய்து இருக்கிறோம்.

அதேபோல் 31-3-1986-க்குள் வேலூர், தென் ஆற்காடு, புதுக்கோட்டை மற்றும் திருநெல்வேலி மத்திய கூட்டுறவு வங்கிகளின் கீழ் அந்த தலைநகரங்களில் பெண் ஊழியர்களே வேலை செய்யும் தனிப்பட்ட அந்த வங்கிகளை திறக்கச் சொல்லி நாங்கள் உத்திர விட்டு இருக்கிறோம்.

அதேபோல் நகர வங்கிகளில் இன்றைக்கு தமிழகத்தில் கீழ்க்கண்ட 12 ஊர்களில் புதியதாக நகர வங்கிகளை திறப்பதற்கு வேண்டிய உத்தரவினை இட்டு இருக்கிறோம். அந்த ஊர்களின் பெயர்கள் உளுந்தூர்பேட்டை, சிவகங்கை, அருப்புக்கோட்டை, நாகப்பட்டினம், ஓசூர், அவநாசி, மேட்டூர், பெருந்துறை, அண்ணா நகர், முசிரி, சங்கரன்கோயில், ஆற்காடு போன்ற 12 ஊர்களில் 31-3-1986-க்குள் புதிய கூட்டுறவு நகர் வங்கிகளை ஏற்படுத்தச் சொல்லி நாங்கள் உத்தரவிட்டிருக்கிறோம்.

அதேபோல் தமிழகத்தில் இருக்கிற நகர பண்டகக் கூட்டுறவு சாலைகளுக்கு சொந்தக் கட்டிடங்கள் இல்லாமல் முக்கால்வாசி வங்கிகள் இருக்கின்றன. ஆகவே, உடனடியாக புதிய கட்டிடங்கள் சொந்தக் கட்டிடங்கள் கட்ட வேண்டும் அவைகள் வாடகை கட்டிடங்களில் இருப்பதால் வாடகை மிக அதிகமாக கொடுக்க வேண்டியிருக்கிறது. என்று எண்ணி இப்போது ஆயுள் காப்பீட்டு உறுதி கழகத்தின் மூலமும், என்.சி.டி.சி. உதவியுடனும் தமிழகத்தில் 14 சிறப்பு அங்காடிகளுக்கு புதிய முறையில் இன்றைக்கு புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு வேண்டிய வேலைகளை செய்து கொண்டு இருக்கிறது.

அதேபோல் கூட்டுறவு பண்டகசாலைகளில் சுய தேவை பிரிவுகளை இன்னும் தமிழகத்தில் 10 ஊர்களில் மாவட்ட தலைநகரங்களில் ஏற்படுத்தச் சொல்லியிருக்கிறோம்.

அதேபோல் நீண்ட நாட்களாகவே கூட்டுறவு பயிற்சி நிலையங்களில் பொது அடிப்படையில் பயிற்சி இருப்பதை டிப்ளமோ பட்டம் கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கை இருந்தது. அந்த கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டு இப்போது தமிழ்நாட்டில் 7 கூட்டுறவு பயிற்சி நிலையங்களில் பயிற்சியாளர்கள் 9 மாதங்கள் படித்து முடிப்பவர்களுக்கு இனிமேல் டிப்ளமோ பட்டம் கொடுக்கப்படும் என்பதை நான் பணிவோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



1985 ஜூன் 28] [திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன்]

அதேபோல் இன்றைக்கு விவசாயிகளுக்கு சரியான விலை கிடைக்கவில்லை என்று அத்தனை உறுப்பினர்களும் சொன்னார்கள். அதை கருத்தில் வைத்துக்கொண்டு விவசாயிகள் இன்றைக்கு அவர்களுடைய விளைப் பொருட்களை விற்பனை சங்கங்களுக்கு கொண்டு வரும் காரணத்தால் இடைத்தரகர்களின் ஆதிக்கத்தை குறைக்கவேண்டும், இடைத்தரகர்கள் அதிக கமிஷன் வைக்கிறார்கள், இடைத்தரகர்கள் மூலமாக நிறைய பணம் விவசாயிகளுக்கு கிடைக்காமல் போகிறது என்பதை இன்றைக்கு இந்த அரசு புரிந்து தமிழகத்தில் இருக்கின்ற 20 மார்க்கெட்டிங் சங்கங்களில் இந்த முறை யார்டு போன்று விவசாய வசதிகளை எல்லாம் செய்து கொடுத்து 20 இடங்களில் டெவலப் செய்து இருக்கிறோம், 20 இடங்களில் யார்டு கட்டிக் கொடுக்கப்போகிறோம்.

அங்கே விவசாயிகள் பொருட்களை கொண்டு போய் அந்த சரக்குகளை வைத்து விற்பதற்குவேண்டிய வசதிகளை செய்து அதே நேரத்தில் விவசாயிகள். வைக்கும் நேரத்தில் அவர்கள் 10 தினங்கள் கழித்து விற்க வேண்டும் என்று சொன்னால் அதற்கு வேண்டிய பணத்தை அட்வான்ஸ் பணம் எவ்வளவு கேட்கிறார்களோ அதையும் கொடுத்து அதுபோல் விற்று விட்டோம் என்று சொன்னால் உடனடியாக அன்றைக்கு இரவே அந்தப் பணத்தை அவர்களுக்கு கொடுக்கவேண்டிய நிலையில் எப்படி தனியார் துறையில் தனிப்பட்டவர்கள் கடை வைத்து வியாபாரத்தை பெருக்கிறார்களோ அதை போல் செயல் பாட்டுக்கு இன்றைக்கு அரசு துறையில் மார்க்கெட்டிங் கமிட்டி யார்டை ஏற்படுத்தி இன்றைக்கு 20 இடங்களில் தேர்வு செய்து அதையும் அபிவிருத்தி செய்கிறோம் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் நலிந்த பெண்களுக்கு தனியாக திருமணம் நடத்துவதற்கு கோவை மாட்டத்தில் தனியாக இந்த ஆண்டு சங்கத்தை ஏற்படுத்தி கொடுத்து இருக்கிறோம். ஆகவே இந்த அரசைப் பொறுத்தவரையில் எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கும், ஏழை எளிய மக்களுக்கு நல்லதை செய்வதில் இந்த அரசு எந்த அரசுக்கும் இளைத்த அரசு இல்லை என்பதை நான் இந்த நேரத்தல் சொல்லி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அவர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களை வாபஸ் பெற்றுக்கொண்டு நான் சொன்ன பதில் உங்களுக்கு அனேகமாக திருப்தியாக இருக்கும் என்று கருதுகிறேன், ஆகவே தயவு செய்து இந்த மானிய கோரிகைக்கையை நிறைவேற்றி தருமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

[1985 ஜூன் 28

திருவாளர்கள் அன்பு எனிஸ் வி. இந்துன், கோ. வீரய்யன், எஸ். என். இராமசாமி ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,77,98,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 1—7—1985 ஆம் தேதி காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.06 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



## 6. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

231. தமிழ்நாடு 1944 ஆம் ஆண்டு வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து கூட்டுறவுத் துறையின் 12—2—1985 ஆம் நாளிட்ட 68 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1943 ஆம் ஆண்டு வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1943) 22 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

232. வருவாய்த் துறையின் 23—7—1965 ஆம் நாளிட்ட III 351/1965 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 8—5—1985 ஆம் நாளிட்ட 379 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

233. இறால் மற்றும் இதர மீன் வகைகளுக்கு விதிக்கப்படும் வரியினின்று விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 8—5—1985 ஆம் நாளிட்ட 404 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்

133. கோரிக்கை எண் 23—கூட்டுறவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1985-86 (தமிழ், ஆங்கிலம்).

134. தமிழகத்தில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் என்ற புத்தகம் 1984—85 (தமிழ், ஆங்கிலம்).

135. தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் வளர்ச்சி பற்றிய சிறு குறிப்பு 31—3—1985-ல் உள்ளபடி (தமிழ், ஆங்கிலம்)

136. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் பற்றிய குறிப்பு 1984—85 (தமிழ், ஆங்கிலம்).

137. தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் பணிகள் பற்றிய குறிப்புகள் 31—3—1985-ல் உள்ளபடி (தமிழ், ஆங்கிலம்).

138. உழவர்களின் நண்பன், டான்பெட்— தமிழக உழவர் களுக்கு ஒரு கூட்டுறவு நிறுவனம் என்ற புத்தகம் 1984—85 (தமிழ், ஆங்கிலம்).

139. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும் விடைகளும் (1 முதல் 50 வரை) [இரண்டாம் பட்டியல்].

## இணைப்பு

(545-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### கூட்டுறவுத் துறையின் 1985–86 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கம்.

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள், உழவர், தொழிலாளர், கைவினைஞர், நுகர்வோர் ஆகியோரை ஆதரிப்பதில் முக்கியப் பங்கு வகித்து வருகின்றன. குறிப்பாக, இச் சங்கங்கள் சமூகத்தில் பெருகி வரும் சுரண்டல் மனப்பான்மையை எதிர்க்கவல்ல ஒரு சக்தியை உருவாக்கி, அவ்வகையில் சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் நலன்களைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் செய்கின்றன.

2. பொதுவான முன்னேற்றம்.—கடன்களையும் வேளாண்மை இடு பொருள்களையும் வழங்குவதிலும், வேளாண்மை விளை பொருள்களை விற்பனை செய்வதிலும் நுகர் பொருள்களை விநியோகம் செய்வதிலும் கூட்டுறவுச் சங்கங்கள் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நிலையான முன்னேற்றத்தைக் கண்டுள்ளன. உணவு உற்பத்திப் பெருக்கத்தை விரைவு படுத்துவதும், வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதும், உற்பத்தித் திறனை உயர்த்துவதும் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கங்கள் ஆகும். இந்த நோக்கங்களுக்கு ஆதரவாக, கூட்டுறவுச் சங்கங்கள் தம் நடவடிக்கைகளைப் பொறுத்த வரையில் ஒரு இன்றியமையாத பங்கை வகிக்கும். சில முக்கியப் பணிகளில் இச்சங்கங்கள் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அடைந்த முன்னேற்றம், 1985-86 ஆம் ஆண்டிற்கான திட்டம், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் உத்தேசிக்கப்பட்டுள்ள இலக்கு ஆகியவை பற்றிய சுருக்கம் பின்வருமாறு:—



| விவரம். | முன்னேற்றம். 1980-81-ல். | 1981-82-ல் | 1982-83-ல். | 1983-84-ல். | 1984-85-ல். | திட்டம் 1985-86. | உத்தேசிக்கப்பட்டுள்ள ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட (இறுதி யாண்டு) இலக்கு. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | (கோடி ரூபாயில்). | | | | | | |
| 1. குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்களை வழங்குதல். | 25·77 | 86.99 | 83·15 | 88.56 | 128.14 | 155.00 | 280.00 |
| 2. நீண்ட காலக் கடன்களை வழங்குதல். | 4.76 | 5.52 | 14.35 | 15.42 | 20.37 | 20.00 | 32.00 |
| 3. நகையிட்டுக் கடன்களை வழங்குதல். | 116·23 | 179.86 | 170.16 | 193.74 | 218.82 | 220.00 | 230.00 |
| 4. இரசாயன உரங்கள் வழங்குதல். | 21.14 | 54.37 | 38.05 | 48.98 | 55.44 | 70.00 | 140.00 |
| 5. வேளாண்மை விளை பொருட்களை விற்பனை செய்தல். | 89·87 | 89·98 | 121.30 | 99·76 | 117.16 | 125.00 | 210.00 |
| 6. நுகர்பொருட்களை சில்லறை விற்பனை செய்தல். | 181.55 | 211.30 | 228.00 | 268·00 | 285·00 | 300.00 | 450.00 |

3. வளர்ச்சித் திட்டங்களுக்கான செலவு.—கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களுக்காக அரசு 1980-81-ஆம் ஆண்டிலிருந்து செலவு விவரங்களும், 1985-86-ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| திட்டங்களின் விவரங்கள். | செலவு. 1980-81-ல். | செலவு. 1981-82-ல். | செலவு. 1982-83-ல். | செலவு. 1983-84-ல். | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. 1984-85. | செலவு 1984-85. | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. 1985-86. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | | (கோடி ரூபாயில்) | | | | |
| அ. மாநிலத் திட்டப் பணிகள் : | | (அ) | | (ஆ) | | | |
| 1. கடன் கூட்டுறவுச் சங்கங்கள். | 4.00 | 8·74 | 5·58 | 8.46 | 5·39 | 3·07 | 2.33 |
| 2. விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள். | 0·44 | 0.61 | 0.29 | 0.22 | 0.07 | 0·14 | 0.14 |
| 3. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள். | 0.37 | 0.62 | 0·46 | 0·29 | 0.29 | 0.34 | 0.23 |
| 4. ஏனைய வணிகக் கூட்டுறவுச் சங்கங்கள். | 0.04 | 0.14 | 0.18 | 8.06(இ) | 0.04 | 0.09 | 0.07 |
| 5. கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி. | இல்லை. | இல்லை. | இல்லை. | 0.01 | 0.03 | 0.03 | 0.02 |
| 6. பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம். | 0.30 | 0.31 | 0.19 | 0.23 | 0.42 | 0.43 | 0.40 |
| 7. உணவு (கிராம அங்காடித் திட்டம்) | 1.57 | 2.92 | 2.27 | 2.45 | 2.70 | 3.69 | 2.90 |
| மாநிலத் திட்டப்பணிகளின் மொத்தம். | 6.72 | 13.34 | 8.97 | 19.72 | 8.94 | 7.79 | 6.09 |
| | | | (ஈ) | (உ) | | (ஊ) | |
| ஆ. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களும் தன்னாட்சி நிறுவனங்கள் (தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் போன்றவை) நிதி உதவி அளிக்கும் திட்டங்களும். | 3·71 | 3·89 | 13.57 | 16.86 | 1·15 | 10.20 | 0.46 |
| திட்டப் பணிகளின் மொத்தம். | 10.43 | 17.23 | 22.54 | 36.58 | 10.09 | 17.99 | 6.55 |
| இ. திட்டத்தில் சேராத பணிகள். | 74.25 (எ) | 89.21 (ஏ) | 16.89 (ஐ) | 21.07 (ஒ) | 0·28 | 16·67 (ஓ) | 3.32 |
| பெரு மொத்தம் .. | 84.68 | 106.44 | 39.43 | 57.65 | 10.37 | 34.66 | 9.87 |

குறிப்புகள்—

(அ) முடக்கப்பட்ட கணக்கில், வசூல் குறைவை ஈடு செய்யும் வகையில் வழங்கப்பட்ட 2.07 கோடி ரூபாயும், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உரம் மற்றும் பூச்சி கொல்லி மருந்து விற்பனையில் மானியமாக வழங்கப்பட்ட 2.40 கோடி ரூபாயும் இதில் சேர்ந்துள்ளன.

(ஆ) வறட்சி மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்படட பகுதிகளில் உரம் விற்பனையில் மானியமாக வழங்கப்பட்ட 3.88 கோடி ரூபாய் இதில் சேர்ந்துள்ளது.

(இ) வறட்சி நிவாரணப் பணிகளின் கீழ் கிணறுகள் தோண்டுவதற்காகவும், தனியார் நீர்பாசனக் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காகவும் கடன்களாக வழங்கப்பட்ட 8 கோடி ரூபாய் இதில் சேர்ந்துள்ளது.

(ஈ) வேளாண்மை இடு பொருட்களை விநியோகம் செய்வதற்காக, விற்பனை இணையங்களுக்கு வழங்கப்பட்ட 10 கோடி ரூபாய் இதில் சேர்ந்துள்ளது.

(உ) வேளாண்மை இடு பொருட்களை விநியோகம் செய்வதற்காக, விற்பனை இணையங்களுக்கு வழங்கப்பட்ட 15. 50 கோடி ரூபாய் இதில் சேர்ந்துள்ளது.

(ஊ) வேளாண்மை இடு பொருட்களை விநியோகம் செய்வதற்காக, விற்பனை இணையங்களுக்கு வழங்கப்பட்ட 4·35 கோடி ரூபாயும், தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் வாரக நுகர்வோர் திட்டத்தின் கீழ் வழங்கிய 4·03 கோடி ரூபாயும் இதில் சேர்ந்துள்ளன.

(எ) மாநிலக் கூட்டுறவு நிலவள வங்கிக்கும், மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும் வழிவகை முன்பணமாக வழங்கப்பட்ட 73.87 கோடி ரூபாய் இதில் சேர்ந்துள்ளது.

(ஏ) விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் மானியமாகவும், மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழிவகை முன்பணமாகவும், வழங்கப்பட்ட 88 கோடி ரூபாய் இதில் சேர்ந்துள்ளது.

(ஐ) இரண்டாவது முடக்கப்பட்ட கணக்கில் வசூல் குறைவை ஈடுசெய்யும் வகையில் மாநிலக் கூட்டுறவு நிலவள வங்கிக்கு வழிவகை முன்பணமாக வழங்கப்பட்ட 13.13 கோடி ரூபாயும். விவசாயிகளுக்கு உதவுவதற்காக வழங்கப்பட்ட 2·84 கோடி ரூபாயும் இதில் சேர்ந்துள்ளன.



(ஒ) மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும், மாநிலக் கூட்டுறவு நிலவள வங்கிக்கும் வழிவகை முன்பணமாக வழங்கப்பட்ட 19.93 கோடி ரூபாயும், விவசாயிகளுக்கு உதவுவதற்காக வழங்கப்பட்ட 0·82 கோடி ரூபாயும் இதில் சேர்ந்துள்ளது.

(ஓ) வேளாண்மை இடுபொருட்களை விநியோகம் செய்வதற்காக விற்பனை இணையங்களுக்கு வழங்கப்பட்ட 10 கோடி ரூபாயும் இரண்டாவது முடக்கப்பட்ட கணக்கில் வசூல் குறைவை ஈடுசெய்யும் வகையில் மாநிலக் கூட்டுறவு நிலவள வங்கிக்கு வழிவகை முன்பணமாக வழங்கப்பட்ட 6.18 கோடி ரூபாயும் இதில் சேர்ந்துள்ளன.

### கூட்டுறவு விவசாயக் கடனுதவி

குறுகிய கால, மத்திய கால மற்றும் நீண்ட காலக் கடன்கள்)

4. வலுவான கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குதல் :—தமிழ் நாட்டில் கூட்டுறவு இயக்கத்தின் மைய அமைப்பாக கிராம விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் விளங்குகின்றன, இவ்வகைச் சங்கங்கள் சுமார் 4,700 பயிர் செலவிற்காக குறுகிய காலக் கடன்களையும், விவசாயத்தைச்சார்ந்த துணை தொழில்களுக்காக மத்திய காலக்கடன்களையும் வழங்கி வருகின்றன. அடிமட்ட அளவில் தன்னிறைவும், திறமையாகச் செயல்படுபவையுமாக உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைக் கொண்டிருப்பது ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் கொள்கை அளவிலான ஒரு முக்கிய நோக்கமாக இருந்தது. அதன்படி இந்த மாநிலத்தில் உள்ள விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் தன்னிறைவு அடைந்துள்ளனவா, இல்லையா என்பது ஆராயப்பட்டது. ஒவ்வொன்றும் தன் எல்லைக்குள் மானாவரிக் கணக்கில் 3,000 ஏக்கருக்கும் குறைவாகப் பயிர் நிலங்களையும், இரண்டு இலட்சம் ரூபாய்க்கும் குறைவாக குறுகிய காலக் கடன் பட்டுவாடானவையும் கொண்டிருந்த 327 தன்னிறைவற்ற சங்கங்களை ஒருங்கிணைப்பது மூலம் தன்னிறைவுள்ள சங்கங்களாக மாற்றியமைப்பதற்கான திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்படி இதுவரையில் 142 தன்னிறைவற்ற சங்கங்களுக்குப் பதிலாக, 104 புதிய சங்கங்கள் பதியப்பட்டன. அந்த நிலையில், அதுவரை ஒருங்கிணைக்கப்பட்ட சங்கங்களில் சிலவற்றின் இயக்கம் பற்றி ஆராயப்பட்டது. மேலும் ஒருங்கிணைக்கப்படுவதற்காககுறிப்பிடப் பட்டுள்ள மீதமுள்ள தன்னிறைவில்லாச் சங்கங்கள் தற்போது தன்னிறைவு பெற்றுள்ளனவா என்பது பற்றிய அறிக்கைகள் மறு மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டது. இப்பணிகள் பற்றிய அறிக்கைகள்.அரசின் கவனத்தில் உள்ளன. அவ்வறிக்கைகளை ஆராய்ந்து மீதமுள்ள தன்னிறைவில்லாச் சங்கங்களை ஒருங்கிணைப்பது குறித்து மேற்கொண்டு நடவடிக்கை தொடரப்படும். தன்னிறைவுள்ளனவாக அமைக்கப்பட்ட 183 பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகள்

நில மேம்பாட்டிற்காகவும். தோட்டப் பயிர்கள் சாகுபடி செய்தல் விவசாய அடிப்படையில் தொழில்களை மேற்கொள்ளுதல் போன்ற பல்வகைக் காரணங்களுக்காவும் நீண்ட காலக் கடன்களை வழங்கி வருகின்றன.

5 விவசாயிகளைக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்த்தல்.—மாநிலத்தில் உள்ள விவசாயிகளில் மிகப் பெரும் பகுதியினரைக் கூட்டுறவு இயக்கத்தில் கீழ்கொண்டு வரும் நோக்கத்துடன், விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் மாநிலத்தில் உள்ள விவசாயக் குடும்பங்களில் மேலும் சுமார் எட்டு சதவீதத்தினரை உறுப்பினர்களாகச் சேர்த்துள்ளன. அச்சங்கங்களில் 1985 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதிய நிலவரப்படி மாநிலத்தில் உள்ள விவசாயக் குடும்பங்களில் ஐந்தில் நான்கு பங்கிற்கும் மேல் உறுப்பினர்களாகியுள்ளனர் இது பற்றிய விபரம் பின்வருமாறு:—

| விவரம். | விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை (விவசாய நில உடமைகளின்படி) | |
|---|---|---|
| | மொத்த விவசாயக் குடும்பங்கள். | சிறு மற்றும் மிகச் சிறு விவசாயக் குடும்பங்கள். |
| (1) | (2) | (3) |
| (1) மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்). | 53.14 | 42.05 |
| (2) கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களான குடும்பங்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்). | 45.48 | 34.90 |
| (3) உறுப்பினர்களாக்கப்பட்ட குடும்பங்களின் சதவிதம். | 85.6 | 83.0 |

விவசாயிகளைக் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்க்கும் பணி தொடர்ந்து நடைபெறும்.

6. ஆதி திராவிடர்களை உறுப்பினர்களாகச் சேர்த்தல்.—கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராகச் சேர வசதியில்லாத ஆதி திராவிட விவசாயிகளுக்கு அரசு நிதி உதவி வழங்கி அவர்களை உடனடியாகக் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்க்க திட்டமிடப்பட்டது. அத் திட்டத்தின்படி ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒவ்வொருவரை விவசாய கூட்டுறவுச்சங்கத்தி உறுப்பினராகச் சேர்ப்பத்தின் மூலம் 1981–82-ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 90,000 ஆதி திராவிட விவசாயக்





குடும்பங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இதனால் அவர்கள் பயிர் செலவிற்காக குறுகிய காலக் கடன்களையும், பால் பண்ணை, கோழி வளர்ப்பு, ஆடு வளர்த்தல் போன்ற காரியங்களுக்காக மத்திய காலக் கடன்களையும் சங்கங்கள் வழங்கும் இதர சேவைகளையும் பெற்று, அவ்வகையில் தமது வருவாயைப் பெருக்கிக் கொள்ள முடிகிறது. கூட்டுறவுத் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்க்கப்படும் ஒவ்வொருவருக்கும் அவர் சங்கத்திற்குச் செலுத்த வேண்டிய பங்கு மூலதனத்திற்காக நூறு ரூபாயை அரசு மானிய மாக வழங்குகிறது. 1985–86 ஆம் ஆண்டில் அரசு மானியம் வழங்கி, மேலும் 10,000 இவ்வகைக் குடும்பங்களை கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

7. கடன் வழங்குதல் :—தம் உறுப்பினர்களுக்குத் தேவையான விவசாயக் கடன்களை வழங்குவது விவசாயக் கடன் கூட்டுறவுச் சங்கங்களின் பணி ஆகும். ஆனால் கூட்டுறவுக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதை விவசாயிகளின் சங்கங்கள் 1977–78 ஆம் ஆண்டு விருந்து திட்டமிட்டுக் கடுமையாக எதிர்த்து வந்தன. அதனால் உறுப்பினர்களின் தவணை தவறியக் கடன்கள் பெருமளவு அதிகரித்தன. அதன் காரணமாக, கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயக் கடன் வழங்குவதில் பின்தங்க நேரிட்டது. ஆயினும், தவணை தவறிய கடன்களை வசூலிப்பதில் உறுதியான முயற்சிகளைத் தொடர்ந்து எடுத்து வந்ததின் காரணமாக கீழ்க்காணும் விவரங்கள்படி 1981–82 ஆம் ஆண்டிலிருந்து கடன் வழங்குவதில் மறுபடியும் முன்னேற்றம் ஏற்பட்டது:—

| ஆண்டு. | வழங்கப்பட்ட கடன்கள் (கோடி ரூபாயில்) | | | |
|---|---|---|---|---|
| | குறுகிய காலப் பயிர் கடன்கள். | விவசாயம் மற்றும் துணைத் தொழில் களுக்காக மத்தியகாலக் கடன்கள். | விவசாய காரியங் களுக்காக நீண்ட காலக் கடன்கள். | மொத்த விவசாயக் கடன்கள். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1980–81 .. | 21.52 | 4.25 | 4.76 | 30.53 |
| 1981–82 .. | 77·20 | 9.79 | 5.52 | 92.51 |
| 1982–83 .. | 67.18 | 15·97 | 14.35 | 97.50 |
| 1983–84 .. | 75·34 | 13·22 | 15.42 | 103.98 |
| 1984–85 .. | 110.80 | 17.35 | 20.37 | 148.52 |

முந்தைய ஆண்டில் மொத்த விவசாயக் கடன்கள் 103.98 கோடி ரூபாய் அளவிற்கு மட்டுமே வழங்கப்பட்டிருக்க, 1984–85 ஆம் ஆண்டில் அவ்வகைக் கடன்கள் 148.52 கோடி ரூபாய் அளவிற்கு அதிகமாக வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. 1985–86 ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடன்களை 135 கோடி ரூபாய் அளவிற்கும், மத்திய காலக் கடன்களையும் நீண்டகாலக் கடன்களையும் தலா 20 கோடி ரூபாய் அளவிற்கும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

8. சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களுக்குக் கடன் வழங்குதல்.— தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நாபார்டு) வகுத்துள்ள வழிமுறைகளின்படி வழங்கப்படும் மொத்த குறுகிய காலக் கடன்களில் இருபது சதவீதம் நலிந்த பிரிவினருக்கு, அதாவது ஐந்து ஏக்கர் அல்லது அதற்குக் குறைவான நிலங்களைச் சொந்தமாக வைத்திருப்பவர்களுக்கு அல்லது குத்தகைக்குப் பயிரிடுபவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும், மொத்தக் கடன் பட்டுவாடாவில் குறைந்தது ஐம்பது சதவிதத்திற்கு நலிந்த பிரிவினரின் பங்கை அகில இந்திய ரீதியில உயர்த்த வேண்டும் என்பது ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்ின்கீழ் கொள்கை அளவிலான நோக்கம் ஆகும். ஆனால் தமிழ்நாட்டில் உள்ள விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் 1984–85 ஆம் ஆண்டில் நலிந்த பிரிவினருக்கு குறுகிய காலக் கடன்களை 58.23 கோடி ரூபாய் அளவிற்கு, அதாவது வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் சுமார் 53 சதவீத அளவிற்கு வழங்கியுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது. மத்திய காலக் கடன்கள் 16.17 கோடி ரூபாய், அதாவது மொத்தக் கடன்களில் 93 சதவீதம், நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்டன. நீண்ட காலக் கடன்களில் 13·46 கோடி ரூபாய் அதாவது மொத்தக் கடன்களில் 66 சதவீதம் ஆண்டு ஒன்றுக்கு 4,300 ரூபாய்க்கு மேற்படாமல் நிகர வருமானம் உள்ள சிறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. கூட்டுறவுக் கடன்களில் ஒரு கணிசமான அளவு விவசாயிகளில் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்டிருப்பதால், நலிந்த பிரிவினர், விவசாயத்தோடு பால்பண்ணை, ஆடு வளர்த்தல், கோழி வளர்த்தல் போன்ற துணைத் தொழில்களில் ஈடுபட்டு, தங்களது வருவாயை அதிகரித்துக் கொள்ள பெரிதும் ஏதுவாயிற்று. கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் விவசாயக் கடன்களில் நலிந்த பிரிவினருக்கான பங்கை மேலும் உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

9. ஆதி திராவிட வகுப்பினர்களுக்குக் கடன் வழங்குதல்.— தற்போது வழங்கப்படும் குறுகிய காலக் கடன்களில் 4 சதவீதமும், மத்திய காலக் கடன்களில் 16 சதவீதமும், நீண்ட காலக் கடன்களில் 5 சதவீதமும் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன. 1985–86 ஆம் ஆண்டில் இவ்வகை உறுப்பினர்களின் பங்கு உயர்த்தப்படும். விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள ஆதி திராவிட வகுப்பைச்

சேர்ந்த உறுப்பினர்கள், தேவையான அளவிற்குக் கடன்களைப் பெறுவதற்காகக் கூடுதல் பங்குத் தொகை செலுத்துவதற்கு உதவும் வகையில் அவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 250 ரூபாய் வரையில் வட்டியில்லாக் கடனகளை அரசு வழங்கும். 1985–86ஆம் ஆண்டில் அவ்வகை உறுப்பினர்களில் ஆயிரம் பேர் உதவிபெறுவர்.

10. புன்செய் நில விவசாயத்திற்குச் சலுகை வட்டியில் கடன் வழங்குதல்.—விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் கடன் வழங்குவதில் சிறு விவசாயிகளுக்கும் இதர விவசாயிகளுக்கும் வட்டி வித்தியாசம் இருக்கின்ற அதே நேரத்தில், நன்செய் பயிர்களுக்கும் புன்செய் பயிர்களுக்கும் அளிக்கப்படுகின்ற கடன்களுக்கு வட்டியில் வேறுபாடு இல்லை, புன்செய் பயிர்கள் பயிரிடுவதில் உள்ள சிரமங்களையும், அதில் ஈடுபட்டுள்ள அங்கத்தினர்களின் பொருளாதார நிலையினையும் கருத்தில் கொள்ளும்போது, அவர்களுக்கென்று தனியாக ஒரு கடன் வசதியை ஏற்படுத்தித் தருவது பொருத்தமானதாகும், எனவே, சோளம், கம்பு, கேழ்வரகு, பருத்தி போன்ற மானாவாரி பயிர்களைச் சாகுபடி செய்யும் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு, 4 சதவீத சலுகை வட்டியில் குறுகிய காலக் கடன்களை விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 1985–86 ஆம் ஆண்டிலிருந்து வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் இந்த வட்டி வீதத்திற்கும் சிறு விவசாயிகளுக்கான சாதாரண வட்டி வீதமாகிய 11.5 சதவீதத்திற்கும் உள்ள வித்தியாசத்தை அரசு மானியமாக வழங்கும்.

11. விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்காக மிகச் சிறு விவசாயிகளுக்கான தேசிய பெருத்த நிதி உதவித் திட்டத்தை நிறைவேற்றுவதில் கூட்டுறவுச் சங்கங்களின் ஈடுபாடு.
விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்காக சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு உதவும் தேசிய பெருத்த நிதித் திட்டம் 1983–84 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் கீழ் (1) சிறு பாசன மேம்பாட்டிற்காகவும், (2) தோட்டப் பயிர் சாகுபடி, காடு வளர்ப்பு முதலியவற்றிற்காகவும், (3) விதை, உரம், வழங்குவதற்காகவும், நில மேம்பாட்டிற்காகவும் நிதிஉதவி அளிக்கப்படுகிறது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வழங்கப்படுவதுபோல இத் திட்டத்தின் கீழும் மத்திய மாநில அரசுகளிடமிருந்து மானியமும், நிதி நிறுவனங்களிடமிருந்து 10 சதவீத வட்டிக்குக் கடனும் வழங்கப்படுகின்றன. இத் திட்டத்தின் கீழ், மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனங்களால் ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகளில் நீண்ட காலக் கடன்களைப் பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகள் வழங்கி வருகின்றன. மேலும், பதினொரு குறிப்பிட்ட மாவட்டங்களில் உள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் இத் திட்டத்தின கீழ் சிறு பாசன காரியங்களுக்காக நீண்ட காலக் கடன்களை

விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக வழங்கி வருகின்றன. இத் திட்டத்தின்கீழ் 1983–84 ஆம் ஆண்டில் 1.17 கோடி ரூபாய் அளவிற்கும், 1984–85 ஆம் ஆண்டில் 7.53 கோடி ரூபாய் அளவிற்கும் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

12. தனியார் பாசனக் கிணறுகளை ஆழப்படுத்த கடன் வழங்குதல்.—மாநிலத்தில் வறட்சியான் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தனியார், பாசனக் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக, பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகள் மாநில அரசு உதவியுடன் 1983–84 ஆம் ஆண்டில், ஒரு வறட்சி நிவாரண நடவடிக்கையாக, 3.63 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்களை வழங்கின. இக்கடள்கள் 8,807 விவசாயிகளுக்கு, ஒவ்வொருவருக்கும் 5,000 ரூபாய்க்கு மேற்படாமல் வழங்கப்பட்டன.

13. தஞ்சாவூர் மாவட்டத்தில் வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கும் கடுவிறைத் திட்டம்.—தஞ்சாவூர் மாவட்டத்தில் காவிரி ஆற்றில் போதிய நீரின்மையால் வாடிய பயிர்களைக் காக்கவும், பயிர் சாகுபடியை முன்கூட்டியே எடுத்துக்கொள்ளுதல், தொடர் பயிர் சாகுபடியை அதிகரித்தல், நீர் பற்றாக்குறை காலங்களில் பாசனத்திற்கான மாற்று ஏற்பாடுகளைச் செய்தல் ஆகிய நோக்குடனும், ஒவ்வொரு கிணறுக்காகவும் 15,000 ரூபாய்க்கு மேற்படாமல், பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகள் கடன்களை வழங்கி விவசாயத்திற்குப் பயன் படத்தக்க 3,009 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் தஞ்சாவூர் மாவட்டத்தில் தோண்டி முடிக்கப்பட்டுள்ளன.

14. நீண்ட காலக் கடன்களைப் பல்வகைக் காரணங்களுக்காக வழங்குதல்.—தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் உதவியுடன் திட்டங்களை உருவாக்கி விவசாய வளர்ச்சிக்காக நீண்ட காலக் கடன்களை வழங்கி வருவதின் மூலம் மாநிலத்தைப் பகுதி வாரியாக மேம்படுமதுவதற்குத் தொடர்ந்து திட்டமிடப்படுகிறது. தற்பொழுது 24.76 கோடி ரூபாய் மூலதனம் கொண்ட 111 சிறு நீர்ப்பாசனத் திட்டங்களும், 20.74 கோடி ரூபாய் முலதனம் கொண்ட 101 சிறு நீர்ப்பாசனமில்லாத இதரத் திட்டங்களும் நிறைவேற்றப்படுகின்றன. நில அடமானத்தை வற்புறுத்தாமல் நிலவள வங்கிகள் நிலமற்றவர்களுக்குத் திட்ட ரீதியாகப் பல்வகை காரணங்களுக்காகக் கடன்கள் வழங்கும் பொருட்டு, அரசு 5 கோடி ரூபாய் அளவிற்கு உத்திரவாதம் அளித்துள்ளதையொட்டி, நிலமற்றவர்களுக்குக் கடன்கள் வழங்கப்படுகின்றன. இவ்வகைக் கடன்கள் 1985 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதிவரையில் 3 99 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டுள்ளன.



15. தவணை தவறிய கடன்கள்.—விவசாயக் கடன் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விவசாயிகள் தம் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதில் சிறிது முன்னேற்றம் காணப்பட்டாலும் கூட, அச் சங்கங்களின் தவணை தவறிய கடன்கள் மிக அதிகமாக இருக்கும் நிலை தொடர்ந்து நீடிக்கிறது. தவணை தவறிய கடன்கள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| நாள். | கேட்புக்குத் தவணை தவறிய கடன்களின் சதவீதம். | |
|---|---|---|
| | விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள். | பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகள். |
| (1) | (2) | (3) |
| 1980 ஜூன் 30–ல் .. .. | 73;4 | 44.0 |
| 1981 ஜூன் 30–ல் .. .. | 43.8 | 66.4 |
| 1982 ஜூன 30–ல் .. .. | 58.3 | 67.2 |
| 1883 ஜூன் 30–ல் .. .. | 55.1 | 80.8 |
| 1984 ஜூன் 30–ல் .. .. | 48;4 | 73.9 |
| 1985 மார்ச் 31–ல் .. .. | 67.9 | 75.1 |

தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி 1984 ஜூன் 30–ல் தவணை தவறிய கடன்களை அனுமதிக்கப்பட்ட அளவாகிய 60 சதவீதத் திற்கும் கீழே குறைக்க இயலவில்லை. இவ்வங்கி சாகுபடி காரியங்களுக்கரகக் கடன்கள் வழங்க ஏதுவாக, அதற்குத் தேவையான நிதி உதவியைத் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி வழங்கியது. இயற்கைப் பேரிடர்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தள்ளிப் போடப்பட்ட நீண்ட கால கடன் பாககிகளைக் கொண்ட இரண்டாவது முடக்கப்பட்ட கணக்கில் வசூலில் 1982–83 ஆம் ஆண்டு முடிய ஏற்பட்ட குறைவை 20.81 கோடி ரூபாய் அளவிற்கு அரசு ஈடு செய்தது. 1983–84 ஆம் ஆண்டில் 6.54 கோடி ரூபாய் அளவிற்கு ஏற்பட்ட குறையை ஈடு செய்வது அரசின் பரிசிலனையில் உள்ளது. இந்தத் தொகையும் ஒப்பளிக்கப்பட்டால், மாநிலத்தில் உள்ள 183 பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகளில் 59 வங்கிகள் வரையறையின்றி கடன் வழங்கும் தகுதியையும், மீதியுள்ள 121 வங்கிகள், வரையறுக்கப்பட்ட அளவு கடன் வழங்கும் தகுதியையும் பெறும். பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகளின் தவணை தவறிய கடன்கள் அதிகரித்துக் கொண்டே போவது குறித்து தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி தனது கடுமையான கருத்தைத் தெரிவித்துள்ளது.

பிரதமக்கூட்டுறவு நிலவள வங்கிகளின் கடன் வசூலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருந்தாலொழிய உலக வங்கி மேற்கொண்டு கடன் அளிக்க தயங்குகிறது என்றும் அது தெரிவித்துள்ளது. விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களிலும், பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகளிலும் தவணை தவறிய கடன்களைப் பெருமளவு குறைப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

16. கடன் வசூலைத் தள்ளி வைத்தல்.—1982–83 மற்றும் 1983–84 ஆம் ஆண்டுகளில் மாநிலத்தில் நிலவிய வறட்சி மற்றும் வெள்ளத்தின் காரணமாக 30.81 கோடி ரூபாய் அளவிற்கான குறுகிய காலக் கடன்கள் அடுத்த மூன்று ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்படும் வகையில் மத்திய காலக் கடன்களாக மாற்றப்பட்டன. மேலும் 2.20 கோடி ரூபாய் அளவிற்கான மாற்றப்பட்ட கடன்கள் அடுத்த நான்காண்டுகளில் திருப்பிக் செலுத்தப்படும் வகையில் தள்ளிப்போடப்பட்டன. இதனால் 1.89 இலட்சம் கடன்தாரர்கள் மேற்கொண்டு பயிர் சாகுபடிக்காக புதிய சாகுபடிக் கடன்களைப் பெறுவதற்குத் தகுதி பெற்றனர், நீண்ட காலக் கடன் தவணைகளின் வசூலும் 13.03 கோடி ரூபாய் அளவிற்குத் தள்ளி போடப்பட்டது. குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்றுவதிலான பளுவில் 15 சதவீதத்தை மாநில அரசு ஏற்கிறது.

17. விவசாயிகளின் கடன் சுமையைக் குறைத்தல்.—விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்கும் நோக்கத்துடன், 1979–80 ஆம் ஆண்டு முதல், 198 –84 ஆம் ஆண்டு வரை, வட்டி தள்ளுபடி செய்த அல்லது திருப்பித் தந்த வகையில் 42 கோடி ரூபாயும், சிறு விவசாயிகளிடம் நிலுவை நின்ற மத்திய காலக் கடனாக மாற்றியமைக்கப்பட்ட அல்லது தவணை நீடித்துத் தரப்பட்ட கடன்களைத் தள்ளுபடி செய்த வகையில் 57 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 99 கோடி ரூபாய் அளவிற்கு அரசு நிதி உதவி வழங்கியுள்ளது. நிலவள வங்கிகளிடமிருந்து கடன் பெற்ற விவசாயிகளில் 1983–84 ஆம் ஆண்டில் தங்கள் தவணை தவறிய தொகை முழுவதையும் திருப்பிச் செலுத்திய 48.476 கடன்தாரர்களுக்கு, 1983–84-ல் வசூலிக்கப்பட்ட தவணை தவறிய கடன் தவணைகளின் மீதான வட்டியும் அபராத வட்டியும் மொத்தம் 82 இலட்சம் ரூபாய் அளவிற்கு 1984–85 ஆம் ஆண்டில் திருப்பிக் கொடுக்கப்பட்டன. 1984 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதியில் தவணை தவறி நின்ற கடன் பாக்கிகள் முழுவதையும் 1985 ஆம் ஆண்டு மார்ச்சு 31 ஆம் நாளுக்குள் திருப்பிச் செலுத்திய பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகளின் கடன்தாரர்களுக்கு தவணை தவறிய தொகை மீதான வட்டியும் அபராத வட்டியும் அரசால் தள்ளுபடி செய்யப்பட்டன. 45,000-க்கு மேற்பட்ட கடன்தாரர்கள் இந்த வட்டிச் சலுகையை 2.75 கோடி ரூபாய் அளவிற்குப் பெற்றுள்ளனர்.





18. குறித்த காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்தினால் வட்டி குறைப்பு.—விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் குறித்த காலத்தில் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு தமது குறுகிய காலக் கடன்களையும், மத்தியக் காலக் கடன் தவணைகளையும் குறிப்பிட்ட நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தும் சிறு விவசாயிகளுக்கு 2 சதவீத வட்டி தள்ளுபடியை அரசு 1981–82 ஆம் ஆண்டிலிருந்து வழங்கி வருகிறது.

19. பொய்த்தக் கிணறுகள் நிதியிலிருந்து உதவி.—பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகளின் உறுப்பினர்களின் கிணறுகள் பொய்த்தபோது, பொய்த்தக் கிணறுகள் நிதியிலிருந்து அவர்கள் செலுத்தவேண்டிய வட்டியிலும். அசலிலும் சிறு விவசாயிகளுக்கு 90 சதவீதம் அளவிற்கும், பெரிய விவசாயிகளுக்கு 75 சதவீத அளவிற்கும் உதவி தரப்படுகிறது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்புக்களைச் சார்ந்த சிறு விவசாயிகளுக்கு அவர்களுடைய சொந்த முதலீடுபோக, கிணற்றிற்கான மொத்தச் செலவும் மானியமாகத் தரப்படுகிறது. 1985 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய 2,203 பொய்த்தக் கிணறுகளுக்காக 1.19 கோடி ரூபாய் அளவிற்கு இந்த நிதியிலிருந்து உதவி அளிக்கப்பட்டுள்ளது. பொய்த்த கிணறுகள் பற்றிய கருத்து, இழப்பீட்டுத் தொகையின் அளவு, உரிமைக் கோரிக்கைகளைத் தீர்வு செய்வதற்கான நடைமுறை ஆகியவற்றில் ஒரே தன்மையை உருவாக்கும் நோக்குடன் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி எல்லா மாநிலங்களிலும் பின்பற்றுவதற்காகப் பொய்த்த கிணறுகள் இழப்பீட்டுத் திட்ட மாதிரி ஒன்றை தற்போது தெரிவித்துள்ளது. இத்திட்டத்தின்படி கிணறுகள் பொய்த்தபோது, வட்டியை சம்பந்தப்பட்ட வங்கி ஏற்க வேண்டும். ஆனால் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதி உதவியைப் பயன்படுத்தும் போது, அச்செலவை சம்பந்தப்பட்ட வங்கியும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியும் பங்கிட்டு, ஏற்கும். செலவின் அசல் பகுதியை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

20. உள்நிதி வசதிகளைப் பெருக்குதல்:—தேவையான அளவிற்குக் கடன்களை வழங்குவதற்கு ஏதுவாகக் கடன் கூட்டுறவுச் சங்கங்கள் தமது உள்நிதி வசதிகளைப் பெருக்குவதில் தொடர்ந்து முன்னேற்றம் காட்டி வருகின்றன. விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள், மத்திய கூட்டுறவு வங்கிகள் (சென்னையில் உள்ளது தவிர) மற்றும் மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றின் மொத்தப் பங்கு மூலதனம் (அரசு முதலீடு நீங்கலாக) 1983–84

ஆம் ஆண்டு இறுதியில் 64.10 கோடி ரூபாயிலிருந்து 1984–85
ஆம் ஆண்டு இறுதியில்70. 87 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்தது
அவற்றின் மொத்த வைப்புத் தொகைகள் 1983–84 ஆம் ஆண்டு
இறுதியில் 513.01 கோடி ரூபாயாக இருந்து, 1984–85 ஆம்
ஆண்டு இறுதியில் 581.87 கோடி ரூபாயாக உயர்ந்தது. 1980
ஏப்ரல் முதல் தேதியிலிருந்து 1985 மார்ச் 31 ஆம் தேதி மூடிய
உள்ள காலத்தில் வைப்புத் தொகைகள் 86 சதவீத அளவிற்கு
அதிகரித்துள்ளன என்பது முக்கியமாக குறிப்பிடத்தக்கது.

21. பங்கு மூலதனத்திற்கும் கடனீட்டுப் பத்திரங்களுக்கும்
அரசு நிதி உதவி அளித்தல்.—கடன் கூட்டுறவுச் சங்கங்கள்
போதிய அளவு கடன் வழங்கும் தகுதியைப் பெறும் பொருட்டு
அரசு, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின்
தேசிய ஊரகக் கடனுதவி (நீண்ட காலச் செயல்முறைகள்) நிதியிலி
ருந்து கடன் பெற்று அச்சங்கங்களின் பங்கு மூலதனத்தில்
முதலீடு செய்து வருகிறது. கூட்டுறவு நிலவள வங்கிகளும்,
நகரக் கூட்டுறவு வங்கிகள் உட்பட கடன் கூட்டுறவுச் சங்கங்
களின் பங்கு மூலதனத்தில் அரசின் மொத்த மூலதனம் 1984
டிசம்பர் 31–ல் 27.34 கோடி ரூபாயாக இருந்தது. மாநில
நிலவள வங்கியின் கடனீட்டுப் பத்திரங்களிலும் அரசு முதலீடு
செய்கிறது. 1985 மார்ச் 31–ல் நிலுவை நின்ற இத்தகைய
முதலீடு 15.17 கோடி ரூபாய் ஆகும். 1985–86 ல் 50 இலட்சம்
ரூபாய் முதலீடு செய்வதற்காக வரவு செலவு–திட்டத்தில் ஒதுக்
கீடு செய்யப்பட்டுள்ளது.

22. பயிர் ஈட்டுறுதித் திட்டம்.—பயிர் ஈட்டுறுதித் திட்டம்
தமிழ்நாட்டில் 1979–80 நெல் 2–ம் பயிர் திட்ட காலம் முதல்
நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. விவசாய சேவைக்
கூட்டுறவுச் சங்கங்கள் நெல் மற்றும் நிலக்கடலை பயிர்களுக்
கான பயிர் ஈட்டுறுதித் திட்டத்தை தேர்ந்தெடுத்த நிலப் பகுதி
களில் (அ) போர் மற்றும் அதையொட்டிய இடர்கள் மற்றும்
(ஆ) அணு சம்பந்தப்பட்ட(நியூக்கிலியர்) இடர்கள் தவிர ஈட்டுறுதி
செய்யப்பட்ட பயிர் பருவத்தில் ஏற்படும் ஏனைய அனைத்து
இடர்களிலிருந்தும் விவசாயிகளுக்களைக் காக்கும் நோக்கத்துடன்
தொடர்ந்து நிறைவேற்றி வருகின்றன. ஒரு விவசாயி
ஈட்டுறுதி செய்து கொள்ளக்கூடிய உச்ச அளவுத் தொகை பயிர்
கடனில் 150 சதவீதமாகும். அது மானாவாரி பயிருக்கு ஆண்டு
ஒன்றுக்கு 5,000 ரூபாய்க்கும், பாசனப் பயிருக்கு 10,000
ரூபாய்க்கும் உட்பட்டது. சிறு விவசாயிகளும், மிகச் சிறு விவ
சாயிகளும் தாம் செலுத்திய பிரிமியக் கட்டணத்தில் 66.66
சதவீத அளவிற்கு மத்திய மற்றும் மாநில அரசுகளிடமிருந்து
மானியம் பெறுகின்றனர். இத்திட்டத்தை செயற்படுத்தியதில்





1983–84 ஆம் ஆண்டு முதல் முன்னேற்றம் பற்றிய விவரங்
கள் கீழே தரப்பட்டுள்ளன:—

| விவரம். | நெல் 2 1983–84. | நிலக் கடலை பாசனப் பயிர் 1984. | நெல் 1 1984 | மானாவாரி நிலக் கடலை 1984. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. நிலப்பகுதி | 23 வட்டங்கள். | 5 வட்டங்கள். | 108 வட்டாரங்கள். | 11 வட்டாரங்கள். |
| 2. விவசாயிகளின் எண்ணிக்கை. | 3,014 | 444 | 12,840 | 583 |
| 3. திட்டத்தின்கீழ் கொண்டுவரப் பட்ட நிலம் (ஏக்கரில்). | 7,158 | 1,197 | 26,575 | 1,059 |
| 4. ஈட்டுறுதி செய் யப்பட்டதொகை (லட்சம் ரூபா யில்). | 57.24 | 7.11 | 234.54 | 7.44 |
| 5. வசூலிக்கப்பட்ட பிரிமியம் (இலட்சம் ரூபாயில்). | 1.58 | 0.25 | 6.21 | 0.39 |

1984–85 நெல் இரண்டாம் போகம் பயிருக்காக 86 வட்டா
ரங்களில் மொத்தம் 154 இலட்சம் ரூபாய் அளவிற்கு ஈட்டுறுதி
செய்யவும், 1984–85 நிலக்கடலை பாசனப் பயிருக்காக 33
வட்டாரங்களில் 30 இலட்சம் ரூபாய் அளவிற்கு ஈட்டுறுதி
செய்யவும், இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. புள்ளி
விவரத் துறை நடத்திய பயிர் விளைச்சல் தேர்வராய்ச்சி
வெளிப்படுத்தியபடி 1979—80 முதல் இதுவரையில் 10,016
ஏக்கர் நிலத்தில் உள்ளபடியான சராசரி விளைச்சல் பொது
ஈட்டுறுதிக் கழகம் நிர்ணயித்துள்ள அளவிற்கும் கீழ் குறைவாக
இருந்தபோது, 6,059 விவசாயிகளுக்கு 9.89 இலட்சம் ரூபாய்
அளவிற்கு இழப்புத் தொகை தரப்பட்டுள்ளது.

**23. கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய ஆய்வு.**— இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவு வங்கிகளின் முன்னேற்றத்திற்காகவும், பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகளை வலுவாக்குவதற்காகவும், கடன் வழங்கும் கூட்டுறவு நிறுவனங்கள் பின்பற்ற வேண்டிய முறைகள் பற்றியும் ஆய்ந்து சிபாரிசுகளை செய்வதற்காக இவ்வரசு ஒரு சிறப்பு அலுவலரை நியமனம் செய்திருந்தது. அவர் தனது அறிக்கையை அண்மையில் அரசிற்குச் சமர்ப்பித்துள்ளார். அதில் உள்ள பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

## நகையீட்டுக் கடன்கள்.

24. கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலமெங்கும் நகையீட்டின் பேரில் கடன்கள் வழங்கி வருகின்றன. அதன் மூலம் அவை, கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்பட்டு, நிறுவன அமைப்பில்லாத தனியார்களிடமிருந்து கடன் கிடைப்பது அரிதாகியதால் ஏற்பட்டுள்ள நிதி வசதிக் குறைவைத் தீர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. 1,380 விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களும், மத்திய கூட்டுறவு வங்கிகளின் 411 கிளைகளும், 128 கூட்டுறவு நகர வங்கிகளும், அவற்றின் 12 கிளைகளுமாக 1,931 கூட்டுறவு அமைப்புகள் தற்போது நகைக் கடன்கள் வழங்குவதில் ஈடுபட்டுள்ளன. 1982–83 ஆம் ஆண்டு இறுதியில் 1,781 கூட்டுறவு அமைப்புகளே நகைக் கடன்கள் வழங்குவதில் ஈடுபட்டு இருந்தன. கூட்டுறவுச் சங்கங்கள் 1983-84 ஆம் ஆண்டில் 10.24 இலட்சம் பேர்களுக்கு 193.74 கோடி ரூபாய் அளவிற்கும், 1984–85 ஆம் ஆண்டில் 11.35 இலட்சம் பேர்களுக்கு 218.82 கோடி ரூபாய் அளவிற்கும் நகைக் கடன்களை வழங்கியுள்ளன. இவற்றில், விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டும் ஊரகப் பகுதிகளில் வழங்கிய கடன்கள் 1983–84ல் 57.25 கோடி ரூபாயும், 1984–85ல் 65.95 கோடி ரூபாயும் ஆகும். 1985–86 ஆம் ஆண்டில் 220 கோடி ரூபாய் அளவிற்கு நகைக் கடன்களை வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதிலும் அநேகமாக ஊரகப் பகுதிகளில் கூட்டுறவு அமைப்புகளில் நகைக் கடன்கள் வழங்குவதின் மூலம் கூட்டுறவுச் சங்கங்கள் நலிந்த பிரிவினரின் அவசரக் கடன் தேவைகளைப் பயன் விளையத்தக்க வகையில் பூர்த்து செய்து வருகின்றன. சவரன் ஒன்றுக்கு வழங்கப்படும் உச்ச அளவு கடன் 800 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய்க்குத் தற்போது உயர்த்தப்பட்டுள்ளது.

## குறைந்த வட்டிக்குக் கடன்கள்.

25. மிகக் குறைந்த வட்டிக்கு, அதாவது ஆண்டொன்றுக்கு 4 சதவீதத்தில், தொழில் கடன்களை நலிந்த பிரிவினருக்கு மத்தியக் கூட்டுறவு வங்கிகள், உழவர் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள்





மற்றும் 78 நகரக் கூட்டுறவு வங்கிகள் தொடர்ந்து வழங்கி வருகின்றன. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி அங்கீகரித்துள்ள 22 வகை சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்களில் ஏதேனும் ஒன்றை மேற்கொள்ள, எல்லா வகைகளிலும், ஆண்டு வருவாய், ஊரகப் பகுதிகளில் 2,500 ரூபாய்க்கும் ஓரளவு நகர்ப்புறங்களிலும், நகரங்களிலும் 3,000 ரூபாய்க்கும் மேற்படாமல் உள்ளவர்களுக்கு இக்கடன்கள் வழங்கப்படுகின்றன. இக்கடன் நபர் ஜாமீன் பேரில் ஒருவருக்கு மூலதனச் செலவிற்காக 5,000 ரூபாயும், நடைமுறைச் செலவிற்காக 2,000 ரூபாயும் ஆக மொத்தம் 7,000 ரூபாய் வரையில் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் கடன்கள் 1983–84 ஆம் ஆண்டில் 1.21 கோடி ரூபாய் அளவிற்கும் 1984–85 ஆம் ஆண்டில் 1.35 கோடி ரூபாய் அளவிற்கும் வழங்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் இவ்வகைக் கடன்களை தொடர்ந்து ஆனால் அதிகமான அளவில் வழங்கி வரும் அதே நேரத்தில் ஊரகப் பகுதிகளில் இவ்வகைக் கடன்கள் அதிகமாக வழங்கப்படும் பொருட்டு விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களையும் இக்கடன்கள் வழங்கும் பணியில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. 1985–86 ஆம் ஆண்டில் ஊரகப் பகுதிகளில் 20 இலட்சம் ரூபாய் வழங்க 20 விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுபடுத்தப்படும்.

## நகர்ப்புற மக்களுக்கு கடனுதவி.

**26. நகரங்களிலும் ஓரளவு நகர்ப்புறங்களிலும் உள்ளவர்களுக்கு கடன்கள்.**— தமிழ் நாட்டில் 133 கூட்டுறவு நகர வங்கிகள் உள்ளன. இவ் வங்கிகள் வங்கி வசதிகளை அளிப்பதுடன், நகர்ப்புற மக்களுக்கும், ஓரளவு நகர்ப்புறத்தை யொட்டியுள்ள மக்களுக்கும், குறுகிய காலக் கடன்களையும், மத்திய காலக் கடன்களையும் 1983–84 ஆம் கூட்டுறவு ஆண்டில் 171.55 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கியுள்ளன. அவ்வாண்டு இறுதியில் இவ்வங்கிகளிடமிருந்த வைப்புத் தொகைகள் 125.61 கோடி ரூபாய் ஆகும். குடிசைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்களுக்கு நிதி உதவி செய்யும் திட்டத்தின் கீழ் இவ்வங்கிகள் 1983–84 ஆம் ஆண்டில் 2.23 கோடி ரூபாய் அளவிற்கும் 1984–85 ஆம் ஆண்டில் 2.55 கோடி ரூபாய் அளவிற்கும் கடன்களை வழங்கியுள்ளன. சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் வருமானத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதன் மூலம் நியாயமான விநியோக முறையை உறுதி செய்ய வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தை வங்கிகள் நிறைவேற்றுவதற்கு ஏதுவாக, கூட்டுறவு நகர வங்கிகள் வழங்கும் கடன்களில் 60 சதவீதம் குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்கள் உள்ளிட்ட முதன்மைப் பிரிவிற்குச் சேர வேண்டும் என்று இந்திய ரிசர்வ் வங்கி வழிமுறைகளை வகுத்துள்ளது. எனவே குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்

களுக்காக நகரக் கூட்டுறவு வங்கிகள் வழங்கும் கடன் அளவை 1985—86 ஆம் ஆண்டில் 4 கோடி ரூபாய்க்குக் குறைவில்லாமல் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

27. நலிந்த கூட்டுறவு நகர வங்கிகளை மறு சீரமைத்தல்.— கூட்டுறவு நகர வங்கிகளில் 11 வங்கிகள் நலிந்த வங்கிகளாக இந்திய ரிசர்வ் வங்கியால் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை மறு சீரமைப்பதற்காக அவற்றிற்கு அரசு நிதியுதவி வழங்கும். 1985–86 ஆம் ஆண்டில் மூன்று நலிந்த வங்கிகளுக்கு அவ்வுதவி வழங்கப்படும்.

28. சுயவேலை வாய்ப்பை ஏற்படுத்த கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல். — படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு சுயமாக தொழில் செய்வதற்காக நிதி உதவி அளிக்கும் பொருட்டு கூட்டுறவுச் சிக்கன மற்றும் கடன் சங்கங்கள் சென்னை, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் நபர் ஜாமின் பேரிலும் கடன்களைக் கொண்டு வாங்கும் இடம் பெயராச் சொத்துகளின், இணைப்பிணையத்தின் பேரிலும் கடன்களை வழங்குகின்றன. இவ்வகைச் சங்கங்களைத் தென்னாற்காடு, கன்னியாகுமரி, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் பதிவு செய்வதற்கான கருத்துக்கள் பரிசீலனையில் உள்ளன. இதே போன்ற சங்கங்களை இதர மாவட்டங்களிலும் அமைப்பதற்கான வாய்ப்புக்கள் ஆராயப்படுகின்றன.

29. மகளிர் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் அமைத்தல். — மாநிலத்தில் மகளிர் நலனுக்காகவும் கூட்டுறவுச் சங்கங்கள் பணி புரிகின்றன. விதவைகள் உட்பட நலிந்த பிரிவைச் சார்ந்த மகளிர், குடிசைத் தொழில்களை மேற்கொண்டு தம் வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்காக மகளிர் கூட்டுறவுக் கடன் சங்கங்களைக் அமைத்து நான்கு சதவீத வட்டிக்குக் கடன்களை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. முதலில் 19'5—86 ஆம் ஆண்டில் கோயம்புத்தூரில் இவ்வகைச் சங்கம் ஒன்று அமைக்கப்படும்.

## பண்ணை இடு பொருட்களின் கூட்டுறவு விநியோகம்.

30. இரசாயன உர விநியோகம்.— விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களும் கூட்டுறவு விற்பனை சங்கங்களும் இரசாயன உரங்களை உறுப்பினர்களுக்கு பயிர்க் கடன்களின் ஒரு பகுதியாகவும், உறுப்பினர்களுக்கும் உறுப்பினர் அல்லாதவர்களுக்கும் ரொக்கத்திற்கும் தொடர்ந்து விநியோகித்து வருகின்றன. 1983-84 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் 1.03 இலட்சம் டன் (என்.ப்பி.கே.) இராசாயன உரங்களை 48.98 கோடி ரூபாய் அளவிற்கு விநியோகித்தன. 1984—85 ஆம் ஆண்டில் 122





புதிய விற்பனை நிலையங்கள் துவக்கப்பட்டு, மொத்த சில்லறை
விற்பனை நிலயங்களின் எண்ணிக்கை 4,974—க்கு உயர்ந்துள்ளது.
1984—85 ஆம் ஆண்டில் 55.44 கோடி ரூபாய் மதிப்புள்ள 1·63
இலட்சம் டன் 'என்.ப்பி.கே.) இரசாயன உரங்களின் விற்பனை
அதிகரித்தது. 1985—86 ஆம் ஆண்டில் இந்த விற்பனையை சுமார்
70 கோடி ரூபாய் மதிப்புள்ள இரண்டு இலட்சம் டன் (என்.ப்பி.
கே.) அளவிற்கு அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. கூட்டுறவுச்
சங்கங்களின் உர விநியோகத்தில் ரொக்க விற்பனையின் அளவை
அதிகரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

31. குறைந்த விலையில் உர விநியோகம். — 1983 ஆம் ஆண்
டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிறு விவசாயி
களுக்கும் மிகச் சிறு விவசாயிகளுக்கும் முறையே 25 சதவீதமும்
33 1/3 சதவீதமும் மானியத்துடன் உர விநியோகம் செய்வதற்
காக அரசு 3.60 கோடி ரூபாய் வழங்கியது. ஆயினும், கூட்
டுறவுச் சங்கங்கள் இந்த மானியச் சலுகையை 3.33 இலட்சம்
விவசாயிகளுக்கு, 4.03 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கியுள்ளன.
1983 டிசம்பர் மாதத்திலும், 1984 பிப்ரவரி/மார்ச் மாதங்களி
லும் ஏற்பட்ட பெரு வெள்ளத்தினால் மாநிலத்தின் சில பகுதி
கள் பாதிக்கப்பட்டதால் சலுகை விலையில் உரங்களை விநி
யோகித்தில் அரசு 1.50 இலட்சம் சிறு மற்றும் மிகச் சிறு
விவசாயிகளுக்கு 36·37 இலட்சம் ரூபாய் அளவிற்கு மானியம்
வழங்கியுள்ளது.

32. உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டம். — விவசாயிகளுக்கு உற்
பத்தியை ஊக்குவிக்கும் வகையில், குறுவைப் பருவத்தில் காவிரிக்
கழிமுகப் பகுதியில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்
திற்கு நெல் வழங்கிய விவசாயிகளுக்கும், விவசாயத் துறைக்கு
நெல் விதைகள் வழங்கிய விதைப் பண்ணை விவசாயிகளுக்கும், ஒரு
குவிண்டால் நெல்லுக்கு 15 ரூபாய் மதிப்புள்ள உரங்கள் வீதம்
அரசு உரம் வழங்கியது. இந்தப் பருவத்தில் 7½ கோடி ரூபாய்
அளவிற்கு கூட்டுறவு சங்கங்கள் உரங்களை வழங்கியுள்ளன.
சம்பா பருவத்திலும், காவிரிக் கழிமுகப் பகுதியில் சம்பா நெல்லை
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வழங்கும்
தனிப்பட்ட விவசாயிகளுக்கு இத் திட்டத்தை அரசு 1985 மே 31
வரை நீடித்துள்ளது. இப்பருவத்தில் 1985 மார்ச் 31 ஆம் தேதி
வரை 101 இலட்சம் ரூபாய் அளவிற்கு கூட்டுறவு சங்கங்கள்
உரங்களை விநியோகம் செய்துள்ளன.

33. விதைகள், பூச்சிக் கொல்லி மருந்துகள் மற்றும் வேளாண்
மைக் கருவிகள் விநியோகம் செய்தல்.— விதைப் பெருக்
கத் திட்டத்தை செயற்படுத்தி வரும் துடியலூர் கூட்டுறவு விவ
சாயப் பணிகள் சங்கமும், கோயம்புத்தூர் மற்றும் பெரியார்
மாவட்டங்களில் உள்ள மேலும் 5 கூட்டுறவு விற்பனைச் சங்கங்

களும் 1983—84 ஆம் ஆண்டில் 108.46 இலட்சம் ரூபாய்
அளவிற்கு சான்று செய்யப்பட்ட விதைகளை உற்பத்தி செய்து
விநியோகித்துள்ளன. துடியலூர் கூட்டுறவு விவசாயப் பணிகள்
சங்கம் பூச்சிக் கொல்லி மருந்துகள் தயாரிக்கும் பிரிவு ஒன்றை
வைத்துள்ளது. துடியலூர் கூட்டுறவு விவசாயப் பணிகள் சங்
கத்தின் பூச்சிக். கொல்லி மருந்துகளை விநியோகம் செய்வதற்
காக மாநிலத்திலுள்ள அனைத்துக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்
களும் மொத்த விற்பனையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளன.
1983–84 ஆம் ஆண்டில் 182.74 இலடசம் ரூபாய் அள
விற்கு பூச்சிக் கொல்லி மருந்துகள் கூடடுறவுச் சங்கங்களால்
விற்பனை செய்யப்பட்டுள்ளன. வரும் ஆண்டுகளில் கூட்டுறவுச்
சங்கங்களில் பண்ணை இடு பொருட்கள் விநியோகத்தை
அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1985—86 ஆம் ஆண்டில்
கூட்டுறவுச் சங்கங்கள் இடுபொருட்களை விநியோகம் செய்வதற்
காக கீழ்கண்ட இலக்குகள் நிர்ணயிக்கப் பட்டுள்ளன:—

| இடுபொருள். (1) | மதிப்பு (இலட்சம் ரூபாயில்). (2) |
|---|---|
| 1. விதைகள் .. .. .. .. | 135 |
| 2. பூச்சிக் கொல்லி மருந்துகள் .. .. | 250 |
| 3. வேளாண்மைக் கருவிகள் .. .. .. | 17 |

**34. அனைத்து இடு பொருட்களையும் ஒரே இடத்தில் விநியோகம் செய்வதற்காக வேளாண்மைப் பணிகள் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் திறப்பு.**— உரம் மற்றும் பூச்சிக் கொல்லி
மருந்துகள் போன்ற அனைத்து இடு பொருட்களையும்
ஒரே இடத்தில் விநியோகம் செய்வதற்காக, விவசாய சேவைக்
கூட்டுறவுச் சங்கங்கள் தம்முடைய தலைமையிடங்கள் அல்லாத
இதர கிராமங்களில் கூடுதல் விற்பனை நிலையங்களைத் திறக்கும்.
1985 86 ஆம் ஆண்டில் இதற்காக 50 சங்கங்களுக்கு அரசு
நிதியுதவி வழங்கும்.

**கூட்டுறவு விற்பனை, பதப்படுத்துதல் மற்றும் விவசாய விளை பொருட்கள் சேமிப்பு கூட்டுறவு விற்பனை.**

**35. விவசாய விளை பொருட்களை விற்பனை செய்தல்.**—
மாநிலத்தில் உள்ள 114 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தம்
உறுப்பினர்களின் விவசாய விளை பொருட்களை விற்பனை
செய்வதின் வாயிலாக, அவர்கள் நியாயமான வருமானம் பெறத்
துணைபுரிகின்றன. 1983–84 ஆம் ஆண்டில் விற்பனை செய்



விளைபொருட்களின் மதிப்பு 99·76 கோடி
யப்பட்ட விவசாய விளைபொருட்களின் மதிப்பு 99·76 கோடி
ரூபாய் ஆகும். 1984–85 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்
பட்ட விளைபொருட்களின் மதிப்பு 117·16 கோடி ரூபாய்க்கு
அதிகரித்தது. 1985–86 ஆம் ஆண்டில் விளைபொருட்களின்
விற்பனையை 125 கோடி ரூபாய்க்கு மேலும் உயர்த்த திட்ட
மிடப்பட்டுள்ளது. கூட்டுறவு நூற்பாலைகளுடன் கொண்டுள்ள
இணைந்த ஏற்பாட்டின் கீழ், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை
இணையம் நூற்பு ஆலைகளுக்கு விநியோகிப்பதற்காக, 1983–84
ஆம் கூட்டுறவு ஆண்டில் 7.96 கோடி ரூபாய் அளவிற்கும்,
1984–85 ஆம் கூட்டுறவு ஆண்டில் மார்ச் மாதம் வரையில்
16.04 கோடி ரூபாய் அளவிற்கும் பருத்தியைக் கொள் முதல்
செய்துள்ளது.

**36. காய்கறி பயிரிடுவோருக்கு விற்பனை வசதி ஏற்பாடு செய்தல்.**—
காய்கறி பயிரிடுவோருக்கு ஊதியம் கிடைப்பதுடன், நுகர்
வோருக்கு தரமான காய்கறிகள் நியாயமான விலைகளில்
வழங்கப்பட வேண்டும் என்ற நோக்குடனும், முதல் அமைச்சரின்
சத்துணவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுவரும் சூழ்நிலையிலும்,
மாநிலத்தில் 514 காய்கறி பயிரிடுவோர் கூடடுறவு விற்பனைச்
சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மதிய உணவு மையங்களுக்கு விநி
யோகித்த பிறகு, மீதம் உள்ள காய்கறிகள், இச்சங்கங்களால் நகர்
புற மையங்களில் உள்ள நுகர்வோர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்
களுக்கு, நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படுவதற்காக, வழங்
கப்படுகின்றன. காய்கறி பயிரிடுவோர் கூட்டுறவு விற்பனைச்
சங்கங்கள், 1984–85 ஆம் ஆண்டில் 4 கோடி ரூபாய் அளவிற்குக்
காய்கறிகளை விற்பனை செய்துள்ளன. இவற்றில் 44 சங்கங்கள்
தீவிர வளர்ச்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதற்கு
ஆகக்கூடிய மொத்த செலவு 97.95 இலட்சம் ரூபாய் ஆகும். இது
ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அரசாலும்
விற்பனைக் குழுக்களாலும் ஏற்றுக் கொள்ளப்படும். இச்சங்கங்
கள் சிறிய லாரிகளையும் குளிர்பதனப் பெட்டிகளையும் பெற்று
செயல்படும். இவற்றில் 15 சங்கங்கள் கிடங்குகள் கட்டும்.

**37. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களோடும், நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளோடும் இணைத்தல்.** — உற்பத்தி
யாளர்கள் தம் விளை பொருட்களை விற்பதில் ஆதாயமான
வருமானம் பெறவும், நுகர்வோர் இன்றியமையாப் பொருட்
களை நியாயமான விலைகளில் வாங்கவும் ஏதுவாக, கூட்டுறவு
விற்பனைச் சங்கங்கள் ஒரு பக்கம் விவசாய சேவைக் கூட்டுறவுச்
சங்கங்களுடனும், மறுபக்கம் நுகர்வோர் கூட்டுறவு மொத்த
விற்பனைப் பண்டகசாலைகளுடனும் இணைக்கப்பட்டுள்ளன.
இதற்காக விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் கடன்
தாரர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் உறுப்பினர்களாகச்

சேர்க்கப்பட்டு, விற்பனைச் சங்கங்களின் கொள்முதல் காரியங்கள் கடன்தாரர்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் அவற்றிற்குத் தேவையானவற்றை வாங்குவதில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்கின்றன. 1983–84 ஆம் ஆண்டில் விளை பொருட்களை விற்பனை செய்வதின் மூலமாக 1.13 கோடி ரூபாய் அளவிற்கு உற்பத்திக் கடன்கள் கூட்டுறவு விற்பனைச் சங்களால் பட்டன. இது 1985–86 ஆம் ஆண்டில் 1.74 கோடி ரூபாய்க்கு வசூலிக்க உயர்த்தப்படும்.

38. **விளை பொருளீட்டு கடன்கள்;**— விவசாயிகள் தம் விளை பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கும் வரையில் காத்திருக்கும் பொருட்டு அவர்களது விளை பொருட்களின் ஈட் டின் பேரில் கூட்டுறவுச் விற்பனைச் சங்கங்களும், விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களும் தொடர்ந்து கடன்கள் வழங்கு கின்றன. இவ்வகைக் கடன்கள் 1983-84 ஆம் ஆண்டில் 2.21 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த பயனுள்ள செயல் வரும் ஆண்டுகளில் விரிவாக்கப்படும். விளை பொரு ளிட்டுக் கடன்கள் 1985–86 ஆம் ஆண்டில் 2.70 கோடி ரூபாய் அளவிற்கு கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்படும்.

## கூட்டுறவுப் பதனிடுதல்.

39. **புதிய பதனிடும் பிரிவுகளை அமைத்தல்.**— விளை பொருட்களைப் பதனிடும் வசதிகளை உறுப்பினர்களாக உள்ள உற்பத்தியாளர்களுக்குக் குறைந்த செலவில் அளிக்கும் பொருட்டு, கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனைக்கு உறுதுணையாக பதனிடும் பிரிவுகளை நிறுவியுள்ளன. இதற்காக அவை அரசிடமிருந்து பங்கு மூலதனமாகவும், தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத் திடமிருந்து கடனாகவும் நிதியுதவி பெறுகின்றன. அரிசி ஆலைகள் 38-ம், பருத்தி விதை நீக்கும் இயந்திரங்கள் 18-ம் கடலை உடைக்கும் இயந்திரங்கள் 17–ம், எண்ணெய் பிழியும் இயந்திரங் கள் 8-ம், எண்ணெய் ஆலைகள் 3–ம், உள்பட, 90 பதனிடும் பிரிவுகள் உள்ளன. திருவண்ணாமலையில் ஒரு நவீன அரிசி ஆலை யையும், மாநிலத்தில் எட்டு பருத்தி விதை நீக்கும் இயந்திர நிலையங்களையும், ஈரோட்டில் ஒரு மஞ்சள் தூள் தயாரிக்கும் இயந்திர நிலையத்தையும், கொல்லி மலையில் ஒரு பழம் பத னிடும் பிரிவையும் நிறுவுவதற்கான நிதி உதவி 1980-81லிருந்து ஒப்பளிக்கப்பட்டுள்ளது. நவீன அரிசி ஆலையும் ஆறு பருத்தி விதை நீக்கும் இயந்திரங்களும் இயங்க ஆரம்பித்துவிட்டன. மீதமுள்ள இரண்டு பருத்திவிதை நீக்கும் பிரிவுகளும் மஞ்சள் தூள் தயாரிக்கும் பிரிவும், பழம் பதனிடும் பிரிவும் விரை வில் துவங்கப்படும், ஊரூரில் ஒரு பருத்தி விதை நீக்கும் இயந்திரம் நிறுவுவதற்கு 1985–86-ல் நிதி உதவி அளிக்கப்படும்.



40 **மணிலா எண்ணெய் தயாரித்தல்.**— திருவண்ணாமலை (வட ஆற்காடு) விருத்தாசலம் (தென் ஆர்க்காடு), மற்றும் ஒண்டிப் புதூர் (கோயம்புத்தூர்) ஆகிய இடங்களில் உள்ள மூன்று கூட் டுறவு எண்ணெய் ஆலைகள் 1983-84 ஆம் ஆண்டில் 1,423 டன் அளவிற்கும், 1984–85 ஆம் ஆண்டில் 1,824 டன் அளவிற்கும், மணிலா எண்ணெய் தயாரித்தன. தமிழ்நாடு கூட்டுறவு விற் பனை இணையம் திருவண்ணாமலையிலும், விருத்தாசலத்திலும் உள்ள தனது இரண்டு மணிலா எண்ணெய் ஆலைகளையும் தமிழ் நாடு எண்ணெய் வித்துத் திட்டத்தை சம்பந்தப்பட்ட மாவட்டங் களில் செயற்படுத்துவதற்கான ஒரே நிறுவனமான தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்து உற்பத்தியாளர்கள் இணையத் திடம் ஒப்படைக்க வேண்டும் என்று அரசு உத்திரவிட்டுள்ளது.

41. **பதனிடும் பிரிவுகளின் கொள் திறன் பயன்பாட்டை அதிகரித்தல்.**— தற்போதுள்ள வசதிகளின் தரத்தை மேம்படுத்துவ தோடு அரிசி ஆலைகளில் வெண்புழுங்கல் அரிசிப் பிரிவு அமைத்தல் மற்றும் மின்சாரம் உற்பத்தி செய்யும் கருவி அமைத்தல் போன்ற கூடுதல் வசதிகளைச் செய்து தருவதின் வாயிலாகக் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து பதனிடும் பிரிவுகளின் கொள் திறன் பயன்பாட்டை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படு கின்றன. தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் அவ்வப்போது நடத்தும் கூட்டங்களில், இப்பதனிடும் பிரிவுகளை எதிர்பார்க்கும் பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டு, அப்பிரிவுகளை அதிகமாகப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

## கிடங்கு வசதி.

42. **ஊரக மற்றும் விற்பனக் கிடங்குகள்.**— கூட்டுறவுச் சங் கங்கள் அரசிடமிருந்து 40 சதவித மானியத்தையும், தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து 60 சதவித கடனையும் பெற்றுக், கிராம அளவில் ஊரகக் கிடங்குகளையும், மண்டி அள வில் விற்பனைக் கிடங்குகளையும் தொடர்ந்து கட்டி வருகின்றன. இக் கிடங்குகளின் ஒரு பகுதியை சங்கங்களின் அலுவலகத்திற்கு பயன்படுத்துவதுடன், இரசாயன உரங்கள், இன்றியமையாத நுகர் பொருட்கள், மற்றும் விவசாய விளை பொருட்களைச் சேகரித்து வைத்து விற்பனை செய்ய இக் கிடங்குகள் பயன்படுத்தப்படுகின் றன. 107 டன் கொள்திறன் கொண்ட ஒரு ஊரகக் கிடங்கிற் கான நிதியுதவியின் அளவு 1.14 இலட்சம் ரூபாய் ஆகும். 1,000 டன் கொள்திறன் கொண்ட ஒரு விற்பனை கிடங்கிற்கான உதவியின் அளவை 4.75 இலட்சம் ரூபாயிலிருந்து 5.85 இலட்சம் ரூபாய்க்கும், 500 டன் கொள் திறன் கொண்ட ஒரு விற்பனை கிடங்கிற்கான உதவியின் அளவை 2.60 இலட்சம் ரூபாயிலிருந்து 4.10 இலட்சம் ரூபாய்க்கும் உயர்த்துவதற்கான கருத்துருக்கள் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் பரிசீலனையில்

உள்ளன. கூட்டுறவுச் சங்கங்கள் கிடங்கு வசதியைப் பெருக்கி வருவது பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

| தேதி. | கிடங்குகளின் எண்ணிக்கை. | | மொத்த கொள்திறன் (இலட்சம் டன்னில்.) |
|---|---|---|---|
| | ஊரகக் கிடங்குகள். | விற்பனைக் கிடங்குகள். | |
| (1) | (2) | (3) | (4) |
| 31—3—1983—ல் | 3,545 | 257 | 5.38 |
| 31—3—1984—ல் | 3,817 | 273 | 5.38 |
| 31—3—1985—ல் .. | 4,075 | 280 | 6.11 |

மேலும், 25 ஆயிரம் டன் கொள்திறன் கொண்ட 163 ஊரகக் கிடங்குகளும் 11 விற்பனைக் கிடங்குகளும் கட்டுமானத்தில் இருந் தன. 50 ஊரகக் கிடங்குகளையும் ஒரு விற்பனை (நுகர்வோர்) கிடங்கையும் கட்டுவதற்கான நிதி உதவி 1985—86 ஆம் ஆண் டில் தரப்படும். கூட்டுறவுச் சங்கங்களிடமிருக்கும் இடங்குகளின் பயன்பாட்டை அதிகரிப்பதற்காகவும் நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன.

## நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்.

43. நுகர் பொருட்கள் சில்லறை விற்பனை ;— மாநிலத்தில் 3,013 கல்லூரி மற்றும் உயர்நிலைப் பள்ளி மாணவர் கூட்டுறவுப் பண்டக சாலைகள், 302, தொழிற்சாலை மற்றும் தோட்டத் தொழிலாளர் பண்டக சாலைகள் மற்றும் 15 மகளிர் கூட்டுறவுப் பண்டக சாலைகள் உள்பட 3,839 பிரதமக் கூட்டுறவுப் பண்டக சாலைகளும், அவற்றின் 449 கிளைகளும், 29 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும் அவற்றின் 1,134 கிளைகளும், மேலும் மாநில நுகர்வோர் கூட்டுறவு இணைய மும் நுகர்பொருட்களை விநியோகம் செய்கின்றன. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செய்த சில்லறையின் விற்பனையின் மதிப்பு, முந்தைய ஆண்டின் 228 கோடி ரூபாயிலிருந்து 1983—84 ஆம் ஆண்டில் 268 கோடி ரூபாய்க்கும், 1984-85 ஆம் ஆண்டில் சுமார் 285 கோடி ரூபாய்க்கும் உயர்ந்தது. 1985—86 ஆம் ஆண்டில் 300 கோடி ரூபாய் அளவிற்கு இது மேலும் உயர்த் தப்படும்.

44. கிராமங்களில் இன்றியமையாப் பொருட்கள் விற்பனை:— ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் இன்றியமையாப் பொருட் களை விநியோகம் செய்ய ஒரு நியாயவிலைக் கடை துவங்கி நடத்தும் திட்டத்தின்கீழ் மாநிலத்தில் கூட்டுறவுச் சங்கங்களால்





நடத்தப்படும் கிராம அங்காடிகளின் எண்ணிக்கை 11,159 ஆக இருந்தது. விற்பனையாளர் சம்பளம், வாடகை மற்றும் இதர சில்லறைச் செலவுகளுக்காக ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு முழு நேரக் கடைக்கும் 3,000 ரூபாய் ஒவ்வொரு பகுதி நேரக் கடைக் கும், 2,100 ரூபாய், மாற்றியமைக்கப்பட்ட ஒவ்வொரு கடைக் கும் 600 ரூபாய், என்ற வீதத்தில் அரசு தொடர்ந்து மானியம் அளித்து வருகிறது. கிராம அங்காடி விற்பனையாளர்களின் ஊதி யத்தை சமீபத்தில் அரசு உயர்த்தியுள்ளது. இதன்படி ஒவ் வொரு விற்பனையாளரும் 17 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை மாதம் ஒன்றுக்குக் கூடுதலாகப் பெறுவார். கிராமக் கடைகள் முந்தைய ஆண்டில் 78.86 கோடி ரூபாய் அளவிற்கே விற்பனை செய்திருக்க, 1983—84 ஆம் ஆண்டில் 122·82 கோடி ரூபாய் அளவிற்கு இன்றியமையாப் பொருட்களை விற்பனை செய் துள்ளன. 1984—85 ஆம் ஆண்டில் 126.20 கோடி ரூபாய் அள விற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

45. நியாய விலைக் கடைகளை இரண்டாகப் பிரித்தல்.— குடும்ப அட்டைதாரர்கள், நியாய விலைக் கடைகளிலிருந்து இன்றியமையாப் பொருட்களை விரைவில் வாங்கிச் செல்வதற்கு ஏதுவாக, எந்த ஒரு நியாய விலைக் கடையும் ஓராயிரத்திற்கு மேம்பட்ட குடும்ப அட்டைகளை கொண்டிருக்கக் கூடாது என்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி ஓராயிரம் குடும்ப அட்டைகளுக்கு மேல் கொண்டிருந்த நியாய விலைக் கடைகள் கண்டறியப்பட்டு, அவை அரசு நிதி உதவியுடன் இரண்டாகப் பிரிக்கப்பட்டன. இதன் விளைவாக, ஊரகப் பகுதிகளில் 1,437 கடைகளும், மீதி நகர்புறங்களிலுமாக, மொத்தம் 2,850 கூடுதல் நியாய விலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களால் திறக் கப்பட்டுள்ளன.

46. சிறப்பு அங்காடிகளும் சிறப்புச் சிற்றங்காடிகளும் செய்த விற்பனை:—மாநிலத்தில் தற்பொழுது கூட்டுறவு மொத்த விற் பனைப் பண்டக சாலைகளாலும், பிரதமப் பண்டக சாலைகளா லும், நடத்தப்படும் 30 சிறப்பு அங்காடிகளும் 188 நவீன/ பெரிய அளவிலான சில்லறை அங்காடிகள் எனப்படும் சிறப்புச் சிற்றங்காடிகளும் இயங்கி வருகின்றன. இந்த அங்காடிகள் 1983—84 ஆம் கூட்டுறவு ஆண்டில் 95 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்தன. ஐந்து நவீன சில்லறை அங்காடிகள் அமைப்பதற்காக அரசு 1984—85 ஆம் ஆண்டில் நிதி உதவி அளித் துள்ளது. அவற்றில் நான்கு அங்காடிகள் துவங்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு அங்காடி தருமபுரி மாவட்டத்தில் பாலக்கோடில் ஆதி திராவிடர்கள் வாழும் பகுதிக்கு அண்மையில் அமைக்கப் பட்டது. மேலும் ஐந்து நவீன சில்லறை அங்காடிகள் அமைக்க 1985—86—ல் மாநில அரசு நிதி உதவி தருவதற்காக வரவு— செலவுத் திட்டத்தில் வகை செய்யப் பட்டுள்ளது. மூன்று பெரிய அளவிலான சில்லறை அங்காடிகளை நிறுவுவதற்காக மத்திய அரசு 1984—85-ல் நிதி உதவி அனுமதித்துள்ளது.

**47. நலிந்த பிரிவினருக்கு சேவை ;—** மாநிலத்தில் பின்
தங்கிய பகுதிகளில் உள்ள நலிந்த பிரிவினர், தொழிற்சாலைத்
தொழிலாளர்கள் முதலியோர் தேவைக் கேற்ப நிறுவப்பட்ட 71
சிறு கிளைகளும், மாநகரங்களிலும் நகரங்களிலும் குடிசைப் பகுதி
களில் உள்ள நலிந்த பிரிவினரும், மிகவும் நலிந்த பிரிவினருக்கென
நிறுவப்பட்ட 100 மிச் சிறு கிளைகளும் (மக்கள் அங்
காடிகளும்) தமது விற்பனையை முந்தய ஆண்டின் 9.35 கோடி
ரூபாயிலிருந்து 1983–84 ல் 12·06 கோடி ரூபாய்க்கு உயர்த்தின.
தொழிற்சாலைத் தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர்
கள் / கூலிகள், குறைந்த வருவாய்ப் பிரிவினர் / பின்தங்கிய
வகுப்பினர், குடிசைப் பகுதிகள் மற்றும் ஆதி திராவிடர் / பழங்
குடியினர் நிறைந்துள்ள இதர குடியிருப்புப் பகுதிகளில் உள்ள
வர்கள் ஆகியோரின் தேவைகளை நிறைவேற்ற ஐந்து சிறிய
அளவிலான சில்லறை அங்காடிகளுக்கான நிதி உதவி 1983–84
ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்டு அவை இயங்க ஆரம்பித்
துள்ளன. 1984–85 ஆம் ஆண்டில் ஒன்பது சிறிய அளவிலான
சில்லறை அங்காடிகள் திறப்பதற்கான நிதி உதவியை மத்திய
அரசு ஒப்பளித்துள்ளது.

**48. மாணவர் சமுதாயத்திற்குச் சேவை; —** நுகர்வோர் கூட்
டுறவுச் சங்கங்கள் நாட்டுடமை ஆக்கப்பட்ட பாட நூல்களையும்
குறிப்பேடுகளையும் 1983–84 ஆம் கல்வி ஆண்டில் முறையே
7·27 கோடி ரூபாய்க்கும் 1.50 கோடி ரூபாய்க்கும் விநியோகித்
ததின் வாயிலாக, மாணவர் சமுதாயத்திற்குத் தொடர்ந்து சேவை
செய்து வருகின்றன. 1984–85 ஆம் கல்வி ஆண்டில் பாட நூல்கள்
9.86 கோடி ரூபாய்க்கும், குறிப்பேடுகள் 1.79 கோடி ரூபாய்க்
கும் விற்கப்பட்டன.

**49. நடமாடும் கடைகள் ;—** நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்
களின் கீழ் வராதப் பகுதிகளில் உள்ள நுகர்வோரின் தேவை
களைப் பூர்த்தி செய்யும் வகையில், திருச்சிராப்பள்ளியில் உள்ள
சிந்தாமணி கூட்டுறவு சிறப்புச் சிற்றங்காடி நடமாடும் கடை
ஒன்றைத் திறந்துள்ளது. சென்னை, மதுரை மற்றும் ராயபுரம்
புத்தூரில் மேலும் மூன்று நடமாடும் கடைகள் துவங்க
கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கு நிதி
யுதவி வழங்கப்பட்டுள்ளது. இக்கடைகள் விரைவில் துவங்கப்படும்.

**50. காய்கறி விற்பனைத் திட்டத்தை மாவட்ட தலைமையிடங்
களுக்கு அப்பாலும் விரிவாக்குதல் :—** உற்பத்தியாளர்களுக்
குத் தகுந்த வருமானமும் நுகர்வோருக்கு நியாயமான விலையும்
அமையும் பொருட்டு சென்னை மாநகரில் 1981–82-ல் தொடங்
கப்பெற்ற காய்கறி விநியோகத் திட்டம் நாளடைவில் இதர
மாவட்டத் தலைமையிடங்களுக்கும் விரிவுபடுத்தப் பட்டுள்ளது.
1984–85 ஆம் ஆண்டில் மாநில அரசு நிதி யுதவி ஒப்பளித்
திருக்கும் நிலையில், புதிதாகப் பிரிக்கப்பட்ட சிவகங்கை, விருது





நகர் நீங்கலாக மாநிலத்தில் உள்ள அனைத்துமாவட்டத் தலைமை
யிடங்களும் இத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன.
1985-86 ஆம் ஆண்டில் திருப்பூர், திருவாரூர், இராஜபாளையம்,
பெரம்பலூர், அரியலூர், ஆகிய ஐந்து நகரங்களுக்கும் இத்திட்டம்
மேலும் விரிவாக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் தானியங்கி
முச்சக்கர வண்டிகளும், பெட்டிக் கடைகளும் வாங்குவதற்காக
கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கு அரசு
நிதி உதவி அளிக்கிறது. தமிழ் நாட்டில் நுகர்வோர் கூட்
டுறவுச் சங்கங்கள் 1983–84 ஆம் ஆண்டில் மொத்தம் 1.70
கோடி ரூபாய் அளவிற்கும், 1984-85 ஆம் ஆண்டில் 1,75 கோடி
ரூபாய் அளவிற்கும் காய்றிகளை விநியோகித்துள்ளன.

**51. தரச் சோதனை வசதிகளை மாவட்டத் தலைமையிடங்
களுக்கு அப்பாலும் அமைத்துத் தருதல் :—** நுகர்வோருக்கு தர
மான பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு
அவர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்ற உணவுப் பொருட்
கள் மற்றும் ஏனைய நுகர் பொருடகளின் தரம் குறித்து முன்
சோதனை செய்வதற்காக, மூலதனச் செலவில், ஒரு பங்கு
அரசு நிதியுதவிடன் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் தரச்
சோதனை ஆய்வுக் கூடங்களை ஒன்பது மாவட்டத் தலைமை
யிடங்களில் நிறுவியுள்ளன. 1984–85 ஆம் ஆண்டு மேலும்
ஏழு தரச் சோதனை ஆய்வுக் கூடங்களுக்காக அரசு நிதி உதவி
ஒப்பளித்திருக்கும் நிலையில் புதிதாகப் பிரிக்கப்பட்ட சிவகங்கை,
விருதுநகர் தவிர அனைத்து மாவட்டத் தலைமையிடங்களும்
இத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன. 1985–86 ஆம் ஆண்
டில் இத்திட்டம், விருதுநகர், கும்பகோணம், திண்டுக்கல் ஆகிய
மேலும் மூன்று நகரங்களுக்கும் விரிவாக்கப்படும்.

**52. நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகள் :—** நுகர்வோர்
பாதுகாப்பு நடவடிக்கையாக, தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு
இணையமும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமும், மத்திய
அரசின் நிதி உதவியுடன், கேசட் ரெக்கார்டர், பொதுப் பேச்சு
முறைக் கருவிகள், புத்தகங்கள், படம் காட்டும் கருவிகள் ஆகியவை
வாங்குவதற்காகவும் பொருட் காட்சிகள், கருத்தரங்குகள்
முதலியன நடத்துவதற்காகவுமான கருத்துருக்கள் மத்திய அரசின்
பரிசீலனையில் உள்ளன.

**53. மகளிர் நுகர்வோர் கூட்டுறவுப் பண்டக சாலைகள்
அமைத்தல்:—** கிராமங்களிலும், நகர்ப் புறங்களிலும் கவர்ந்துக்
கொள்ளப்படுதல், சுரண்டப்படுதல் ஆகிய நிலையில் வாழ்ந்து
வரும் ஏழை மகளிர்களின் வாழ்க்கை நிலையை மாற்றியமைக்
கும் வகையில், நுகர்வோர் கூட்டுறவு இயக்கம், மகளிருக்கென
கூட்டுறவு பண்டக சாலைகள் அமைக்க முன் வந்துள்ளது. இச்
சங்கங்கள் மூலமாக உறுப்பினர்களால் தயாரிக்கப்படும், ரொட்டி
ஜாம், அப்பளம், ஊறுகாய் போன்ற பொருட்கள் அவர்களுக்கு
நன்மைபயக்கும் விதத்தில் விற்கப்படும், இதனால் அவர்கள

தமது வாழ்க்கைக்கு ஒரு நிலையான வருவாயைப் பெற இயலும்
அதுபோன்ற ஒரு சங்கத்தைக் கோயம்புத்தூரில் 1985–86 ஆம்
ஆண்டில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

54. மின்சக்தி விநியோகத்தை விரிவாக்குதல்—கிராமங்
களில் மின் சக்தியைப் பரவலாக வழங்குவதற்காகவும், பொரு
ளாதார வளர்ச்சியை விரைவு படுத்துவதற்காகவும், ஊரக
மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. கும்ப
கோணத்திலும் திருமயத்திலும் இயங்கிவரும் சங்கங்கள் 1985
மார்ச் முடிய நலிந்த பிரிவினருக்கான "ஒவ்வொரு குடிசைக்கும்
ஒரு மின் விளக்குத்" திட்டத்தின் கீழ் 5,452 மின் இணைப்பு
கள் உட்பட மொத்தம் 17,612 மின் இணைப்புகளை வழங்கி
யுள்ளன. இது போன்ற மூன்றாவது சங்கத்தை வட
ஆற்காடு மாவட்டத்தில் வந்தவாசியில் அமைப்பதற்கான கருத்
துக்கள் ஆராயப்படுகின்றன.

### சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்காக கூட்டுறவுச் சங்கங்கள்.

55. தனி வகைக் கூட்டுறவுச் சங்கங்கள்.—தொழிலாளர்கள்
சலவைத் தொழிலாளர்கள், முடி திருத்துவோர், உப்பளத் தொழி
லாளர்கள் மற்றும் மலை வாழ் மக்கள் போன்ற நலிந்த பிரிவின
ரின் நலனுக்காகவே தனியாக கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி
வருகின்றன. தொழில் ஒப்பந்த கூட்டுறவுச் சங்கங்களும் வேலை
யற்ற பொறியியல் பட்டதாரிகளுக்கென கட்டுமானப்பணிக்
கூட்டுறவுச் சங்கமும், ஒப்பந்த வேலைகளைப் பெறுவதின் மூல
மாக அவற்றின் உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்
கின்றன. பிறவகைச் சங்கங்கள் அவற்றின் உறுப்பினர்களுக்கு
சேவைகளையோ அல்லது கடன் உதவியையோ அளிக்கின்றன,
அரசு இச்சங்கங்களுக்கு மானியம், பங்கு மூலதனம்
கடன் துறை அலுவலர்களின் இலவசச் சேவை போன்ற
உதவிகளைத் தொடர்ந்து வழங்கி வருகிறது.

56. சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்களுக்கு அவர்களது ரிக்ஷாக்களில்
மோட்டார் பொருத்துவதற்காக நிதி உதவி—சைக்கிள்
ரிக்ஷா ஓட்டுநர்களின் உழைப்பை எளிதாக்குவதற்காக ஒவ்
வொருவருக்கும் செலவில் 25 சதவீத அளவிற்கு 1.125 ரூபாய்க்கு
மேற்படாமல் அரசு மானியம் அளித்து, சைக்கிள் ரிக்ஷாக்களில்
மோட்டார் பொருத்திக்கொள்ள உதவும் திட்டம் 1982-83 ஆம்
ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. செலவில் மீதி
மத்தியக் கூட்டுறவு வங்கியிடமிருந்து கடன் பெறுவதன் மூலம்
கூட்டுறவுச் சங்கங்களால் ஏற்கப்படுகிறது. இவ்வுதவி உரிமம்
பெற்ற சொந்தக்காரரே ஓட்டும் ரிக்ஷாக்களுக்கு மட்டுமே அளிக்
கப்படுகிறது. 1982—83 மற்றும் 1983—84 ஆம் ஆண்டுகளில்
வட சென்னை மற்றும் தென் சென்னையில் உள்ள இரண்டு





கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் 167 பேர்களுக்கு அவர்
களின் சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார் பொருத்திக்கொள்
வதற்காக அரசு மானியம் 1.65 இலட்சம் ருபாய் அளவிற்கு
வழங்கப்பட்டது. 1984–85 ஆம் ஆண்டில் திண்டுக்கல் சைக்
கிள் ரிக்ஷா ஓட்டுநர் கூட்டுறவுச் சங்கத்தின் 50 உறுப்பினர்
களின் சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார் பொருத்துவதற்காக
அரசு மேலும் 50 ஆயிரம் ரூபாயை மானியமாக ஒப்பளித்
துள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் இரண்டு புதிய சங்கங்
கள் தஞ்சாவூர் மற்றும் செங்கற்பட்டு மாவட்டங்களில் அமைக்
கப்பட்டு, அவற்றின் உறுப்பினர்களுடைய 100 சைக்கிள் ரிக்ஷாக்
களில் மோட்டார் பொருந்த நிதி உதவி தரப்படும்.

57. வேலையில்லாத பொறியியல் பட்டதாரிகளுக்கான கட்டுமான
கூட்டுறவுச் சங்கங்கள். பொதுப்பணித்துறையில் கட்டுமானப்
பணிகளை நிறைவேற்றுவதில் கூடியவரையில் தனியார் ஒப்பந்த
முறையைத் தவிர்ப்பதன் மூலமாக வேலையில்லாப் பொறியியல்
பட்டதாரிகளுக்கும் டிப்ளமோ தாரர்களுக்கும் வேலைவாய்ப்பை
ஏற்படுத்தித் தரும் நோக்கத்துடன் 1981 இல் சென்னையில்
அமைக்கப்பட்ட நவீன பொறியியல் பட்டதாரிகள் கட்டுமானக்
கூட்டுறவுச் சங்கம் 20.22 இலட்சம் ரூபாய் மதிப்பீடுள்ள 40
ஒப்பந்தப் பணிகளை ஏற்று அவற்றை நிறைவேற்றுவதற்காக
தனது உறுப்பினர்களுக்குக் கொடுத்துள்ளது. இது போன்ற ஒரு
சங்கம், மதுரையில் வேலையில்லாத டிப்ளமோ தாரர்களுக்காக
அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு அரசு நிதி உதவி ஒப்பளித்
துளளது. இவ்வகைச் சங்கம் இன்னொன்று வேலூரில்
1985-86 இல் அரசு உதவியுடன் அமைக்கப்படும்.

58. உடல் ஊனமுற்றோருக்கு உதவி.—மாநிலத்தில் உடல்
ஊனமுற்றோர் நலக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆறு உள்ளன.
மாவட்ட சமூக நல அலுவலர்களுடன் சலந்தாலோசித்து, சங்கங்
களின் உறுப்பினர்களுக்குப் பயனுள்ள வேலைகளைத் தரக்கூடிய
பணிகளை ஏற்று நடத்துவதற்கு ஏதுவாக முதற் கட்டமாக
சென்னையிலும், தஞ்சாவூரிலும் உள்ள இவ்வகை இரண்டு
சங்கங்களுக்கு 1985-86 ஆம் ஆண்டில் அரசின் நிதி உதவி
வழங்கப்படும்.

59. பழங்குடியினர் மேம்பாடு.—மாநிலத்தில் 13 பெரும்
பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் 42,186 உறுப்பினர்களைக்
கொண்டு இயங்கி வருகின்றன. இச்சங்கங்கள் தமது விவகார
எல்லைகளில் உள்ள எல்லா பழங்குடியினர் குடும்பங்களையும்
உறுப்பினர்களாக்கி உள்ளனர். பழங்குடியினரில் நலிந்த பொரு
ளாதார நிலையைக் கருத்திற் கொண்டு, அரசு இச்சங்கங்
களுக்குத் தொடர்ந்து தாராளமாக நிதி உதவி செய்து வருகி
றது. இச் சங்கங்கள் பயிரிடுவதற்கும், பிற உற்பத்தி காரியங்
களுக்கும் ஆண்டொன்றுக்கு 4 சதவீத சலுகை வட்டியில்

[1985 ஜூன் 28

கடன்களையும் இதர சேவைகளையும் ஒரே இடத்தில் தொடர்ந்து வழங்கி வருகின்றன. இச்சங்கங்கள் செய்துள்ள சேவைகளின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

| ஆண்டு. | 4 சதவீத வட்டியில் வழங்கிய கடன்கள். | கொள் முதல் செய்த சிறு வனப் பொருட் களின் மதிப்பு. | வழங்கிய வேளாண் இடு பொருட் களின் மதிப்பு. | விநியோகித்த நுகர் பொருட் களின் மதிப்பு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (இலட்ச ரூபாயில்.) | | |
| 1980-81 .. | 23.85 | 8.01 | 7.31 | 33.51 |
| 1981-82 .. | 48.46 | 7.73 | 12.17 | 56.46 |
| 1982—83 .. | 54.23 | 14.19 | 9.11 | 59.92 |
| 1983-84 .. | 69.80 | 9.38 | 13.90 | 77.49 |
| 1984-85 .. | 76.17 | 14.38 | 17.92 | 76.48 |

கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி.

60. கொள்கை பரப்புதல் மற்றும் விளம்பரங்களைத் தீவிரப்படுத்துதல்.—தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் கொள்கை பரப்புதல், விளம்பரம் செய்தல், ஆகிய பணிகளைத் தீவிரப்படுத்தியுள்ளது. இது கூட்டுறவு பற்றி தமிழிலும், ஆங்கிலத்திலும் மாத இதழ்களைத் தொடர்ந்து வெளியிடுகிறது. கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய நடவடிக்கைகளையும், சாதனைகளையும், திட்டங்களையும் பலதரப்பட்ட பொது மக்களுக்குப் பரவலாக எடுத்துக் கூறுவதற்காக அவ்வொன்றியம் ஆங்கிலத்தில் ஒரு இருவார செய்திக் கடிதத்தை வெளியிட்டு வருகிறது. அவ்வொன்றியம் மாநிலத்தில் அதிகமாக பயன்படுத்தப்படும் புகழ் பெற்ற பத்திரிக்கைகளில் துறையின் முக்கியமான திட்டங்கள் பற்றி விளம்பரங்கள் செய்து வருகிறது. கூட்டுறவு இயக்கத்தின் நன்மைகளைப் பரப்ப அவ்வொன்றியம், தொலைக் காட்சி, வானொலி ஆகியவற்றை பெரிதும் பயன்படுத்தி வருகிறது. அது கொள்கை பரப்பும் பணிக்காக [illegible]ர்திசவளப் பயன்படுத்தி வருகிறது. கூட்டுறவுக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதன் அவசியம் பற்றியும்



1985 ஜூன் 28]

கூட்டுறவுச் சங்கங்களின் பணிகள் பற்றியும் உறுப்பினர்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் அது மூன்று சிறு சினிமாப் படங்களைத் தயாரித்துள்ளது. அது அனைத்திந்தியக்கூட்டுறவு வாரவிழா நடத்தும், நூலகங்கள் நடத்தியும், மாநாடுகள், கருத்தரங்குகள் நடத்தியும் மேலும் பொருட்காட்சிகளில் பங்கு கொண்டும் வருகின்றது. மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களும் மாத இதழ்கள் வெளியிட்டும், மாவட்ட அளவில் நூலகங்கள் நடத்தியும் வருகின்றன. மிகச் சிறந்த முறையில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் திங்களில் கொண்டாடப்படும் அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழாவின் போது கேடயங்கள் வழங்கப்படுகின்றன.

61. கூட்டுறவுப் பயிற்சி.—இளநிலைப் பணியாளர்களுக்கான கூட்டுறவுப் பயிற்சி சென்னை மத்தியக் கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திலும். மாவட்டங்களில் உள்ள ஏழு கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களிலும் அளிக்கப்படுகிறது. நடுநிலைப் பணியாளர்களுக்கான கூட்டுறவுப் பியிற்சி சென்னை நடேசன் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியிலும், மதுரை கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியிலும் அளிக்கப்படுகிறது.

62. மேலாண்மைப் பயிற்சி.—பெரிய கூட்டுறவுச் சங்கங்களில் தலைமை நிர்வாக அலுவலர்களாகப் பணியாற்றும் கூட்டுறவுத் துறை அலுவலர்களுக்கு கொள்முதல். விற்பனை, கணக்கு பணியாளர் மேலாண்மை போன்ற நடவடிக்கைகளில் நவீன மேலாண்மை நுட்பங்களை விளக்கும் நோக்கத்துடன், 1983-84 ஆம் ஆண்டில் சென்னை அண்ணா மேலாண்மை நிலையத்தில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகளின் 25 தலைமை நிர்வாக அலுவலர்களுக்கு மேலாண்மையின் பொதுக் கொள்கைகள், திட்டமிடுதல் மற்றும் சம்பந்தப்பட்ட பொருள்களில் ஒருவார கால பயிற்சி தரப்பட்டது. இது போன்ற ஒரு பயிற்சியை 1984-85 ஆம் ஆண்டிலும். மத்தியக் கூட்டுறவு வங்கிளிகன் 24 அலுவலர்களின் நலனுக்காகத் தரப்பட்டது.

பொது.

63. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1983—கூட்டுறவு இயக்கத்தின் சீரான வளர்ச்சிக்காக, 1961ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1934ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கிகளின் சட்டம் ஆகியவற்றை ரத்து செய்து, 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் என்னும் விரிவான சட்டம் ஒன்று 1983ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இயற்றப்பட்டு 1983ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அது தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது இப்புதிய சட்டத்தின் கீழ் இயற்றப்பட வேண்டிய விதிகள் அரசால்,

முடிவுசெய்யப்பட உள்ளன. இவ்விதிகள் முடிவு செய்யப்பட்டு வெளியிடப்பட்ட பின்பு, புதிய சட்டமும் விதிகளும் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டு, அதன் பின்னர் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழுக்களுக்கான தேர்தல்கள் நடத்தப்படும்.

64. சமூகப் பணி.—கூட்டுறவாளர்கள் இரத்த வங்கிக்கு மனமுவந்து இரத்த தானம் செய்தும், மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் கூட்டுறவுத் தொண்டர் படை நடத்தியும், உடல் ஊனமுற்றோர்க்குச் சக்கர நாற்காலி போன்ற துணைக் கருவிகளை வழங்கியும், ஏழை மகளிருக்குத் தையல் இயந்திரங்களைக் கொடுத்தும் தமிழ்நாடு சட்ட உதவி மற்றும் ஆலோசனை வாரியத்துக்கும் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்திற்கும் நன்கொடைகள் வழங்கியும் தமிழ் நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் சமூகப் பணியும் புரிந்து வருகின்றனர். கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் மற்று பணியாளர்கள் பயன்படுத்தவும் நூலகங்கள் நடத்தவும் கூட்டுறவுச் சமுதாய கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன கூட்டுறவு விருந்தினர் இல்லங்களும் கூட்டுறவு தலைமைச் சங்கங்களால் கட்டப்பட்டு வருகின்றன. கூட்டுறவு விளையாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்படுகின்றன.

136394
சென்னை-600 008